# எழுநா

இதழ் 13

ஜூலை 2023



# எழுநா

## இதழ் 13

முந்தைய இதழ்




**பதிப்பாசிரியர்**
கணேசானந்தன் சசீவன்

**பொறுப்பாசிரியர்கள்**
மாயழகு பவித்ரா
பரமசிவம் பவதாரணி
ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்

**குரல் வடிவம்**
பாலரூபன் கிருஷிகா
இராதாகிருஷ்ணன் தர்ஷினி

**வளவாளர்கள்**
இ. பத்மநாப ஐயர் – உசாத்துணை சேவை
கதிர் சயந்தன் – நூல் தயாரிப்பு
தபின் – கட்டுரை திருத்தம்
பா. சிவகுமார் – காணொலி எண்ணக்கரு
பரணீதரன் – காணொலி தயாரிப்பு
தி. கோபிநாத் – நூல் வரிசை
கனகலிங்கம் சுகுமார் – உசாத்துணை சேவை

**துறை சார் ஆலோசகர் குழு**
கந்தையா ரமணிதரன் – நீரியலும் சூழற்பொறியியலும்
மகேந்திரன் திருவரங்கன் – மொழியும் இலக்கியமும்
குமாரவடிவேல் குருபரன் – சட்டமும் சட்டமுறைமையும்
பரமு புஷ்பரட்ணம் – வரலாறும் தொல்லியலும்
இ. மயூரநாதன் – கட்டடக்கலையும் வடிவமைப்பும்
தர்சன் அம்பலவாணர் – மதமும் இறையியலும்
சபா ஜெயராசா – கல்வியியலும் கற்கையும்
சேரன் உருத்திரமூர்த்தி – சமூகவியலும் மானிடவியலும்

**பங்களிப்பாளர்கள்**
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே

**விநியோகத் தொடர்புகளுக்கு**
நடராஜா முரளிதரன் – கனடா

FOLLOW

எழுநா

https://ezhunaonline.com/
https://youtube.com/user/Ezhuna
https://www.facebook.com/Ezhunax/
https://twitter.com/Ezhuna
https://www.instagram.com/ezhunaa/
https://www.tiktok.com/@ezhuna
https://open.spotify.com/show/4Xn
https://tinyurl.com/ykj8ru3f
https://tinyurl.com/3zfkzxme
https://tinyurl.com/2p83m8zj
https://pca.st/swr6zomk
https://radiopublic.com/6rX3L4
https://tinyurl.com/bdeky92h
https://anchor.fm/ezhuna
https://www.clubhouse.com/club/ezhuna
https://www.magzter.com/publishers/

**தொடர்பு முகவரி :**
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

## உள்ளே...


இருப்பு, இழப்பு, நினைவு — ஊர்களைச் சுவடியாக்கஞ்செய்தல் — விரிவான உரையாடலுக்கான முற்குறிப்பு - பாக்கியநாதன் அகிலன் 04

யாழ்ப்பாணம் நகரம் தோன்றிய காலத்தை மீளாய்வு செய்யும் யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்வு - பரமு புஷ்பரட்ணம் 12

பெருந்தோட்ட மக்களும் சமூக நலன் சேவைகளும் : நேற்றும் இன்றும் நாளையும் - முத்துவடிவு சின்னத்தம்பி 18

யாழ்ப்பாணத் தமிழர்களின் சமூக ஒழுங்கமைப்பு — பகுதி 1, பகுதி 2 - கந்தையா சண்முகலிங்கம் 27

கீழைக்கரைக்கான எழுத்துச் சான்றுகள் : மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் II - விவேகானந்தராஜா துலாஞ்சனன் 41

அரசியல் தலையீடும் விவசாய வீழ்ச்சியும் - கந்தையா பகீரதன் 48

கடலட்டை வளர்ப்புக்கு எதிராக நடைபெறும் மக்கள் போராட்டங்கள் - மரியநாயகம் நியூட்டன் 54

பத்தினித் தெய்வ வழிபாடும் சிங்கள பௌத்தப் பண்பாடும் - கந்தையா சண்முகலிங்கம் 64

இலங்கை போஹ்ராக்கள் - ஜிஃப்ரி ஹாசன் 70

சிறிமாவின் நான்குமுனை அரசியல் சதுரங்கம் - இரா. சடகோபன் 73

ஒப்பாரிக் கோச்சியும் நூற்றாண்டுத் துயரும் - இரா. சடகோபன் 77

வடக்கு கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரத்தில் கால்நடைத் துறையின் பங்குபற்றலும் வாய்ப்புக்களும் - அமரசிங்கம் கேதீஸ்வரன் 80

17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் வடஇலங்கையின் தமிழர் பொருளாதாரம் — பகுதி 1, பகுதி 2, பகுதி 3 - கந்தையா சண்முகலிங்கம் 85

நிலவியலின் துயரம் - சிவராஜா ரூபன் 103

பிராமண மத வரம்பைக் கடந்த மக்கள் களம் - நடேசன் இரவீந்திரன் 109

யாழ்ப்பாணத்தில் கிறீனது இறுதி நாள்கள் - பாலசுப்ரமணியம் துவாரகன் 116

இஸ்ரேல் நாட்டின் பாலுற்பத்தி துறை சொல்லும் செய்தி - Dr. சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன் 120

தக்காளி : இடைக்காலத்தில் வந்துசேர்ந்த இன்றியமையா உணவு - பால. சிவகடாட்சம் 126

ஈழத்துக் கடலுணவுகளும் சாதக பாதகங்களும் - தியாகராஜா சுதர்மன் 130

தொழில்களில் வெற்றிபெறத் தேவையான பழக்கவழக்கங்கள் - கணபதிப்பிள்ளை ரூபன் 133


மரபுரிமைகள் பற்றிய அக்கறை நம் சமூகத்தில் அருகிக்கொண்டே சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலையில், அத்தகைய அரும்பொருள்களைப் பற்றிய பிரக்ஞையையும், அறிமுகத்தையும், அவற்றைக் காப்பதற்கான அருட்டுணர்வையும் 'மரபுரிமைகளைப் பறைதல்' என்ற இந்தக் கட்டுரைத்தொடர் உண்டாக்க விழைகின்றது. வெறுமனே மரபுரிமைப் பொருட்களை அடையாளப்படுத்துவதோடு நின்றுவிடாமல், அகழ்வாய்வுகளின் தன்மைகள், மரபுரிமை பற்றிய மாற்றுச் சிந்தனைகள், புதிய நோக்கு கள், மரபுரிமைச் சின்னங்களை சுற்றுலாத் தலங்களாக மாற்றுவதற்கான சாத்தியங்கள் , அவற்றின் தொடர் பேணுகையும் அதற்கான வழிமுறைகளும், சமயங்களுக்கும் மரபுரிமைகளுக்கும் இடையிலான ஊடாட்டங்கள் என்று பரந்துபட்ட நோக்கில் இந்தக் கட்டுரைத்தொடர் மரபுரிமைசார் விடயங்களை வெளிப்படுத்தும். கள ஆய்வினையே பிரதான ஆய்வுமூலமாகக் கொண்ட இந்தக் கட்டுரைத்தொடரில், நூல்களில் இடம்பெற்றுள்ள மரபுரிமைசார் விடயங்கள், செவிவழிக்கதைகள், மக்களுடனான உரையாடல்கள், நம்பிக்கைகள், ஐதீகங்கள், ஊடகச் செய்திகள் மற்றும் கட்டுரைகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு, விஞ்ஞானபூர்வமான நோக்குநிலை யில் இந்தக் கட்டுரைத்தொடர் அமைகின்றது.




**பாக்கியநாதன் அகிலன்**

பாக்கியநாதன் அகிலன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினையும் (கலை வரலாறு), பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் (கலை விமர்சனம்) பட்டத்தினையும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரியும் அகிலன் தனது கலாநிதிப்பட்ட ஆய்வை புதுதில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகின்றார்.
'பதுங்குகுழி நாட்கள்', 'சரமகவிகள்', 'அம்மை', 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' என்பன இவரது கவிதைத் தொகுப்புகளாகும்.
இவரின் ஏனைய நூல்களாகக் 'காலத்தின் விளிம்பு' என்ற மரபுரிமை சார்ந்த நூலும் 'குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடகங்கள் ஐந்து' ஆகியவை அமைவதுடன் 'வெங்கட்சாமிநாதன் – வாதங்களும், விவாதங்களும்' என்ற நூலின் தொகுப்பாசிரியர்களுள் ஒருவராகவும் உள்ளார்.


# இருப்பு, இழப்பு, நினைவு- ஊர்களைச் சுவடியாக்கஞ் செய்தல் - விரிவான உரையாடலுக்கான முற்குறிப்பு



நாற்சாரவீடு, வண்ணார்பண்ணை



தந்தை செல்வா நினைவுச் சின்னம், யாழ்ப்பாணம்
Image Source: sangam.org



கல்லடிப் பாலம்
Image Source: www.elanka.com.au

**"ஊரான ஊரிழந்தோம் ஒற்றைப் பனைத் தோப்பிழந்தோம்"**
**(கவிதா நிகழ்வு – எங்கள் மண்ணும் இந்தநாட்களும் : 1985)**

ஊர்களைச் சுவடிப்படுத்தல் என்பது ஊரை அதன் அனைத்து அம்சங்களோடும் அவதானித்தல், அடையாளம் காணல், அது தொடர்பான அனைத்து விடயங்களையும் சேகரித்தல், அவற்றை ஒழுங்கமைக்கப்பட்ட முறையிற் பதிவுசெய்தல் ஆகியவற்யோடு கூடிய ஒரு செயற்பாடாகும். அது ஊர்களை வரலாற்று நிலைப்படுத்தி, உள்ளூர் வரலாற்றுச் சட்டகத்திற்கு வலுச்சேர்க்கிறது. அத்துடன் ஊர்களை ஆற்றல்மிக்க முறையில் பராமரித்தல், நிர்வகித்தல், பயன்படுத்துதல், பாதுகாத்தல் முதலியவற்றுக்கான முதலீடாகவும் காணப்படுகிறது.

எப்போது நாம் ஊரை இழந்தோம்? எப்போது ஊர் நினைவாகியது? அது எப்போது கழிவிரக்கமாயும், முடிவடையாத - இனிச் சென்றடையவே முடியாத புலமாயும், மன வலியுமாகவும் மாறியது?

இத்தகைய கேள்விகளின் பகைப்புலத்திற்றான் ஊரை சுவடியாக்கஞ் செய்தல் என்ற செயற்பாட்டின் இன்றியமையாத தேவை முதன்மை பெறுகிறது. பொதுப்படையாகவே ஊர் என்பது ஒரு மாறும் பொருண்மை (changing phenomenon). ஊர்கள் தலைமுறைகள் தோறும் மாறுகின்றன. பலவேளைகளில் ஒரு தலைமுறைக்குள்ளாகவே பலவேறுபட்ட சமூக, அரசியல், பொருளாதார, வரலாற்று நிலைமாற்றங்கள் மற்றும் இயற்கைக் காரணிகள் அவற்றை மாற்றியமைத்து விடுகின்றன. இத்தகைய பின்னணியில் ஊரைச் சுவடியாக்கஞ் செய்தல் என்பது சமூகமொன்றை - அதன் சிறப்புடைமைகளை வரலாற்றக்கஞ் செய்யுமொரு செயற்பாடாகும். அது சமகாலத்திலிருந்து கடந்தகாலத்தையும், எதிர்காலத்தையும் நோக்கும் முறையாகும். இன்னொருவகையில் அது தேசக்கட்டுமானத்தினது அடிப்படைகளில் ஒன்றாகவும் அமைகிறது. ஏனெனில் நாடென்பது ஊர்களின் கூட்டமைப்பாகும். இப் பின்னணியில் ஊர் வரலாறும், ஊர்களது வலுவுடைய இருப்பும் தேசமொன்றின் மிக முக்கியத்துவமுடைய தேவைப்பாடாகும். இத்தகைய பின்னணியிற்றான் UNESCO மற்றும் ICOM முதலிய சர்வதேச அமைப்புக்கள் மரபுரிமை - வரலாற்று முதன்மையுடைய கிராமங்களைச் சுவடியாக்கஞ் செய்தலில் கவனஞ் செலுத்தியுள்ளன.

ஆனால் ஈழத்தமிழரைப் பொறுத்தவரை ஊரைச் சுவடியாக்கஞ் செய்தல் என்பதற்கான தேவை UNESCO மற்றும் ICOM முன்வைக்கும் காரணங்களை விடவும் அதிகப்படியானது. குறிப்பாக பல்லாண்டுகால அரச ஒடுக்குமுறை ஈழத்தமிழர்கள் மத்தியில் அவர்களது ஊர்களை சுவடியாக்கஞ் செய்தலது தேவையை அதிகரித்துவிட்டிருக்கிறது. அந்தவகையில் அதன் கனபரிமாணமும் அதிகம். எனவே அதனை உள்ளூர் அனுபவங்களது வழிகாட்டலில் முன்னெடுக்கவேண்டும். அது சரியாகச் செய்யப்படும் இடத்தில் ஊரைச் சுவடியாக்கஞ் செய்தலின் புதிய பரிணாமங்களை ஈழத்தமிழர்கள் உலகத்திற்கு ஒரு பதிய அனுபவமாகத் தரலாம். அவ்வகையில், இலங்கையில், சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குமுறைகள் உருவாக்கிவிட்ட முடிவடையாத உள்ளூர் யுத்தமும், அதன் உடன்விளைவுகளான இடவழிவுகள், இடப்பெயர்வுகள், புலப்பெயர்வுகள், உயர்பாதுகாப்புவலய உருவாக்கம் முதலான காரணங்களும், மற்றும் மகாவலி அபிவிருத்தித் திட்டம், தொல்பொருளியற்துறை, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், முப்படைகள் என்பனவற்றிற்கு ஊடான சிறுபான்மையினரின் நிலங்களை அபகரிக்கும் அரச திட்டங்களும் உருவாக்கிவிட்டுள்ள நிலைவரங்கள் யாவும் சேர்ந்து பகுதியாக அல்லது முழுமையான ஊரிழப்பு என்ற விடயத்தை ஈழத் தமிழர்கள் மத்தியில் மிகவும் கூர்மையான பிரச்சினையாக்கி விட்டிருக்கின்றன. இது ஊர்களது சமூக வரலாற்று முக்கியத்துவத்தை மேலும் முதன்மைப்படுத்தியதுடன் அதனைச் சுவடிப்படுத்தலையும் முதன்மைப்படுத்துகிறது.

அதுமட்டுமின்றி பல தசாப்தகாலமாக ஊரைவிட்டு வெளியேற வேண்டியிருந்த நிர்ப்பந்தங் காரணமாக ஊர்கள் பலவாண்டுகள் கழித்து இலங்கை அரசால் விடுவிக்கப்பட்டாலும் அவை சிதைந்து - உருக்கெட்டு போயுள்ளமையும், இடப்பெயர்வும், புலப்பெயர்வும் மக்களை புதிதான வேறிடத்தில் பதியன் செய்துவிட்ட காரணத்தாலும் மீள்குடியேற்றம் என்பதும் சவால்மிக்க ஒன்றாகவே நடைமுறையில் உள்ளமை பல ஊர்களை பெரும்பாலும் மக்களற்ற தரிசுகளாக்கி விட்டுள்ளது. ஊர் பலருக்கு இன்று நினைவாகியும் - சிலவேளை குற்றவுணர்வாயும்

பலவேளைகளில் ஒரு தலைமுறைக்குள்ளாகவே பலவேறுபட்ட சமூக, அரசியல், பொருளாதார, வரலாற்று நிலைமாற்றங்கள் மற்றும் இயற்கைக் காரணிகள் அவற்றை மாற்றியமைத்து விடுகின்றன. இத்தகைய பின்னணியில் ஊரைச் சுவடியாக்கஞ் செய்தல் என்பது சமூகமொன்றை – அதன் சிறப்புடைமைகளை வரலாற்றக்கஞ் செய்யுமொரு செயற்பாடாகும்.

ஆகிப்போயுள்ளது. மக்களை அரசியல் மயப்படுத்தாத விடுதலைப்போராட்டம், தமிழரசியற் கட்சிகளது அரசியல் வறுமை என்பனவும் ஊர்களின் அழிவின் இன்றைய காரணங்களாயுள்ளன.

இத்தகைய அரசியற் பின்னணியில் மட்டுமின்றி பண்பாட்டுரீதியாக தமிழ்பேசும் ஊர்களை அவற்றின் பண்பாட்டு மரபுரிமைத் தனித்துவத்துடன் இனங்காணவும் - அடுத்த தலைமுறைக்கு அறிவிக்கவும் உலகளாவிய தேசப்படமாக்கலின் ஒரு பகுதியாக எமது ஊர்களை நிலை நிறுத்தவும், சிறுபான்மையினரிடம் இருந்து கைப்பற்றப்பட்டு அடையாளம் மாற்றப்பட்ட முன்னைய தமிழ் பேசும் ஊர்களைக் கோரவும், நினைவு கூரவும் - அவற்றின் வரலாற்றை அறிவிக்கவும் சுவடியாக்கம் முக்கியத்துவமுடைய செயற்பாடாகும். இன்னொருவகையில் இது தமிழ் பிராந்தியங்களின் பரந்துபட்ட அபிவிருத்திக்கான முதலீடுமாகும்.

இத்தகைய பகைப்புலத்தில் ஊரை சுவடியாக்கஞ் செய்தலுக்கான பரந்துபட்ட அடிப்படைகளை இக்கட்டுரை முன்வைக்கிறது. இதனுடைய அணுகுமுறையானது பரந்துபட்ட ஒரு சட்டகத்தை வலியுறுத்துகிறது. அந்தவகையில் சமூக, பண்பாட்டு, மானுடவியல், புவியியல், சமூகமொழியல், நகரவடிவமைப்பு, வரலாறு, மரபுரிமை, மொழியியல், சுவடியாக்கம் முதலிய பலவேறு துறைசார் ஒழுக்கங்கள் கலந்தொட்டியவொரு கலப்பொட்டு முறையியலை இச் செயற்பாடு வேண்டிநிற்கிறது.

ஊர் ஒன்றை வாசிப்பதற்கான மூலங்களாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| நேரடி அவதானிப்பு - கள ஆய்வு | முதல்நிலை மூலங்கள் |
| ஒளிப்படங்கள் (Photography) | |
| மூலச் சுவடிகள் (Manuscripts) | |
| எழுதப்பட்ட நூல்கள், பிரசுரங்கள் | இரண்டாம்நிலை மூலங்கள் |
| தேசப்படங்கள் (Maps) | |

ஊரைச் சுவடியாக்கஞ் செய்தலின் முதற்படியாக ஊரை பொதுநிலையில் அறிமுகப்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் பின்வரும் அறிமுகத் தரவுகள் முன்வைக்கப்படவேண்டும். அவ்வகையில்,

**ஊர் உருவாக்கம்:** குறிப்பிட்ட ஒரு இடம், குடியிருக்கும் ஒரு இடமாக மாறியது என்பதும், எவ்விதம் அது புவியியல்ரீதியாக மேலும் விரிந்து சென்றது என்பதும், ஒரு ஊரை வாசிப்பதற்கான முதலடிப்படையாகும். உதாரணமாக வன்னிக் குடியிருப்புக்கள் அல்லது ஊர்கள் எவ்விதம் குளங்களை மையமாகக் கொண்டு விரிந்தன என்பது அதற்கான தக்க உதாரணமாக அமையும். **சன ஏற்றம்** எவ்விதம் எங்கிருந்து நடந்தேறியது என்பது அதன் அடுத்த கட்ட ஆர்வமாக இருக்கும். **ஊர் பெயர்** - ஊரின் பெயர் தொடர்பிலான பல்வேறு விளக்கங்களுடன் அதனை இடப்பெயர் ஆய்வு முறையியலைப் பயன்படுத்தியும் பதிவுசெய்யவேண்டும்.

**இட அமைவு, காலநிலை, ஊரமைப்பு நிலப்படம், கூகுள் தரைப்படம்** தொடக்கம் வரலாற்று ரீதியான ஊரின் எல்லை மாற்றங்கள் மற்றும் ஊரின் உட்பிராந்தியப் பெயர்கள், தெருப் பெயர்கள் - அவற்றின் மாற்றங்களுடன் பதிவுசெய்யவேண்டும்.

**மக்கள் தொகை:** விபரமாகவும், காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்களுடனும் பதிவு செய்யப்படவேண்டும்.அவர்களது கல்விநிலை, சமயம், தொழில் மரபுகள் அவற்றின் காலந்தேறும் எற்பட்ட மாற்ற விபரங்களுடன் பதிவுசெய்யவேண்டும்.

**வரலாற்றறிமுகம் -** வாய்மொழி வரலாறுகள், எழுத்தாதாரங்கள் உட்பட்ட அனைத்தும் காலரீதியான வகைப்பாடுகளுடன் பதிவு செய்யப்வேண்டும்.
அவ்வகையில், நகர வடிவமைப்பாளர்கள் ஊர்/ நகரத்தைக் கட்டமைத்தல் - கற்றல் தொடர்பில் முன்மொழியும் ஆறு விடயங்களை ஊர்களைச் சுவடியாக்கஞ் செய்தலுக்கான மூல அடிப்படையாகக் இச் செயற்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளலாம். இவற்றுக்கு மேலதிகமான பொருத்தப்பாடான சுவடியாக்கக் கூறுகளை உள்ளெடுப்பதன் மூலம் இந்த வாசிப்பு முறையை மேலும் செழுமைப்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| உருவவியல் பரிமாணம் (morphological dimension) | ஊர் / நகரம் | சமூகப் பரிமாணம் (social dimension) |
| செயற்பாட்டியற் பரிமாணம் (functional dimension), | | காலரீதியான பரிமாணம் (temporal dimension), |
| புலக்காட்சிப் பரிமாணம் (perceptual dimension) | | காண்பியப் பரிமாணம் (visual dimension) |

**ஊர் / நகரம் : உருவவியல் ஆய்வு**

ஊர்/நகர்ப்புற உருவவியல் என்பது ஊர்/நகர்ப்புற வடிவங்கள் மற்றும் வடிவமைப்புக்கள் பற்றியது. அது காலந்தோறும் அவற்றில் ஏற்பட்ட உருமாற்றங்கள், அம்மாற்றங்களிற்குக் காரணமான முகவர்கள் மற்றும் அதன் மாற்றப் படிமுறைகள் பற்றிய ஆய்வு ஆகும். அவ்வகையில் அது ஊர்த் தெருக்கள், சதுக்கங்கள் (பொது இடம்), தெருத் தொகுதிகள், காணிகள் மற்றும் கட்டடங்கள் உள்ளிட்ட நகரத்தை கட்டமைத்து வடிவமைக்கும் முக்கிய பௌதீக அம்சங்களைப் பற்றிச் சிந்திப்பதாகும் (Scheer, 2016).

இதனை மேலும் அகலப்படுத்தினால் அது ஒருவகையில் இயற்கை மற்றும் பண்பாட்டு மரபுரிமைகளின் ஒரு பெரும் பகுதியை உள்ளடக்கியதாக இருக்கும். மேற்படி வரிசைப்படுத்தப்பட்ட உருவவியல் கூறுகளை மேலும் ஆழப்படுத்தினால் இதனைத் தெளிவாக எம்மால் புரிந்துகொள்ள முடியும். அவ்வகையில் பௌதீகப் பொருண்மைகள் (Objects) என்ற வகைப்பாட்டுள் நடைபாதைகள், மணல் மற்றும் பாறைப் படிவுகள், புல்வெளிகள், நிழற்குடைகள், தடைகள், பயிர் நிலங்கள், பூந்தோட்டங்கள், மரஞ் செடிகள், நீர்முனைகள், கம்பங்கள், சமிக்ஞைகள் முதலான பலவும் இடம்பெறும்.

கட்டடங்கள் என்பவற்றுள் குடியிருக்கும் கட்டடங்கள் - கட்டடவகைகள் (types of buildings), பெட்டிக்கடைகள், வாகன இடங்கள், கொட்டில் முதலானவை இடம்பெறும். அதேபோல உட்கட்டுமாணங்கள் என்ற வகையில் பாலங்கள், நகர வாயிலமைப்புக்கள் - வளைவுகள், மணிக்கோபுரம், விளையாட்டரங்கங்கள், நினைவுச்சின்னங்கள் முதலியவற்றையும், பாதைகள் என்ற வகைப்பாட்டுள் தண்டவாளங்கள், துறைமுகங்கள், நீர்மடுக்கள், இயற்கை இடங்கள் முதலியனவும் கவனித்தில் எடுக்கப்படும். காலந்தோறும் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும் முடிந்தவரை சுவடியாக்கத்துள் எடுத்துவரப்பட வேண்டும். அத்துடன் இவை யாவற்றையும் மரபுரிமைக் கண்கொண்டு மேலும் விரிவுபடுத்தி அணுகவேண்டும்.

**ஊர் / நகரம் : செயற்பாட்டியற் பரிமாணம்**

ஊரினது அல்லது நகரத்தினது செயற்பாட்டுப் பரிமாணம் என்பது அவற்றின் இடப் பரப்புக்கள் மற்றும் கட்டமைப்புகள் மக்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன - இடையூடாடுகின்றன (communicate & interact) என்பது பற்றியதாகும். சமூக நம்பிக்கைகளோடும் - பண்பாட்டுக் கோலங்களோடும் இவை தொடர்புபட்டுள்ளன. மக்களது ஓய்வுச் செயற்பாடு (rest) முனைப்புடைய இயங்குநிலை (active), செயல் முனைப்பின்மை (passive), கண்டுபிடிப்புச் செயற்பாடுகள் (discovery) முதலியவற்றோடு இது தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகிறது. இவை சூழலமைவு, பௌதீக - உளவியல் மற்றும் சமூக இடையூடாட்டத் தன்மைகள் மற்றும் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிப்பன. கண்டுபிடிப்புச் செயற்பாடுகள் பரந்த வீச்சுடையவை. சந்தைகள், கலைக் கூடங்கள், ஊர்வலங்கள், சடங்குகள், விளையாட்டுக்கள், தெரு ஆற்றுகைகள் முதலான அனைத்துக் கலைச் செயற்பாடுகள், விழாக்கள் உட்பட்ட சமூக நிகழ்ச்சிகளை இவை குறிக்கும் இக் கூறுகள்தான் ஒரு ஊரை உயிர்ப்புடன் பேணும் ஊக்கிகளாக அமைவன.


**ஊர் / நகரம் : புலக்காட்சிப் பரிமாணம்**

புலக்காட்சிப் பரிமாணம் என்பது ஊர்/நகரச் சூழலானது, தனது பௌதீகப் பரிமாணங்களால் சமூகத்திற்குத் தருகின்ற மனப்படிவு (mental image) ஆகும். அதாவது குறிப்பிட்ட இடம் (Place) பற்றிய சமூகத்தினது அனுபவம் அல்லது உணர்வாக இது காணப்படும். இன்னொருவகையில் மேற்படி, இட உணர்வானது, குறிப்பிட்ட வட்டாரங்கள் மற்றும் பிராந்தியங்களின் தனித்துவம் அல்லது




யாழ்ப்பாண நகரத்தின் கட்டடவியலமைவு

Image Source:Jaffna Final Report,UN-HABITAT,1982, Kapilan Sundaramoorthy, 2015




யாழ்ப்பாண நகரத்தின் கட்டடவியலமைவு

Image Source:Jaffna Final Report,UN-HABITAT,1982, Kapilan Sundaramoorthy, 2015

தனித்துவமான தன்மையை விபரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. லிஞ்ச் இந்தப் பௌதீக அனுபவம் அல்லது மனப்படிவமானது பாதைகள் (தெரு, காலவாய்) ஓரங்கள் (கடைகள், மதில், நீரோட்டம்) மாவட்டங்கள் (ஒரேவகையாக கருப்பொருட் தொடர்ச்சியுடைய மத்திய அல்லது பெரும் அளவிலான பரப்புக்கள் (பல கடைகளை உள்ளடக்கிய வாகன உதிரிப்பாக அல்லது ஆபரணத் தயாரிப்பு இடப்பரப்பு) முனையங்கள் (சந்தி) மற்றும் மைல்கற்கள் (சிலைகள், கோபுரங்கள்) எனும் ஐந்துவிடயங்களினால் தூண்டப்பெறுவது என்கிறார் (*Lynch*:**1990**). சூழல் பற்றிய புலனுணர்வும் - இடவுணர்வும் எமது ஐந்து புலன்களால் குறிப்பிட்ட இடச்சூழலில் இருந்து பெறப்பட்ட அனுபவங்களால் உருவாக்கப்பட்டது ஆகும். குறிப்பாக இடவுணர்வானது, குறித்த இடத்திற்கும் மக்களிற்குமிடையிலான இடையுறவு பற்றியதாகும். அது குறிப்பிட்ட இடத்தின் அமைவிடம் - சூழல் சார்ந்துருவான உணர்சிபூர்வமான பிணைப்பாகும்.

### ஊர் / நகரம் : சமூகப் பரிமாணம்

வெளியும் சமூகமும் நெருக்கமான தொடர்புடையவை: சமூக உள்ளடக்கம் இல்லாமல் வெளியை கருத்திற் கொள்வது கடினம் அதேபோலவே, வெளியை விடுத்து சமூகத்தை கருத்திற் கொள்வதும் கடினம். ஊர்/நகரம் வடிவமைப்பிலுள்ள சமூகப் பரிமாணத்தைப் புரிந்துகொள்ளவதற்கு ஐந்து முக்கியமான அம்சங்கள் வலியுறுத்தப்படுகின்றன. முதலாவது மக்களுக்கும் வெளிக்கும் இடையிலான உறவு. இரண்டாவது, 'பொதுப் புலம்' மற்றும் 'பொது வாழ்க்கை' ஆகியவற்றின் ஒன்றோடொன்று தொடர்புடைய நிலைமைகள்; மூன்றாவது அண்டைய பகுதிகளது எண்ணங்கள். நான்காவது பாதுகாப்பு மற்றும் பாதுகாத்தல் பற்றிய விடயம். ஐந்தாவது அணுக்கத்தன்மை (*accessibility*). அணுக்கத்தன்மையானது காண்பியரீதியாக, குறியீட்டு ரீதியாக மற்றும் பௌதீகரீதியாகவெல்லாம் அணுக்கத்தன்மை கொண்டிருக்க வேண்டும் என கார் ஈற்றல் (*Carr et al*: **1992** ) கூறுகிறார்

### ஊர் / நகரம் : காலரீதியான பரிமாணம்

காலரீதியான பரிமாணம் என்பது மூன்று பிரதான அம்சங்களை உள்ளடக்கியவை. அவை காலச் சுழற்சி, தொடர்ச்சியும் நிலைபேறும், மாற்றம் என்பவற்றாலானவை. அதாவது, ஊரொன்றின் பண்பாட்டுத் தினக்காட்டியாக (*cultural calendar*) இது அமையும். விழாக்கள், பண்டிகைகள், சமய நடவடிக்கைகள் முதலான குறிப்பிட்ட கால ஒழுங்கில் நடைபெறும் பண்பாட்டு நடவடிக்கைகள் பற்றியதாக அமையும். அவை எவ்வாறு வெளியில் பரிணமிக்கும், நிலை மாறும், ஊரை உருமாற்றும் என்பனவெல்லாம் இதன் கரிசனையாக இருக்கும்.

### ஊர் / நகரம் : காண்பியப் பரிமாணம்

காண்பியப் பரிமாணம் என்பது முற்றுமுழுதாக ஊர்/நகர வெளியுருவாக்கும் காட்சியனுபவமாகும். ஊர் / நகரம் பற்றிய வாசிப்பில் இதனை 'காட்சி அசைவழகியல்' பற்றிய அனுபவம் என்றும் அழைப்பர். ஏனெனில் ஒரு நகரத்தின்

காட்சிரீதியான அனுபவம் என்பது வெளியலுள்ள கட்டுமானங்கள் பற்றியது மட்டுமல்ல. அந்தக் கட்டுமானங்களோடு சேர்ந்த மனித அசைவுகளது இணைப்பினையும் உட்கொண்டிருப்பது. எனவே அசைவு, தூரம், கோணம், ஒளிமாற்றங்கள் வழியே உருவாகின்ற காட்சி வேறுபாடுகளால் அது உருவாகிறது. கட்டுமானங்களது மொத்தமானதன்மை (*Bulk*) தோற்றப்பாடு அளவு (*scale*) திணிவு (*mass*), பாணி (*style*) முதலான விடயங்கள் மீது இங்கே கவனங்குவிக்கப்படுகிறது. மேலும் அதன் இயற்கையோடான உறவுடைமை, ஊடகப் பாவனை முதலியனவும் இதனுள் அடங்கும். அதனூடாக குறிப்பிட்ட ஊரின் அழகியற் தெரிவுகள், வெளியை நயக்கின்ற தன்மை, அவற்றை அவர்கள் ஒத்திசைய வைத்திருக்கும் முறை யாவும் கவனத்தில் எடுக்கப்படும்.

இரண்டு விடயங்களை மற்றும் ஆளுமைகள் - நிறுவனங்கள் வரலாற்று நாட்காட்டி முதலான விடயங்களை இணைத்துக் கொள்ளலாம்.

**ஊர் / நகரம் : புழங்குபொருள் பரிமாணம்**

மானுடச் சமூகங்கள் எல்லாம் தாம் வாழும் சுற்றுச் சூழலுக்கும், காலத்திற்கும் ஏற்ப தத்தம் இயற்கை வளங்களைப் பண்பாட்டு உற்பத்திப்பொருட்களாக மாற்றிக் கொண்டு, காலங்காலமாக அவ்வவ் கால நிலைவரங்களுக்கு ஏற்ப பயன்படுத்தி வருவதையே புழங்கு பொருள் பண்பாடு என்கிறோம்; அவ்வகையில், இது குறித்த ஊர்/நகரத்தின் பாவனைப்பொருட்கள் அனைத்தையும் வகைபிரித்துப் பட்டியற்படுத்துச் செயற்பாடாகும். வீட்டுத்தளபாடங்கள், சமையல் - உணவருந்தல் சார்ந்த பொருட்கள், சமயம் - சடங்கு - விழாக்கள் சார்ந்த புழங்குபொருட்கள்,








**நீர்கொழும்பு கடல்நீரேரி / பண்டார வன்னியன் முல்லைத்தீவு / கதிரேசன் கோயில் கொழும்பு**

இத்தகைய நகரமைப்புச் சார்ந்த அடித்தளத்தை மையமாகக் கொண்டு, ஊரைச் சுவடியாக்கம் செய்தலை மேலும் வலுவாக்க நாளாந்த வாழ்வுநிலைப் பரிமாணம், மரபுரிமை - வரலாற்றுப் பரிமாணங்களை இணைக்க வேண்டும். ஏற்கனவேயுள்ள மேற்படி நகர அமைப்பு சார்ந்த கட்டமைப்பு நாளாந்த வாழ்வு சர்ந்த விடயங்கள் மற்றும் மரபுரிமை சார்ந்த விடயங்களின் பிரதானவொரு பகுதியை உள்ளே எடுத்து வந்துவிட்டதாயினும் - அதனை மேலும் விரிவும் - ஆழமும் செய்ய வேண்டி தனியான வகைமையாக இணைக்க வேண்டியுள்ளது.

அந்தவகையில், மேற்படி நகர வடிவமைப்புநிலைப்பட்ட சட்டகத்தின் ஆறு உறுப்புக்களுக்கு மேலதிகமாக புழங்குபொருள் பரிணாமம், மரபுரிமை பரிமாணம் என்ற

போக்குவரத்துச் சாதனங்கள், குறித்த ஊரின் தொழில்களை அடிப்படையாகக் கொண்ட புழங்கு பொருட்கள் (விவசாயப், மீன்பிடி, உள்ளூர் வைத்திய, பன்னவேலை, நெசவு, புகையிலை வர்த்தகம் உட்பட்ட பல தொழில்சார் விடயங்கள் சார்ந்த புழங்குபொருட்கள்) என இப் பட்டியல் மேலும் விரிந்து செல்லும். ஊர்களைப் பொறுத்து அவை வேறுபடவுஞ் செய்யும்.

**ஊர் / நகரம் : மரபுரிமைப் பரிமாணம்**

மரபுரிமைப் பரிமாணம் என்பது குறிப்பிட்ட பிராந்தியத்தின் அடையாளமாக அமைவதும், தலைதுறைகளுக்கூடாகக் கைமாற்றப்படுவதுமான குறிப்பிட்ட இடத்திற்கே உரித்தான சிறப்புடைமைகளைக் குறிப்பதாகும். இது ஏற்கனவே மேலே பட்டியற்படுத்தப்பட்ட விடயங்களோடு பல இடங்களிற்





**யாழ்ப்பாணக் கலாசார நிலையம் (இருவேறு கோணங்கள்)**

Image Source: bestjcc.weebly.com

ஒன்றுகலக்கக்கூடிய வாய்ப்புடையதாயினும், அதனது முதன்மை, மற்றும் முன்னுள்ள பட்டியலில் விடுபடக்கூடிய விடயங்களை உள்ளெடுப்பதற்கான அடிப்படைத் தேவை என்பவற்றைக் கவனத்தில் கொண்டு தனியொரு பிரிவாக உள்வாங்கப்படுகிறது.

| இயற்கை மரபுரிமை (Natural heritage) | |
|---|---|
| பண்பாட்டு மரபுரிமை (Cultural heritage) | தொட்டுணரக்கூடிய மரபுரிமை (Tangible heritage) |
| | தொட்டுணரமுடியாத மரபுரிமை (Intangible heritage) |

இயற்கை மரபுரிமையானது குறிப்பிட்ட ஊரின் தனிச்சிறப்புடமையாக உள்ள மனிதர்களால் ஆக்கப்படாத இயற்கையாற் தரப்பட்ட சொத்துக்களைக் குறிப்பதாகும். அவை தாவர வர்க்கங்கள், நீர் முனைகள், பாறைப் படிவுகள், நீர் வீழ்ச்சிகள், நிலத்தோற்றங்கள், நீர்க்கீழ் இயற்கை அமைப்புக்களைக் குறிப்பதாகும்

பண்பாட்டு மரபுரிமையானது குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழ்தல் காரணமாக மனிதர்களால் உற்பத்தி செய்யப்பட்டதும், அருந்தற் பெறுமானங் காரணமாக அரும்பொருளாகியுள்ளதுமான, குறிப்பிட்ட மக்கட்கூட்டத்தின் தனிச்சிறப்பு அடையாளமாக உள்ள பேறுகளைக் குறிப்பதாகும். இவற்றிற் தொட்டுணரக்கூடியன பௌதீகரீதியான பொருட் கூட்டத்தையும், தொட்டுணரமுடியாதவை ஆற்றுகை மரபுகள், நம்பிக்கைகள் மற்றும் அறிவியல் - மொழி மரபுகளைக் குறிப்பதாகவும் அமையும்.

**ஊராளுமைகள் மற்றும் நிறுவனங்களைச் சுவடிப்படுத்தல்**

ஊர்கள் தோறும் பலவேறு துறைகள் சார்ந்துருவாகிய ஆளுமைகளை மற்றும் நிறுவனங்களைச் சுவடியாக்கஞ் செய்தல் இந்தப் பணியின் மிக முக்கியமான இன்னொரு வேண்டுகையாகும். இவ் வகையில் தனியாள் ஒருவரைச் சுவடியாக்கம் செய்தலின் போது பின்பற்றப்படுகின்ற அனைத்து விபரங்களோடும் தனிமனித ஆளுமைகள் பதிவு செய்யப்படவேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது காலந்தோறும் உருவாகிய நபர்கள் - கடந்தகாலம் முதல் சமகாலம் வரையும் உள்ளெடுக்கவேண்டும். அவ்விதமான உள்வாங்கலுக்கான ஜனநாயரீதியான பொதுவான சட்டகம் ஒன்று காணப்படவேண்டும். அதனைப்போலவே பாடசாலைகள், சங்கங்கள் (வெங்காயச் சங்கம், வாழைக்குலைச் சங்கம்.) முதல் நெசவு நிலையங்கள், வாசிகசாலைகள், மடங்கள், வைத்தியசாலைகள் என விரிவாக இவை பட்டியலாக்கம் செய்யப்படவேண்டும்.

**வரலாற்று நாட்காட்டி ஒன்றைத் தயாரித்தல்**

திகதி, மாதம், ஆண்டு அடிப்படையிலான பெருந்தரவு நாட்காட்டிகளை ஊருக்கு ஊர் தயாரித்தல். இது ஊரின் வரலாற்றில் நடந்தேறிய முக்கியமான சம்பவங்களது தினக்குறிப்புப் போல அமைய வேண்டும். பெருவிழாக்கள், ஊர் ஈட்டிய பலதுறைசார் சாதனைகள், இயற்கைப் பேரழிவுகள், இடப்பெயர்வுகள், படுகொலைகள் என அனைத்தையும் உள்ளடக்கியதாக அது அமைய வேண்டும்.

**எண்மிய மரபுரிமையாக்கமும் (digital heritage) உள்ளூர் வரலாற்றை எழுதுதலும்**

ஈழத்தமிழர்களது அரசியல் நிலைவரம், யுத்தம், தொடர்ச்சியாக சிறுபான்மையினரது நிலங்களை பறிக்கும் இலங்கை அரச இயந்திரத்தின் செயற்பாடுகள் மற்றும் இயற்கை அழிவுகள், சமூக நிலைமாற்றங்கள் என்பன இன்று ஈழத்தமிழ் பண்பாட்டினை எண்மியமயமாக்கஞ் செய்தல்





**நல்லூர் கந்தசுவாமி கோயில் / காலனியகால வீடு யாழ்ப்பாணம் / சிவப்புப் பள்ளிவாசல், கொழும்பு**

Image Source: www.westend61.de

என்பதை முக்கியமான தேவைப்பாடாக்கியுள்ளது. இத்தகைய நிலைவரங்கள் உலகளாவிய ரீதியில் எண்மிய மயமாக்கம் என்பதை முக்கியமான செயற்பாடாக்கியுள்ளது. ஆகவே ஊர்களை எண்மியச் செயற்பாடுகளுக்கு உள்ளாக்குதல் என்பது அவசரமான ஒரு செயற்பாடாக (*activism*) முன்னெடுக்கப்படவேண்டும். துரதிர்ஷ்டவசமாக ஈழத்தமிழர்கள் தமது பாரம்பரியமான ஊர்களில் பலவற்றை முழுதாகவோ அல்லது பகுதியளவிலோ இழந்துள்ளனர். அவற்றிற் சில தேசப்படத்தில் பெயர்மாறி தம்மை இழந்துள்ளன. சில தேசப்படத்தில் மட்டும் காணப்படுகின்றன. அவ்வகையில் குறைந்தபட்சம் ஊர்களை நினைவாக பூச்சியவெளியில் (*cyber space*) வசிக்கும் ஒன்றாகவேனும் மாற்ற வேண்டும்.

இதனூடாக, தேசவரலாறு என்ற பெருங்கதையாடலுள் மறைந்து போகின்ற உள்ளூர் வரலாறுகள் (*local histories*) என்ற விளிம்புநிலை வரலாறுகளை முதன்மைப்படுத்துவதன் மூலம் பன்மை வரலாறுகள் என்ற விரிவான சட்டகம் நோக்கி நகர்ந்து செல்வதற்கு ஊர் வரலாறுகள் உதவுகின்றன. அவை அவ்வகையில் ஈழத்தமிழ் அடையாளத்தினை இடைவிடாது அதன் பன்மைத்தன்மையுடன் உரிமை கோருகின்றன. தேச வரலாற்றை மேலும் ஜனநாயகப்படுத்தலுக்கான அடிப்படைகளைத் தருகின்றன.

அவ்வகையில், ஊரைச் சுவடியாக்கம் செய்தல் என்பது ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை ஒருவகையான எதிர்ப்பு அரசியற் செயற்பாடாகும். மறதிக்கு எதிரான நினைவுகூரலை முன்னிறுத்தும் இச்செயற்பாடு ஈழத் தமிழ் பண்பாட்டு வரலாற்று உருவாக்கத்திற்கும், நிலைபேற்றிற்கும் இன்றியமையாத ஒரு பெருஞ் செயற்பாடாக அமையும்.

## குறிப்பு

Document / Documentation ஆகிய ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலீடாக ஆவணம் / ஆவணமாக்கல் முதலான சொற்கள் வழக்கத்துக்கு வந்துவிட்டன. ஆனால், பண்டைத் தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் பேரகராதிகள் ஆவணம் என்ற சொல்லிற்குத் தரும் பொருளும், எம்முடைய இன்றைய பொருள்கோடலும் வேறுபட்டவை. ஆவணம் என்ற சொல் உரிமைப் பத்திரம் (deed) என்ற பொருளிலேயே கையாளப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அவ்வகையில் Document / Documentation முதலான சொற்களுக்கு சுவடி / சுவடியாக்கம் என்ற சொற்களே பொருத்தப்பாடுடையதாகின்றன. கடந்த நான்கு தசாப்தங்களுக்கு முன்பதாக இந்தக் குழப்பம் இருக்கவில்லை. National archives அதனாற்றான் தேசிய சுவடிக்கூடம் என்றழைக்கப்பட்டது. இத்தகைய பின்னணியிற்றான் இக் கட்டுரை சுவடியாக்கம் என்ற சொல்லைப் பயன்படுத்திக் கொள்கிறது. இந்த விடயம் தொடர்பில் தெளிவைத் தந்த சான்றோருக்கு நன்றி.

## உசாத்துணை


Brenda Sheer, (2017) Urban morphology as a research method in Sanchez, T. W. (Ed.). Planning knowledge and research.

Kabilan Sundaramoorthy (2018) Spaces of Conflict: Emerging Built Environment in Postwar Era Urban Development in the City of Jaffna, Sri Lanka. Thesis for: Master of Spatial Planning, Management and Design,University of Moratuwa.

Carr et al (1992) Dimension of Urban Design. Urban design lab.

Kevin Lynach , (1990) The Image of the City, The M.I.T Press, England.

Dana Thweek , Noor Almajed, 2023, Visual dimension.

Documenting Traditional Knowledge – A Toolkit, 2017, World Intellectual Property Organization, Switzerland.

பாக்கியநாதன் அகிலன், 2016, காலத்தின் விளிம்பு: யாழ்ப்பாணத்து மரபுரிமைகளும் அவற்றைப் பாதுகாத்தலும், யாழ்ப்பாணம், பேறு வெளியீடு.

பாக்கியநாதன் அகிலன், மரபுரிமைகளைப் பறைதல், எழுநா.

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.




**பரமு புஷ்பரட்ணம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.

இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.


## யாழ்ப்பாண நகரம் தோன்றிய காலத்தை மீளாய்வு செய்யும்

# யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்வு

2500 ஆண்டுகால இலங்கை வரலாற்றில் வடஇலங்கை சிறப்பாக யாழ்ப்பாணம் பாளி மொழியில் நாகதீப(ம்) எனவும், தமிழ் மொழியில் நாகநாடு எனவும் தனியொரு பிராந்தியமாக அடையாளப்படுத்திக் கூறும் மரபு பண்டு தொட்டு காணப்படுகின்றது. இதற்கு இப்பிராந்தியத்தில் தோன்றி வளர்ந்த தனித்துவமான பண்பாட்டு அம்சங்களும் ஒரு காரணம் என்பதை அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளும் உறுதிசெய்து வருகின்றன. இதை யாழ்ப்பாண நகரத்திற்கு தெற்கே கடல் நீரேரியுடன் அமைந்துள்ள ஒல்லாந்தர்காலக் கோட்டையின் உட்பகுதியில் 2012 - 2017 ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் மேலும் உறுதிசெய்கின்றன. இதுவரை அங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட நம்பகரமான ஆதாரங்கள் யாழ்ப்பாண



புகைப்படம் - யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்வில் எடுக்கப்பட்டது.

நகரம் தோன்றி வளர்ந்த வரலாற்றையும், யாழ்ப்பாணத்தின் ஆதிகால இடைக்கால வரலாறு பற்றியும் இதுவரை வரலாற்று அறிஞர்கள் முன்வைத்த கருத்துக்கள் பலவற்றையும் மீள்வாசிப்பிற்கு உட்படுத்துவதாக உள்ளன. தற்போதைய யாழ்ப்பாண நகரம் தோன்றிய



பெருங்கற்காலப்பண்பாட்டிற்குரிய கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள்
புகைப்படம் - யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்வில் எடுக்கப்பட்டது.

காலம், தோற்றத்திற்கான வரலாற்றுப் பின்னணி தொடர்பாக வரலாற்று அறிஞர்கள் பலர் ஆராய்ந்துள்ளனர். அவர்களில் ஒருசாரார் அதன் தோற்ற காலத்தை நல்லூர் இராசதானி காலத்துடனும், இன்னொரு சாரார் போத்துக்கேயர் கால ஆட்சியுடனும் தொடர்புபடுத்திக் கூறியுள்ளனர். நல்லூர் இராசதானி காலத்துடன் யாழ்ப்பாண நகரத்தின் தோற்றத்தை தொடர்புபடுத்துவோர் யாழ்ப்பாண இராசதானி கால வரலாறு பற்றிப் பிற்காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் சிங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய வேறுபட்ட தலைநகரங்களின் பெயர்கள் ஒரேயிடத்தைக் குறிப்பதாகக் கூறுகின்றனர். இக்கூற்று யாழ்ப்பாணம் ஒரு நகராக வளர்ந்ததைக் காட்டுகின்றதே தவிர அதன் தோற்றகாலத்தைக் கூறுவதாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் (1621-1658) யாழ்ப்பாணம் ஒரு நகராகத் தோன்றியதெனக் கூறுவோர் அதற்கு போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டையை முக்கியமான ஆதாரங்களில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றனர். இக்கோட்டை போர்த்துக்கேயர் ஆட்சியில் சதுர வடிவில் கட்டப்பட்டு ஒல்லாந்தர் ஆட்சியில் (1658-1796) நட்சத்திர வடிவில் மாற்றியமைக்கப்பட்ட இலங்கையின் இரண்டாவது பெரிய கோட்டையாகும். இக்கோட்டை 350 ஆண்டுகள் ஐரோப்பியரது ஆதிக்கம் யாழ்ப்பாணத்தில் இருந்ததன் ஒரு மரபுரிமை அடையாளமாகக் காணப்படுகின்றது. ஆயினும் இக்கோட்டையை முக்கியமான ஆதாரமாகக் காட்டி யாழ்ப்பாண நகரத்தின் தோற்றத்தையும், அதன் வளர்ச்சியையும் போர்த்துக்கேயர் வருகையுடன் தொடர்பு படுத்துவதை மறுதலிப்பதாகவே கோட்டை அகழ்வாய்வில் கிடைத்த தொல்லியல் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

### தொல்லியல் மேலாய்வு

2010 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை நெதர்லாந்து அரசுகளின் நிதியுதவியுடன் அழிவடைந்த யாழ்ப்பாணக் கோட்டையை

இலங்கைத் தொல்லியற் திணைக்களம் மீள்புனரமைப்புச் செய்து வருகிறது. இப்பணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பட்டதாரிகள் முக்கியமான பங்காற்றி வருகின்றனர். இம்மீள்புனரமைப்புப் பணிகளின் போது 62 ஏக்கர் பரப்பில் அமைந்த கோட்டையின் பெரும்பகுதி தொல்லியல் மேலாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் 32 ஏக்கர் பரப்பைக் கொண்ட கோட்டையின் உட்பகுதியில் அழிவடைந்த கிறிஸ்தவ ஆலயம், இராணிமாளிகை, ஆயுதக்களஞ்சியங்கள், பீரங்கித்தளங்கள், படைவீரர்களின் இருப்பிடங்கள், காவல் மையங்கள் என்பன அமைந்துள்ள இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வில் போர்த்துக்கேயர் வருகைக்கு முந்திய வரலாற்றை வெளிப்படுத்திக் காட்டும் நம்பகத்தன்மையுடைய பல தொல்பொருட் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆதிகால இடைக்கால உள்நாட்டு வெளிநாட்டு நாணயங்கள், பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த உள்நாட்டு வெளிநாட்டு மட்பாண்டங்கள், சுடுமண்ணாலான இந்துச் சிற்பங்கள், கருங்கல் மற்றும் சுண்ணாம்புக் கல்லால் அமைக்கப்பட்ட இந்து ஆலயங்களின் அழிபாடுகள், கலைவடிவங்கள், சமயச் சின்னங்கள், கல்வெட்டுக்கள் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வாதாரங்கள் போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னரே தற்போதைய கோட்டைப் பிரதேசமும், அதன் சுற்றாடலும் புராதன குடியிருப்பு மையங்களாகவும்,இந்து சமுத்திர கடல் சார் வாணிபத்தில் மேற்காசிய தென்கிழக்காசிய மற்றும் கிழக்காசிய நாடுகளுக்கிடையிலான வாணிப மையமாகவும் இருந்துள்ளதை உறுதிசெய்கின்றன.

## அகழ்வாய்வு - 1

2012 ஆம் ஆண்டு கோட்டையின் களஞ்சிய அறைக்கு அருகில் பிற தேவைக்காக நிலம் அகழப்பட்டபோது எதிர்பாராதவகையில் தொன்மையான தொல்லியல் ஆதாரங்கள் பல வெளிவந்தன. இவ்விடத்தின் கலாசார மண் அடுக்குகள் குழம்பிய நிலையில் காணப்பட்ட போதும் ஆறடி ஆழத்தில் கடல் நீர்மட்டம் வரை அகழ்வாய்வு செய்யப்பட்டபோது நான்கு கலாசார மண் அடுக்குகளை சரிவர அடையாளம் காணமுடிந்தது. அவற்றுள் கடல்நீர் வெளிவந்த கலாசார மண் அடுக்குகளில் இருந்து ஆதி இரும்புக்காலத்தைச் சேர்ந்த (Early Iron Age Culture or Megalithic Culture) பலவகை மட்பாண்ட ஓடுகளைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவற்றுள் ஆதி இரும்புக்காலத்தை சேர்ந்த கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்களும் கண்டுபிக்கப்பட்டமை இப்பிரதேசத்தில் கந்தரோடை, சாட்டி, பூநகரி முதலான இடங்களை ஒத்த பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இக்கலாசார மண் அடுக்கிலும், இரண்டாவது மண் அடுக்கிலும் பிற தொல்பொருட்களுடன் மங்கிய நிலையில், பெருமளவு ரொளட் மட்பாண்டங்களும், உரோமர் கால மதுச்சாடிகளின் பாகங்களும் பிற தொல்பொருட் சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மூன்றாவது மண் அடுக்கில் இருந்து பலவகை மட்பாண்டங்களுடன் அரேபிய மற்றும் சீன நாட்டு மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள், பீங்கான் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிதைவடைந்திருந்த நான்காவது மண் அடுக்கில் இருந்து பெரும்பாலும் ஐரோப்பியர் கால மட்பாண்டங்கள், நாணயங்கள், நாளாந்தப் பாவனைப் பொருட்கள், கட்டடச் சிதைவுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

## அகழ்வாய்வு - 2

இவ்வாய்வுக்குழிக்கு அருகே 2017 ஆண்டின் பிற்பகுதியில் மத்திய கலாசார நிதிய யாழ்ப்பாண செயல் திட்டத்தின் அனுசரணையுடன் Durham பல்கலைக்கழகமும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் பிரிவும் இணைந்து அகழ்வாய்வொன்றை மேற்கொண்டிருந்தது. சமகாலத் தொல்லியல் அறிஞர்கள் மத்தியில் நன்கு அறிமுகமான பேராசிரியர் கொனிங்காம் வழிகாட்டலில் நடைபெற்ற இவ்வகழ்வாய்வில் நவீன தொழில் நுட்பக்கருவிகளைப் பயன்படுத்தி விஞ்ஞானபூர்வமாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டதால் இங்கு கிடைத்த தொல்பொருட் சின்னங்களின் காலம், அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பான கணிப்பீடுகள் நம்பகத்தன்மை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இவ்வாய்வுக் குழியில் இயற்கை மண்படைவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் ஒன்பது வேறுபட்ட கலாசார மண் அடுக்குகள்

அடையாளம் காணப்பட்டன. அவற்றுள் இயற்கை மண்ணோடு ஒட்டிய கலாசார மண் அடுக்கில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலப்பண்பாட்டிற்குரிய கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் கி. மு. 700க்கும் கி. பி. 100 நூற்றாண்டுக்கும் நரைநிற மட்பாண்டங்கள் (*Grey ware*) கி. மு. 500க்கும் கி. பி. 200க்கும் இடைப்பட்டதெனவும் கணிப்பிடப்பட்டுள்ளன. இக்காலக்கணிப்புகள் போர்த்துக்கேயர் வருகைக்கு 1500 ஆண்டுககளுக்கு முன்னரே கோட்டைப் பிரதேசம் முக்கிய குடியிருப்புகளைக் கொண்ட பிரதேசமாக இருந்துள்ளதை உறுதி செய்கின்றன.



**யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்வின்போது கிடைக்கபெற்ற வரலாற்றுச் சின்னங்கள்**

மேலும் இவ்வகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு காலகட்டத்திற்குரிய தொல்பொருட் சின்னங்கள் ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட கோட்டைப் பிரதேசத்தின் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றைத் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன. அவற்றுள் பல்வேறு காலத்தை சேர்ந்த பல நாடுகளுக்குரிய பலவகை மட்பாண்டங்கள் கிடைத்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வாதாரங்கள் போர்த்துக்கேயர் வருகைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தற்போதைய யாழ்ப்பாண நகரம் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கால அடிப்படையில் உறுதிப்படுத்த உதவுகின்றன. பேராசிரியர் கொனிங்காம் அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்டங்களை முக்கியமான ஆதாரமாகக் கொண்டு கோட்டைப் பிரதேசத்துடன் கடசார் வாணிபத்தில் ஈடுபட்ட நாடுகளையும், அவற்றின் காலங்களையும் கணித்துள்ளார். அவற்றுள் இந்திய *Northern Black Polished Ware* (500 *BC to* 100 *BC*), உரோமநாட்டு *Rouletted Ware* (200 *BC to* 200 *AD*), தமிழக *Arikkamdu Type* 10(200 *BC to* 200 *AD*), *Arikkamdu Type* - 18 (300 *BC to* 200 *AD*), உரோம கிரேக்க நாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்ட *Omphalos Ware* (200 *BC to* 100 *AD*), உரோம நாட்டு *Larretine Ware* (100 *BC to* 100*AD*), *Amphora* (200 *BC to* 100*AD*), இந்திய *Polished Ware* (100 *BC to* 800*AD*), தமிழகத்திலும் இலங்கையிலும் பயன்பாட்டிலிருந்த *White Slipped with Red Paint* (600 *AD to* 1100*AD*), *Appliqué Ware* (1300 *AD to* 1400*AD*), ஈரான் ஈராக் நாடுகளுக்குரிய *FupaSasanian Islamic Ware* (200 *BC to* 700 *AD*), *Buff Ware* (400 *AD to* 800 *AD*), *Lustre Ware* (800 *AD to* 1000 *AD*), *Imitation Lustre Ware* (800 *AD to* 1000 *AD*), *White TinGlazed Ware* (800 *AD to* 1000 *AD*), *Lead Glazed Ware* (800 *AD to* 1000 *AD*) மற்றும் சீன நாட்டுக்குரிய *hangsa Painted Ware* (800 *AD to* 900 *AD*), *Xing Ding White Wares* (800 *AD to* 1000 *AD*), *Yue green Ware* (800 *AD to* 1000 *AD*), *Coarse Stone Ware* (700 *AD to* 1100 *AD*), *Green Splashed White Ware* (800 *AD to* 1000 *AD*), *Chinese Porcelain* (1400 *AD to* 1700 *AD*) முதலான நாடுகளுக்குரிய மட்பாண்டங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

## நகரமயமாக்கம்

தென்னாசியாவில் நகரமயமாக்கத்தின் தோற்றமும் அதற்கான வரலாற்றுப் பின்னணியும் இடத்திற்கு இடம்

**2012 ஆண்டு கோட்டையின் களஞ்சிய அறைக்கு அருகில் பிற தேவைக்காக நிலம் அகழப்பட்டபோது எதிர்பாராதவகையில் தொன்மையான தொல்லியல் ஆதாரங்கள் பல வெளிவந்தன. இவ்விடத்தின் கலாசார மண் அடுக்குகள் குழம்பிய நிலையில் காணப்பட்ட போதும் ஆறடி ஆழத்தில் கடல் நீர்மட்டம் வரை அகழ்வாய்வு செய்யப்பட்டபோது நான்கு கலாசார மண் அடுக்குகளை சரிவர அடையாளம் காணமுடிந்தது.**

வேறுபட்டதாகக் காணப்படுகிறது. பொதுவாக நிலையான குடியிருப்புகள், நிரந்தரப் பொருளாதாரக்கட்டமைப்பு, மிகை உற்பத்தி, சிறுதொழில் நுட்பவளர்ச்சி, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் என்பன நிகழ்ந்ததற்கான ஆதாரங்கள் நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன தோன்றியதன் தொடக்க காலமாகக் கூறப்படுகின்றது. தமிழகத்தில் சேர நாட்டின் நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன உரோம நாட்டு வணிகத் தொடர்பால் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. பாண்டி நாட்டிலும், சோழ நாட்டிலும் இவை விவசாய உற்பத்தியால் தோன்றியதாகக் கூறப்படுகிறது. வடஇந்தியாவில் நகரமயமாக்கத்தின் தோற்ற காலம் கி.மு.500 - 400 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்திலும் இலங்கையிலும் இதன் தோற்ற காலம் ஏறத்தாழ கி. மு. 200 எனக் கூறப்படுகிறது. இலங்கையில் புராதன நகரங்கள் தோன்றிய இடங்களாக அநுராதபுரம், மகாகமை, கந்தரோடை, மாதோட்டம் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்கு இவ்விடங்கள் பிற நாடுகளுடன் குறிப்பாக உரோம நாட்டுடன் கொண்டிருந்த கடல்சார் வாணிபத் தொடர்புகள் முக்கியமான காரணமாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசத்தில் மேற்கொண்ட மேலாய்வில் கிடைத்த பண்டைய நாணயங்கள், பலவகை மட்பாண்டங்கள் இப்பிரதேசம் தொடக்கத்தில் உள்நாட்டு வர்த்தகத்திலும் பின்னர் இந்தியாவுடனும் இவற்றைத் தொடர்ந்து உரோம அரேபிய, சீனா முதலான நாடுகளுடன் கடல்சார் வர்த்தகத்தில் ஈடுபட்டதை உறுதிசெய்கின்றன. இவற்றை அகழ்வாய்வில் கிடைத்த ஆதாரங்கள் மேலும் உறுதி செய்கின்றன. இவ்விடத்தில் கொட்றிங்ரன் என்ற அறிஞர் கோட்டைப் பிரதேசத்தில் இருந்து 20 உரோம நாட்டு தங்க நாணயங்களைக் கண்டுபிடித்ததாகக் கூறியிருப்பதும் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்வாதாரங்களை வைத்து நோக்கும் போது யாழ்ப்பாண நகர உருவாக்கம் இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கந்தரோடை, அநுராதபுர, மகாகமை முதலான நகரங்கள் தோன்றியதன் சமகாலத்தில் ஏற்பட்டதெனக் கூறலாம்.

இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள் இற்றைக்கு 2400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையின் கடற்கரை சார்ந்த துறைமுக நகரங்கள் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைந்திருந்த துறைமுக நகரங்களை தமிழில் கோகரணப்பட்டன(ம்) (திருகோணமலை), மாதோட்ட பட்ணன(ம்) (மன்னார்), ஜம்பு கோளபட்டன(ம்) (யாழ்ப்பாணம்?) எனக்குறிப்பிடுகின்றன. இவற்றுள் மாதோட்டம் முக்கியமான துறைமுக நகராக இருந்ததை 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும் உறுதி செய்கின்றன. இத்துறைமுக நகரங்களை மையப்படுத்தியே 16 ஆம் நூற்றாண்டிலிருந்து போர்த்துக்கேயரும், பின்னர் ஒல்லாந்தரும் தமது கோட்டைகளையும் அமைத்துள்ளனர். இதற்கு போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னரே இவ்விடங்கள் பிரதான குடியிருப்பு மையங்களாகவும், கடல்சார் வாணிபத்தில் முக்கிய துறைமுக நகரங்களாகவும் வளர்ச்சியடைநதிருந்தமை முக்கிய காரணமாகும். யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்விலும்,

மேலாய்விலும் கிடைத்த பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த பலவகையான தொல்லியல் ஆதாரங்கள் நகரமயமாக்கம் ஏற்பட்டதையும், அங்கு வாழ்ந்த மக்கள் தொடர்ச்சியாக இந்தியா குறிப்பாக தமிழகம், மேற்காசியா, தென்கிழக்காசியா, சீனா முதலான நாடுகளுடன் கடல்சார்தொடர்புகளைக் கொண்டிருந்ததையும் உறுதிப்படுத்துகின்றன. இங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பான்மையோர் இந்துக்களாக இருந்துள்ளனர் என்பதையும் ஆய்வில் கிடைத்த ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. அவற்றுள் கி. பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முந்திய சுடுமண் பெண் வங்களின் வடிவமைப்பு குடியிருப்புகளில் வைத்து வழிபடப்பட்ட தெய்வச் சிலையாகக் காணப்படுகிறன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்கள், நாணயங்களில் கணிசமானவை சோழர் காலத்தைச் சேர்ந்தவையாகும். 1980 களில் கோட்டை வாசல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கி. பி. 11 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டு இங்கிருந்த ஆலயம் ஒன்றுக்கு இராஜேந்திர சோழ மன்னன் தானம் வழங்கிய செய்தியைக் கூறுகிறது. கோட்டை அழிபாடுகளிடையே கண்டுபிடிக்கப்பட்ட கருங்கல்லால் கட்டப்பட்ட இந்து ஆலயங்களின் அழிபாடுகளின் கலைமரபு சோழர் கலை மரபைச் சேர்ந்ததாகக் காணப்படுகின்றது. கோட்டையின் பழைய பெயரான ஐநூற்றுவன் வளவு இலங்கையில் சுயாட்சி கொண்ட நகரங்களை உருவாக்கிய சோழர்கால ஐநூற்றுவன் என்ற வணிகக்கணத்தினை நினைவுபடுத்துவதாக உள்ளது. இவ்வாதாரங்களை வைத்து நோக்கும் போது சோழர் காலத்தில் கோட்டைப் பிரதேசம் முக்கியமான துறைமுக நகராக வளர்ச்சியடைந்ததைக் காட்டுகிறது. இடைக்கால வரலாற்றில் இலங்கை தென்னிந்தியா, கிழக்காசியா சிறப்பாக சீன நாடுகளுக்கு இடையிலான வணிக நகராக கோட்டைப்பிரதேசம் செயற்பட்டதை கோட்டை ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பலவகை நாணயங்கள், மட்பாண்டங்கள் உறுதி செய்கின்றன. இவை கி. பி. 12ஆம் நூற்றாண்டிலிருந்து போர்த்துக்கேயரின் வருகைக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகும். அவற்றுள் யாழ்ப்பாண இராசதானி கால மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் அதிக எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்களுடன் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்ட இந்து ஆலயங்களின் கட்டட அழிபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில கோட்டையில் இருந்த யாழ்ப்பாண இராசதானி கால ஆலயங்களாக இருக்கலாம் எனப் பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிடுகிறார்.

சூளவம்சம் என்ற பாளி வரலாற்று நூல் கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் பொலநறுவை அரசு மீது படையெடுத்த தமிழ்ப்படை வீரர்கள் வட இலங்கையில் களிமண்ணால் வட்டவடிவில் கட்டப்பட்ட கோட்டையில் தங்கியிருந்ததாகக் கூறுகிறது. இவ்வாதாரம் போர்த்துக்கேயருக்கு முன்னரே வட இலங்கையில் கோட்டை இருந்ததை உறுதிசெய்கிறது. தமிழ் - சிங்கள இலக்கியங்கள் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் இருந்த கோட்டை பற்றிக் கூறுகின்றன. போர்த்துக்கேயர்கால ஆவணங்கள்

**யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசத்தில் மேற்கொண்ட மேலாய்வில் கிடைத்த பண்டைய நாணயங்கள், பலவகை மட்பாண்டங்கள் இப்பிரதேசம் தொடக்கத்தில் உள்நாட்டு வர்த்தகத்திலும் பின்னர் இந்தியாவுடனும் இவற்றைத் தொடர்ந்து உரோம அரேபிய, சீனா முதலான நாடுகளுடன் கடல்சார் வர்த்தகத்தில் ஈடுபட்டதை உறுதிசெய்கின்றன**

யாழ்ப்பாண் இராசதானியின் படைவீரர்களுக்கும் போர்த்துக்கேயப் படைவீரர்களுக்கும் இடையிலான முக்கியமான போர்கள் கோட்டைப் பிரதேசத்தை அண்டிய இடங்களில் நடந்ததாகக் கூறுகின்றன. இவ்வாதாரங்களை வைத்து நோக்கும் போது போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னரே தற்போதைய கோட்டை அமைந்திருக்கும் இடத்தில் களிமண் கொண்டு கட்டப்பட்ட கோட்டையொன்றும் இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. அக்கோட்டை இருந்த இடத்திலேயே 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரும், பின்னர் வந்த ஒல்லாந்தரும் தற்போதைய கோட்டையை தமது நாட்டுக் கலை மரபில் கற்களைக் கொண்டு கட்டியிருக்கலாம் எனச் சிந்திக்க இடமுண்டு.

(தொடரும்)

மலையக சமூகத்தினரது சமூகநல விடயங்களையும், உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக்கல்வி குறித்த விடயங்களையும், தொழிற்சங்கம், அரசியல் மற்றும் மலையக மக்களின் வாக்குரிமை பிரச்சினைகளையும், தோட்ட தொழிலாளர்களின் வேதன மாற்றங்கள், அது குறித்த கொள்கைகள், கூட்டு ஒப்பந்த நடவடிக்கைகள் போன்ற விடயங்களையும், வீட்டுரிமை, உணவுப் பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளையும் மையப்படுத்தியதாக 'மலையகம் : சமூக – பொருளாதார அரசியல் பரிமாணங்கள்' இந்தத்தொடர் அமைகின்றது. அத்தோடு இந்தத்தொடர் மலையத்தில் தேயிலை கைத்தொழில் மற்றும் சமூக மேம்பாடு தொடர்பான கொள்கை முன்மொழிவுகள், தொழிலாளர்களின் வறுமை, பொருளாதாரப் பிரச்சினைகள் போன்ற விடயங்களை யும் வளர்ச்சிப் போக்கு கண்ணோட்டத்தில் ஆராய்ந்து, அவற்றுக்கான தீர்வுகள் எவ்வாறு அமையலாம் என்பதற்கான பொறிமுறைகளையும் முன்வைக்கின்றது.




● முத்துவடிவு சின்னத்தம்பி

முத்துவடிவு சின்னத்தம்பி அவர்கள் 1965ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் சிறப்புப் பட்டத்தைப் பெற்று அதே பீடத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி இரண்டு வருடங்களில் நிரந்தர விரிவுரையாளராகி னார். 1969இல் இங்கிலாந்தின் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பொருளியல் முதுமாணிப் பட்டத்தைப்பெற்றார்.


1993ஆம் ஆண்டு பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்ற முத்துவடிவு சின்னத்தம்பி 2006ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தை அலங்கரித்த மலையகத்தின் முதலாவது பேராசிரியர் என்ற சிறப்புக்குரியவர்.


# பெருந்தோட்ட மக்களும் சமூக நலன் சேவைகளும் : நேற்றும் இன்றும் நாளையும்

காலனித்துவ ஆட்சியின் விளைவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் இலங்கையில் பெருந்தோட்ட விவசாய முறையொன்று தோன்றி வளர்ந்தது என்பதும், இன்று வரையும் அது எமது பொருளாதாரத்தில் கேந்திர முக்கியத்துவம் வகித்து வருகின்றது என்பதும் யாவரும் அறிந்த ஒரு உண்மையாகும். இவ்விவசாய முறையின் பிரதான உற்பத்தி அலகாகவிருக்கும் தோட்டங்கள் முக்கியமானதொரு தாபன அமைப்பாக இன்று விளங்குகின்றன. பெருமளவு எண்ணிக்கையான தொழிலாளரைக் கொண்ட அமைப்பாக இருந்து வரும் அதேவேளையில் இவை தோட்டங்களில் வதியும் மக்களது வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைக் கட்டுப்படுத்துகின்றன. அத்துடன், அவர்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகள் அனைத்தையுமே வழங்குவதால் தோட்ட மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு முற்று முழுதாகத் தோட்ட முகாமையிலேயே தங்கியிருக்கும் நிலை அங்கு காணப்படுகின்றது. வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளனைத்தும் தோட்ட எல்லைகளுக்குள்ளேயே தனியொரு அமைப்பின் கீழ் வழங்கப்படுவதால் இவை சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் அலகுகளாக விளங்குகின்றன. இதன் காரணமாக அவற்றைப் பூரணத்துவத் தன்மை கொண்ட அமைப்புகளெனக் கருதுவது பொருத்தமானதே வாழ்க்கையின் வேறுபட்ட மூன்று கூறுகளாகிய தொழில், வாழ்க்கைமுறை, பொழுதுபோக்கு என்பவற்றிற்கிடையிலான தடைகள் இங்கு உடைத்தெறியப்படுகின்றன. இதனால் இவை முற்றிலும் பூரணத்துவம் வாய்ந்தனவாக இல்லாத போதும் அவ்வாறு கருதுவது ஏற்கக் கூடியதே என்பது ஹொல்லப் என்பாரது கருத்தாகும்.

### தேசியமயமாக்கத்திற்கு முன்னர் சமூகநலன் சேவைகள்

இந்திய தமிழ்த் தொழிலாளர் இங்கு தருவிக்கப்பட்டு குடியேற்றப்பட தோட்டங்கள் பெரும்பாலும் மலைப்பாங்கான தொலைப்பிரதேசங்களில் அமைந்திருந்ததால் அவர்களது பல்வேறு



A tea estate during 1890

Image Source : www.pinterest.com

தேவைகள் தோட்டங்களுக்குள்ளேயே பூர்த்திசெய்ய வேண்டியிருந்தது. வாடகையற்ற குடியிருப்பு, இலவச மருந்து விநியோகம், வைத்தியசாலை, பிரசவ விடுதி, குழந்தை பராமரிப்பு நிலையங்கள் போன்ற வசதிகள் இவ்வாறு செய்து கொடுக்கப்பட்ட வசதிகளுட் சிலவாகும். எனினும், இவ்வசதிகள் ஒரு போதும் ஆகக் குறைந்த மட்டத்திற்கும் மேலாக இருக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. மேற்குறிப்பிட்ட சேவைகளை வழங்குவதற்கென காலப்போக்கில் விரிவான சட்டப் பிரமாணங்களும் உருவாக்கப்பட்டன. தோட்டத்துறைக்கே பிரத்தியேகமானவையாகவிருந்த இச்சட்டங்கள் தோட்டத்தில் வதியும் மக்களுக்குத் தொழில் வசதியையும் வாழ்க்கை வசதிகளையும் செய்து கொடுப்பதைத் தோட்ட உரிமையாளரின் பொறுப்பாக்கின. காலனித்துவ ஆட்சியின் கீழ் அறிமுகமான மேற்படிச் சட்டங்கள் பல இன்றும் அமுலிலிருந்து வருகின்றன. இவற்றுட் சில பின்வருமாறு:

**1865 ஆம் ஆண்டு சேவை ஒப்பந்தச் சட்டம் :** தோட்டங்கள் திறக்கப்பட்ட ஆரம்பகாலங்களில் புலம்பெயர்ந்து வந்து குடியேறிய தொழிலாளர்களிடையே வறுமை, கடன்படு நிலை பரவலாகக் காணப்பட்ட சுகயீனங்கள் என்பன காரணமாக வாழ்க்கைத் தரமானது குறைந்த மட்டத்தில் இருந்தது. தொழிலாளரைத் திரட்டும் முறை, நீண்ட வேலை நேரம், சுகாதார வசதியற்ற வாழ்க்கை நிலைமைகள் என்பவற்றோடு, இம்மக்களது அறியாமை, கல்வியறிவின்மை என்பனவும் இதற்குக் காரணமாகவிருந்தன. எனினும், தோட்ட முகாமையாளர்கள் இக்காரணிகளில் பின்னையவற்றிற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். வைத்தியசாலைகளில் இறப்போரின் விகிதம் ஏனைய சமூகங்களோடு ஒப்பீட்டு ரீதியாக இத்தொழிலாளர்களிடையே உயர்வாகவிருந்தால், சுகவீனமுற்றிருக்கும் காலப்பகுதியில் அவர்களுக்கு இருப்பிட வசதி, உணவு, வைத்திய வசதி போன்ற சில குறைந்தபட்ச வசதிகள் செய்து கொடுக்கப்படுவதை இச்சட்டம் வலியுறுத்திற்று.

தொழிலாளரது சமூக நலனிற்குத் தொழில் வழங்குநரே பொறுப்பு என இச்சட்டம் விதித்தது. தொழிலாளர்களிடையே காணப்பட்ட உயர்ந்த இறப்பு விகிதங்கள், உடல் நலக்குறைவுகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஆகக் குறைந்த மருத்துவ வசதிகளாவது அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படுவதை இது வலியுறுத்திற்று. அவர்களிடையே காணப்பட்ட மேற்படி நிலைமைகள் போஷாக்கின்மை, கடினமான வேலை நிலைமைகள் என்பவற்றின் விளைவாகும். குறைந்த மட்ட வேதனங்கள், தரங்குன்றிய வீட்டு வசதிகள் என்பவற்றோடு, குடிநீர்வசதி, சுகாதார வசதிகள் என்பன இல்லாதிருந்தமை நிலைமையை மேலும் மோசமாக்கிற்று. அவர்களுக்குச் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படுவதை இச்சட்டம் கட்டாயமாக்கிற்று.
எனினும் மேற்படி சட்டம் அறிமுகம் செய்யப்பட்ட முன்னரும்கூட தொழிலாளர்களிடையே இறப்பு விகிதங்கள் வீழ்ச்சியடையவில்லை என்பது கவனிக்கற்பாலது. சட்டவிதிகளை அமுலாக்குவதில் தோட்ட முகாமையாளர் அக்கறை காட்டாது விட்டமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

**1880 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க மருத்துவத் தேவைகள் சட்டம் :** தொழிலாளருக்கான மருத்துவ நலன் திட்டங்களை நிதிப்படுத்துவதற்கும் முகாமை செய்வதற்கும் அரசாங்கமே பொறுப்பென தோட்டக் கம்பனிகள் வாதிட்டு வந்தன. 1880 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் இப்பொறுப்பை அரசாங்கம் ஏற்றது. எனினும், இத்திட்டத்தை நிதிப்படுத்துவதில் தொடர்ந்தும் இழுபறிநிலை காணப்பட்டது. இறுதியாக, 1892 இல் பெருந்தோட்ட ஏற்றுமதிப் பொருட்களின் மீது ஏற்றுமதித் தீர்வையொன்றை விதிப்பதன் மூலம் மருத்துவ நிதியொன்று உருவாக்கப்பட்டதுடன் தோட்டத் தொழிலாளருக்குத் தோட்டங்களை அண்டிய அரசாங்க வைத்தியசாலைகள் திறந்துவிடப்பட்டன.
*1912 ஆம் ஆண்டு 9 ஆம் 10 ஆம் இலக்க மருத்துவ உதவிச்சட்டங்கள் :* தோட்டத் தொழிலாளருக்குச் சுகாதார வசதிகளையும் வைத்திய வசதிகளையும் செய்து கொடுப்பதில் 1912ஆம் ஆண்டுவரை குடியேற்ற அரசாங்கத்திற்கும் தோட்டக்கம்பனிகளுக்குமிடையே கசப்பான கருத்து வேறுபாடுகள் நிலவிவந்தன. உதாரணமாக, 1865 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் சுகயீன காலங்களில் தொழிலாளருக்குச் செய்து கொடுக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச வசதிகளுக்கான செலவினை யார் செலுத்துவது என்பது பற்றிய சர்ச்சையை இங்கு குறிப்பிடலாம். 1912ஆம் ஆண்டுச் சட்டம் முதன் முறையாக ஒரு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் முறையான பராமரிப்பு, போஷாக்கு என்பவற்றிற்கு தோட்ட முகாமையாளரே பொறுப்பு என விதித்தது. தோட்டங்களில் காணப்படும் சுகாதார வசதிகளையும் , தோட்ட மக்களுக்கான சமூக நலன் வசதிகளையும் அரசாங்க மாவட்ட வைத்திய அதிகாரிகள் மேற்பார்வை செய்வதற்கும் இச்சட்டம் அதிகாரமளித்தது. ஆனாலும், தோட்டங்களில் மலசலகூடங்களை அமைப்பதற்கும், வடிகாலமைப்புகளை திருத்துவதற்குமான சட்டவிதிகளை உருவாக்குவதற்கும் இது அனுமதியளித்தது. இவ்வாண்டு முதல் தோட்டக் கம்பனிகளிடமிருந்து மருத்துவ வரியொன்று அறவிடப்பட்ட போதும், தோட்டங்களில் மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்படுமானால் மேற்படி வரியின் மூலம் திரட்டப்பட்ட வருவாய் அவற்றிடமே மீளவும் செலுத்தப்பட்டது.

**1920 ஆம் ஆண்டு கல்விச்சட்டம் :**
பத்தொன்பதாம்; நூற்றாண்டு முழுவதுமே தோட்டச் சிறார்களின் கல்விக்கென பாட சாலைகளை நிறுவுதல், அவற்றைப் பராமரித்தல் என்பவற்றை அரசாங்கம் தனியார் கைகளிலேயே விட்டது. அவ்விதப் பாடசாலைகள் குறிப்பிட்ட சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் அரசாங்கம் அவற்றிற்கு நிதியுதவியளித்தன. எனவே, மத நிறுவனங்களினாலும் தோட்ட முகாமையாளராலும் நடத்தப்பட்ட பாடசாலை களின் எண்ணிக்கை அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க சார்பளவில் கூடுதலாகவிருந்தன. தோட்டத்தொழிலாளரது பிள்ளைகள் கல்வி கற்பது தோட்டங்களில் அவர்கள் செய்யும் வேலையினளவைப் பாதிக்குமெனக் கருதியதோட்ட முதலாளிகள் பாடசாலைகளை அமைப்பதை விரும்பவில்லை. எனினும் 1907 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 8 ஆம் இலக்க ஆரம்ப கல்விச்சட்டம், தினசரி குறைந்தது இரண்டு மணி நேரமாவது பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வி புகட்டுவதைக் கட்டாயப்படுத்தியது. தொடர்ந்து, 1920 ஆம் ஆண்டுச்சட்டம் தோட்டங்களில் ஆரம்பப்பள்ளிகள் நடத்தப்படுவதைக் கட்டாயமாக்கியது.

**1941 ஆம் ஆண்டு பிரசவ நன்மைகள் சட்டம்:**
தோட்டங்களில் வதியும் மக்களுக்கு ஆகக்குறைந்த வசதிகளையாவது ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், மோசமான சுரண்டலினின்றும் அவர்களைப் பாதுகாப்பதற்குமாகவே மேற்படி சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. எனினும், இவை முறையாக அமுல் செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க எவ்வித தாபன ரீதியான ஏற்பாடுகளும் இல்லாததால் நடைமுறையில் இச்சட்டங்கள் அதிகம் பலனளிக்கத் தவறின. நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும் கூட மேற்படி சட்டங்கள் நீக்கப்படாத போதும், இம்மக்களது குடியுரிமை பறிக்கப்பட்டதால் நடைமுறையில் இவை தோட்ட மக்களுக்கு எவ்வாறு பாதகமாக மாறினவென்பது கீழே விளக்கப்பட்டுள்ளது.

நாடு சுதந்திரமடைவதற்கு முன்னரிருந்தே பதவியிலிருந்த அரசாங்கங்கள் மக்களுக்குப் பல சமூக நலத் திட்டங்களை அமுலாக்கி வந்தன. இலவசக்கல்வி, இலவச சுகாதார மருத்துவ வசதிகள், வெறும் சமூக நலன் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கிய இவை காலப்போக்கில் மேலும் விரிவாக்கப்பட்டன. ஆனால், தோட்ட மக்களது நலன்களைப் பேணுவதற்கென இருந்துவந்த விஷேட சட்ட ஏற்பாடுகள் தொடர்ந்தும் அமுலிலிருந்ததைச் சாதமாகக் கையாண்டு, நாட்டு மக்களுக்குப் பொதுவாக வழங்கிவந்த சமூக நலன் சேவைகளைத் தோட்ட மக்களுக்கு விஸ்தரிப்பதினின்றும் அரசாங்கம் தன்னை விடுவித்துக்கொண்டது. அத்துடன் இச்சேவைகளை வழங்கும் பொறுப்பு தொடர்ந்தும் தோட்டக் கம்பனிகளிடையே ஒப்படைக்கப்பட்டது. ஆனால், தோட்டக் கம்பெனிகளோ இவ்வசதிகளை முறையாக வழங்கத் தவறின. சுகாதாரம், வதிவிட வசதி போன்றவற்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தோட்டங்களை பராமரித்த முகவர் இல்லங்கள் பெரிதும் அக்கறை காட்டவில்லை. தமது குறுங்கால இலாபங்களைப் பாதிக்கும் எவ்வித நடவடிக்கைகளையும் சாதகமாக நோக்காத இவை இச்சேவைகளை வழங்குவது தமது செலவைக் கூட்டுமெனக் கருதின. இதன் விளைவாக, நாட்டின் ஏனைய சமூகங்கள் பொதுசேவைகளைப் பயன்படுத்தி கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் பல முன்னேற்றங்களைக் கண்டபோதும், தோட்ட மக்கள் தொடர்ந்தும் தோட்ட முகாமையிலேயே தங்கியிருக்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் காலத்திற்குக் காலம் அரசாங்கம் அறிமுகம் செய்த பல்வேறு சமூகநலன் சேவைகளின் நன்மைகளைத் தோட்டத்துறை சார்ந்த மக்கள் அனுபவிக்க முடியாது போயிற்று. இவர்களது சமூக அபிவிருத்தியில் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் ஒருசில மாற்றங்கள் ஏற்பட்டபோதும் நாட்டின் ஏனைய துறை மக்களோடு சார்பளவில் இன்றுங்கூட இவர்கள் பின்தங்கி காணப்படுவதற்கு இதுவே முக்கியமான காரணமாகவிருந்தது எனக் கூறின் அது தவறாகாது. இது தொடர்பான புள்ளி விபரங்கள் சில கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

தேசியமட்டத்திலான சராசரிகளிலும் பார்க்க இம் மக்கள் தொடர்பான அபிவிருத்திக் குறிகாட்டிகள் குறைந்த மட்டத்திலிருப்பது நாட்டின் ஏனைய துறைகளோடு ஒப்பீட்டளவில் தோட்ட மக்கள் பின் தங்கி இருப்பதைக் காட்டுகின்றன.

### தேசியமயமாக்கமும் சமூக நலன் சேவைகளும்

தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதன் பின்னர் தோட்ட மக்களுக்குச் சமூக நலன் சேவைகளை வழங்குவதில் ஓரளவு சிரத்தை காணப்பட்டது. 1972 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் பின்வந்த காலப்பகுதியில் மேற்படி குறிகாட்டிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் இதனைக் காட்டுகின்றது.

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்கள் ஒவ்வொன்றிலும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவென தனித்தனி சமூக அபிவிருத்திப் பிரிவுகள் அமைக்கப்பட்டன (1978). வதிவிடவசதி, சுகாதாரம், கல்வி, குடிநீர் விநியோகம், குழந்தை பராமரிப்பு போன்றவற்றை மேம்படுத்துவதற்கென இவை பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. தோட்ட மக்களது சமூக, கலாசார, கல்வித்தரங்களை மேம்படுத்துவது இவற்றின் நோக்கமாகவிருந்தது. தோட்ட மக்களது சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவை பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாகவே மேற்கொண்டன.

1. 1975 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனங்களிரண்டும் தலா 100 Polyclinics களை ஆரம்பித்தன. பிரசவத்திற்கு முன்னரும் பின்னரும் தாய்மாரதும், சிசுக்களினதும் சுகநலன்களைக் கவனிப்பது இவற்றின் பிரதான நோக்கமாகவிருந்தது. எனினும், நடைமுறையில் இவை குடும்பத் திட்டமிடல் (அதாவது, கருத்தடைக்கான தேவை, அதற்கான வழிமுறைகள்), பொதுவான நோய்தடுப்பு முறைகளான தடுப்பூசி ஏற்றுதல், சுகாதாரக்கல்வி போன்றன தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கடமைகளையே ஆற்றின.

2. தோட்டங்களில் நிலவும் வைத்தியர்களுக்கான பற்றாக்குறையைத் தணிக்கும் வகையில் ஒவ்வொரு தோட்டத்திற்கும் சுகாதார நலன் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் தோட்ட மருத்துவ உதவியாளரது கடமைகளுட் சிலவற்றை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

> தோட்டங்கள் மீண்டும் தனியார் மயமாக்கப்பட்ட பின்னர் தோட்ட மக்களது சமூக நலனைக் கவனிக்கவெனத் தாபிக்கப்பட்ட பெருந்தோட்ட சமூக நலன்புரி நிதியமானது வெளிநாட்டு உதவி யுடன் பலதிட் டங்களை அமுலாக்கி வருகின்றது. அரசாங்கமும் தோட்டக் கம்பெனிகளும் இதற்கு நிதி வழங்க வேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

தோட்ட மக்களது சமூக நலனை மேம்படுத்துவதற்கு வெளிநாட்டுத் தாபனங்களின் பங்களிப்பும் இக்காலப்பகுதியில் நாடப்பட்டது. 1970களில் வெளிநாட்டு உதவி தரும் தாபனங்களின் உதவியுடன் சுகாதாரம், வீடமைப்பு, குடிநீர் விநியோகம், கல்வி என்பவற்றை முன்னேற்றுவதற்குப் பல வேலைத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டன.

நோர்வே, டச்சு அரசாங்கங்கள் நிதிப்படுத்திய சமூகநலன் திட்டங்கள், சுவிடிஸ் அபிவிருத்தி நிறுவனம் நிதிப்படுத்திய கல்வி அபிவிருத்தித் திட்டம், ஜெர்மனிய அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்ட கல்விக் கல்லூரி என்பன இவற்றுள் முக்கியமானவையாகும். (Manickam, p.1995) மேலே குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக, யுனிசெப் அமெரிக்க கெயார் நிறுவனம் போன்ற சர்வதேச நிறுவனங்களினது உதவியுடன் வேறு பல திட்டங்களும் அமுலாக்கபபட்டன. இவை மிகவும் விரிவானவையாக இருந்ததோடு, மக்களுக்கு நேரடியான நன்மையான நன்மைகளை அளிப்பனவாகவும் இருந்தன. மேற்படித்திட்டங்கள் அரசாங்கத் தாபனங்களினூடாகவும், தோட்ட முகாமையினூடாகவும் செயற்படுத்தப்பட்டன. இவற்றைச் செயற்படுத்துவதில் இரு அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டன. ஒன்று ஏற்கனவே இருந்த சுகாதார வசதிகளை மேம்படுத்தல் (உ + ம் சுகாதார உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்) மற்றது, நேரடியாகவே மருத்துவ உதவிகளை மக்களுக்கு வழங்குதல். இவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களும் அவை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் கீழ் விளக்கப்பட்டுள்ளன.

- யுனிசெப் திட்டங்கள் (1979 - 85) : தோட்ட மருந்தகங்கள், வைத்தியசாலைகள் என்பவற்றை திருத்தியமைத்தல், குடிநீர் விநியோகம், மலசல கூடங்களை அமைத்தல், சுகாதாரக் கல்வி வழங்குதல் போன்றன. இதன் பிரதான கூறுகளாகவிருந்தன. 1987 ஆம் ஆண்டளவில் 80 வீதமான தோட்டப்புறக் குழந்தைகளுக்கு இது தடுப்பூசி ஏற்றியது. குழந்தை பராமரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் நடவடிக்கைளும் இதில் அடங்கியிருந்தன.
- சர்வதேச அபிவிருத்தித் தாபனம் (IDA) : இதனது உதவியுடன் அமுலாக்கப்பட்ட தேயிலை புனருத்தாபனம் தொடர்பான இரண்டாவது செயற்றிட்டம் மஸ்கெலியா பிரதேசத்தில் 13000 வீடுகளைக் கட்டவும், குடிநீர்வசதி, சுகாதார வசதி என்பவற்றை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டது.
- ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) ஊபெக் தாபனம் : என்பவற்றின் உதவியுடன் அமுலாக்கப்பட்ட தேயிலை அபிவருத்தித் திட்டம் பதுளை மாவட்டத்தில் 3480 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணியை மேற்கொண்டது.
- தேசிய அபிவிருத்தி வங்கியினது நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தேயிலை புனருத்தாரனத் திட்டத்தின் கீழ் 5900 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.
- அமெரிக்க நிறுவனமான “கெயார்” நிறுவனம் திரிபோசா (Triposha) திட்டத்திற்கு



**லயன் வீடுகள்**

Image Source : www.sundayobserver.lk

நேரடி உதவிவழங்கிற்று. பிரசவத்திற்கென தாய்மார்கள் பிரசவ வார்ட்டுக்களில் தங்கியிருக்கும் ஏழுநாட்களுக்கு முன்னரும் பின்னரும் மேற்படி சத்துணவு வழங்கப்பட்டது.

- பல மாவட்டங்களில் அமுலாக்கப்பட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் தோட்டங்களுக்கென சில விசேட செயற்றிட்டங்களும் அமுலாக்கப்பட்டன. உதாரணமாக, நுவரெலியா மாவட்டத்திற்கான திட்டம் தோட்ட மருந்தகங்கள், பிரசவ வார்ட்டுக்கள் என்பவற்றைத் திருத்தியமைத்ததோடு தோட்ட மருத்துவ உதவியாளர், மருத்துவிச்சிகள் என்போரைப் பயிற்றுவிக்கவும் நிதி ஒதுக்கியது.
- சனத்தொகை நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதியமும் சில வேலைத்திட்டங்களை அமுலாக்கிற்று.

மேற்படித் திட்டங்களினூடாக நன்மையடைந்தோர் அவற்றின் பலன்களை அனுபவித்தரென்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனினும், பெருந்தோட்ட மக்களின் சமூகநலக் குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு இவை போதுமானவையாக இருக்கவில்லை. பொதுநலன் சேவைகளை வழங்கும் அரசாங்க திணைக்களங்கள் முற்று முழுதாக இக்கடமைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றன. மாறாக, தோட்ட முகாமையாளர் தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு முதன்மையளித்து, சமூக நலன் சேவைகளுக்கு இரண்டாமிடத்தையே அளிக்கின்றனர்.

எனவே தான், பெருந்தோட்டங்களுக்கான நடுத்தரக்கால முதலீட்டுத்திட்டமானது (MTIP) பெருந்தோட்டத் துறையில் சமூகக் கட்டமைப்புக்களை மேம்படுத்தும் அண்மைக்கால முயற்சிகள் மெச்சத்தக்கனவையாக இருந்தபோதும், தோட்ட மக்களின் ஒரு பகுதியினருக்கு மட்டுமே அவை நன்மையளித்ததெனக் கூறியது போலும். இச்சமூக நலன் நடவடிக்கைகள் சரியான முறையில் ஒருங்கிணைக்கப்படாததுடன், அவை தொடர்பான அணுகுமுறையிலும், திட்டவமைப்பிலும் ஒருமைப்பாடு காணப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியது.

### அண்மைக்கால தனியார்மயமாக்கலும் சமூக நலன் சேவைகளும்

பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்படும் வரை தோட்ட மக்களுக்கான சமூக நலன்சேவைகள் தோட்ட முகாமையாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தனவென்பதும், தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் இப்பொறுப்பு பெருந்தோட்ட கூட்டுத்தாபனங்களினது சமூக அபிவிருத்திப்பிரிவுகளுக்கு மாற்றப்பட்டது என்பதும் மேலே விளக்கப்பட்டது. தோட்டங்கள் மீளவும் தனியார் கைகளுக்கு மாற்றப்பட்ட பின்னர் மேற்படி சேவைகளை வழங்குவதற்கெனப் பெருந்தோட்ட வீடமைப்பு, நலன்புரி நிதியம் (*Plantation housing and Social Welfare Trust - PHSWT*) என்ற புதிய தாபனமொன்று உருவாக்கப்பட்டது. **1972**ம் ஆண்டு கம்பெனிச்சட்டத்தின் கீழ் இலாப நோக்கமற்ற ஒரு தாபனமாக உருவாக்கப்பட்ட இது, பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒன்றாகும். பெருந்தோட்டக் கம்பெனிகள், தொழிற்சங்கங்களினூடாகத் தொழிலாளர், உதவி வழங்கும் வெளிநாட்டு முகவர் தாபனங்கள், அரசாங்கத் தாபனங்கள் என்பன இதில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன. அறுபது வீதமான தொழிலாளரை பிரதிநிதித்துவப்படுத்தும் இருபெரும் தொழிற்சங்கங்கள், தனியார் கம்பெனிகள் என்பவற்றின் பிரதிநிதிகளோடு சமூக நலவமைச்சு, வீடமைப்பு அமைச்சு, பெருந்தோட்ட தொழிலமைச்சு , நிதியமைச்சு என்பவற்றினது பிரதிநிதிகளையும் இது கொண்டுள்ளது. எனவே அரசாங்கம், தோட்டக்கம்பெனிகள், தொழிற்சங்கங்கள் ஆகிய மூன்று பிரதான பிரிவினரும் கூட்டாக அமர்ந்து கலந்துரையாடுவதற்கு இது சிறந்த ஒரு மையமாக விளங்குகின்றது.

பெருந்தோட்டங்களுக்கான சமூக நலன் சேவைகளைத் திட்டமிடல், அவற்றை செயற்படுத்துதல் போன்ற கடமைகளைக் கொண்டுள்ள இது, தோட்ட மக்களுக்கு உட்கட்டமைப்புக்கு வசதிகளை உருவாக்குவதிலும் பல்வேறு சேவைகளை வழங்குதலிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. வெளிநாட்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயற்படும் இதற்கு தோட்டக் கம்பெனிகளும் தமது இலாபங்களில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை வழங்க வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. உதவி வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடனான திட்டங்களுக்கு இது பொறுப்பாக உள்ளது. அத்துடன் படிப்படியாக செயற்படுத்துவதற்கு இது வேறு சில கடமைகளையும் ஆற்றத் தொடங்கியுள்ளது தோட்டத் துறை தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ,கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல், சுகாதார நலன்புரி உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம். சமூக நலன் வசதிகளை வழங்குவதில் இது ஒரு முக்கியமான மாற்றத்தினை ஏற்படுத்திற்று. இதுவரை காலமும் இவற்றை வழங்குவதில் இருந்துவந்த அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினது படிமுறையமைப்பினை இது மாற்றியமைத்தது. எனினும் இந்தப்புதிய தாபன அமைப்பின் கீழ் சமூக நலன் சேவைகளை வழங்கும் பொறுப்பு யாருடையது என்பது தெளிவாக நிர்ணயிக்கப்படாதிருப்பதோடு, இன்றுவரையும் அரசாங்கம் இதற்குத் தீர்க்கமானதொரு விடையை அளிக்கத் தவறிவிட்டது. தோட்ட மக்களின் மனிதவள அபிவிருத்திக்கு தனியார்துறைக் கம்பெனிகளே பொறுப்பாகவிருக்கும் தாபன அமைப்பொன்று காலப்போக்கில் உருவாகுமென்ற எதிர்பார்க்கை இதில் காணப்படுகின்றது. அதாவது, கல்வி, அடிப்படை சுகாதாரம் தொடர்பான சேவைகளை வழங்குவது அரசாங்கத்தினது பொறுப்பாகவிருக்கும். அதே வேளையில், சமூகத்திற்குத் தேவையான மருந்தகங்கள், பிரசவ வார்டுகள், குழந்தை பராமரிப்பு நிலையங்கள் போன்ற ஏனைய வசதிகளை அமைத்துக்கொடுப்பதற்கு தோட்டக் கம்பனிகளே பொறுப்பு வகிக்கும் தாபன ஏற்பாடொன்று உருவாகுமென்பதே இவ்வெதிர்பார்ப்பாகும். கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைச் சேவைகளை வழங்குவதற்கான ஒரு இடைக்கால ஏற்பாடே இதுவென்றும், நீண்ட காலத்தில் அரசாங்கமே இவற்றிற்குப் பொறுப்பேற்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கலாம்.

### நலன்புரி நிலையத்தின் இன்றைய செயற்பாடுகள்

நோர்வே, டச்சு அரசாங்கங்கள் கூட்டாக நிதிப்படுத்தும் சமூக நலன் செயற்றிட்டங்களை **1993** இன் பின்னர்

இந்நிதியமே அமுல்படுத்துகின்றது. இவற்றுள் முதலாவது செயற்றிட்டம் , 198592 காலப்பகுதியில் பெருந்தோட்டங்களுக்கான நடுத்தரக்கால முதலீட்டுத் திட்டத்தின் கீழ் பெருந்தோட்ட கூட்டுத்தாபனங்களினாலேயே அமுலாக்கப்பட்டது. குடிநீர் விநியோகம் , சுகாதார வசதிகள், பிரசவ வார்டுகள், மருந்தகங்கள், குழந்தை பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றில் ஏற்கனவே உள்ள வசதிகளை மேம்படுத்துவதன் மூலமோ, புதியவற்றை நிர்மாணித்தல் மூலமோ தோட்டத்தொழிலாளரின் சுகாதார, சமூக நலனை மேம்படுத்தல் இதன் நோக்கமாகும்.

அத்துடன், இச்சமூக நலன் திட்டத்தைத் திட்டமிடுவதற்கும் அமுலாக்குவதற்குமான உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்ட தொழில்நுட்ப உதவிக்குழுவிற்குத் (Technical Assistance Team - TAT) தேவையான நிதிகளையும் அது ஒதுக்கிற்று. தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்ட பின்னர் இரண்டாவது சமூக நலச் செயற்றிட்டத்தை அமுலாக்கும் பொறுப்பை இந்நிதியம் ஏற்றது.

தோட்டத்துறையில் இன்று பல்வேறு அமைச்சரகளால் ஐந்து முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன. அவையாவன :

1. பெருந்தோட்ட அபிவிருத்தி ஆதாரத்திட்டம்.
2. பெருந்தோட்ட மறுசீரமைப்புத்திட்டம்.
3. ஹற்றன் தொழில்நுட்ப பயிற்சி நிலையம்.
4. தோட்ட வீடமைப்பு அபிவிருத்தித் திட்டம்.
5. தோட்டப் பாடசாலைகள் கல்வி அபிவிருத்தித் திட்டம்.

இவற்றுள் முதலாவது திட்டத்தை (WSP III ) அமுலாக்கும் பொறுப்பு இந்நிதியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது இரண்டாவது சமூக நலன் செயற்றிட்டத்தின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இதனது நோக்கங்கள் முன்னைய திட்டத்தின் நோக்கங்களை ஒத்திருந்தபோதும் தோட்டத்துறையின் முழுமையான செயற்பாட்டினை மேம்படுத்துவதினூடாகவே மேற்படி நோக்கங்களை அது அடைய முயல்கின்றது. முன்னைய திட்டம் வறுமை ஒழிப்பிலேயே கூடிய கவனம் செலுத்திற்று. ஆனால், புதிய திட்டமானது தனியார் உடமையினூடாகத் தோட்டத்துறையினது நீண்டகால அபிவிருத்திக்கு முக்கியத்துவமளிக்கின்றது. இதன் பிரதான கூறுகள் பின்வருமாறு:

- சமூக நலன் வசதிகளைத் திட்டமிடல், அபிவிருத்தி செய்தல், முகாமை செய்தல் போன்றவற்றிற்கு உதவுதல்.
- தோட்டங்களில் வதியும் மக்கள் சுய உதவிகளினூடாக வீடுகளையும் மலசல கூடங்களையும் அமைத்துக் கொள்வதற்கு உதவுதல் .
- முறைசாரக் கல்வி, பயிற்சி என்பவற்றினூடாக சுகாதாரம், சமூக சேவைகள் என்பவற்றின் தரத்தைப்பேணுவதோடு, அவற்றைத் திறமையான முறையில் ஒழுங்கு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வீடுகளை நிர்மாணித்தல், அவற்றை வதிவோரின் பெயர்களுக்கு மாற்றுதல் போன்றவற்றை மேற்கொள்வதற்கான சுயாதீன வீடமைப்பு சங்கங்களை உருவாக்குவதற்கும் அவற்றின் செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கும் உதவுதல்.

பல்வேறு சமூக நலன் சேவைகளில் முதலீடு செய்வதனூடாகப் பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். எனினும் , இவற்றிற்கான முழுச்செலவையும் முன்னரைப்போன்று அரசாங்கம் தானே ஏற்க முடியாது என்பதை இப்பொழுது உணர்ந்துள்ளது. எனவே, தோட்டத்தொழிலாளரை வெறுமனே சமூக நலன் சேவைகளின் நன்மைகளை அனுபவிப்போராக மட்டுமே கருதாது தமது வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவதற்கு அவர்களை ஊக்குவிக்கவும் இது முயலுகின்றது. சமூகத்தின் தேவைகள் என்னவென்பதைத் தெளிவாக இனங்கண்டு, அவற்றை நிறைவேற்றிக்கொள்ள சமூகம் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் பட்சத்தில் மட்டுமே இத்திட்டத்தின் மூலம் அதற்கு உதவி செய்யும் நோக்கம் இதில் காணப்படுகின்றது. மேலும், மனிதவள அபிவிருத்தியானது கம்பனி முகாமையின் பிரிக்க முடியாத ஒரு அம்சம் என்பதையும் தொழிலாளரது பூரணமான ஒத்துழைப்புடனேயே

அதனை அடைய முடியும் என்பதையும் அது ஏற்கின்றது. நிலைத்திருக்கக்கூடிய தன்மை கொண்ட சமூக அபிவிருத்தி, மனிதவள அபிவிருத்தி, என்பவற்றை முன்னெடுத்துச்செல்ல இது முனைகின்றது. வீடமைப்பு அபிவிருத்தி, சுகாதாரம், குழந்தைப் பராமரிப்பு, தொழில்உறவுகளைச் சீராக்கல் என்பவற்றோடு, நலன்புரிநிதியத்தை வலுப்படுத்துவதும் அதன் பிரதான நோக்கங்களாகும். நிதியம் மேற்படி திட்டத்தை அமுலாக்கி வருகின்ற போதும், தனியார்மயமாக்கலின் பின்னர் சமூக நலன் சேவைகளை வழங்குதல், வீடமைப்பு முயற்சிகள் என்பவற்றில் ஓரளவு தளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. மேலும், நலன்புரிநிதியத்தை அமைப்பதற்கும் அதனது நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் கீழ் செயற்பட்டு வந்த சமூக அபிவிருத்திப் பிரிவுகள் சரியான முறையில் கலந்தாலோசிக்கப்படவில்லையென குறைகூறப்படுகின்றது. அத்துடன், இந்நிதியமானது தேவைக்குமதிகமாகவே மத்தியப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தோட்டங்களினின்றும் அது விலகி நிற்கின்றதென்றும் கூறப்படுகின்றது.

தோட்டத் தொழிலாளர் தோட்ட எல்லைகளுக்குள்ளேயே கம்பனிகளுக்கு உரித்தான தொடர் லயன் அறைகளில் அல்லது வீடுகளில் குடியமர்த்தப்பட்டதாலும் தோட்டங்கள் மலைப்பாங்கான தொலைவிடங்களில் போக்குவரத்து வசதிகளற்று காணப்பட்டதாலும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை சமூக நலன் வசதிகளை தோட்டங்களுக்குள்ளேயே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருந்தது. ஆரம்பகாலங்கில் தோட்டக் கம்பெனிகளே இதற்குப் பொறுப்பாகவிருந்தன. தூரங்குறைந்த சேவைகளே வழங்கப்பட்டதால் அம்மக்களது வாழ்க்கை நிலைமைகள் மிக மோசமாகவிருந்தன. மந்தபோசனம், நோய்களுக்குட்படல், கல்வியறிவின்மை உயர்ந்த இறப்பு விகிதங்கள் என்பன இவர்களது வாழ்க்கையின் முக்கிய பண்புகளாகவிருந்தன. காலப்போக்கில் தோட்ட மக்களுக்கான சமூக நலன் சேவைகள் தொடர்பாக பல சட்டங்கள் கொண்டுவரப்பட்ட போதும் இவர்களது வாழ்க்கை நிலையில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

தோட்டங்கள், தேசியமயமாக்கப்பட்ட பின்னர் இம்மக்களது சமூக நலன் அரசாங்கத்தின் பொறுப்பாக மாறியது. எனவே, இது தொடர்பான பல முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கம் மட்டுமன்றி, மனித நேயங்கொண்ட பல வெளிநாட்டு நிறுவனங்களும் இதில் ஈடுபட்டன. இதன் காரணமாக இம்மக்களது வாழ்க்கைநிலை ஓரளவு உயர்ந்தமையை இது தொடர்பான சமூக நலன் குறிகாட்டிகள் பிரதிபலித்தன. தோட்டங்கள் மீண்டும் தனியார் மயமாக்கப்பட்ட பின்னர் தோட்டமக்களது சமூக நலனைக் கவனிக்கவெனத் தாபிக்கப்பட்ட பெருந்தோட்ட சமூக நலன்புரி நிதியமானது வெளிநாட்டு உதவியுடன் பலதிட்டங்களை அமுலாக்கி வருகின்றது. அரசாங்கமும் தோட்டக் கம்பெனிகளும் இதற்கு நிதி வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், இம்மக்களுக்குத் தேவையான சமூகநலன் சேவைகளை வழங்குவதற்கான இறுதிப்பொறுப்பு யாருடையது என்பது திட்டவட்டமாக நிர்ணயிக்கப்படாது உள்ளது. மேலும் வெளிநாட்டு நிதியுதவிகளை நம்பியிருக்கும் ஒரு நிலையும் அங்கு காணப்படுகின்றது. தோட்டங்களுக்குரித்தான லயன் தொடர் அறைகளில் அல்லது வீடுகளில் குடியிருப்பதனாலேயே சமூக நலன் வசதிகளை ஏற்படுத்துவதில் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இவ்வீடுகள் குடியிருப்போருக்கே உரிமையாக்கப்பட்டு, தோட்டக் குடியிருப்புகளும் கிராமக் குடியிருப்புகளாக மாறுமாயின், நாட்டின் ஏனைய துறைகள் போன்று இங்கும் சமூகநலன் வசதிகளை வழங்குவது சாத்தியமாகும். அத்துடன், இம்மக்களையும் இலகுவாகத் தேசிய நீரோட்டத்திற்குள் இணைக்கக்கூடியதாகவிருக்கும். தோட்ட மக்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த சமூகநலன் வசதிகளை ஏற்படுத்துவதற்கு இதுவே பொருத்தமான வழியுமாகும்.

## உசாத்துணை


**Hollup, Oddvar,1994. Bonded Labour: Caste and Cultural Identity among Tamil Plantation Workers in Sri Lanka, Charles, Subasinghe & Sons, Sri Lanka.**

**ISA Workshop: Plantation Sector of Sri Lanka, u;ague, Netherlands, July 1997.**

**Janatha Estates Development Board, 1986, Social Development Division. Workplan 1986 MTIP Social Welfare Programme.**

**Manickam, P.1995, Tea Plantation in Crisis: An Overview, Social Scientists Association, Colombo.**

**Wesumperuma, D.1986. Indian Immigrant Plantation workers in Sri Lanka: A historical Perspective 1880 - 1910, Vidyalankara Press, Kelaniya.**

'யாழ்ப்பாணத்துச் சாதியம் – ஆய்வுகள்' என்ற இத்தொடர் யாழ்ப்பாணத்தில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தில் சாதியக் கட்டமைப்பின் இருப்பியலையும், சாதிமுறையின் இறுக்கமான பின்பற்றுகைகளையும் பற்றிய ஆங்கில ஆய்வுக்கட்டுரைகளை மொழி பெயர்த்து வழங்குவதாக அமைகின்றது. இதன்படி, பட்டறிவுசார் அனுபவப்பதிவுகள், அரசியல் மேடைப்பேச்சுகளின் உணர்ச்சி வெளிப்பாடுகள் போன்றவற்றுக்கு அழுத்தம் கொடுக்காத புறநிலைத் தன்மையுடைய நேரிய பகுப்பாய்வு தன்மைகளாக அமையும் ஆய்வுக்கட்டுரைகளின் ஊடாக யாழ்ப்பாணத்தின் சமூக கட்டமைப்பு, சாதியும் வர்க்கமும் சமயமும், சமய சடங்குகளும் சாதியமும், குடும்பம் திருமணம் ஆகிய சமூக நிறுவனங்களும் சாதியமும் ஆகியன இந்தத் தொடரில் வரலாற்று நோக்கில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. சாதியத்துக்கு எதிரான மக்கள் எழுச்சிகள், கிளர்ச்சிகள் போராட்டங்கள் என்பவற்றை வரலாற்று நோக்கில் விபரிப்பதாகவும் இந்தத்தொடர் அமைகிறது.




**கந்தையா சண்முகலிங்கம்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.


# யாழ்ப்பாணத் தமிழர்களின் சமூக ஒழுங்கமைப்பு

### மைக்கல் பாங்ஸ் ஆய்வு குறித்த ஓர் அறிமுகம்

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் ரினிட்டிக் கல்லூரியின் மாணவராக இருந்த போது மைக்கல் பாங்ஸ் (Michael Banks) 1950களின் முற்பகுதியில் கள ஆய்வு வேலைக்காக யாழ்ப்பாணம் வந்தார். இவர் தம் ஆய்விற்கான களப்பணியில் ஒரு வருடம் சிறுப்பிட்டி என்ற கிராமத்திலும் ஆறுமாதங்கள் கிளிநொச்சியிலும் செலவிட்டார்.

யாழ்ப்பாணத் தமிழர்களின் சமூக ஒழுங்கமைப்பு (The social organization of Jaffna Tamils) என்னும் பெயரில் இவரது கலாநிதிப் பட்டப்படிப்பிற்கான ஆய்வினை 1957இல் சமர்ப்பித்தார். இவ்வாய்வேடு நூலாகப் பிரசுரிக்கப்படவில்லை. ஆயினும் மைக்கல் பாங்ஸ் தமது ஆய்வு முடிவுகளை CASTE IN JAFFNA (யாழ்ப்பாணத்தில் சாதி) என்னும் கட்டுரையாக எழுதி வெளியிட்டார்.



பிராமண குலத்தை சேர்ந்த சிறுவன்

Image Source : www.jeyamohan.in

இக்கட்டுரை E.R லீச் என்னும் மானிடவியலாளர் பதிப்பித்த 'தென்னிந்தியா, இலங்கை, வடமேற்குப் பாகிஸ்தான்' ஆகிய நாடுகளின் சாதிகள் பற்றிய சில அம்சங்கள் நூலில் சேர்க்கப்பட்டது.
பாங்ஸ் அவர்களின் மேற்குறித்த கட்டுரையை

ஆதாரமாகக் கொண்டு தழுவியும் சுருக்கியும் இத்தமிழ் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. பாங்ஸ் தமது கட்டுரையில் யாழ்ப்பாணத்தின் சாதிகளிடையேயான இடையூட்டாட்டத்தில் (caste interaction) முக்கியமான வகிபாகத்தைப் பெறும் 10 வரையான சாதிகள் பற்றிய தகவல்களைத் தருகின்றார். அவரது ஆங்கிலக் கட்டுரையில் சாதிப் பெயர்கள் வெளிப்படையாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கையில், யாழ்ப்பாணத்தில் தமிழில் பேச்சிலும் எழுத்திலும் சாதிப்பெயர்கள் வெளிப்படையாகக் குறிப்பிடப்படுவதில்லை என்பது மரபு. இதனை சமூகவியலாளர்களும் மானிடவியலாளர்களும் குறிப்பிட்டுள்ளனர். “சாதி” என்ற சொல்லிற்கு பதில் சமூகம் என்ற சொல்லாடல் உபயோகிக்கப்பட்டு வருவதையும், குறித்த ஒரு சாதியின் பெயரைக் குறிப்பிடுவதற்கு பதிலாக அச் சாதியின் தொழிலைக் கொண்டு சுட்டுவதையும் யாழ்ப்பாணத்தின் மரபாகக் காணலாம்.

பாங்ஸின் ஆங்கிலக் கட்டுரையில் அவர் சாதிகளின் பெயர்களை ஆய்வு மரபுக்கேற்ப வெளிப்படையாகவே குறிப்பிடுகிறார். ஆயினும் இத்தமிழ்க் கட்டுரையில் சாதிப் பெயர்கள் இயன்ற அளவில் தவிர்க்கப்பட்டுள்ளது. பாங்ஸ் கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதற்காக அவரது கூற்றாக அமையும் ஆங்கிலப் பெயர்கள் இடையிடையே தரப்பட்டுள்ளன. பாங்ஸ் கள ஆய்வு செய்த காலம் 1950 களின் முற்பகுதி என்பதும் அவர் குறிப்பிடும் சமுதாய உறவுகள் ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பதையும் இங்கு குறிப்பிடுதல் அவசியம்.

இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாடு சுண்ணாம்பு கற்பாறைகளினாலான புவிச்சரிதவியல் பண்பைக் கொண்ட நிலப்பகுதியாகும். இங்கு தரைமேற்பகுதி நீர் நிலைகள் மிகக் குறைவு: ஆனால் தரைக்கீழ் நீரை போதிய அளவு கிணறுகள் மூலம் பெற முடிகிறது. நெல் இங்கு மனாவாரியாகப் பயிரிடப்படுகின்றது. கிணற்று நீர்ப்பாசனம் மூலமாக புகையிலை, வெங்காயம், மிளகாய் ஆகிய தோட்டப் பயிர்கள் சந்தைக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன. வான் பயிரான பனை மரங்கள் குடாநாடு எங்கும் காணப்படுகின்றன. வீட்டு வளவுகளில் தென்னைகள் நிறைந்து சோலையாகக் காணப்படும்.

சுருட்டு உற்பத்தி முக்கியமான சிறு கைத்தொழில் ஆகும். சிமெந்துத் தொழிற்சாலையொன்றும் தேங்காய் எண்ணெய் வடிக்கும் ஆலை ஒன்றும் யாழ்ப்பாணத்தில் உள்ளன. இவை தவிர கைத்தொழிற்சாலைகள் என்று சொல்லக்கூடிய எவையும் யாழ்ப்பாணத்தில் இல்லை. யாழ்ப்பாணத்தை வெளி உலகத்துடன் தொடர்பற்ற ஒரு பிரதேசம் எனவும் கூற முடியாது. யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் மிக உயர்வானது. அது தென்னிலங்கைக்கு பெருமளவில் மனித வளத்தை ஏற்றுமதி செய்துள்ளது. படித்த யாழ்ப்பாணத்தவர்கள் மலாயாவிற்கும் தொழில் வாய்ப்புத் தேடிச் சென்றுள்ளனர்.

வரலாற்று நோக்கில் பார்த்தால் யாழ்ப்பாணம் தென்னிலங்கையுடனும், இந்தியாவின் தமிழகத்துடனும் தொடர்புடையதாக உள்ளது. இன்று யாழ்ப்பாணத்தின் மொழி, பண்பாடு, சமயம் என்பனவற்றில் இந்து சமயத்தின் செல்வாக்கு அதிகமாக வெளிப்படுகின்றது. ஆனால் இத்தகைய செல்வாக்கு கடந்த காலத்தில் தொடர்ச்சியாக இருந்ததாகக் கொள்ள முடியாது.

சாதி என்னும் நிறுவனம் இந்தியத் துணைக் கண்டத்தின் நீட்சியாகவே பார்க்கப்படுவதுண்டு. நான் இந்தக்கட்டுரையில் தென்னிந்தியாவின் தஞ்சாவூர்ப் பகுதியின் சாதிய அமைப்பையும் சாதி முறையையும் யாழ்ப்பாணத்தின் சாதி முறையுடன் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்ட முயன்றுள்ளேன். யாழ்ப்பாணம், பாக்கு நீரிணைக்கு அப்பால் தென்னிந்தியாவிலிருந்து ஏறக்குறைய 28 மைல் தூரத்தில் உள்ளது. எனினும் யாழ்ப்பாணத்தில் காணப்படும் பண்பாட்டுக் கூறுகள் யாவும் தென்னிந்தியாவிலிருந்து பெறப்பட்டவை எனக் கூற முடியாது. யாழ்ப்பாணத்திற்கே உரிய தனித்துவக் கூறுகள் பலவும் உள்ளன.

### யாழ்ப்பாணத்தின் சமூக அடுக்கமைவு

யாழ்ப்பாணத்தின் சாதி அமைப்பின் முக்கியமான இயல்புகள் பின்வருவன :

1. இங்கு பல அகமணக் குழுக்கள் உள்ளன. இவை மேல், கீழ் என்ற அடுக்கமைவுப் பாங்கில் அமைந்துள்ளன.
2. துடக்கு எனும் கருத்து யாழ்ப்பாணத்தின் சாதி நடைமுறையில் உள்ளது.
3. சடங்கியல் சேவைகள் மூலம் சாதிகள் ஒன்றில் ஒன்று தங்கி இருக்கும் முறை செயற்படுகின்றது.
4. அடுக்கமைவில் ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு பெயர் இருக்கும். அவை ஒவ்வொன்றும் தரவரிசையில் (Rank Order) ஒரு இடத்தைப் பெற்றிருக்கும். ஒவ்வொரு சாதிக்கும் வழமைப்படியான நடத்தை முறைகள் இருக்கும். இந்நடத்தை முறைகள் சாதி வேற்றுமையின் குறியீடுகள் (Symbols of Rank difference) ஆகும்.

மேலே குறிப்பிட்ட அடுக்கமைவுகள்,

1. பொருளியல் தங்கியிருத்தல்
2. அரசியல் தங்கி இருத்தல்
3. சமயச் சடங்கு நிலையில் தங்கி இருத்தல் என்ற மூன்று வழிகளில் இணைகின்றன.

சமூக அடுக்கமைப்பைத் தீர்மானிக்கும் சமூக வர்க்கங்கள் (Social class) என்ற கருத்து யாழ்ப்பாணத்திற்குப் புதியது. யாழ்ப்பாணத்தின் நகர அல்லது பட்டினப் பகுதிகளில் மட்டுமே இது ஓரளவுக்குக் காணப்படுகின்றது. கிராமங்களில் வர்க்கம் என ஒன்று கிடையாது.

இதற்குக் காரணம் பொருளாதாரம், கல்வி என்பனவற்றில் உள்ள வேறுபாடு கிராமங்களில் நேரடியாகவே சாதி வேறுபாடாக, சாதி உறவில் வெளிப்படுகின்றது. வர்க்கம், சாதி என்று இரண்டையும் யாழ்ப்பாணச் சமூகச் சூழலில் தெளிவாக வேறுபடுத்தி அறிய முடியாது. வர்க்கம் பிரமிட் மாதிரி அமைப்பில் உருவகப்படுத்தப்படுவது. ஒரு பிரமிட் அமைப்பின் அடிப்பகுதி விரிந்ததாக இருக்கும். விரிந்த இந்த அடிப்பகுதியில் கீழ் அடுக்குகளில் உள்ள உழைப்பாளர்களான அடித்தள மக்கள் உள்ளடக்கப்படுகின்றனர். இவர்களே எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர். பிரமிட்டின் மேற்பகுதி ஒடுங்கியது. இப்பகுதி சிறிய எண்ணிக்கையினரான உயர் வகுப்பினரைக் உள்ளடக்கியது. யாழ்ப்பாணத்தில் உயர் சாதியினராகக் கருதப்படுவோர் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராகவும் சாதிப்படியில் தாழ் நிலையில் உள்ளோர் சனத்தொகையில் சிறிய பங்கினராயும் உள்ளனர். இந்தக் காரணத்தினால் யாழ்ப்பாணத்தின் சாதி அமைப்பை விளக்குவதற்குப் பிரமிட் உருவகம் பொருத்தமற்றது.

உயர்சாதியினர் பெரும் எண்ணிக்கையில் இருப்பதனால் அவர்களுக்கு சமூகத்தின் மீது கட்டுப்பாட்டைச் (Social control) செலுத்துவது எளிதாகக் கைகூடுகிறது. அவர்கள் அரசியல் மேலாதிக்கம் (Political dominance) உடையவர்களாய் உள்ளனர். ஆயினும் உயர்சாதி என்பதை உயர்வர்க்கம் (Upper class) எனப் பொருள்கொள்ள முடியாது. வேளாளர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக உள்ளமையினால் அரசியல் மேலாத்திக்கம் உடையவர்களாக இருக்கின்றனர். ஆயினும் இவர்களில் பெரும்பான்மையோர் உழவுத் தொழிகளில் ஈடுபடுகின்ற உழைப்பாளர்களாக இருப்பதனால் பொருளாதார ஆதிக்கமுடைய உயர் வர்க்கமாக வேளாளர்களைக் கருத முடியாது.

சாதி, வர்க்கம் என்ற அடுக்கமைவை விட இன்னொரு அடுக்கமைவு யாழ்ப்பாணத்தில் உள்ளது. இதனைச் சொந்தகாரச் சாதி அடுக்கமைவு என்று கூறலாம். வேளாளர் என்ற பெயரை உடைய சாதிக்குள், பெயரில்லாத உபசாதிக் குழுக்களாக சொந்தக்காரச் சாதிகள் உள்ளன. பேச்சுவழக்கில் 'என்னுடைய சொந்தக்காரர்' என்ற தொடர் சாதிக்குள் சாதியாக அமையும் 'அகமணக் குழுக்களை' குறிப்பிடுகின்றது. பெயர் இல்லாத இச் சொந்தக்காரச் சாதிகள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற அடுக்கமைவை சாதிக்குள் உருவாக்கியுள்ளன.

சுருங்கக்கூறின் மூன்று வகையான சமூக அடுக்கமைவுகள் யாழ்ப்பாணத்தில் உள்ளன.

1. வேளாளர் முதலிய பெயருடைய சாதிகளின் அடுக்கமைவு
2. வர்க்க அடிப்படையிலான அடுக்கமைவு
3. சொந்தக்காரச் சாதி என்னும் அடுக்கமைவு

### யாழ்ப்பாணத்தின் சாதிமுறை

யாழ்ப்பாணத்தின் சாதிகள் அனைத்தும் ஒருசேர வாழும் குடியிருப்புகளை உடையவை. யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய கிராமம் எதனையும் குடாநாட்டில் காணமுடியாது. சிறுப்பிட்டி என்ற கிராமத்தின் தரவுகளைப் பிரதான ஆதாரமாகக் கொண்டும் ஏனைய கிராமங்களில் பெற்ற தரவுகளைத் துணையாக கொண்டும் யாழ்ப்பாணத்தின் சாதிமுறை பற்றி இங்கே விவரிக்கப்பட்டுள்ளது.

சாதிகளுக்கு இடையிலான இடையூட்டாட்டத்தை (Caste Interaction) ஒரு கிராமத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு விளக்க முடியாது. சாதிகளுக்கு இடையிலான இடையூட்டாட்டத்தை மட்டுமல்லாது சாதிகளின் தரவரிசையினையும் (Rank order) ஒரு கிராமத்தை ஆதாரமாகக் கொண்டு தெளிவாக எடுத்துக் கூற முடியாது. இதற்குரிய பிரதான காரணம் யாழ்ப்பாணத்தின் எந்தவொரு கிராமமும் சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுச் செயற்பாடுகளில் குவிமையமான தனித்த நிர்வாக அலகாக காணப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் 48 வரையான சாதிகள் உள்ளன. இவற்றுள் ஒரு சில சாதிகள் பெரும்பாலான கிராமங்களில் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தின் கிராமங்கள் அளவில் சிறியன. அவற்றில் எல்லாச் சாதிகளும் ஒருசேர வதிவதைக் காணமுடியாது. யாழ்ப்பாணத்தின் 11 கிராமங்களில் மட்டும் 17 சாதிகள் ஒருங்கே வதிவதைக் காணலாம். அங்கு 18 கிராமங்கள் ஒரு சாதிக் கிராமங்களாக உள்ளன.
சிறுப்பிட்டிக் கிராமத்தின் முக்கியமான சாதிகளாக

**சாதி, வர்க்கம் என்ற அடுக்கமைவை விட இன்னொரு அடுக்கமைவு யாழ்ப்பாணத்தில் உள்ளது. இதனைச் சொந்தக்காரச் சாதி அடுக்கமைவு என்று கூறலாம். வேளாளர் என்ற பெயரை உடைய சாதிக்குள், பெயரில்லாத உபசாதிக் குழுக்களாக சொந்தக்காரச் சாதிகள் உள்ளன. பேச்சுவழக்கில் 'என்னுடைய சொந்தக்காரர்' என்ற தொடர் சாதிக்குள் சாதியாக அமையும் 'அகமணக் குழுக்களை' குறிப்பிடுகின்றது.**

பிராமணர், வெள்ளாளர், கோவியர், நாவிதர், வண்ணார், பள்ளர் என ஆறு சாதிகளைக் குறிப்பிடலாம்.

இவை முக்கியமானவை எனக் கூறுவது அவற்றின் சனத்தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் அன்று. சாதிகளுக்கு இடையிலான இடையூட்டாட்டத்தில் (Caste Interaction) அவை பெறும் முக்கியத்துவத்தினாலேயே அவை இவ்விதம் அடையாளப்படுத்தப்பட்டன. இவை இடையூட்டாட்டத்தில் முக்கியமான செயலைச் (Function) செய்கின்றன. சிறுப்பிட்டியில் சாதிகளுக்கு இடையிலான இடையூட்டாட்டத்தில் எவ்வித பங்கும் பெறாத முக்கியமற்ற சாதிகள் (Unimportant castes) சில உள்ளன. சிறுப்பிட்டியின் சில சாதிகள் தனது கைவினை உற்பத்திகளைச் சந்தையில் விற்போர் என்ற முறையில் பிறருடன் தொடர்பு கொள்கின்றன. இது சந்தை உறவாக (Market relationship) அமைந்ததுள்ளதால், சாதி ஊடாட்டத்தில் இச்சாதிகள் பங்கு கொள்வதில்லை. சிறப்புத் தொழில் தேர்ச்சி உடைய சாதிகளான தச்சர், கொல்லர், தட்டார் எனும் மூன்று சாதியினரும் யாழ்ப்பாணக் கிராமங்களில் சாதி ஊடாட்டங்களில் பங்குபெற்றுவதில்லை. அவர்களின் உறவு சந்தை உறவாக அமைந்துள்ளது. பண்டாரம், நட்டுவர் ஆகிய இரு சாதியினர் சிறிய எண்ணிக்கையினராயினும் கோவில்களிலும் வீடுகளிலும் நடைபெறும் சடங்குகளில் இவர்களின் பங்கேற்பு முக்கியம் பெற்றுள்ளது.

கிராமக் கோவில்கள் பலவற்றில் பிராமணர்கள் பூசை செய்வதில்லை இவ்வகை நாட்டார் கோவில் சடங்குகளின் போது பறை வாத்தியம் இசைக்கப்படும். பறையிசை வழங்கும் சாதியினரும் இடையூட்டாட்டத்தில் முக்கியம் பெறுபவர்கள். இவர்கள் மரணச் சடங்கின்போது பறையிசை வழங்கும் வேலையை செய்வர். சாதிகள் இடையூட்டாட்டத்தில் பங்குபெறாத பிறசாதிகளைப் பற்றி இக்கட்டுரையில் விவரித்துக் கூறும் தேவை எழவில்லை.

### யாழ்ப்பாணச் சாதியமைப்பின் தனித்துவ இயல்புகள்

யாழ்ப்பாணத்திற்கு உரியதான தனித்துவமான இயல்புகள் சில, தென்னிந்திய தமிழர்களின் சாதி அமைப்பில் இருந்து அதனை வேறுபடுத்திக் காட்டுவனாக உள்ளன. அவற்றை அடுத்து நோக்குவோம்.

### 1.விதவை மணம்

கணவனை இழந்த பின் மறுமணம் செய்யும் பெண்கள் தூய்மை அற்றவர்கள் என்ற கருத்து யாழ்ப்பாணத்தில் இல்லை. பிராமணர்களிடம் மட்டுமே விதவை விவாகத்திற்கு தடை உள்ளது. இவ்வாறு கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்வதற்குத் தடை விதிப்பது அவர்களுக்கே உரிய புறநடையான வழக்கமாகவே பார்க்கப்படுகிறது. அதனை நல்லது என்றோ, போற்றத்தக்கது என்றோ யாழ்ப்பாணத்தவர்கள் கருதுவதில்லை. பிராமணர் அல்லாத எல்லாச் சாதியினரும் 31 நாட்கள் துடக்கைப் பேணுவதை இங்கு காணமுடிகின்றது. பிராமணர்கள் குறைந்த நாட்கள் துடக்கைப் பேணுவதால், வெள்ளார் தம்மை விட பிராமணர் உயர்ந்தவர் எனக் கருதுவதில்லை. யாழ்ப்பாணத்தில் வருணாசிர தர்மத்தை பற்றிய அறிவு பொதுவாக இல்லை. அதனைப் பற்றி அறிந்தவர்கள் மிகக் குறைவு. அதனைத் தெரிந்தவர்கள் கூட 'நாம் சூத்திரர் தான் அதனால் என்ன, நாம் இழிந்தவர்கள் அல்லவே' என்றவாறு சிந்திக்கின்றார்கள். பிராமணர்கள் போன்று கோயில் சடங்குகளுடன் தொடர்புடைய பண்டாரம் (துணைப் பூசகர்) நட்டுவர் (இசைக் கலைஞர்) என்ற இரு சாதியினரும் குறைந்த அளவு நாட்களே துடக்கை அனுசரிக்கின்றார்கள். அந்தக் காரணத்தால் வேளாளர் அவர்களை சாதித் தரவரிசையில் உயர்ந்தவர்களாகவோ, தூய்மையுடையவர்களாகவோ கருதுவதில்லை. யாழ்ப்பாணத்தில் பூணூல் அணிவது அந்தஸ்து

உயர்வை வழங்குவதாகக் கருதப்படுவதில்லை. பிராமணர்களும் இங்கு வந்து குடியேறியவர்களுமான கைவினைச் சாதியினர் சிலரும் மட்டுமே பூணூல் அணிகின்றனர்.

## 2. சலவைத் தொழில் சமூகக் குழு

சலவைத் தொழில் செய்பவர்களான வண்ணார் யாழ்ப்பாணத்தில் கோயில்களுக்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் முடி திருத்தும் தொழிலைச் செய்யும் நாவிதர் கோவில்களுக்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இவை தென்னிந்திய வழமைக்கு மாறுபட்ட ஒரு நடைமுறை. அங்கே இது எதிர் வழமாக உள்ளது. இதனை யாழ்ப்பாணத்தவர்கள் நன்கு அறிவர். இந்த வேறுபட்ட நடைமுறையை அவர்கள் நியாயப்படுத்தும் காரணத்தைக் கூறுகின்றார்கள். கோயில்களுக்கு சேலைகளைக் கட்டி அலங்கரிக்கும் பணியைச் செய்பவர்கள் சலவைத் தொழிலாளர்கள். அவர்கள் கோயிலுக்கு உள்ளே அனுமதிக்கப்பட வேண்டும் எனக் காரணம் கூறப்பட்டுள்ளது. எவ்விதம் இருப்பினும் துடக்கு சீலையைச் சலவை செய்தல் துடக்கை ஏற்படுத்தும் தொழில் எனவும் நம்பப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலும் தஞ்சாவூரிலும் பிற இடங்களிலும் மேற்படி இரு சாதியினருக்கும் இடையில் யார் தரவரிசையில் உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்பது தொடர்பான சர்ச்சை உள்ளது. இரு சாரரும் தாமே உயர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்வர். இந்தப் பிரச்சினையில் பிற சாதியினர் உறுதியான முடிவைத் தீர்மானிக்க முடியாதவர்களாகவே உள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் இந்தப் போட்டியும், சர்ச்சையும் எழுந்தமானமானது. இதற்கு அமைப்பியல் முக்கியத்துவம் (Structural significance) எதுவும் கிடையாது. யாழ்ப்பாணத்தில் இன்று (1952 இல்) அவதானிக்கக் கூடிய இன்னொரு விடயம் கவனிப்புக்குரியது. வண்ணார் சாதி, யாழ்ப்பாணத்தின் பணக்காரச் சாதிகளில் ஒன்றாக மாறி வருகின்றது. அதேவேளை நாவிதர்கள் வறியவர்களாகவே இருந்து வருகின்றனர். இந்நிலையில் தரவரிசையில் இப்போது உள்ள நிலை மாறும் எனக் கூறுவதற்கில்லை.

### 3. யாழ்ப்பாணத்தவர் கண்ணால் காணாத சாதி

தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் 'துரும்பர்' என்னும் பெயருடைய சாதி இருப்பதை பற்றி ஹட்டன் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார் (Hutton 1946:199). யாழ்ப்பாணத்திலும் கண்ணால் காண முடியாததாக இச்சாதி இருந்து வருகிறது. பள்ளர், நளவர், பறையர் ஆகிய சாதியினரின் உடைகளைச் சலவை செய்யும் தொழிலை இவர்கள் செய்து வருகின்றனர். பகல் வேளைகளில் வெளியே இவர்கள் நடமாடுவதில்லை. இரவு வேளையில் பனையின் காவோலை ஒன்றை இவர்கள் தம் பின்னால் இழுத்துக் கொண்டு செல்ல வேண்டியதாய் இருந்ததாம். 'காவோலைச் சத்தத்தை எழுப்புவதன் மூலம் தாம் உலாவுவதை அறிவித்தல்' என்று இதற்கு ஒரு விளக்கம் உள்ளது. மறுநாள் விடிந்ததும் காவோலை இழுபட்டதால் ஏற்பட்ட அடையாளத்தைக் கொண்டு அவர்கள் நடந்த பாதையில் மிதிப்பதை உயர் சாதியினர் தவிர்ப்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டது என்ற இன்னொரு விளக்கமும் உள்ளது. இப்பொழுதும் கூட துரும்பர்கள் பகல் வேளைகளில் வெளியே வருவதில்லை. பெரும்பான்மையினரான வேளாளர்களுக்கு அப்படியொரு சாதியினர் இருப்பது பற்றியே தெரியாது. இருப்பினும் செய்வினை - சூனியம் செய்வதில் வல்லவர்களான இந்தச் சாதியினரோடு பிற சாதியினர்களுக்கு தொடர்பும் பரிச்சயமும் இருந்து வருகிறது. இவ் வேலைக்குப் புகழ் பெற்றவர்களான செய்வினைக்காரர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு எதிரிகளைக் கொலை செய்யவோ அல்லது அவர்களுக்குத் தீங்கிழைக்கவோ சக்தியுடையவர்களாக உள்ளனர். ஆயினும் சாதாரணமாக யாழ்ப்பாண சமூக முறைமையில் இருந்து வேறுபடுத்தியே இவர்கள் நோக்கப்படுகின்றனர்.

## 4.சடங்கியல் சமத்துவமும் - உலகியல் சமத்துவம் இன்மையும்

வேளாளர் - கோவியர் உறவுகளில் சடங்கியல் அதிகாரம், உலகியல் அதிகாரம் பிளவுபட்டு இருப்பதைக் ((The sacred secular split) காணமுடியும். வேளாளர் - கோவியர் அந்தஸ்து உறவுமுறை புதுமையானது. வேளாளர் கோவியர்களைவிட அந்தஸ்தில் உயர்வானவர்கள் என்பது பொதுவாக ஏற்கப்பட்ட விடயம். குறிப்பாக வேளாளர்கள் உலகியல் அதிகாரத்தில் உயர்ந்து நிற்பது வெளிப்படை. முற்காலத்தில் கோவியர்கள் வேளாளர்களின் அடிமைகளாக இருந்தனர். ஆயினும் இன்று சடங்கியல் நிலையில் சமத்துவம் உடையோர் (Ritual equals) என்றே பார்க்கப்படுகின்றனர். கோவியர் சமைத்த உணவை வேளாளர் உண்பர். அவர்களைத் தமது வேலையாட்களாக வேளாளர் வைத்திருப்பதும் உண்டு. கோவியர் வீட்டு திருமணச் சடங்கில் வேளாள எசமான் விருந்தினராக அழைக்கப்படுவதுண்டு. அங்கு அவர்கள் உணவு உண்பதுண்டு. வேளாளர் வீட்டுத் திருமண நிகழ்வுகளில் உணவு சமைத்தல் வேலையைக் கோவியர் செய்வர். முற்காலத்தில் வேளாளர் கோவியப் பெண் ஒருவரை இரண்டாவது

பெண்ணாக (*Concubine*) வைத்திருப்பதுண்டு. அவ்வுறவால் பிறந்த பிள்ளைகள் இன்று வேளாளர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர். வேளாளர்களின் மரணச் சடங்கின் போது பிணத்தைப் பாடையில் வைத்து சுடலைக்கு எடுத்துச் செல்லும் வேலையைக் கோவியர் செய்வர். வேளாளர் ஒருவருக்குப் பணிவிடை செய்த கோவியர் ஒருவரின் மரணச் சடங்கின் போது குறித்த வேளாளர், பிணம் சுடலைக்கு எடுத்துச் செல்லப்படும் முன்னர், பாடையில் கையால் தொடுவார். அதன்பின் பிணம் தூக்கிச் செல்லப்படும். இவ்வாறு தொடுதல் மூலம் தான் கோவியருக்கு சமத்துவமானவர் என்பதை உறுதி செய்கின்றார். அல்லது அதனை ஒப்புக் கொள்கின்றார்.

வேளாளர் - கோவியர் சடங்கியல் சமத்துவத்தை நியாயப்படுத்தும் தோற்ற மூலப் புனைவு (*Origin myth*) இன்றும் வழக்கில் உள்ளது. வேளாளர்களால் சிறைபிடிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்ட சிங்கள கொவிகமவின் சந்ததியினரே கோவியர் என இந்தக் கதை குறிப்பிடுகின்றது. இப்புனைவு கோவியர் அடிமையாக்கப்படுவதற்கு முன்பு சமத்துவம் உடையவர்களாக இருந்தனர் என்பதை உணர்த்துகிறது. கோவியர் தரவரிசையில் வேளாளருக்கு அடுத்த நிலையைப் பெறுகின்றனர். வேளாளர்கள் பிராமணர்களை விட உயர்ந்தவர்கள் எனக் கொண்டால் தரவரிசையில் பிராமணர் இரண்டாம் இடத்தையும், பிராமணர் தரவரிசையில் முதலிடத்தைப் பெற்றால் இரண்டாவது, மூன்றாவது இடங்கள் முறையே வேளாளருக்கும் கோவியருக்கும் கிடைக்கும்.


### 5. பிராமணர் - வேளாளர் உறவு : தெளிவற்ற புதிர்

இந்துச் சாதி அமைப்பின் உச்சப்படி நிலையில் பிராமணர்கள் உள்ளனர் என்பது இந்து சமூகத்தினர் யாவருக்கும் பொதுவான உண்மை என்ற கருத்து உண்டு. ஆனால் இதற்கு மாறாக இடத்துக்கு இடம் வித்தியாசங்கள் உள்ளன. மிக உயர்ந்த இடத்தை வழங்குதல், தாழ்ந்த இடத்திற்கு தாழ்த்துதல் என்ற இந்த இருமுகப் போக்கு (*The ambivalent position of Brahmins*) பிராமணர் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது. மலையாளத்தில் குறிஞ்சிகன் என்ற அடிநிலைச் சாதியினர் பிராமணர்கள் தம் வீட்டுக்குள் புகுந்தால் வீடு தீட்டுக்கு உள்ளாகிவிடும் என நம்புவதாக ஹட்டன் குறிப்பிட்டுள்ளார். மகா பிராமணர் என்போர் இறந்தவரின் உடலுக்கு மரணச் சடங்குகளைச் செய்பவர்கள் என்ற காரணத்தால் தாழ்ந்தவர்களாக ஒதுக்கி வைக்கப்படுவதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு யாழ்ப்பாணத்தில் பிராமணர்கள் என்ற சிறு சமூகத்தின் ஒரு சிறு பிரிவினர் அந்தஸ்தில் தாழ்ந்தவராக கருதப்படுகின்றனர் (**1952** ஆம் ஆண்டு காலம்). தென்னிந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் இவ்வாறான விசேட புறநடையான நிலைமைகள் காணப்படுகின்றன. சாதி முறையின் குண இயல்புகளில் தூய்மை(*Purity*), துடக்கு (Pollution) எனும் இரு அம்சங்கள் உள்ளன. தூய்மையுடையது புனிதமானது என்றும் துடக்குடையது புனிதமற்றதென்றும் கருதப்படுகிறது. இந்தக் கருத்தியல் பிராமணர் - வேளாளர் உறவில் தெளிவற்ற புதிராகவே உள்ளது. தோற்றம் வேறு யதார்த்தம் வேறு என்ற உண்மையை யாழ்ப்பாணத்தின் பிராமணர் - வேளாளர் உறவில் காணலாம். குடித்தொகையில் மிகச் சிறிய எண்ணிக்கையுடைய பிராமணர்களில் பெரும்பான்மையினர் கோயில்களில் பூசை செய்பவர்களாகவே உள்ளனர். போர்த்துக்கேயர் ஆட்சிக் காலமான **16**ம் **17**ம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்திலிருந்து இவர்கள் துரத்தப்பட்டதால் சிறுபான்மையிராக ஆயினர் எனக் கருதப்படுகிறது. எனினும் இக்கருத்து ஆய்வுக்குரியது. போர்த்துகேயர் காலத்துக்கு முன்பிருந்தே யாழ்ப்பாணத்தில் பிராமணர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது என்றும் கருத இடமுண்டு.

யாழ்ப்பாணத்தில் பிராமணர்கள் பூசை செய்யும் கோயில்களின் உடைமை அப்பிராமணர்களுக்கு உரியனவல்ல. அதற்குப் புறநடையான சில உதாரணங்கள் உள்ளன. யாழ்ப்பாணக் கோயில்களின் உடைமையாளர்களான வேளாள முகாமையாளர்களிடம் சம்பளத்துக்கு பூசை செய்வோராகவே பிராமணர்கள் உள்ளனர். நகரப் பகுதியில் உள்ள கோயில்களிலும் தல யாத்திரைத் தலங்களாக விளங்கும் கோயில்களிலும் சிலவற்றைப் பிராமணர்கள் தமது உடைமையாக வைத்திருக்கின்றனர். வேறு சில கோயில்களில் உடைமை வேளாளர்களுக்கு உரியதாயினும் பூசை செய்யும் உரிமை பரம்பரை உரிமையாக பிராமணர் குடும்பங்களுக்கு இருந்து வந்துள்ளது. ஆயினும், அவர்கள் வேளாளர்களிடம் சம்பளம் பெறுபவர்களாகவே இருப்பர். கோவில்களின் உடைமையாளர்களான வேளாளர்களின் செல்வாக்கு முகாமை என்ற எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதன்று. கோவில்களில் சடங்குகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும்

என்ற நுணுக்க விபரங்களிலும் தலையிடும் உரிமை அவர்களுக்கு உள்ளது.

கோவில் பூசை உரிமை, கோவிலின் உடைமை என்பன தொடர்பாக பல நீதிமன்றத் தீர்ப்புகள் உள்ளன. சில வழக்குகளில் பரம்பரை பரம்பரையாகத் தமது மூதாதையர்கள் காலம் முதல் கோயில் பூசகர்களாகத் தாம் இருந்தமையைக் கூறித் தமக்கே கோயில் உடைமையானது என பிராமணர்கள் வாதாடினர். ஆனால் நீதிமன்றங்கள் இவ்வாதங்களை ஏற்காமல் வேளாளர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பளித்தன. யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் அபிப்பிராயமும் வேளாளர் உடைமைக்கு சாதகமானது. சில வழக்குகளில் பூசை உரிமை பிராமணர்களுக்கு உண்டு எனத் தீர்மானிக்கப்பட்டது.



Aspects of Caste in South India, Ceylon and North-West Pakistan

கோயில்களின் பூசகர்களான பிராமணர்கள், முகாமையாளர்களின் கீழ் சேவை செய்பவர்கள். இவ்வாறு சேவை செய்பவர்கள் புனிதம் (Sacred) என்ற அந்தஸ்து நிலையுடன் முரண்படுவதென்பது கவனிக்கத் தக்கது (STEVENSON 1954). வேளாளர்கள் சனத்தொகையில் 50 வீதத்தினராக இருப்பது அவர்களுக்குப் பலத்தை அளிக்கிறது. இதனைவிட அரசியல் பலமும், பொருளாதார வளப்பலமும் அவர்களிடம் உண்டு. இருந்த போதும் பிராமணரைக் கண்டதும் மரியாதை செய்து இருக்கையில் இருந்து எழுந்து நிற்பதும், பணிவான சொற்களில் உரையாடுவதும் வேளாளர்களின் நடத்தையில் காணப்படும். இந்தப் பணிவு உண்மையில் ஒரு வெளித் தோற்றமாகும். பிராமணர்கள் திமிரான மிடுக்கான போக்கில் நடந்து கொள்வதை வேளாளர் அனுமதிப்பதில்லை. பிராமணர் எப்படி ஒழுக வேண்டும் என்பதை வேளாளர் அவர்களுக்குத் தெளிவாக உணர்த்தி உள்ளனர். வேளாளரை நோக்கி பணிவற்ற சொற்களால் விளித்து உரையாடும் பிராமண நடத்தை ஏற்புடையதல்ல. பிராமணர்கள் எளிமை, அடக்கம், பணிவு, பொறுமை, தற்பெருமை இன்மை ஆகிய பண்புகளை உடையவர்களாக இருப்பதே எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான பண்பு இல்லாத பிராமணர்களுக்கு மரியாதை கொடுக்கப்படுவதில்லை. சில பிராமணர்கள் ஆசிரியர் எழுதுவிளைஞர் போன்ற பதவிகளில் இருந்து வருகின்றார்கள். இவ்வாறான பதிவிகளில் இருக்கும் பிராமணர்களுக்கு பூசர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதை கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் சக வேளார்களைப் போன்றே நடத்துப்படுவார்கள். பூசகர் என்ற பதவிக்குக் கொடுக்கப்படும் மரியாதை சக வேளாளர்களைப் போன்றே அவர்கள் நடத்தப்படுவர்.

எல்லை மீறி நடக்கும் பிராமணர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு வேளாளர் தயங்குவதில்லை. பூசகர்களாக இருந்து கொண்டு கோயில் உடைமை தமக்கே என்று தகராறு செய்த பிராமணர்களை நீக்கிவிட்டு வேறு பூசகர்களை நியமனம் செய்தமைக்குப் உதாரணங்கள் பல உள்ளன. கோயில் நிர்வாகத்தில் ஒழுங்கை நிலைநாட்டும் தேவை வேளாளர்களுக்கு இருந்தது. முகாமையாளர் ஒருவர் தமக்கு பின்னர் முகாமையாளர் உரிமையை மகனுக்குக் கொடுப்பார். மகன் இல்லாவிடத்தில் கிட்டிய உறவினருக்கு அவரின் உரிமை கொடுக்கப்படும். இவ்விதமாக கோயில்களின் உரிமையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

திருப்தியற்ற நடத்தைக்காக பிராமணர்கள் தண்டிக்கப்பட்ட நிகழ்வுகளுக்கு உதாரணங்கள் உள்ளன. சிறுப்பிட்டிக்கு அருகே உள்ள கிராமத்தில் ஒரு சத்திரம் உள்ளது. அந்தக் கிராமத்தில் உள்ள இரண்டாம் நிலைக் கல்வி நிலையத்துடன் இணைந்து சத்திரம் என்ற நிறுவனமும் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாக இருந்து வந்தது. சத்திரத்தை நடத்துவதற்கு பிராமணர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததால் வழிபோக்கருக்கு உணவு சமைத்து அன்னதானம் கொடுப்பது அவரது கடமை. இதனை விட ஆண்டுதோறும் நடைபெறும் விழாவில்

இரண்டாம் நிலைக் கல்வி நிலையத்தில் மாணவர்களுக்கு (பொங்கல், மோதகம் என்பன போன்ற) சுவை உணவை வழங்குவதும் அவரது கடமை. சில ஆண்டுகளுக்கு முன் சத்திரத்தின் பொறுப்பாளராக இருந்தவர் மாணவர்களுக்கு குறித்த ஆண்டு விழா தினத்தில் திருப்தியான முறையில் உணவை வழங்கவில்லை. அவர் சத்திரத்தின் பணத்தை கையாடல் செய்தார் என்ற சந்தேகம் எழுந்தது. வேளாளர் சமூக இளைஞர் குழுவினர் அவரைப் பிடித்து நையப்புடைத்தார்கள். அந்தப் பிராமணர் தாம் திருந்தி நடப்பதாக வாக்குறுதி கொடுத்ததும் அவரை அவர்கள் மன்னித்து விட்டனர். அந்த நிகழ்வின் பின்னர் பிராமணர் தன் கடமையை ஒழுங்காக நிறைவேற்றி வந்தார்.

யாழ்ப்பாணத்தின் பிராமணர்கள், தம்மைச் சமூகம் எவ்வாறு ஒழுக வேண்டும் என்று நினைக்கின்றதோ அதன்படி ஒழுகி வருகின்றனர். இவ்வாறு நல்லொழுக்கம் உடையவர்களாகவே பெரும்பான்மையினரான பிராமணர்கள் இருந்து வருகிறார்கள். வேளாளர் பிராமணர் உறவு எவ்வித குரோத உணர்வும் அற்றதாக இருந்து வருகிறது. தமது குடும்பத்தின் புரோகிதராக இருக்கும் பிராமணர் குடும்பத்தின் மீது அன்புடையவராக வேளாளர் நடந்து கொள்வர். கிராமத்தின் எல்லா வேளாளர்களுக்கும் சமயச் சடங்கியல் சேவைகளைச் செய்பவர்களாக பிராமணர் உள்ளதால், உயர் அந்தஸ்துடைய சொந்தக்காரச் சாதிக் குடும்பங்களோடும் பிராமணர் குடும்பத்திற்கு சிறப்பான உறவு இருப்பதுண்டு. தமது பிராமணரின் பெருமையைப் போற்றும் உயர்ந்த அந்தஸ்துடைய சொந்தக்காரச் சாதி தமது அந்தஸ்தை அவ்வுறவு மூலம் வெளிப்படுத்திப் பெருமை கொள்வர். பிராமணர்கள் உயர்ந்த அந்தஸ்துள்ள சொந்தக்காரச் சாதிக்கு சேவையை வழங்குவதில் மகிழ்ச்சி அடைவர். ஒரு பிராமணருக்கும் ஒரு வேளாளருக்கும் இடையே மனக் கசப்பு இருக்கலாம். அது விதிவிலக்கானதும் தனிப்பட்டதுமான விடயமாகவே இருக்கும். ஆனால் பொதுவாக யாழ்ப்பாணத்தில் பிராமணர்களுக்கும் வேளாளர்களுக்கும் இடையே பகைமை உணர்வு காணப்படுவதில்லை. தஞ்சாவூரிலும் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் பிராமணருக்கு எதிரான உணர்வு உள்ளது. அதனைப் போன்ற பிராமண எதிர்ப்புணர்வு யாழ்ப்பாணத்தில் கிடையாது. யாழ்ப்பாணத்தவர்கள் திராவிடர் கழகம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆனால் திராவிடர் கழகத்தின் பிராமணர் எதிர்ப்பு உணர்வுக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்புக் கிடையாது.

**குறிப்பு :**

*மைக்கல் பாங்ஸ் (Michael Banks)யாழ்ப்பாணத்தின் சாதி அமைப்பு பற்றி ஆராய்ந்த வெளிநாட்டு ஆய்வாளர்கள் வரிசையில் முதலாவது இடத்தைப் பெறுபவர் மைக்கல் பாங்ஸ் ஆவர். இவர் 1952ம் ஆண்டில் இலங்கைக்கு வந்து சிறுப்பிட்டி எனும் கிராமத்தில் தங்கியிருந்து கள ஆய்வு வேலையை நிகழ்த்தினார். இவரது ஆய்வேடு 1957ம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் வழி இவர் கேம்பிரிட் ஜ் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். இவரது ஆய்வேடு நூலாகப் பிரசுரிக்கப்படவில்லை. The social organization of Jaffna Tamils என்னும் இவ்வாய்வேடு அரிய தகவல்களைக் கொண்டது. யாழ்ப்பாண நகரம் தவிர்ந்த பிற எல்லாக் காரியாதிகாரிப் பிரிவுகளிலும் D.R.O உத்தியோத்தர்களதும், விதானைமாரதும் உதவியுடன் யாழ்ப்பாணக் கிராமங்களின் சாதிச் சனத்தொகைப் புள்ளி விபரங்களை இவர் தொகுத்து தம் ஆய்வுக்காகப் பயன்படுத்தினார். இப்புள்ளிவிபர அட்டவணைகள் அரிய பல தவல்களைக் கொண்டுள்ளன.★ E.R லீச் என்னும் மானிடவியலாளர் பதிப்பித்த 'தென்னிந்தியா, இலங்கை, வடமேற்குப் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் சாதிகள் பற்றிய சில அம்சங்கள்' (Aspects of caste in South India, Ceylon an North West Pakistan - Ed. Edmond R. Leach, Cambridge University Press, Cambridge, (ISBN10 : 0521096642 ; ISBN13 : 9780521096645) என்ற நூலில் பாங்ஸ் அவர்களின் CASTE IN JAFFNA (யாழ்ப்பாணத்தில் சாதி) என்னும் கட்டுரை இடம்பெற்றுள்ளது. எமது இத்தமிழ்க் கட்டுரை இதனைத் தழுவி எழுதப்பட்டதாகும். தமது கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்த பின்னர் பாங்ஸ் அவர்கள் பிரித்தானியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் உயர் அதிகாரியாகப் பதவி வகித்தார்.★★ பிற ஆய்வாளர்களைப் போல் பல்கலைக் கழகங்களில் பணியாற்ற இவர் ஆர்வங்கொண்டிருக்கவில்லை. இது ஆய்வுலகிற்கு ஒரு பேரிழப்பே ஆகும்.*

*★ (பாங்ஸ் அவர்களின் பிரசுரிக்கப்படாத ஆய்வேட்டின் பிரதியினை யாழ் பல்கலைக் கழக நூலகத்தில் 1970களின் பிற்பகுதியில் இக்கட்டுரை ஆசிரியர் வாசித்தார்.)*

*★★ (பாங்ஸ் பற்றிய இத்தகவல்கள் K.M. de Silva எழுதிய (2015) Sri Lanka : Come Wind, Come Weather Vol 1 (ISBN 9789555801645) வெளியீட்டில் பக்கம் 183 இல் உள்ளது.)*




பகுதி 2

தஞ்சாவூரின் வீதியமைப்பைக் காட்டும் படம்

Image Source : armaya.in

யாழ்ப்பாணக் கிராமங்கள் நிஜமான இருப்பை உடையன என்பதை மறுப்பதற்கில்லை. அவற்றை வெறும் நிர்வாக அலகுகள் என்று குறுக்கிப் பார்க்க முடியாது. அவற்றுக்குப் பல நூற்றாண்டுக்களுக்கு மேற்பட்ட வரலாறு உண்டு. சிறுப்பிட்டிக் கிராமம் பற்றிய ஆவணச் சான்றுகளில் மிகப் பழமையானது 1645 ஆம் ஆண்டுகுரியது. சில கிராமங்களின் மக்களின் குண இயல்புகளைப் பற்றிய பழமொழிகளும் சொல் வழக்குகளும் வாய்மொழி மரபாக வழக்கில் இருந்து வருகின்றன.

## யாழ்ப்பாணக் கிராமங்களின் கட்டமைப்பு

தஞ்சாவூருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் சாதிக் கட்டமைப்பில் முக்கிய வேறுபாடுகள் உள்ளன. யாழ்ப்பாணக் கிராமங்களின் கட்டமைப்பு என்னும் விடயம் பற்றிய இப்பகுதியில், இவ் வேறுபாடுகள் ஒப்பீட்டு முறையில் சுட்டப்படும். யாழ்ப்பாணக் கிராமங்களின் உள்ளக ஒழுங்கமைப்பு (INTERNAL ORGANISATION) தஞ்சாவூரின் கிராமங்களின் உள்ளக

ஒழுங்கமைப்பிலிருந்து வேறுபட்டது. பிராமணர்களிடையே நிலவும் உட்சாதிப் பிரிவுகள் என்ற விடயத்தில் தஞ்சாவூருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் அடிப்படையில் வேறுபாடு உள்ளது. யாழ்ப்பாணத்தில் 'ஐயர்', 'குருக்கள்', என்ற இரு பெயர்களால் பிராமணர்களை அழைப்பது வழக்கம். இவ்விரு பெயர்களும் தொழில் தரம் பற்றிய வேறுபாடே அல்லாமல் உபசாதிகள் என்ற பெயரை உடையன அல்ல. (தஞ்சாவூரில் 'ஐயர்' ஒரு உபசாதிக் குழு. அது ஐயங்காரில் இருந்து வேறுபட்டது.) யாழ்ப்பாணத்தில் பிராமணக் குடும்பத்தில் சாதாரண பூசகர் ஒருவர் ஐயர் என அழைக்கப்படுவார். அதே குடும்பத்தில் அறிவாலும் அனுபவத்தாலும் மூத்தவர் ஒருவர் குருக்கள் பட்டத்தைப் பெற்றவராக இருப்பார். அவர் தொழில் அடிப்படையில் உயர்ந்த தரத்தை உடையவரே அல்லாது உயர்ந்த உபசாதியினராகக் கருதப்படுவதில்லை. ஆகையால் பிராமணச் சமூகத்தின் உள்ளக ஒழுங்கமைப்பைப் பற்றி இங்கு விரிவாகப் பேசும் தேவை இல்லை.

## பிராமணர் - வேளாளர் உறவு

யாழ்ப்பாணத்தில் பிராமணர்கள் வேளாளர்களுடன் கொண்டுள்ள உறவும் யாழ்ப்பாணப் பிராமணர்களின் பொருளாதார நிலையும் அவர்களின் தொழிலின் தன்மையும் தஞ்சாவூர் பிராமணர்களின் நிலையில் இருந்து வேறுபட்டது. வேளாளர்களுக்கும் பிராமணர்களுக்கும் இடையிலான இடையூடாட்டங்களை ஆராயும் போது இவ் வேறுபாடுகளை மனதில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## மூவகைக் கிராமங்கள்

யாழ்பாணத்தில் மூவகைக் கிராமங்கள் உள்ளன.

1. **ஒரு சாதிக் கிராமம் :** இவ்வகைக் கிராமங்களில் ஒரு வட்டாரம் (WARD) காணப்படும். அவ்வட்டாரத்தில் ஒரே ஒரு சாதி மட்டுமே காணப்படும்.

2. **பல சாதிக் கிராமங்கள் :** இவ்வகைக் கிராமங்களில் ஒரே ஒரு வட்டாரம் இருக்கும். ஆனால் அந்த வட்டாரத்திற்குள் பல சாதிகளின் குடியிருப்புகள் அருகருகே காணப்படும்.

3. **பல சாதி, பல வட்டாரக் கிராமங்கள் :** இவ்வகைக் கிராமங்களில் பல வட்டாரங்கள் இருக்கும். அவ்வட்டாரங்கள் தனித்தனிச் சாதிக்குரிய குடியிருப்புகளை உடையனவாகக் காணப்படும்.

இவற்றுள் முதல்வகைக் கிராமங்கள் ஆனையிறவுக்குத் தெற்கே காணப்படுகின்றன. ஆனையிறவுக்கு தெற்கே உள்ள கிராமங்கள் (வன்னியின் பகுதியாக இருந்தன.) காடுகளால் சூழப்பட்டவை. இவை குளத்தை அடிப்படையாகக் கொண்ட நீர்பாசன விவசாயத்தைச் செய்யும் மக்களைக் கொண்டவை. இம் மக்கள் இந்து சமயத்தினராகவும் தமிழ் பண்பாட்டை உடையவர்களாகவும் இருப்பது ஆனையிறவுக்கு வடக்கே உள்ள கிராமத்தவர்களோடு இவர்களை இணைப்பதாக உள்ளது. ஆனால் ஆனையிறவுக்குத் தெற்கேயுள்ள ஒரு சாதிக் கிராமங்களுக்கும் வடக்கேயுள்ள யாழ்ப்பாணக் கிராமங்களுக்கும் உள்ள வேறுபாடு உள்ளக ஒழுங்கமைப்பு (internal organization) அடிப்படையிலானது. (உதாரணமாக சலவைத் தொழில் செய்பவர்களைக் கொண்ட ஒரு சாதிக் கிராமத்திற்குள் உள்ளக ஒழுங்கமைப்பிலும், குடியிருப்புக்காணிகள், குளம், பயிர்ச்செய்கைக் காணிகள் என்பவற்றின் உடைமை தொடர்பான ஒழுங்கமைப்பில் பிறசாதிகள் சம்பந்தப்படுவதில்லை.) மேலும் குலத்தை அடிப்படையாகக் கொண்ட நெற்செய்கை விவசாயம் இக்கிராமங்களிற்கு யாழ்ப்பாணத்தின் வடக்குப் பகுதிக் கிராமங்களைவிடத் தனித்துவமான இயல்பை வழங்குகின்றது.

இரண்டாம் வகைக் கிராமங்கள் ஆனையிறவுக்கு வடக்கேயுள்ள யாழ்ப்பாணப் பகுதியின் தெற்குப் பகுதியில் காணப்படுகின்றன. மூன்றாம் வகைக் கிராமங்கள் குடா நாட்டின் வடக்குப் பகுதியிலும் மேற்கே உள்ள தீவுப் பகுதியிலும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் பெரும்பான்மையானவை மூன்றாம் வகையின. அதாவது அவை பல வட்டாரங்களைக் கொண்டவை; பல சாதிகளின் குடியிருப்புகளைக் கொண்டவை. இதைப் பற்றிய உள்ளக ஒழுங்கமைப்பை (Internal Organization) ஆராய்வதன் மூலம் யாழ்ப்பாணம் பற்றிய இயல்புகளைப் பற்றிப் பொது முடிவுகளைக் கண்டறியலாம்.

மூன்றாவது வகை பற்றி ஆராயும்போது வட்டாரம் (WARD) என்ற சொல்லின் பொருள் என்ன என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். வட்டாரம் என்பது வரையிடப்பட்ட எல்லையுடைய குடியிருப்புப் பகுதியைக் குறிப்பது என்ற பொருளில் நாம் உபயோகிக்கின்றோம். ஒரு வட்டாரம் அயலில் உள்ள பிற வட்டாரங்களில் இருந்து தன்னை வேறுபடுத்தும் தெளிவான எல்லைகளையுடையது. ஒரு கிராமத்தின் குறிப்பிட்டதொரு வட்டாரத்தில், ஒரு சாதியைச் சேர்ந்த உறவுக் குடும்பங்களின் குடியிருப்புகள் இருக்கும். ஒரு கிராமத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட வட்டாரங்களிலும் குறிப்பிட்ட ஒரு சாதியின் குடியிருப்புகள் இருக்கலாம் (உதாரணமாக வேளாளர் சாதியின் பல வட்டாரங்கள் இருப்பதுண்டு). இவ் வட்டாரங்கள் அருகில் இருக்கலாம் அல்லது தூரத்தில் இருக்கலாம். ஒரு கிராமத்திற்குள் தோட்டக்காணிகளும் வயல் காணிகளும் இருக்கும். அவற்றுக்கு இடையே குடியிருப்புகள் (வளவுகள்) இருக்கும். சமூகவியல் நோக்கில் வட்டாரங்களை மையம் சார்ந்த நெருக்கமான குடியிருப்புகள் (NUCLEATED SETTLEMENTS) எனக் கூறவியலாது. அவை தஞ்சாவூரின் தெருக்களுக்கு (STREETS) ஒப்பானவை. வட்டாரங்களில் வெளிப்பட்டு தெரியும் புவிவெளிப் பிரிவு (SPACE) அவற்றின் சமூக உறவுகளில் வெளிப்படுகின்றது. "THE SPATIAL SEPARATION OF WARDS REFLECTS A SOCIAL SEPARATION" ( பக் 70).

## வட்டாரங்கள் இடையிலான சமூக உறவுகள்

வட்டாரம் என்னும் புவியியல் பிரிவு சமூக உறவுகளில் பிரிவினையாக வெளிப்படுகின்றது. ஒரு கிராமத்தின் வெவ்வேறு வட்டாரங்களிடையே சமூக உறவுகள் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படும். இப் பண்பை ஒரே சாதி வட்டாரங்களில் வெளிப்படையாகக் காணலாம். ஒரு கிராமத்திற்குள் அமைந்திருக்கும் ஒவ்வொரு வட்டாரமும் தரவரிசையில் (RANK ORDER) தமக்குரிய அந்தஸ்தை உயர்த்தி வைத்துக் கொள்ளும் முனைப்புடன் செயல்படுகின்றன. எந்த வட்டாரத்தினர் தரவரிசையில் உயர்ந்தவர், எவர் அடுத்தபடியில் உள்ளவர் என்பதில் நுண்ணிய சிக்கலுடைய போட்டி இருக்கிறது. இப்போட்டி சமூக உறவுகளைக் குறைந்த அளவில் வைத்துக் கொள்ளக் காரணமாக அமைகிறது.

வட்டாரப் பிளவுகள் காரணமாக ஒரு வட்டாரத்திற்கும் இன்னொரு வட்டாரத்திற்கும் இடையே திருமண உறவு இருப்பதில்லை. பந்தி போசனமும் இருக்காது. ஏனைய சமூக உறவுகளும் மிகக் குறைந்த மட்டத்திலேயே இருக்கும். வட்டாரங்களைச் சேர்ந்தவர்களிடையே சிறுசிறு பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்கள் இருக்கலாம். ஒரு வட்டாரத்தில் கோயிலின் ஆண்டுத் திருவிழாவில் பிற வட்டாரத்தவர்கள் பங்குபற்றலாம். ஒரு வட்டாரத்தினர் இன்னொரு வட்டாரத்தில் அமைந்திருக்கும் ஆகமக் கோயிலின் ஆண்டுத் திருவிழாவில் ஒரு குறிப்பிட்ட நாளின் திருவிழாவை பொறுப்பேற்று நடத்தலாம். ஆயினும் இவ் வட்டாரங்களிடையே இறுக்கமான சமூக உறவுகள் இருப்பதில்லை. இவை அந்தஸ்துக்காக போட்டியிடும் குழுக்களாக (GROUPS COMPETING FOR STATUS) இருப்பதே இதற்கான காரணமாகும். விலகி நிற்றலும் உறவுத் தவிர்ப்பும் நாமே உயர்ந்தோர் பாவனையும் பேச்சும் நடத்தைப் பாங்கும் சமூக இடைவெளியை அதிகரிக்கின்றன. இவை உலகியல் சாராத (NONMATERIAL) சாதித் தூய்மை கருத்துக்களுடன் தொடர்புடையவை எனலாம்.

தாம் வாழும் கிராமத்திற்கு வெளியே அருகில் உள்ள கிராமங்களில் வாழும் தமது சொந்தக்காரச் சாதிகளுடன் கிராமத்தவர்கள் திருமண உறவை வைத்துக் கொள்கின்றனர். ஆகையால் ஒரு சொந்தக்காரச் சாதியின் உறுப்பினர்கள் வெவ்வேறு கிராமங்களின் வட்டாரங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பர். ஒரு எண்ணக்கரு (CONCEPT) என்ற வகையில் சொந்தக்காரச் சாதி மூடிய அகமணக்குழு முறையாக (A CLOSED ENDOGAMOUS SYSTEM) இருப்பதைக் காணலாம்.

ஒரு சொந்தக்காரச் சாதியைச் சேர்ந்தவர்கள் அயல் வட்டாரத்தில் வாழும் இன்னொரு சொந்தக்காரச் சாதியினரை தம்மை விடத் தரவரிசையில் தாழ்ந்தவர் என்றும் தம்மை உயர்ந்தவர் என்றும் கருதி பெருமை

பேசிக்கொள்வதை மேலே குறிப்பிட்டோம். ஆயினும் நடைமுறையில் முரண்கள் தோன்றுவதை அவதானிக்க முடிந்தது. எவ்வித திருமண உறவுகளும் அற்றவர்களாக இருந்த இரு வட்டாரங்களைச் சேர்ந்த குழுக்கள் தம்மை அறியாமலே நேரடியல்லாத உறவுகள் மூலம் தம் உறவுக்காரர்களாகி விடுவதைக் கண்டுகொள்கின்றன. முன்பு தொடர்பற்ற குழுக்களிடையே திருமண உறவுகள் தோன்றுகின்றன. பழைய உறவுகள் துண்டிக்கப்படுகின்றன. நேரடியல்லாத இரண்டாம் மூன்றாம் நிலை உறவுகளாகவும் முன்பு தொடர்பற்ற உறவுகளாகவும் இருந்தவர்களிடையே உறவுத் தொடர்புகள் உருவாகிவிடுகின்றன. கள ஆய்வின் போது இவ் உறவுத் தொடர்புகளை நன்கு கண்டுபிடித்துச் சுட்டிக்காட்டியதுண்டு. இக்காரணத்தினாலேயே மூடிய அகமணக்குழு என்ற எண்ணுக்கரு நடைமுறையில் உண்மையற்றதாகப் போய்விடுகிறது.

## வெவ்வேறு சாதிகளுக்கிடையிலான உறவுகள்

கிராமத்தின் எல்லா உறுப்பினர்களையும் ஒன்றிணைக்கும் ஒருங்கிணைந்த கட்டமைப்பு யாழ்ப்பாணக் கிராமங்களில் காணப்படுவதில்லை. இவ்வாறான ஒருங்கிணைந்த கட்டமைப்பு (UNITARY STRUCTURE) இல்லாத காரணத்தால் வட்டாரங்கள் தனித்தனியாக அயல் வட்டாரங்களுடன் குறைந்தளவு சமூகத் தொடர்புகளுடன் இயங்குவதைப் பற்றி மேலே குறிப்பிட்டோம். அடுத்து வேளாளர்களுக்குச் சேவைகளை வழங்கும் சேவைச் சாதிகள் (SERVICE CASTE) வேளாளர்களோடு இடையூடாட்டம் செய்வதைப் பற்றிக் குறிப்பிடுவோம். குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தின் வேளாளர்கள் தமது கிராமத்திற்குள் வாழும் பள்ளர் சமூகக் குழுவின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு சேவையை வழங்கும் கோவியர் சமூகக் குழு அயற்கிராமத்தவராக இருப்பர். இன்னொரு சேவைக் குழுவான நாவிதர் வேறொரு அயற்கிராமத்தவராக இருப்பர். இவ்விதமாகச் சாதிகளுக்கிடையிலான இடையுறவும் தொடர்புகளும் கிராமத்துக்குள்ளும் அதற்கு வெளியேயும் பரவிப் பரந்திருக்கும். இதனாலே கிராமங்கள் நெருக்கமான பிணைப்புகளால் பிணைக்கப்பட்டு ஒருமைத் தன்மையுடையனவாய் இருப்பதில்லை. மலினோவ்ஸ்கி என்ற மானுடவியலாளர் குறிப்பிடும் ஒருங்கிணைந்த (INTEGRATED) சமுதாயம் என்ற வருணிப்பு யாழ்ப்பாணத்தின் கிராமச் சமுதாயத்திற்கு பொருத்தமற்றது. இருந்தபோதும் யாழ்ப்பாணக் கிராமங்கள் நிஜமான இருப்பை உடையன என்பதை மறுப்பதற்கில்லை. அவற்றை வெறும் நிர்வாக அலகுகள் என்று குறுக்கிப் பார்க்க முடியாது. அவற்றுக்குப் பல நூற்றாண்டுக்களுக்கு மேற்பட்ட வரலாறு உண்டு. சிறுப்பிட்டிக் கிராமம் பற்றிய ஆவணச் சான்றுகளில் மிகப் பழமையானது 1645 ஆம் ஆண்டுகுரியது. சில கிராமங்களின் மக்களின் குண இயல்புகளைப் பற்றிய பழமொழிகளும் சொல் வழக்குகளும் வாய்மொழி மரபாக வழக்கில் இருந்து வருகின்றன. பெரும்பாலானவர்கள் தம்மைத் தமது கிராமத்துடன் அடையாளப்படுத்திக் கூறுவர். மேலதிகத் தகவல்களை விடுத்து கேட்டால் மட்டும்தான், வாழும் வட்டாரம் அல்லது பகுதி பற்றிக் கூறுவர். இதனை விட கிராமத்தவர்களிடையே இன்னொரு மனப்பாங்கும் உள்ளது. ஒரு வட்டாரத்தின் கிராமம் முழுவதும் தமது என்ற கருத்துடையவராயும் வேறு வட்டாரங்களும் அங்கு உள்ளனவே என்ற எண்ணம் அற்றவராகவும் பேசுவதைக் காணலாம். ஒரு தடவை ஆண்டுத் தேர் திருவிழாவின்போது தேரை ஒரு வட்டாரத்தின் வேளாளர்கள் மட்டும் வடம் பிடித்து இழுப்பதைக் கண்டேன். கிராமத்தின் பிறவட்டாரங்களின் ஆட்களையும் தேர் இழுப்பதில் சேர்த்துக் கொள்ள வேண்டும் அல்லவா? என நான் கேட்டேன். எனது வினாவை அவர்கள் பொருட்படுத்தவில்லை. அது பொருத்தமற்ற அநாவசியமான வினா என அவர்கள் கருதியிருக்க வேண்டும்.

முழுச் சமூகம் என்ற முறைமை தம்மைச் சுற்றியே சுழல்கிறது என்றும் பிற சாதியினரான தமது சேவகர்கள் தமக்குச் சேவை செய்வதற்காகவே உள்ளனர் என்றும் வேளாளர்கள் சிந்திக்கின்றனர் போல் தெரிகிறது. தமது உலகத்திற்குள் அடங்காதவர்களும் சேவைக் கடமைகளைச் செய்யும் தேவையற்றவர்களுமான சுதந்திரமுடைய சமூகக் குழுக்களான மீன்பிடித்



**யாழ்ப்பாணத்தின் வீதியமைப்பு**

Image Source : vivekanandaabroad.blogspot.com

தொழில் செய்யும் சமூகக் குழு, கைவினைத் தொழில் செய்யும் சமூகக் குழுக்கள் தம் மத்தியில் வாழ்கின்றனர் என்ற உணர்வும் இவர்களிடம் இருப்பதாகத் தெரிகின்றது. ஆயினும் வரலாற்று உணர்வுடைய வேளாளர்கள் சிலரும் கிராமங்களில் இருக்கின்றார்கள். அவர்கள் வேளாளர்களின் பொற்காலம் மறைந்து விட்டதே என்று கூறிக் கவலை தெரிவிப்பார்.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டதற்கு அமைய யாழ்ப்பாணத்தினதும் தஞ்சாவூரினதும் சாதி அமைப்பை ஒப்பீடு செய்வது எமது பிரதான நோக்கமாகும். இம் முடிவுரையில் இரு பகுதிக்கு உள்ள முக்கிய வேற்றுமைகளைக் குறிப்பிடுவோம். இவ்விரு சமூகங்களிற்கும் சாதியடிப்படையில் தெளிவாகத் தெரியும் முக்கிய வேற்றுமைகள் பின்வருவன:

1. யாழ்ப்பாணச் சமூகத்தில் பிராமணரின் வகிபாகம் தஞ்சாவூர்ப் பிராமணரின் வகிபாகத்தில் இருந்து முற்றிலும் வேறானது. யாழ்ப்பாணத்தின் பிராமண வகிபாகம் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
2. அங்கு சடங்குகளும் (RITUALS) பொருளாதாரக் கட்டுப்பாடுகளும் (ECONOMIC OBLIGATIONS) இத்தகைய ஒன்றிணைத்த முறையைச் சாத்தியமாக்கியுள்ளன. தஞ்சாவூரின் வெவ்வேறு கிராமங்களில் வதியும் ஒரே சாதி ஆட்கள் இரத்த உறவு முறையாலும் சாதி என்ற பொதுமை அடையாளத்தாலும் (உதாரணம் பள்ளர் சாதி) ஒன்று சேருதல் உண்மையாயினும், தஞ்சாவூர்க் கிராமங்கள் தனித்தனி அலகுகளாகப் பிரிந்து நிற்கும் தன்மை உடையவை.

யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் கிராம ஐக்கியம் (VILLAGE UNITY) குறைந்த அளவிலேயே உள்ளது. ஆயினும் இவ்வாறான ஐக்கியக் குறைவு, கிராமத்தை நிலைகுலைவுக்கு ஆளாக்கும் நிலையை உருவாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணக் கிராமங்கள் நீண்ட காலம் உறுதிநிலை (STABILITY) கொண்டனவாக இருந்து வந்துள்ளன. (IT IS A SYSTEM OF GREAT STABILITY)

கிராமங்களில் வன்முறை மோதல்கள் உருவாகும் சந்தர்ப்பங்கள் எவை என்பதைக்கொண்டு இரு பகுதிக்கு இடையிலான வித்தியாசங்களை அடையாளம் காணலாம். அத்தகைய மோதல்கள் (EXPLOSIONS) ஏற்படும் சூழல் இருவகையில் அமையலாம்.

1. ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் இடையிலான வன்முறைச் சண்டை.

2. ஒரு கிராமத்திற்கு உள்ளேயே ஒரு சாதிக்கும் இன்னொரு சாதிக்கும் இடையிலான சண்டை.

உதாரணமாக தஞ்சாவூரில் பிராமணர்கள் தமது கிராமத்திற்குள் வதியும் மற்றவர்களோடு முரண்பட்டு அவர்களை தண்டித்தல். அதேபோன்று யாழ்ப்பாணத்தின் வேளாளர்கள் தமது கிராமத்துக்குள் இருக்கும் பள்ளர் சாதியினரோடு முரண்பட்டு அவர்களை வன்முறை கொண்டு தண்டித்தல்.

மேற்குறித்த இரு சந்தர்ப்பங்களையும் மோதல் நிலை (EXPLOSIVE SITUATION) எனலாம். யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் வன்முறையான சண்டை என ஒன்று நிகழ்வது கிடையாது. ஆனால் தஞ்சாவூரில் ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் வன்முறைச் சண்டைகள் இடைக்கிடை இடம்பெறுவதுண்டு. யாழ்ப்பாணக் கிராமம் ஐக்கியப்பபட்ட ஒரு முறையன்று. அது தஞ்சாவூரின் ஐக்கியப்பட்ட ஒன்றித்த முறையில் இருந்து வேறுபட்டது. ஒரு கிராமத்தவர் ஒன்றுபட்டு இன்னொரு கிராமத்தோடு வன்முறை மோதலில் ஈடுபடும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதில்லை.

அடுத்து கிராமத்திற்குள் இடம்பெறும், ஒரு சாதிக்கும் இன்னொரு சாதிக்குமான மோதலை எடுத்துக் கொள்வோம். யாழ்ப்பாணக் கிராமம் ஒன்றில் பள்ளர் சாதியைச் சேர்ந்த ஒருவரை அல்லது ஒரு குடும்பத்தை வேளாளர் குடும்பம் ஒன்று பிரச்சினை ஒன்றிற்காக வன்முறையை உபயோகித்துத் தண்டிக்கிறது எனக் கொள்வோம். அந்நிகழ்வு தனிப்பட்ட வேளாளர் குடும்பத்தின் விவகாரமாக முடிந்து போய்விடலாம். மோதலாகவும் மாறலாம். அப்போது குறித்த வேளாளர் குடும்பம் வாழ்கின்ற வட்டாரத்தின் (அல்லது குறிச்சியின்) வேளாளர்கள் மட்டும் ஒன்று சேர்ந்து குறிப்பிட்ட பள்ளர் சாதி வாழும் வட்டாரத்தின் மீது வன்முறையைப் பிரயோகிக்கும் அவ்வேளை, ஏனைய வட்டாரங்களில் (குறிச்சிகளில்) வாழும் வேளாளர்கள் நடுநிலையை வகிப்பர். அவர்களில் பெரும்பான்மையோர் வெறும் பார்வையாளர்களாக இருப்பார்களே அல்லாமல் வேளாளர் சாதி என்ற முறையில் அணி சேர்வதில்லை. குறித்த பள்ளர் சமூகத்தினர் கிராமத்தில் எல்லா வட்டாரங்களிலும் வேளாளர்களுக்குச் சேவைக் கடமையைச் செய்வார்களாதலால் அவர்களைத் தண்டிப்பதற்கு ஒன்று சேர்வதில் விருப்பம் அற்றவர்களாக நடுநிலையாகி விலகி நிற்பர். தஞ்சாவூரின் நிலை வேறானது. அங்கு பள்ளர் சாதிக் குழுவை பிராமணர்கள் ஒன்று சேர்ந்து தண்டிப்பார்கள். தனிப்பட்ட ஒரு பிராமண நிலக்கிழாருக்கு தன் பண்ணையில் வேலை செய்யும் பள்ளர் சாதிக் குடியானவன் மீது அனுதாபம் இருக்கலாம். ஆயினும் தண்டித்தல் என்ற விடயத்தில் குறித்த நிலக்கழாரின் தனிப்பட்ட அனுதாப உணர்வை பிராமணர் என்ற சாதி உணர்வு மறைத்துவிடும். யாழ்ப்பாணத்தில் மோதல்கள் ஏற்படும்போது கிராம எல்லைகளில் சாதியடிப்படையிலான எதிரணியாக ஒன்று சேர்த்தல் (POLARISATION) இடம்பெறுவதில்லை. இவ்வகையில் தஞ்சாவூரும் யாழ்ப்பாணமும் சாதிமுறையில் வேறுபடுகின்றன. யாழ்ப்பாணத்தின் சாதிமுறை தனித்துவமான பண்புகளை உடையது.

## மொழிபெயர்ப்பாளரின் குறிப்புகள்

இம்மொழிபெயர்ப்பு ஒரு தழுவலாக்கம். மூலக்கட்டுரையைத் தழுவி சுருக்கி எழுதப்பட்டது. இதனை வாசகர்களுக்கு மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

ஆங்கிலத்தில் CASTE IN JAFFNA என்ற தலைப்பில் 1960 இல் வெளியிடப்பட்ட இக்கட்டுரை 1952 – 54 காலத்தில் நிகழ்த்தப்பட்ட கள ஆய்வுத் தகவல்களைக் கொண்டு எழுதப்பட்டது. சிறுப்பிட்டி என்ற யாழ்ப்பாணக் கிராமத்தில் தங்கியிருந்து கட்டுரையாசிரியர் ஆய்வை நிகழ்த்தினர்.

ஆங்கிலத்தில் 17 பக்கங்களைக் கொண்ட இக்கட்டுரையின் முதல் 10 பக்கங்களும் மூலக்கட்டுரையின் தழுவலாகும். மிகுதி 7 பக்கங்களும் (7177) மிகச் சுருக்கமான பொழிப்புரையாக எழுதப்பட்டுள்ளது.

கட்டுரையில் கூறப்பட்ட விடயங்கள் சர்ச்சைக்குரியவை. ஆங்கில மூலத்தில் உள்ளடக்கத்தை இயன்றவரை திரிபுபடுத்தாது எழுதியுள்ளோம். இக்கட்டுரை பற்றிய வாசகர்களின் எதிர்வினைகள் வரவேற்கப்படுகின்றன. ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முற்பட்ட (19521955) யாழ்ப்பாணத்தைப் பற்றியே மைக்கல் பாங்ஸ் பேசுகிறார் என்பதைக் கவனத்தில் கொண்டு இக்கட்டுரை பற்றிய உரையாடல்கள் அமைதல் பயன் தருவது.

(தொடரும்)

இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல்மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப்பார்வையில் எழுதும் முயற்சியே 'ஈழத்துக் கீழைக்கரை: ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடராகும். இதன்படி, இலங்கையின் கிழக்கு மாகாணம் எனும் அரசியல் நிர்வாக அலகின் பெரும்பகுதியையும் அப்பகுதியைத் தாயகமாகக் கொண்ட மக்களின் பண்பாட்டையும் வரலாற்று ரீதியில் இது ஆராய்கிறது. கிழக்கிலங்கையின் புவியியல் ரீதியான பண்பாட்டு வளர்ச்சியையும், அங்கு தோன்றி நிலைத்திருக்கும் தமிழர், சோனகர், சிங்களவர், ஏனைய குடிகள் போன்றோரின் வரலாற்றையும், இன்றுவரை கிடைத்துள்ள சான்றுகளை வைத்துத் தொகுத்துக் கூறும் தொடராக இது அமைகிறது.



**விவேகானந்தராஜா துலாஞ்சனன்**

விவேகானந்தராஜா துலாஞ்சனன் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும் கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தின் பட்டக்கற்கைகள் பீடத்தில் பொது நிர்வாகமும் முகாமைத்துவமும் துறையில் முதுமாணிக் கற்கையைத் தொடர்கிறார்.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் தற்போது மட்டக்களப்பு போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகப் பணி புரிகிறார்.

இலங்கை சைவநெறிக்கழக வெளியீடான 'அலகிலா ஆடல்: சைவத்தின் கதை' எனும் சைவ வரலாற்று நூலையும் (2018), தனது திருமண சிறப்புமலராக 'மட்டக்களப்பு எட்டுப் பகுதி' நூலையும் (2021) வெளியிட்டுள்ளார்.

# கீழைக்கரைக்கான எழுத்துச் சான்றுகள் : மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் II

மட்டக்களப்பு மான்மியமோ மட்டக்களப்புப் பூர்வ சரித்திரமோ முழுக்க முழுக்க செட்டிபாளையம் கணபதிப்பிள்ளை புலவரின் படைப்பாக இருந்துவிடமுடியாது என்பதற்கான சில சான்றுகளை கடந்த தொடரில் பார்த்தோம். ஆனால், ஈழத்துப் பூராடனாரின் வாதங்களிலிருந்து நாம் முற்றிலும் மறுக்கமுடியாதிருக்கின்ற ஒரு விடயம் என்னவென்றால், இன்று மட்டக்களப்பு மான்மியம் என்ற பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ள நூலில் கணபதிப்பிள்ளை புலவரின் தாக்கம் ஓரளவுக்கேனும் இருக்கிறது என்பதைத் தான். அவரிடமிருந்தே எஃப். எக்ஸ். சீ. நடராசா பதிப்பித்த மட்டக்களப்பு மான்மியத்திற்கான மூலப்பிரதி பெறப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தைப் பதிப்பித்த கமலநாதன் தம்பதியினரால் (அ), (ஆ) எனப் பெயர் சூட்டப்பட்ட இரு பிரதிகள் கணபதிப்பிள்ளை புலவரின் மருமகளிடமிருந்து பெறப்பட்டவை.

மகிழடித்தீவில் கிடைத்த கையெழுத்துப்பிரதியின் மூலம் மட்டும் சரியாகத் தெரியவில்லை. அது மட்டக்களப்பு மான்மியம் அச்சான பின்னர்தான் கைப்பட எழுதப்பட்டது என்று கூறி, அப்பிரதியும் கணபதிப்பிள்ளைப் புலவரின் படைப்பே என்று ஈழத்துப் பூராடனார் மறுக்கிறார். ஆனால், அந்தப்பிரதி மட்டக்களப்பு மான்மியத்தை அன்றி, பாண்டிருப்பில் கிடைத்த (அ) பிரதியையே பெருமளவு ஒத்துள்ளதை கமலநாதன் தம்பதியினர் உறுதிசெய்துள்ளனர். அவர்களுக்கு வேறு சில பிரதிகளும் கிடைத்திருந்ததையும் அவை மேற்படி பிரதிகளில் ஒன்றையே படியெடுத்திருந்ததால் அவற்றை பாடபேதம் பார்க்க இணைத்துக்கொள்ளவில்லை என்பதையும் கூட தம்பதியினர் தங்கள் நூலில் ஒத்துக்கொண்டுள்ளனர்.

சரி, அந்த இரு நூல்களிலும் புலவரின் பங்களிப்பாக இருக்கக்கூடும் என்று ஊகிக்கக்கூடியவாறு, ஏதும் சான்றுகள் கிடைக்கின்றனவா?

*மட்டக்களப்பு மான்மியத்தையும் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தையும் ஆராய்ந்தால் இரு விடயங்கள் புலப்படுகின்றன.*

*முதலாவது, கமலநாதன் தம்பதியினரின் பதிப்புரையில் (2005:viii)* ***"மட்டக்களப்பு மான்மியம் எனும் அச்சுப்பிரதியின் முதலொன்பது பக்கங்களிலுமுள்ள விடயங்கள் ஏனைய ஏட்டுப்பிரதிகளிலும் ஓலைச்சுவடிகளிலுமில்லை"*** *என்று சொல்லப்படுகின்றது. அந்தப்பகுதியில் வரும் ஆசியாக்கண்டத்தில் இலங்கை அமைந்திருக்கின்றமை, இலங்கையில் வழக்கிலுள்ள கண்டிச்சட்டம், தேசவழமைச்சட்டம், முக்குவர் ஏற்பாடு ஆகிய சட்டங்கள் முதலிய விடயங்கள் சமகாலத்துக்குரியவை. இந்தப்பகுதி, இறுதியில் செட்டிபாளையத்தின் பெயர்க்காரணத்தைச் சொல்லி நிறைவுறுகின்றது. பிறந்தகத்தைப் போற்றாத மேதைகள் எவரும் இலர். எனவே இந்த ஒன்பது பக்கங்களும் செட்டிபாளையப் புலவராலே எழுதப்பட்டவையாகலாம்.*

*அடுத்து, "கல்வெட்டு என்பது கல்லில் வெட்டினபடியால்" என்ற வரி நூலினுள்ளே காணப்பட்டாலும், மான்மியத்திலோ மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்திலோ குறிப்பிடப்பட்டுள்ள எந்தக் கல்வெட்டுப் பாடல்களுமே கல்லில் வெட்டப்பட்டவையாக இன்று கிடைக்கவில்லை. இந்நூலுக்கு மொழிநடையால் முந்திய "கோணேசர் கல்வெட்டு" நூலும் பாட்டும் உரையும் சேர்த்து எழுதப்பட்ட நூல். எனவே கல்வெட்டு என்பதை ஒரு சிற்றிலக்கிய வகையாகக் கொள்வதே பொருத்தமானது.*

*மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தின் உரைநடைப் பகுதியில் "மைல், லோ, இங்கிலீசு, இந்தியர்" முதலிய மிக அண்மைக்காலச் சொற்கள் இடம்பெறுகின்றன. அதேபோல் "முக்குவரில் ஏழுகுடி வந்த வரல்முறை" என்ற கல்வெட்டில் "இந்தியா" என்ற சொல்லும், "வடமதுரையிலிருந்து முக்குகர் வந்த கல்வெட்டு" எனும் கல்வெட்டில் "இந்துமதம்" என்ற சொல்லும் இடம்பெற்றுள்ளன. இவ்விரு சொற்களும் 20 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே கீழைக்கரைத் தமிழர் மத்தியில் பொதுப்புழக்கத்துக்கு வந்த சொற்கள். எனவே உரைநடைப் பகுதியிலோ கல்வெட்டுப் பகுதியிலோ புலவரால் எழுதப்பட்ட அல்லது திருத்தப்பட்ட சில பகுதிகள் இடம்பெற்றிருக்கக் கூடும்.*

*திருப்படைப் பத்ததிகளின் மூல ஏட்டுச்சுவடிகள் கிடைக்காத நிலையில், இந்த ஒப்பீட்டைக் கறாராக மேற்கொண்டு, அந்நூலில் கணபதிப்பிள்ளைப் புலவரால் எழுதப்பட்ட பாகங்களை வேறுபிரித்து அறியமுடியாதுள்ளது. இதை மேலும் ஆராய ஆர்வமுள்ளவர்களுக்காக கீழுள்ள அட்டவணை 1, மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் நூலின் உரைநடை மற்றும் கல்வெட்டுப் பகுதிகளுக்கிடையிலான ஒற்றுமையை விளக்குகின்றது. இதில் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் எழுதப் பயன்பட்ட (அ), (ஆ), (க) என்று பெயரிடப்பட்ட மூன்று பிரதிகள், மட்டக்களப்பு மான்மியம் (ம.மா) எனும் நான்காவது பிரதி என்பவை பற்றிய ஒப்பீடு "குறிப்பு" நிரலில் காட்டப்பட்டுள்ளது.*

***அட்டவணை 01. மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் நூலின் உரைநடைப்பகுதியும், அதில் கூறப்பட்ட விடயங்கள் முழுமையாக அல்லது பகுதியாக அடங்கிய கல்வெட்டுப் பாடல்களும் அடங்கிய ஒப்பீடு. அடைப்புக்களில் உள்ளவை, மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் நூலிலுள்ளவாறு (கமலநாதன் & கமலநாதன், 2005) பக்க எண்கள்.***

| உரைநடைப்பகுதி | ஒத்த பாடல் பகுதி | குறிப்பு |
|---|---|---|
| 1. விசயன் வரவு (6-8)<br>2. விசயனின் ஆட்சி (8-9) | தொடக்கப் பாடல்கள் பிற்பகுதி பாடல் எண் 12 - 17 (3-4)<br>கலிங்ககுமாரன் முதல்முறை வந்த கல்வெட்டு (101-107) | தொடக்கப் பாடல்கள் நான்கு பிரதியிலும் கிடைத்தன. கலிங்ககுமாரன் முதல்முறை வந்த கல்வெட்டு (அ),(க) பிரதிகளில் மட்டும் கிடைத்தது. |
| 3. சிறிகுலசேனன் வந்த காலம் (9-10)<br>4. இலங்கையை மூன்று பங்காக்கியது (10-11) | இலங்கைக்குக் கலிங்கன் இரண்டாம் முறை வந்த கல்வெட்டு முற்பாதி (107 - 110) | கல்வெட்டு (அ), (க) பிரதிகளில் மட்டும் உள்ளது. |
| 5. கூத்திகன் சரித்திரம் (11-12) | தொடக்கப் பாடல்கள் முற்பகுதி பாடல் எண் 1-4 (1) | இந்தப் பாடல்கள் (ஆ) பிரதியில் மட்டும். |
| 6. சேனன் சரித்திரம் (12-14) | பெரிய கல்வெட்டு பிற்பாதி (60-61)<br>நாதன் சரித்திரம் (61-63) | பெரிய கல்வெட்டு 4 பிரதிகளிலும் இருக்கிறது. இலங்கை பன்னிரு |

| | | |
|---|---|---|
| | | பங்காக்கப்பட்ட குறிப்பு நாதன் சரித்திரத்தில் வருகிறது |
| 7. சிறிகுலன் (15) | - | - |
| 8. பிரசன்னசித்து - புவனேக கயவாகு (15-17) | பாலாநகைக் கல்வெட்டு முற்பகுதி (110-111) | பாலாநகைக் கல்வெட்டு (ஆ), (க) இரண்டில் மட்டும். |
| 9. மனுநேயகயவாகுவின் சரித்திரம் (17-19) | புவனேசர் திருக்கோவிற் கல்வெட்டு (118-121) பாலாநகைக் கல்வெட்டு நடுப்பகுதி (111-113) | புவனேசர் கல்வெட்டு சுவடிகள் (அ), (ஆ)இல் மட்டும். பாலாநகைக் கல்வெட்டு (ஆ), (க) இரண்டில் மட்டும். |
| 10. ஆடகசவுந்தரி சரித்திரம், (19 - 21) 11. மகாசேனன் சரித்திரம் (21 - 24) | பாலாநகைக் கல்வெட்டு பிற்பகுதி (113 - 117) | பாலாநகைக் கல்வெட்டு (ஆ), (க) இரண்டில் மட்டும். |
| 12. சிங்ககுமாரன் சரித்திரம் 13. கூளங்கை ஆரியன் | - | - |
| 14. உக்கந்தமலைச் சரித்திரம் | பாலாநகைக் கல்வெட்டு இறுதிப்பகுதி (118) | பாலாநகைக் கல்வெட்டு (ஆ), (க) இரண்டில் மட்டும். |
| 15. பானுவின் சரித்திரம், | - | - |
| 16. அமரசேனன் சரித்திரம் – மறவர் வருகை (28-29) | முக்குவரில் ஏழு குடி வந்த வரல்முறை. (85-87) | இப்பாடல் (மமா) பிரதி தவிர மூன்றிலும் உள்ளது. இதில் "இந்தியர்" என்ற சொல் இடம்பெற்றுள்ளது. |
| 17. குணசிங்கன் 18. உலகநாச்சி 19. வங்கநாடன் 20. பாண்டியகுமாரன் 21. குமாரசிங்கன் (29-34) | - | - |
| 22. கதிர்சுதன் (34-35) | வடமதுரையிலிருந்து முக்குகர் வந்த கல்வெட்டு பிற்பாதி (96-97) | (மமா) தவிர மூன்று பிரதியிலும் உள்ளது. இப்பாடலில் "இந்துமதம்" எனுஞ்சொல் வருகிறது. |
| 23. மதிசுதன், 24. நாதன், 25. தினசிங்கன், (35-38) | - | - |
| 26. கலிங்ககுல மாகோன் (39-40) | கலிங்க மாகோன் அரனூழியம் வகுத்த கல்வெட்டு (52-54) | நான்கு பிரதிகளிலும் உள்ளது. |
| 27. சுகதிரன், 28. எதிர்மன்னசிங்கன் (40 - 43) | - | - |
| 29. தாதன் வரவு (43-45) | தாதன் கல்வெட்டு (71-73) | (ஆ) பிரதி தவிர மூன்றிலும் உள்ளது. |
| 30. ஒத்துக்குடா கந்தப்பன், 31. ஒல்லாந்தரும் இராசசிங்கனும் சம்மதம், 32. பஸ்கோல் முதலி வரவு, 33. விசயராசசிங்கனின் தீர்ப்பு, 34. அறுமக்குட்டிப்போடியை நிலைமை வகுத்தது. (45-52) | - | - |


அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன்படி, பெரும்பாலான உரைநடைப்பகுதிகள் கல்வெட்டுப் பாடல்களிலும் காணப்படுகின்றன. அவற்றில் சில கல்வெட்டுப்பாடல்கள் எல்லாப் பிரதிகளிலும் கிடைக்கவில்லை என்பது ஊன்றிநோக்கத்தக்கது. சில இடங்களில் கல்வெட்டுப்பாடல்களும் உரைநடைகளும் சொல்லும் விடயத்தில் முரண்படுவதால், இவை ஒன்றை ஒட்டியே இன்னொன்று எழுதப்பட்டதா என்பதையோ ஒருவராலே எழுதப்பட்டதா என்பதையும் உறுதிபடக் கூறமுடியாதுள்ளது. அவற்றில் இடம்பெற்றுள்ள சமகாலத்தமிழ் மற்றும் ஆங்கிலத் திசைச்சொற்கள் அவற்றின் தோற்றக்காலம் பற்றிய சந்தேகத்தையும் உறுதிப்படுத்துகின்றன.

எது எப்படியோ, சந்தேகத்துக்குரிய பல இடைச்செருகல்கள் அடங்கியிருந்தாலுமே கூட, மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தை பிற்கால நூல் என்று முற்றிலும் ஒதுக்கித்தள்ளிவிட முடியாது. அந்நூலிலுள்ள பெரும்பகுதி கீழைக்கரைத் தொன்மங்களையும் குலவழக்கங்களையும் தொகுத்து எழுதப்பட்டவை என்பது முன்பும் சுட்டிக்காட்டப்பட்டது. எடுத்துக்காட்டாக, பெயர் குறிப்பிடப்படாமல் ஆடகசவுந்தரி சந்தனப்பேழையில் மட்டக்களப்புக்குத் தெற்கே கிடைத்ததும் அவள் வடக்கிலிருந்து வந்து திருக்கோணமலையில் கோவில்கட்ட முனைந்த அரசனொருவனை மணந்ததும் 1867 இல் ஒரு ஆங்கிலேயப் பாதிரியாரால் பதிவுசெய்யப்பட்டுள்ளது (Robinson 1867:1718).

ஆக, மட்டக்களப்பு மான்மியமோ மட்டக்களப்புப் பூர்வ

சரித்திரத்திரமோ விவரிக்கும் செய்திகளில் பொருட்படுத்தக்கூடிய வரலாற்றுச் செய்திகள் உள்ளதா என்பதை ஆராய்ந்து நாம் முதலில் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். எனவே, மட்டக்களப்புப் பூர்வ சரித்திம் நூலில் பயன்பட்டுள்ள சந்தேகத்துக்கிடமான கலியுக ஆண்டு வரிசை, அரசன் அரசியரின் பெயர்கள் என்பவற்றை இயன்றவரை தவிர்த்து, கிடைக்கும் தொன்மங்களை மொத்தமாகத் தொகுத்து அந்நூல் கூறவரும் செய்திகளைப் பகுப்பாய்வு செய்வோம்.

மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் கூறுவதன்படி, இராவணன் காலத்துக்குப்




**மட்டக்களப்புத்தரவை**

Image Soruce: Cartography Division of Department of Census and Statistics, Sri Lanka.

பிறகு இலங்கையில் இயக்கர், நாகர் என்போரின் தொல்லரசுகள் நீடித்திருக்கின்றன. கலிங்கநாட்டின் தலைநகரான சிங்கபுரத்திலிருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கை வந்த விசயன் மூலம் இலங்கையில் ‘விசயதுவீப அரசு’ [1] உருவாகின்றது. விசயனுக்கு பிள்ளைப்பேறின்மையால் கலிங்ககுலத்தவன் ஒருவன் இலங்கைக்கு அனுப்பப்பட்டு பட்டம் சூட்டப்படுகிறான். இவனது வருகையை மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் “கலிங்கனின் முதல் வருகை” என்கின்றது. இப்படி, இயக்கரும் நாகரும் ஆண்ட இலங்கையில் சிங்கர், வங்கர், கலிங்கர் எனும் முக்குலத்தாரின் [2] ஆட்சி ஏற்படுகின்றது. இராமாயண குகன் வம்சத்தைச் சேர்ந்த இந்த முக்குலத்தவரே முக்குகர் ஆகினர் என்றவாறு இத்தொன்மம் விரிகின்றது.

இலங்கை இந்த முக்குலங்களுக்காக மூன்றாகப் பிரிக்கப்பட்டமை அடுத்துச் சொல்லப்படுகின்றது. இத்தொன்மம் இலங்கையை இராசநாடு, உரோகணம், மாயநாடு ஆகிய திரிசிங்களநாடு என்று மூன்றாகக் காணும் பாளி இலக்கியங்களிலிருந்து பெறப்பட்டிருக்கலாம். மறுபுறம் பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தோற்றம் பெற்ற “திரிசிங்கள தேசம்” என்ற எண்ணக்கரு சேர சோழ - பாண்டிய முத்தமிழ் நாட்டிலிருந்தே பெறப்பட்டிருக்கக் கூடும் என்ற ஊகமும் ஒப்பிடத்தக்கது. மட்டக்களப்பில் முதலாவது அரசு உருவாவது சிங்காரத்தோப்பு அணைக்கு மேற்கிலேயே. அங்கு முன்பு விசயனால் கொல்லப்பட்ட இயக்கர் அரசன் இரகு வம்ச காலசேனனின் இளைப்பாறல் மண்டபம் இருந்ததால், அதை மீள நகராக்கக் கருதி குடியேற்றங்களைச் செய்கின்றான் கூத்திக மன்னன். புதிய நகரொன்றை அமைப்பதற்காக அங்கிருந்த மேட்டுக்களப்பு எனும் ஏரி, மண் கல் கொண்டு நிரப்பி மூடப்பட்டு மாளிகை அமைக்கப்பட்டு, “மட்டக்களப்பு” எனும் நகரம் உண்டாகின்றது.

இப்படி நீர்நிலையொன்றை நிரப்பி காவலரணாக மாற்றி கோட்டையமைத்த செய்தியொன்று ‘முக்கார ஹதன’ முதலிய சிங்கள நூல்களிலும் வருகின்றது. அவை சொல்வதன்படி, வடமேற்கு இலங்கையின் “நல்ல முதலியார்” எனும் முக்குவர் குலத்தலைவன் கலா ஓயா ஆற்றுக்கும் மகாஓயா ஆற்றுக்கும் நடுவே, கல்முறிவு எனும் இடத்திலிருந்த குளத்தைத் தூர்த்து மாளிகை அமைத்து, அதன் அணைக்கட்டை கோட்டைச்சுவராக மாற்றி வன்னியருக்கு எதிராக போர் புரிந்தான் (De Silva, 1996:166). வடமேற்கிலங்கையின் கலா ஓயா, மகா ஓயா, கல்முறிவு எனும் பெயர்களோடு ஒப்பிடத்தக்க வகையில், கூத்திகனின் மட்டக்களப்பு அமைந்ததாகச்சொல்லப்படும் தென்கிழக்கிலங்கையிலும் இன்று கல் ஓயா, மகா ஓயா, கல்லரிச்சல் ஆகிய இடங்கள் அமைந்துள்ளன [3].

மூன்றாகப் பிரிக்கப்பட்ட இலங்கையில் “இயக்கரும் நாகரும் மேலெழும்பி” ஏனைய முக்குலத்தோரை அடக்கியாண்டதால் இலங்கைக்குப் படையெடுத்த

இரணாசலன் எனும் கலிங்கனால் இலங்கை பன்னிரண்டாகப் பிரிக்கப்பட்டதும், இரணாசலனுக்கு உதவியாக வந்த படையாட்சி குலத்தவர் மட்டக்களப்பில் நான்காவது அரச குலமாக ஆட்சியில் அமர்ந்ததும் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் அடுத்து விவரிக்கப்படுகின்றது. இப்படி பன்னிரண்டாய் இலங்கை பிரிக்கப்பட்டபோது, மண்ணாறும் மணற்றிடரும் (மன்னாரும் யாழ்ப்பாணமும்) குருகுல நாகருக்கும், தெட்சணாபதி இயக்கருக்கும், மட்டக்களப்பு படையாட்சியருக்கும் எஞ்சிய எட்டும் சிங்க குல அரசருக்கும் பிரிக்கப்பட்டன என்கின்றது மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம். இதன் பின்னர் மட்டக்களப்பில் கோவில்களை மையமாக வைத்து ஏற்பட்ட வளர்ச்சிகளை மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் விவரிக்கின்றது. ஒரு கலிங்க இளவரசனின் பின்னணியில் மட்டக்களப்பின் தெற்கே உண்ணாசகிரி [4] எனும் அரசு உருவாவதும், அவனால் நாகர்முனைச் சுப்பிரமணியர் கோவில் (திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலயம்) அமைக்கப்படுவதும், அக்கோவில் சார்ந்து புதிய குடியேற்றங்கள், அந்தக் கோவிலுக்கும் மக்களுக்குமாக காடழித்து உருவாக்கப்பட்ட வயல்கள், அவற்றுக்கான நீர்ப்பாசன ஏரி, என்பன உருவாக்கப்பட்ட சம்பவங்கள் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் விவரிக்கப்படுகின்றன.

திருக்கோவிலைப் போலவே, பின்னர் தெட்சணாபதியில் திருக்கோணேச்சரம் அமைக்கப்பட்டமையும், அதன் பின்னணியில் ஏற்பட்ட குடியேற்றங்கள், காந்தளை ஏரி, மீனேரி முதலிய நீர்ப்பாசன ஏரிகள் பற்றியும் கூறப்படுகின்றது. இப்படி உக்கந்தகிரி, மண்முனை, கொக்குநெட்டி, போர்முனை நாடு (முறையே இன்று உகந்தை, மண்முனை, கொக்கட்டிச்சோலை, போரதீவு) ஆகிய நான்கு இடங்களில் புதிதாகக் கோவில்கள் கட்டப்பட்டதையும், அவற்றின் அருகே உருவான குடியிருப்புகள், மருதநிலங்கள், நீர்ப்பாசனக் கட்டுமானங்களும் மிக விரிவாக மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் விளக்கப்படுகின்றன.
இந்த வளர்ச்சியினூடே யாழத்துறை, கந்தபாணத்துறை, சிங்காரத்தோப்பணை, பாலநகைத் துறை, கல்முனை முதலிய பல துறைமுகங்கள், கடற்கழிமுகங்கள் கப்பல் போக்குவரத்துக்கும் அரசியல் பொருளாதார காரணங்களுக்காகப் பயன்பட்டதும், வடநாட்டு வர்த்தகர் இங்கு வந்து வணிகம் செய்ததும், சில இடங்களில் சொல்லப்படுகின்றது. இராமநாட்டிலிருந்து [5] வந்து குடியேறிய ஏழு மறவர் குலப் பெண்கள், இங்கிருந்தோருக்கு நவநாகரிக ஆடையணிகளையும் கலைகளையும் கற்பித்ததும், வேடருக்கு வேளாண்மை சொல்லிக் கொடுக்கப்பட்டதும் கூறப்படு கின்றது. பெண்களுக்கு பூப்புநீராட்டுச் சடங்கையும் மறவர் குலப் பெண்களே இங்கு அறிமுகப்படுத்தினார்கள் என்பதும் ஊடே கிடைக்கும் சுவையான குறிப்பு.

குலமோதல்கள், மதமோதல்களும் ஆங்காங்கே பதிவாகின்றன. முக்குலத்தார் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்து அன்னியோன்னியமாக இருந்த நாகர் - இயக்கருக்கு எதிரான அரசுகளை அமைத்து ஆள்கிறார்கள். நாகர் - இயக்கர் ஒன்றுகூடி அடிக்கடி முக்குலத்தாரின் அரசுகள் மீது படையெடுப்பதும், தமிழகத்திலிருந்து வரும் கூளங்கை ஆரியன் முதலிய அரசர்கள் நாகருக்கு உதவிபுரிவதும் விவரிக்கப்படுகின்றது.

மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் இலங்கையின் ஆட்சியுரிமை மூன்று குகன் குலத்தாருக்கும் படையாட்சியருக்குமே உரியது என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது. அவர்களது ஆட்சிக்கு குந்தகம் விளைவிக்கப்படும் போது கலிங்க நாட்டிலிருந்தோ தமிழகத்தில் இருந்தோ படையெடுப்புகள் நிகழ்ந்து அவர்கள் காப்பாற்றப்பட்டனர் என்கின்றது அது. இப்படி கலிங்கச்சார்பாக நிகழ்ந்த பெரும்படையெடுப்பாக மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் விவரிப்பது மாகோன் வருகையை.


மணிபுர [6] வணிகர்கள் பலர் மட்டக்களப்பு எங்ஙனும் குடியேற்றப்படுகின்றனர். (அவர்களால்) மட்டக்களப்பில் தமிழ்மதம் அருகி சமண மதம் பெருகுகின்றது. சிங்கர் குலத்தைச் சேர்ந்த அரசன் வங்கரும் கலிங்கரும் அமைத்த கோவில்களை இடிப்பித்து அதன் செல்வங்களை சோழநாட்டுக்கு அனுப்பி பொருளீட்டி வந்தான். சோழத்தொடர்புள்ள சிங்க குல மன்னர்கள் தங்களை ஒடுக்கி 'நாமதாரிகளாக மாற்றி' தங்கள் கோவில்களையும்

இடித்தழிப்பதை மட்டக்களப்பு அரசன் கலிங்க நாட்டுக்கு அறிவிக்க அங்கிருந்து படையெடுத்து வருபவனே மாகோன். அவன் சிங்கர் படைகளை அழித்து, சிங்கரின் அரச குடும்பத்தினரின் “கண்களைப் பறித்து முழங்கால் சில்லுகளை எடுத்து குதிகாலை வெட்டி சிலரை வாளுக்கு இரையாக்கினான்.”

தொடர்ந்து அவன் புத்தாலயங்களை இடிப்பித்ததும் நாமதாரிகளைக் கொடூரமாகக் கொன்றதும் விவரிக்கப்படுகின்றது. உரைநடைப்பகுதியில் இல்லாத வேறு சிலவிடயங்கள் கல்வெட்டுப்பகுதியில் மாகோன் பற்றி வருகின்றது. அதன்படி, மாகோன் (வீர) சைவம் சார்ந்து பல சமூகப்புரட்சிகளை ஏற்படுத்தியதுடன், கோவில் வழிபாடுகளிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினான். இத்தகவல்கள் சிங்கள - பாளி நூல்கள் கூறும் மாகோன் பற்றிய குறிப்புகளோடு கிஞ்சித்தும் மாறுபடவில்லை என்பதும், அவன் மட்டக்களப்போடு கொண்டிருந்த நெருக்கமும் தெளிவாகின்றது.

மாகோனுக்கு ஐந்து தலைமுறைகளுக்குப் பின்னர் மட்டக்களப்பு நான்கு பங்காக்கப்பட்டு, மண்முனை வடபகுதி படையாட்சியருக்கும் மண்முனை காலிங்க குலத்தவருக்கும் மட்டக்களப்பு வங்க குலத்தவருக்கும் உண்ணாசகிரி சிங்க குலத்தவருக்கும் ஆட்சியுரிமை வழங்கப்படுகின்றது. பின்னாளில் கண்டி பேரரசாக எழுச்சி கண்டபோது மட்டக்களப்பு அதிபர்கள் கண்டியின் கீழ் தங்கள் அதிகாரத்தை ஒப்புக்கொடுக்கின்றனர். பின்னாளில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வந்ததும், வடநாட்டு (தமிழ்நாட்டு) செட்டிகள், துலுக்க வணிகர்கள் இங்கு வந்து குடியேறியதும், போர்த்துக்கீசருக்கு எதிராக கண்டி மன்னன் மலாய வீரர்களை மட்டக்களப்பில் காவல் வைத்ததும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணமிருந்து போர்த்துக்கீசரை அஞ்சி ஓடிவரும் மக்கள் குடிபுகும் இடமாக மட்டக்களப்பு விளங்கியது. அப்படி மண்முனை திக்கதிபனின் அனுமதியுடன் குடிபுகுந்த ஒத்துக்குடாக் கந்தப்பன், மட்டக்களப்புத் திக்கதிபனின் தவறான தகவலால் கண்டி அரசனின் ஆணையின் கீழ் கொல்லப்பட்டதும், கந்தப்பன் கொணர்ந்த கண்ணகி விக்கிரகங்களும் குடிகளும் மட்டக்களப்பில் ஏழு ஊர்களில் குடியேறியதும் அடுத்து விவரிக்கப்படுகிறது.




**புராதன இலங்கையின் பிரதேசங்களின் பெயர்களைக் குறிக்கும் படம்**

போர்த்துக்கீசரை அடுத்து ஒல்லாந்தர் வருகை தந்ததும், அவர்கள் போர்த்துக்கீசரை அகற்றி கண்டி அரசனுக்கு மட்டக்களப்பைப் பாரம் கொடுத்ததும், அக்காலத்தில் பஞ்சமேற்பட ஒல்லாந்தர் குறைந்த விலைக்கு நெல் கொடுத்து மட்டக்களப்பு மக்களைக் காப்பாற்றியதும், மட்டக்களப்புத் திக்கதிபர் ஒல்லாந்தருக்கு மட்டக்களப்பைக் கொடுக்கச் சம்மதித்ததும் தொடர்ந்து வருணிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்த பஸ்கோல் முதலி இங்கு கிறிஸ்தவம் பரப்பியதும், ஒல்லாந்தருக்கெதிராகச் சதி செய்ததும்,

அவர் ஒல்லாந்த அரசால் நீக்கப்பட்டு அரசதண்டனை வழங்கப்பட்டதும் கூறப்பட்டு, இறுதியில் மட்டக்களப்பு இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒல்லாந்தரின் கீழ் கந்தப்போடி, அறுமக்குட்டிப்போடி ஆகிய இருவருக்கு நிலைமைப்போடிப் பட்டம் வழங்கப்பட்டு, இராசாதிராசசிங்கன் காலத்தில் ஒல்லாந்தர் மட்டக்களப்பை கண்டியரசிடம் ஒப்படைத்து நீங்கியதும் சொல்லப்படுவதுடன் உரைநடைப்பகுதி நிறைவுறுகின்றது.

## அடிக்குறிப்பு

1. இலங்கை முழுதுக்கும் அரசனாகும் விசயன் “வடநாட்டு விசயநகரம் போல ஒரு மலைநாட்டைப் பட்டணமாக்கி விசயதுவீபம் என நாமஞ்சாற்றினான்” என்கின்றது மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம். தென்னகத்தில் 14ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி வரை பலத்துடன் விளங்கிய விசயநகரப் பேரரசோடு விசயதுவீபம் ஒப்பிடப்படுவதைக் கவனிக்கவேண்டும்.

2. சிங்கர், வங்கர், கலிங்கர் ஆகியோரின் பூர்வீகம் மற்றும் கொடிவழி தொடர்பில் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் தரும் விவரணங்களில் தெளிவில்லை. வங்கர் குல அதிலோகனுக்கும் கலிங்க குல விடமணிக்கும் பிறந்த சிறிமதிக்கு பஞ்சவடியின் ‘வேடக்குகன்’ சிங்கன் மூலம் பிறந்த மகன் வழிப்பேரனே விசயன். ஆக, விசயன் வங்கர், கலிங்கர், சிங்கர் ஆகிய முக்குலங்களின் கலப்பின் வழியே பிறந்தவன் ஆகின்றான். மட்டக்களப்பில் குடிகள் எனும் சமூக உட்பிரிவுகள் தாய்வழியில் கடத்தப்பட, குடிவழி அல்லது வம்சம் அல்லது குலம் பற்றிய போதுமான விளக்கங்களைதையும் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் காணமுடியவில்லை.

3. இத்தொடரில் முன்பே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது போல், கூத்திகன் அமைத்ததாகச் சொல்லப்படும் மட்டக்களப்பு இன்றைய சம்மாந்துறையின் அருகே அமைந்திருந்தது. பழைய மட்டக்களப்பின் எச்சமாக சம்மாந்துறையின் கிழக்குப்புறம் ‘மட்டக்களப்புத் தரவை’ என்றோர் இடம் இன்றும் உள்ளது.

4. ஃகுன்னஸ்கிரிய (hunnasgiriya) என்றோரிடம் கண்டிக்கு அருகில் இன்று உள்ளது. உண்ணாசகிரி / உன்னரசுகிரி / உன்னாசகிரி என்ற பெயர்களில் கீழைக்கரையில் இடமேதும் அமைந்திருந்ததாகத் தகவலில்லை. எனினும் குமுக்கனாற்றுக்குத் தெற்கே வியாழை எனும் அரசு அமைந்திருந்ததும், அது மட்டக்களப்பு அரசுடன் நெருக்கத்தைப் பேணியதும் மலேரியாப் பரவலால் சனத்தொகை குறைந்து அவ்வரசு மறைந்தமையையும் பதினாறாம் நூற்றாண்டுப் போர்த்துக்கேயக் குறிப்புகள் சொல்கின்றன (Codrington 1994:74).

5. இராமநாடு என்பது தமிழ்நாட்டின் இராமேச்சரத்தைச் சூழ 16 ஆம் நூற்றாண்டளவில் தோற்றம் பெற்ற ஒரு சிற்றரசு. ஐரோப்பியக் குறிப்புகள் அதை “மறவர் அரசு” என்கின்றன (Stein 1990:135)

6. மணி என்பதை முத்து எனக் கொண்டால், மணிபுரம் - முத்து+ஊர் = முத்தூர் மூதூர் ஆகும். மூதூர் தமிழில் கொட்டியாரம் என்றும் சிங்களத்தில் கொத்தசாரம் என்றும் அறியப்பட்ட கீழைக்கரையின் பழைய வணிக நகரங்களில் ஒன்று. மகாவம்சத்திலும் இராசராசனின் தஞ்சைப்பெருங்கோவில் கல்வெட்டுகளிலும் கொட்டியாரம் பற்றிய குறிப்புகள் உள்ளன.

## உசாத்துணைகள்


1.கமலநாதன், சா.இ., கமலநாதன், க. (2005). மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், கொழும்பு, சென்னை : குமரன் புத்தக இல்லம்.

2.நடராசா, எஃப்.எக்`ச்.சீ. (1998). மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு : மாவட்ட கலாசார பேரவை.

3. Codrington, H.W. (1994). A Short History of Ceylon, New Delhi – Madras : Asian Educational Services.

4. De Silva (1996). Hugh Nevill Memorial Lecture – Ii: New Light On Vanniys And Their Chieftaincies Based On Folk Historical Tradition As Found In PalmLeaf Mss. In The Hugh Nevill Collection, Special Number : Sesquicentennial Memorial Lectures 1995 – 1996, JRASSL New Series, 41, pp. 153204

5. Robinson, E.J. (1867). Hindu Pastors: A Memorial, London: Wesleyan Conference Office.

6. Stein, B. (1995). ”The New Cambridge History of India: Vijayanagara, Cambridge University Press.


(தொடரும்)

நம்மிடையே உள்ள பாரம்பரிய வேளாண்மை முறைமைகளில் நவீன நுட்பங்களை புகுத்தி, இலங்கையில் ஒரு விவசாயப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான நவீன விவசாயக் கொள்கைகளை உருவாக்கும் சாத்தியங்கள் குறித்து ஆராய்ச்சி முடிவுகளுடன் தர்க்கித்து, மக்களுக்கும், விவசாயத்துறை சார்ந்தவர்களுக்கும் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது ஆராய்ச்சித் துறை மாணவர்களுக்கு உசாத்துணை ஆதாரமாகவும் ‘இலங்கையின் வேளாண்முறைமையில் நவீன நுட்பங்கள்’ என்ற இந்தக்கட்டுரைத்தொடர் அமைகிறது. இலங்கையின் பாரம்பரிய வேளாண்மை முறைமையில் உள்ள சாதக – பாதகங்கள், அதிலுள்ள போதாமைகளை நிவர்த்திக்கும் வகையில் நவீன நுட்பங்களைப் புகுத்துதல், நவீன நுட்பங்களால் உண்டாகக்கூடிய விளைவுகள், இலங்கையில் பசுமைப்புரட்சிக்காக முன்வைக்கப்படவேண்டிய விவசாயக் கொள்கைகள் என்பன பற்றி விரிவாகவும், ஆய்வுத்தளத்திலும் இந்தக்கட்டுரைத்தொடர் விபரிக்கின்றது.


# அரசியல் தலையீடும் விவசாய வீழ்ச்சியும்




● கந்தையா பகீரதன்

கந்தையா பகீரதன் அவர்கள் 2009ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் விவசாய விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்று, அதே பல்கலைக்கழகத்தில் 2011ஆம் ஆண்டு முதல் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார். இவர் 2012ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பிற்கான விவசாய நிறுவகத்தில் தாவர பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் தனது முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். பின்னர் இவரின் ஆராய்ச்சித் திறமைகளுக்காக 2014ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் வழங்கப்படும் பட்டப்பின் ஆராய்ச்சிக்கான புலமைப்பரிசில் மற்றும் அவுஸ்திரேலியன் முதுகலை விருதையும் (IPRS&A PA) பெற்று அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தில் மூலக்கூற்றியல் தாவர பாதுகாப்புப் பிரிவில் கலாநிதிப் பட்டத்தை 2017 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் மற்றும் விவசாய உயிரியல் துறையின் தலைவராகவும் பதவி வகிக்கின்றார். இவர் தனது ஆராய்ச்சி முடிவுகளை 30இற்கும் மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகளில் முன்னிலைப்படுத்தியதோடு மட்டுமல்லாது, உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற சஞ்சிகைகளிலும் தனது ஆராய்ச்சிக் கட்டுரைகளை பிரசுரித்துள்ளார். இவர் எழுதிய ‘அந்நியக்களை பாதீனியம்: அடங்க மறுப்பது ஏன்? அறியாததும் புரியாததும்’ என்ற நூல் வெளிவரவுள்ளது.


மகாவலி அபிவிருத்தி 37 தமிழ் கிராமங்களைக் காட்டும் வரைபடம்.

Image source : globaltamilnews.net

## அறிமுகம்

இலங்கையின் விவசாயம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட ஒரு மிக முக்கியாமான பொருளாதாரத்துறை. அந்நிய சக்திகள் இலங்கையில் காலூன்றுவதற்கு முன்னர், மன்னர் ஆட்சிக்காலத்தில் மன்னர்களின் (இன்றைய காலத்தில் அரசியல்) தலையீடு இலங்கை முழுவதும் உணவுப் புரட்சியை ஏற்படுத்தும் அளவுக்கு விவசாயத்துறையை வளர்த்தது. ஆனால் அந்நியர் ஆட்சிக்குப் பின்னர் இலங்கை ஒரு ஜனநாயக சோசலிசக் குடியரசாக மாறியது முதல் இலங்கையில் காலம் காலமாக நிகழ்ந்துவரும் அரசியல் தலையீடு நாட்டின் விவசாயத் துறையின் வளர்ச்சியிலும் ஒட்டுமொத்த உணவுப் பாதுகாப்பிலும் பாதகமான விளைவுகளையே அதிகம் ஏற்படுத்தி வருகின்றது. வெவ்வேறு அரசியல் கட்சிகள் ஆட்சிப்பீடம் ஏறும்போது விவசாயத்துறை சார்ந்தவர்களின் மீது மேற்கொள்ளப்படும் நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள், நடைமு றைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும்

விவசாயத் திட்டங்களில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள், தகுதியை விட அரசியல் பரிசீலனைகளை அடிப்படையாகக் கொண்ட முடிவுகள், பயனற்ற கொள்கைகள், இலஞ்சம், ஊழல் மற்றும் இனப்பிரச்சினை போன்றன விவசாயத்துறையின் வளர்ச்சி மற்றும் வினைத்திறனைத் தடுக்கின்றன. விவசாயத் துறையில் அரசியல் தலையீடுகளை நிவர்த்தி செய்ய, சுதந்திரமான மற்றும் வெளிப்படையான நிர்வாகக் கட்டமைப்புகளை ஏற்படுத்துவது மிக முக்கியமானது. விவசாய நிறுவனங்களை அரசியலற்றதாக்குதல், தகுதி அடிப்படையிலான நியமனங்களை உறுதி செய்தல், பங்குதாரர்களின் பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் தேவையற்ற அரசியல் செல்வாக்கிலிருந்து துறையைப் பாதுகாக்க சட்டத்தை இயற்றுதல் ஆகியவை அத்தியாவசியமான நடவடிக்கைகளாகும். கூடுதலாக, பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தை வளர்ப்பது, ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் வள ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவித்தல் ஆகியவை இலங்கையின் விவசாயத் துறையில் அரசியல் தலையீட்டின் எதிர்மறையான விளைவுகளை எதிர்த்துப் போராடுவதற்கு முக்கியமானதாகும். இவ் அத்தியாயம் இலங்கையின் விவசாயத்துறையில் என்னென்ன வகையில் அரசியல் தலையீடுகள் ஏற்படுத்தப்படுகிறது மற்றும் இந்த அரசியல் தலையீடுகளால் விவசாயத்துறையில் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கிறது மற்றும் இவ்வரசியல் தலையீட்டை எவ்வாறு இல்லாமல் ஆக்கலாம் என்பதை தர்க்கித்து விரிவாக விளக்க முற்படுகிறது.

### எந்தெந்த விவசாயத் துறையின் பகுதிகளில் அரசியல் தலையீடு நிகழ்கிறது?

விவசாயத் துறையின் மிக முக்கிய ஆதாரங்களாகக் காணப்படுபவை நிலம், நீர் மற்றும் உரப்பாவனை ஆகும். இலங்கையில் பல சகாப்தங்களாகக் காணப்படுகின்ற மற்றும் இன்றுவரை இணக்கப்பாடு எட்டப்படாத இனங்களுக்கிடையிலான பிரச்சினை மேற்கூறிய மூன்று ஆதாரங்களையும் முன்னிறுத்தி அரசியல்வாதிகளின் தேர்தல் பகடைக்காய்களாக அதிகளவில் பயன்படுத்தப்படுவது விவசாயத்துறையின் வீழ்ச்சிக்குப் பிரதானமாக அமைவதோடு காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட கீழ்குறிப்பிடப்படும், சிறுபான்மை மக்கள் விரும்பாதா சீர்திருத்தங்களும் மற்றும் கொள்கை மாற்றங்களும் காரணமாக அமைந்தன.

### நிலச் சீர்திருத்தங்கள்

1970 களில், நிலமற்ற விவசாயிகளுக்கு நிலத்தை மறுபங்கீடு செய்வதை நோக்கமாகக் கொண்ட நிலச் சீர்திருத்தங்களை அரசாங்கம் செயல்படுத்தியது. இருப்பினும், அரசியல் பரிசீலனைகள் பெரும்பாலும் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தியது, விவசாயத் தகுதி அல்லது தேவையை விட அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் நிலம் ஒதுக்கப்பட வழிவகுத்தது. இதன்மூலம் பல விவசாய நிலங்கள் விவசாயம் அல்லாத வேறு தேவைகளுக்கு பயன்படுத்த வழிவகுத்தது. மேலும், 1972 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம் நெல் நிலச் சட்டத்தை நிறைவேற்றியது. இது விவசாயிகளுக்கு நிலம் பகிர்ந்தளிப்பதில் அரசாங்கத்திர்க்கும் அரசியல் வாதிகளுக்கும் உரிமையை வழங்கியது. இந்த செயல் அரசியல் கூட்டாளிகளுக்கு வெகுமதி அளிக்கவும் எதிரிகளைத் தண்டிக்கவும் பயன்படுத்தப்பட்டது.

### விவசாயத்தின் தேசியமயமாக்கல்

1970 களில், தோட்டங்கள் மற்றும் விவசாய வணிகங்கள் உட்பட பெரிய அளவிலான விவசாய நிறுவனங்களை அரசாங்கம் தேசியமயமாக்கியது. எவ்வாறாயினும், இந்த நிறுவனங்களின் முகாமைத்துவம் மற்றும் செயல்பாடுகள் பெரும்பாலும் அரசியல்வாதிகளின் செல்வாக்கின் மூலம் பாதிக்கப்படுகின்றன. இதன் விளைவாக திறமையின்மை மற்றும் தவறான முகாமைத்துவம், முறையற்ற இடமாற்றம், இன மற்றும் மொழி ரீதியான பாகுபாடு ஆகியவை ஏற்பட்டன.

1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசாங்கம் பாரிய நீர்ப்பாசனத் திட்டமான மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இருப்பினும், இத்திட்டம் ஊழல் மற்றும் தவறான நிர்வாகத்தால் பாதிக்கப்பட்டது. மேலும் இது பெரும்பான்மையான விவசாயிகளுக்கு



**இலங்கை அரசின் விவசாயக் கொள்கைகளுக்கு எதிராக விவசாயிகளின் போராட்டம்.**

Image source : www.lankaxpress.com

பயனளிக்கவில்லை. மாறாக மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை அண்டிய பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவியது. இதன் காரணமாக தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கிடையில் பிரிவினைகளையும் மற்றும் உள்நாட்டுப் போர் ஏற்படவும் வழிவகுத்தது. இந்த மிகமுக்கியமான நீர்பாசனத்திட்டத்தை வடக்கு மாகாணத்துக்குள் கொண்டுவருவதற்கு தமிழ்மக்கள் இன்றும் எதிர்ப்பதற்கு இந்த மகாவலி அபிவிருத்தி திட்டத்தினூடான சிங்களக் குடியேற்றங்கள் தந்த கசப்பான அனுபவமே காரணம். ஆனால் இந்த மகாவலி நீர்பாசனத் திட்டம் அரசியல் லாபத்தை விடுத்து வடக்கு மாகாணத்தை அடைந்தால் பல்லாயிரம் ஏக்கர் வடக்கு மாகாண விவசாய நிலங்கள் மூன்று போகமும் நெல்விளைவிக்கும் திறனைப் பெறும் என்பதில் ஐயம் இல்லை. அதுமட்டுமன்றி, இரணைமடுத்திட்டத்தினூடு யாழ்ப்பாணத்துக்கான குடிநீர்ப்பிரச்சினை, நிலத்தடிநீர் பாதுகாப்பு  மற்றும் கடல்நீர் ஊடுருவல் எனப்பல பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

## மானியத் திட்டங்கள்

விவசாயிகளை ஆதரிப்பதற்கும் விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் பல்வேறு அரசாங்கங்கள் மானியத் திட்டங்களை அறிமுகப்படுத்தின. அவற்றில் மிக முக்கியமானது உரமானியம் ஆகும். இருப்பினும், அரசியல் தலையீடுகள் மானியங்களின் தவறான ஒதுக்கீடு மற்றும் தவறான நிர்வாகத்திற்கு வழிவகுத்தது. உதவி தேவைப்படும் சிறு விவசாயிகளை சென்றடையாமல் அரசியல் செல்வாக்கு பெற்ற குழுக்களுக்கு நன்மைகள் பெரும்பாலும் சென்றடைந்தன. இவ்வாறு கொடுக்கப்பட்ட உரமாநியத்தினால் துறைசார் நிபுணர்களின் மேற்பார்வை இன்றி தாரள செயற்கை உரப்பாவனை அதிகரித்து மண்வளம், நீர்வளம் பாதிக்கப்பட்டு விவசாய நிலங்களின் உற்பத்தித் திறன் குறைவடைந்துள்ளது. மற்றும் சூழல் மாசடைதல் அதிகரித்து, மக்கள் இன்று தொற்றா நோயினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். 2009 ஆம் ஆண்டு முதல் மஹிந்த ராஜபக்ஷவின்

அரசாங்கம் வறியவர்களுக்கான சமூக நலத்திட்டமான “சமுர்த்தி” திட்டத்தை தனது அரசியல் ஆதரவாளர்களுக்கு நன்மைகளை செய்வதற்காகவே பயன்படுத்தியது. மேலும் இது பெரும்பான்மையான ஏழை விவசாயிகளை சென்றடையவில்லை.

அரசியல் தலையீடுகள் இலங்கையின் விவசாயத் துறையைச் சேதப்படுத்திய வழிகளுக்கு இவை ஒரு சில எடுத்துக்காட்டுகள். விவசாயத் துறையில் சீர்திருத்தம் செய்வதில் அரசு தீவிரம் காட்டினால், அரசியல் தலையீட்டைக் குறைத்து அனைத்து விவசாயிகளின் நலன்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏற்றுமதிக்கான தடை

வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசியல் செல்வாக்கைப் பெறுவதற்கும் பூகோள அரசியல் இராஜதந்திர உறவுகளை மற்றைய நாடுகளுடன் பேணுவதற்கும் குறைந்த வரியுடன் தாராள விவசாயப் பொருட்களின் இறக்குமதிக் கொள்கையை ஆட்சியாளர்கள் கடைப்பிடிப்பதினால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மிக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு பல விவசாயிகள் விவசாயத்தைக் கைவிட்டுள்ளனர். மேலும் அரசு விவசாயிகளைப் பாதுகாக்க அடிக்கடி விவசாயப் பொருட்களுக்கு இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்து உள்ளூர் விவசாயிகளை ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டாலும் பல சமயங்களில் உண்மையான பொருளாதார அக்கறைகளைக் காட்டிலும் அரசியல் நோக்கமே அதிகமாகக் காணப்படுகிறது. இந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நிலையற்றதாகக் காணப்படுவதோடு உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் அறுவடைக்குத் தயாராக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் இத்தகைய கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதால் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் பரிதவிப்பதையும் நட்டம் அடைவதையும் நாம் காணலாம்.

2021 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் விவசாய பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு பல கட்டுப்பாடுகளை விதித்தது. இந்த கட்டுப்பாடுகள் உள்நாட்டு நுகர்வோரைப் பாதுகாக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை விவசாயிகளுக்குத் தங்கள் பொருட்களை விற்று வாழ்வாதாரத்தை ஈட்டுவதை மிகவும் கடினமாக்கியுள்ளன. 2022 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் புதிய விவசாயக் கொள்கையை அறிவித்தது. அதில் சிறிய அளவிலான விவசாயிகளின் இழப்பில் பெரிய அளவிலான விவசாயிகளுக்கு பயனளிக்கும் பல நடவடிக்கைகள் உள்ளன.

## அடிக்கடி மாறும் விவசாயக் கொள்கைகள்

அரசியல் தலைமைகளில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் மற்றும் கொள்கை முன்னுரிமைகளில் ஏற்படும் மாற்றங்கள் விவசாயத் துறையை பாதித்துள்ளன. ஒவ்வொரு புதிய அரசாங்கமும் அதன் சொந்த கொள்கைகள் மற்றும் திட்டங்களை அடிக்கடி அறிமுகப்படுத்துகிறது. இது நீண்ட கால திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலில் முரண்பாடுகள் மற்றும் இடையூறுகளுக்கு வழிவகுக்கிறது.

சுதந்திரத்திற்குப் பிறகு விவசாயத் துறையில் அரசியல் தலையீடு அதிகமாகக் காணப்பட்டது. உதாரணமாக, சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம் (1960-1965, 1970-1977) விவசாயக் கொள்கைகளை அவரது அரசியல் ஆதரவாளர்களின் நலன்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்தியது. இதனால் விவசாய வளங்களை திறனற்ற முறையில் பயன்படுத்துதல், சிறு விவசாயிகளை புறக்கணித்தல் உள்ளிட்ட பல பிரச்சினைகள் ஏற்பட்டன.
சமீப காலமாக விவசாயத் துறையில் அரசியல் தலையீடுகள் இன்னும் அதிகமாகி வருகின்றன. உதாரணமாக, மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் (2005-2015) விவசாயக் கொள்கைகளை அவரது பெரும்பான்மை இன அரசியல் கூட்டாளிகளின் இருப்பை நிலைத்திருக்கச் செய்யப் பயன்படுத்தியது. இதனால் விவசாய அதிகாரிகளின் ஊழல், விவசாயிகளின் எதிர்ப்பை அடக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன. விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்ட பெருமளவு நிதி அரசியல்வாதிகளினாலும் அவர்களுடன் தொடர்புபட்ட நிர்வாக அதிகாரிகளினாலும் வீணடிக்கப்பட்டன அல்லது ஏப்பமிடப்பட்டன.

**1970 களில், நிலமற்ற விவசாயிகளுக்கு நிலத்தை மறுபங்கீடு செய்வதை நோக்கமாகக் கொண்ட நிலச் சீர்திருத்தங்களை அரசாங்கம் செயல்படுத்தியது. இருப்பினும், அரசியல் பரிசீலனைகள் பெரும்பாலும் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தியது, விவசாயத் தகுதி அல்லது தேவையை விட அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் நிலம் ஒதுக்கப்பட வழிவகுத்தது. இதன்மூலம் பல விவசாய நிலங்கள் விவசாயம் அல்லாத வேறு தேவைகளுக்கு பயன்படுத்த வழிவகுத்தது.**

*2019இல், கோத்தபய ராஜபக்சவின் அரசாங்கம் சூழலைப் பாதுகாப்பதாகவும் நஞ்சற்ற உணவை மக்களுக்கு வழங்குவதாகவும் அதிரடியான சேதன விவசாயக் கொள்கை காரணமாக இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதைத் தடை செய்வதாகவும் எடுத்த முடிவு, விவசாய உற்பத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கிட்டத்தட்ட விவசாய உற்பத்தியில் 50% இழப்பு ஏற்பட்டது. விவசாய ஏற்றுமதி முற்றிலும் தடைப்பட்டது. இதன் காரணமாக நீண்ட காலமாக அரிசி உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ள இலங்கை, 450 மில்லியன் டொலர் பெறுமதியான அரிசியை இறக்குமதி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.*

*தேசிய உணவுக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் உள்நாட்டு விலைகள் சுமார் 50 வீதத்தால் அதிகரித்துள்ள நிலையில், இந்தத் தடையானது நாட்டின் தேயிலைப் பயிர், அதன் முதன்மை ஏற்றுமதி மற்றும் அந்நியச் செலாவணி ஆதாரத்தையும் அழித்தது. இலங்கையின் கிராமப்புறங்களில் முக்கிய வேலைவாய்ப்பை வழங்கும் தேயிலை உற்பத்தியாளர்கள், தேயிலை விளைச்சல் இல்லாததால் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்குவதைத் தவிர்த்துவிட்டதாகவும் விவசாயிகள் பரவலாக விமர்சித்துள்ளனர். தேயிலை உற்பத்தி குறைவினால் மட்டும் 2019 இல் 425 மில்லியன் டொலர்கள் பொருளாதார இழப்பு ஏற்பட்டு, இலங்கையின் பொருளாதாரம் உடைக்கப்பட்டு, இன்று நாம் சோற்றுக்கு மற்ற நாடுகளிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.*

*அரசாங்கத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள், கொள்கை முன்னுரிமைகளில் ஏற்படும் மாற்றங்கள், விவசாயத் திட்டமிடல் மற்றும் நீண்ட காலத் திட்டமிடல் ஆகியன செயல்படுத்தலை சீர்குலைக்கின்றன. மானியங்கள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், விலை நிர்ணய வழிமுறைகள் மற்றும் ஆதரவுத் திட்டங்கள் தொடர்பான கொள்கைகள் பெரும்பாலும் அரசியல் மாற்றங்களுடன் ஏற்ற இறக்கமாக இருப்பதால், விவசாயிகளுக்கு நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவதோடு இத்துறையில் முதலீடு செய்வதையும் தடுக்கிறது.*

### திறமையற்ற அதிகாரிகளின் நியமனம், ஊழல் மற்றும் லஞ்சம்

*விவசாய முக்கிய பதவிகளில் உள்ள அதிகாரிகளை நியமிப்பதில் அரசியல் கருத்துக்கள் பெரும்பாலும் செல்வாக்கு செலுத்துகின்றன. விவசாயக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை திறம்பட நிர்வகிப்பதற்குத் தேவையான நிபுணத்துவம் மற்றும் அனுபவம் இல்லாத நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இந்த நடைமுறை வழிவகுக்கிறது. இதன் விளைவாக, முடிவெடுக்கும் செயல்முறைகள் விவசாய முன்னுரிமைகளை விட அரசியல் நிகழ்ச்சி நிரல்களால் பாதிக்கப்படுகின்றன.*

*விவசாயத் துறையில் ஊழல் மற்றும் லஞ்சத்திற்கு அரசியல் தலையீடு பங்களித்துள்ளது. அரசியல் தலையீடுகள் காரணமாக விவசாய வளங்கள், அனுமதிகள் மற்றும் நன்மைகளை அவர்களது ஆதரவாளர்கள் மற்றும் விசுவாசிகளுக்கு விநியோகிக்கும் வலையமைப்புகளை வளர்த்தெடுத்துள்ளது.*

இந்த நடைமுறை, விவசாயத் துறையில் வளங்கள் மற்றும் வாய்ப்புகளின் நியாயமான விநியோகத்தைத் தடுக்கிறது. அரசியல்வாதிகள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி துறைசார் நிபுணர்களின் செயற்பாடுகளை செய்யவிடாமல் தடுக்கின்றனர் மற்றும் நேர்மையான அதிகாரிகளை வலுக்கட்டாயமாக இடமாற்றத்துக்கு பணிக்கின்றனர். இதன் காரணமாக நிர்வாக அதிகாரிகள் தங்களது வேலைகளைச் சரிவரச் செய்யாமுடியாமல் புலம்புகின்றனர். அரசியல் தலையீடானது விவசாய நிறுவனங்கள், முடிவெடுக்கும் செயல்முறைகளின் சுயாட்சி மற்றும் ஒருமைப்பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும். அரசியல்வாதிகள் விவசாய வாரியங்கள், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மீது செல்வாக்கு செலுத்தலாம். அவர்கள் சுதந்திரமாக செயல்படும் திறனைச் சமரசம் செய்து, சார்பு அடிப்படையிலான முடிவுகளை எடுக்கலாம்.

## ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

அரசியல் தலையீடு, விவசாய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியையும் பாதித்துள்ளது. ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான நிதியுதவி மற்றும் ஆராய்ச்சி திட்டங்களின் ஒதுக்கீடு ஆகியவை அரசியல் கருத்தாய்வுகளால் பாதிக்கப்பட்டுள்ளதோடு புதுமைகளைத் தடுக்கின்றன. மற்றும் மேம்பட்ட விவசாய நுட்பங்களின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கின்றன.

விவசாயத் துறையில், அரசியல் தலையீடுகளின் அளவு மற்றும் தாக்கம் காலப்போக்கில் வெவ்வேறு அரசாங்கங்களில் வேறுபட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். அரசியல் தலையீடுகளை குறைத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துதல் மற்றும் தகுதி அடிப்படையிலான முடிவெடுப்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகள் இலங்கையின் விவசாயத் துறையில் தொடர்ந்து சவால்களாக இருந்து வருகின்றன.

இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கு, விவசாயத் துறையை அரசியலற்றதாக்குதல், அரசியல் சுழற்சிகளில் தொடர்ச்சியுடன் நீண்ட காலக் கொள்கைகளை நிறுவுதல், உட்கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சியில் முதலீடு செய்தல், நில மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் வளங்கள், மானியங்களின் வெளிப்படையான சமமான விநியோகத்தை உறுதி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான அணுகுமுறை தேவைப்படுகிறது. விவசாயத் துறையில் சீர்திருத்தம் செய்வதில் அரசு தீவிரம் காட்டினால், அரசியல் தலையீட்டைக் குறைத்து அனைத்து விவசாயிகளின் நலன்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாய வலுவூட்டலை ஊக்குவித்தல், நிலையான விவசாய நடைமுறைகளை ஊக்குவித்தல், கடன், சந்தைகளுக்கான அணுகலை வழங்குதல் மற்றும் விவசாயக் கல்வி, பயிற்சியை மேம்படுத்துதல் போன்ற முயற்சிகள் இலங்கையில் விவசாயத் துறையை புத்துயிர் பெறுவதற்கும் நீண்டகால உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இன்றியமையாதவையாகும். விவசாயத் துறையில் அரசியல் தலையீட்டுப் பிரச்சனை சிக்கலானது.

அதற்கு எளிதான தீர்வு இல்லை. எவ்வாறாயினும், விவசாயத் துறையானது அதன் முழுத் திறனையும் அடைய வேண்டுமானால் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. இலங்கையில் விவசாயத் துறையில் அரசியல் தலையீடுகளை முறியடிக்க அனைத்து பங்குதாரர்களிடமிருந்தும் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படும். எவ்வாறாயினும், இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், அனைத்து இலங்கையர்களுக்கும் நன்மை பயக்கும் மிகவும் நியாயமான மற்றும் சமமான விவசாயத் துறையை உருவாக்க முடியும்.


**உசாத்துணை**

foreignpolicy.com/2022/03/05/srilankaorganicfarming crisis

government.economictimes.indiatimes.com/blog/opinion srilankaneconomycollapsedduetoflawedagriculture policy/94129009

www.orfonline.org/expertspeak/srilankafoodsecurity impactedbyflawedeconomicpolicies


(தொடரும்)

‘காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்’ என்ற இந்தக் கட்டுரைத் தொடரானது இலங்கையின் வடக்குக் கடற்பகுதி மீன்பிடி சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பரிமாணம் பற்றி ஆராய்கின்றது. இந்து சமுத்திரப் பிராந்திய கடல் அரசியலை விமர்சனப் பார்வையுடன் ஆராய்கின்ற இந்தத் தொடரானது, இலங்கையின் கடல் வளம் எவ்வாறு சர்வதேச சக்திகளால் கூறுபோடப்பட்டு சுரண்டப்படுகின்றது என்பதையும் அதன் பின்னணியிலுள்ள உள்ளூர் சக்திகளை ஆதாரங்களுடன் வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது. மேலும், இலங்கைத் தமிழ் கடல்சார் மக்களின் கடல் தொடர்பான இறைமை, அதில் அவர்கள் சுதந்திரமாக மீன்பிடித்து தமது வாழ்வாதாரத்தை தேடும் உருத்து என்பவை தொடர்பிலும் இந்தக் கட்டுரைத் தொடர் பேசவுள்ளது.




● மரியநாயகம் நியூட்டன்

சமூக ஆய்வாளர் மரியநாயகம் நியூட்டன் அவர்கள் 14 வயதில் ஈழத்திலிருந்து நோர்வே நாட்டுக்கு புலம்பெயர்ந்தவர். The Arctic University of Norway and NORD University Bod, Norway பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்த இவர் இன்று வரை இலங்கையின் அரசியல், சமூக விடயங்கள் சார்ந்து பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். நோர்வே மாநில மற்றும் நகராட்சி நிர்வாகங்களில் பல ஆண்டுகள் பணியாற்றியுள் ளார். தற்போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அரசியல் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றார்.


# கடலட்டை வளர்ப்புக்கு எதிராக நடைபெறும் மக்கள் போராட்டங்கள்

கடலட்டைகள் என்பன ஹோலோதுரைடியா *Holothuroidea* உயிரியல் வகுப்பின் கீழ் உள்ள “விலங்குகளில்” மிகவும் மாறுபட்டதான, சந்தைப் பெறுமதி மிக்கதும் அழகானதுமான உயிரினங்களாகும். இவை சக உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத உயிரிகள். வழமையாக சேற்று மணல் மற்றும் கடல் அறுகுகள் - கடற்புற்கள் விளைந்திருக்கும் கடலடித்தளங்களையே இவை தமது வாழ்விடமாக கொண்டுள்ளன. அதேவேளை, மணல்களும்கற்களும், முக்கியமாக பவளப் பாறைகளுக்கு மத்தியிலும் இவை ஆழ்கடலில் வாழ்கின்றன. இவற்றின் நீளம் சில மில்லி மீட்டரிலிருந்து 2 மீட்டருக்கு மேல் கூட இருக்கும். ஆயிரத்துக்கும் மேலான கடலட்டை வகைகள் உலகளாவிய கடல்களில் காணபடுகின்றன. அனைத்து வண்ணக் கலவைகளிலும் தமது உடலை கொண்டிருக்கும் இவை, வெள்ளை, கறுப்பு, பழுப்பு, சிவப்பு, இளஞ்சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் மற்றும் ஊதா போன்ற நிறங்களில், அழகானவைகளாக உயிருடன் கடலடித் தளத்தில் இருக்கும்போது காண முடியும்.



கிளிநொச்சி மாவட்டத்தில் கடலட்டை வளர்ப்பு

Photo by மார்க் ஜூலியன்

பாரம்பரியமாக கிழக்காசியாவில் பெரும்பான்மையான நாடுகளின் உணவு

கலாசாரத்தில் மிக முக்கியமான பங்கு வகிக்கும் கடலுணவாக கடலட்டைகள் விளங்குகின்றன. கடந்த 50 வருடகாலத்தில், வெப்பமண்டல நாடுகளின் கடற்பரப்பில் இயற்கையாக கடலில் காணப்பட்ட கடலட்டை இனங்கள், அவைகளில் இயற்கையான மறு உற்பத்தி திறன் குறைவாலும், அதிகமாக பிடிக்கப்பட்டத்தினாலும் 80% வீதமானவை அழிவடைந்து விட்டன. 2022 இல் வெளிவந்துள்ள ஆய்வுகளின்படி, மீதமாக உள்ள 20% அட்டைகளும் தொடரும் கட்டுப்படுத்தப்படாத பிடிபாடுகளினால் மிக விரைவில் அழிவைக் கண்டுவிடும் என கூறப்படுகிறது.




கடலட்டை வளர்ப்புக்கு எதிராக போராடும் மக்கள்

Photo by மார்க் ஜூலியன்

கடலட்டை வளம் இந்த நிலைக்கு வந்ததற்கு மிக முக்கியமான காரணிகளில் ஒன்று, தங்குதடையின்றி வளர்ந்து வரும் கடலட்டைக்கான சீனச் சந்தையின் கேள்வி அதிகரிப்புத் தான். (Growing Demand for Sea Cucumbers).

## மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடலட்டைகள்

டிஎன்ஏவை (DNA Deoxyribonucleic Acid) உயிரினங்களுக்கு இடையே மாற்ற முடியும் என்று 1946 இல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். முதல் மரபணு மாற்றப்பட்ட செடி, அண்டிபயோட்டிக் (Antibiotic) எதிர்ப்புக் கொண்ட புகையிலைச் செடி1983 இல் தயாரிக்கப்பட்டது. 1994 இல், டிரான்ஸ்ஜெனிக் Flavr Savr தக்காளி இனம் அமெரிக்காவில் சந்தைப்படுத்த அனுமதிக்கப்பட்டது. மரபணு மாற்றப்பட்ட உணவுகள் உயிரினங்கள் கடந்த 30 வருடங்களாக சந்தையில் பகிரங்கமாக அனுமதிக்கப்பட்டாலும், இவைகளின் கண்டுபிடிப்புகளும் உற்பத்தியும் பல தசாப்தங்களுக்கு முன்பேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

சீனா 1970 களின் நடுப்பகுதியிலேயே உணவுப் பொருட்களை மரபணு மாற்றம் செய்யும் தொழில் நுட்பத்தில் ஆர்வம் காட்டத் தொடங்கியது. பெரும் சனத்தொகையைக் கொண்ட சீனா மக்களுக்கு உணவளிக்க ஏதுவான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல. சீனா அரிசி, சோளம் உட்பட பல தானிய வகைகள், பழ மரங்களை மரபணு மாற்றம் செய்தது. சர்வதேச அளவில் பல நாடுகள் இதைச் செய்திருந்தாலும், மக்களின் பாவனைக்கு இவற்றைச் சந்தையில் விடுவது பற்றி முரண்பாடுகள் - சந்தேகங்கள் இருந்ததன் காரணமாக மக்களின் பாவனைக்கு விடுவதற்குத் தயங்கின. ஆனால், சீனா எந்தவித விவாதமும் இல்லாமல், மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப்பெருட்கள் மற்றும் தானியங்களை தனது சந்தையில் அனுமதித்தது. அதன், முக்கியமான நோக்கம் பசி ,பிணியற்ற சீனாவை உருவாக்குவதே. அது வேறு எந்த நாடுகளிலும் தங்கியிராது உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டுமென்ற தேசிய சிந்தனைப் போக்கும் குறிப்பிடத்தக்க காரணியாகும்.

1990களில் பலவகை கடல் உயிரினங்களையும் சீனா மரபணுவை மாற்றி, சந்தைக்காக உற்பத்தி செய்யும் (Mass Production for the Market) தொழிலில் ஈடுபட்டது. தனது வளர்ந்து வரும் உள் நாட்டுப் பொருளாதாரமும் அதனால் மக்களிடையே வளர்ந்து வரும் கொள்வனவுத் திறன் (Growing Purchasing Power) அதிகரிப்பிற்கும் ஈடுகொடுக்க, உள் நாட்டின்





கடலட்டை பண்ணை
Photo by மார்க் ஜூலியன்

கடலுணவு மற்றும் கடல்சார் பொருட்களின் உற்பத்தியை உயர்த்த மரபணு மாற்றும் தொழில் நுட்பம் அதற்குக் கைகொடுத்தது. இறால் வகைகள், பாலமீன், கொடுவாய், திலாப்பியா இன மீன்கள், நண்டு இனங்கள், மற்றும் கடலட்டை இனங்கள் மரபணு மாற்றம் செய்யப்பட்டன.

மரபணு மாற்றம் என்பது பல நோக்கங்களில் செய்யப்படலாம். நோய் தாக்காமல் இருக்க, சீதோஷ்ண நிலையைத் தாங்கி கொள்ள மற்றும் விரைவான வளர்ச்சி போன்ற நோக்கங்கள் அதில் முக்கியமானவை. ஆரம்பத்தில் சீனாவின் முக்கியமான நோக்கம் விரைவான வளர்ச்சியடையும் மரபணு மாற்றப்பட்ட உயிரிகளை உருவாக்குவதாகும். 2001 இல், சீனாவில் பாரிய அளவிலான மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடலட்டை உற்பத்தி (Mass Production) ஆரம்பிக்கப்பட்டது. சீன மரபணு மாற்றத் தொழில் நுட்பத்தினை முன்னின்று செயற்படுத்திய The Institute of Oceanology, Chinese Academy of Sciences in Qingdao, கடலட்டை இனங்களில் சந்தை மதிப்பில் விலை கூடிய இனமான White Sea Cucumber / வெள்ளை இனக் கடலட்டைகளினை தாம் பெரும் உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக, மரபணு மாற்றம் செய்யும் முறைமையைக் கண்டடைந்ததாக 2015 இல் அறிவித்தது. 2018 இல், குழந்தை ஒன்றை மரபணு மாற்ற முறையில் உருவாக்கியதாக சீன விஞ்ஞானிகள் அறிவித்தனர் (The He Jiankui affair is a Scientific and Bioethical Controversy 2018). இன்று சீனா உலகத்தில் மரபணுத் தொழில் நுட்பத்தில் உச்சத்தில் உள்ள சில நாடுகளில் ஒன்றாகும்.

இவ்வளவு திறமை வாய்ந்த சீனாவின் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடலட்டைகளின் உற்பத்தி 2005 ஆம் ஆண்டில் பாரிய வீழ்ச்சியைச் சந்தித்தது. கட்டற்ற பெரும் உற்பத்தி (Uncontrolled Mass Production) காரணமாக உருவாகிய சுற்றுச் சூழல் மாசடைவும், அட்டை வளர்ப்புக் களங்களின் அடித்தள தாவரங்கள் அழுகி நிலம் சேறாகியமையும் கடலட்டைகள் இனம் தெரியாத நோய்வாய்ப்பட்டு அழுகிப்போகவும் காரணமாகின. இந்த நிலைமை சீனாவின் இலட்சக் கணக்கான ஏக்கர் அட்டை வளர்ப்புக் களங்களில் நிலவியது. கிட்டத்தட்ட சீனாவில் 4555 வீதமான வளர்ப்புக் களங்கள் இதனால் இழுத்து மூடப்பட்டன. தொடர்ச்சியாக ஏற்பட்ட இந்த வீழ்ச்சியைச் சரிக்கட்ட சீனஅரசு தனக்கு நெருக்கமான பொருளாதார அரசியல் நட்பு நாடுகளில் புதிய களங்களைத் தேடியது. வியட்நாம், இந்தோனேசியா, தாய்லாந்து, மடகஸ்கார் வரிசையில் இலங்கையும், சீனத் தொழில் நுட்பத்தில் கடலட்டை வளர்க்கும் நாடுகளில் ஒன்றாகத் தன்னைச் சேர்த்துக் கொண்டது.

## சீன மரபணுக் கடலட்டையால் ஏற்படும் விளைவுகளுக்கு யார் பொறுப்பு?

கடல் அட்டைக் குஞ்சை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் வடக்கில்

யாழ்ப்பாணம்அரியாலை மற்றும் மன்னார் ஓலைத்தொடுவாய் ஆகிய இரு இடங்களில் தற்போது இயங்கி வருகின்றன. இதில் மன்னார்ப் பண்ணை சீனத் தொழில்நுட்ப அனுசரணையுடனான அரச பண்ணையாகவும், அரியாலைப் பண்ணை, குயிலான் என்ற சீனர்களின் பண்ணையாகவும் உள்ளது. குயிலான் பண்ணை 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2022 மார்ச் மாதம் வரையான 5 மாத காலத்திற்குள் மட்டும் 4 இலட்சம் குஞ்சுகளை உற்பத்தி செய்துள்ளமை உறுதிப்படுத்தப்படுகின்றது. இந்தக் குஞ்சுகள் மரபணு மாற்றம் செய்யபட்டவை. இன்றுவரை, இந்த அட்டைகளின் மரபணு பற்றிய பின்னணி அவற்றின் தன்மைகள் பற்றிய எந்தத் தகவலும் இலங்கை அரசினாலோ அல்லது அரச ஆய்வு நிறுவனங்களினாலோ வெளியிடப்படவில்லை.
அதேவேளை, சீனாவின் வளர்ப்பு அட்டைகள் மரபணு மாற்றப்பட்டவை என்பதை சீன ஆராய்ச்சி நிறுவனங்களே பகிரங்கமாக அறிவித்துள்ளன. இது பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல நூறு வெளியிட்டுள்ளன. சீன அட்டைகள் மரபணு மாற்றப்பட்டவை என்கின்ற அடிப்படையில் எழும் கேள்விகள் என்னவென்றால்,

கடலட்டை வளர்ப்பினால் அழிந்து போன சீனாவின் கடற்படுகைகள் மறுபடியும் பாவிக்க முடியாமலேயே உள்ளன. சீனாவின், கடல் வளங்கள் இந்த வகை கடலட்டைகள் அழிவை ஏற்படுத்தின என்பது வெளிப்படையான உண்மை. இலங்கைக் கடலில் கொட்டப்படும் சீன அட்டைகளில் நோய்கள் ஏற்பட்டு, கடலின் இயற்கையில் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு யார் பொறுப்பு?
மரபணு மாற்றப்பட்ட அட்டைகள், இலங்கையின் இயற்கையான அட்டை இனங்களுடன் (Native Species) காலப்போக்கில் கலப்பு ஏற்படும் போது, இயற்கை சார்ந்த இனங்கள் இல்லாது ஒழிக்கப்படும். இந்த வகை இயற்கை அழிவு ஏற்படாமலிருக்க இலங்கையின் அரசு மற்றும் அதன் நிறுவனங்கள் செய்யும் நடவடிக்கைள் என்ன? உயிரியல் பன்மைத்துவத்தை (Biological Diversity) காப்பாற்ற அரசு செய்யும் நடவடிக்கைள் என்ன?
இந்தக் கேள்விகளுக்கு இலங்கையின் கடல்சார் சமூகத்துக்கும், மக்களுக்கும் அரசும் அதன் கட்டமைப்புகளும் பதில் கூறியே ஆகவேண்டும். மரபணு மாற்றப்பட்ட அட்டைகளினால் ஏற்படப்போகும் பாதிப்பு பல தசாப்தங்களுக்குபரம்பரை பரம்பரையாக மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும். கடல் செத்துப்போகும். உயிரற்ற வெறும் நீல நீராக - கருங்கடலாக மாறும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆராய்ச்சியும் அதன் சமூகப் பொறுப்பும்

மேற்படி இரு கேள்விகளையும் இந்தக் கட்டுரையாளர் இலங்கையின் அரச அதிகாரத்துவம் சார்ந்த நிறுவனங்களிடம் வினவியபோது, எந்த விதமான வெளிப்படையான பதிலும் கிடைக்கவில்லை. பல நூறு ஆய்வறிக்கைகள் இலங்கையின் கடல் விவசாயம் பற்றி எழுதப்பட்டிருந்தாலும், கடல் விவசாயத்துக்கு உபயோகப்படுத்தப்படும் மீன் குஞ்சுகள், இறால் குஞ்சுகள், அட்டை இனங்கள் பற்றிய விஞ்ஞான - உயிரியல் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், பல அறிக்கைகளில் சீனத் தொழில் நுட்பங்களை உபயோகித்து கடல் விவசாயம் செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரேயொரு ஆய்வறிக்கை மட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2014 இல் எழுதப்பட்டிருந்தது. அதில் விரிவாக விளக்கமாக கடலட்டையின் உயிரியல் தகவல்கள் பதியப்பட்டிருந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடல் சார்ந்த கல்வி நிறுவனம் ஒன்று உள்ளது. இது வடக்கில் கடல் சார்ந்த ஆய்வுகளை செய்து, கடல் சார்ந்த தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தி,

கடலறிவைப் பெருக்குவதன் ஊடாக, கடற் பொருளாதாரத்தை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிறுவனம் *Sea Cucumbers, Status and culture potential in the Jaffna Lagoon, Sri Lanka* என்ற தலைப்பில் கடலட்டை பற்றி ஆராய்ச்சி செய்து ஆங்கில மொழியிலாலான இந்த ஆராய்ச்சி அறிக்கையை 2014 இல் வெளியிட்டது. அந்த ஆராய்ச்சி அறிக்கை யாழ்ப்பாணக் குடாக் கடலிலும் தீவகத்தில் சில பகுதிகளும் கடலட்டை வளர்ப்பதற்கு உகந்த பிரதேசமாக சொல்லுகிறது. அட்டைப் பண்ணைகள் வைக்க உகந்த வகையில் கடலடித்தளம் எப்படி இருக்க வேண்டும், கடல் நீரின் வெப்பநிலை, உப்பு மற்றும் காரத்தின் அளவு எந்த மட்டத்தில் இருக்க வேண்டும் என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளது. அத்துடன், யாழ்ப்பாண குடாக்கடலில் வசிக்கும் 10 இன அட்டைகளைப் பற்றியும், அவற்றின் உயிரியல் தன்மைகள், மற்றும் அவைகளை எவ்வாறு பிடிப்பது, பதனிடுவது என பல தலைப்புகளில் விரிவாகப் பேசுகிறது அந்த ஆய்வறிக்கை.

ஆனால், சீனா செயற்கையாக உருவாக்கிய அட்டைக் குஞ்சுகளா அல்லது இயற்கையாகவே உருவாகிய குஞ்சுகளா அங்கு வளர்ப்புக்கு உகந்தவை என்பது பற்றி எதுவும் பேசவில்லை. சீனாவினால் செயற்கையாக உருவாக்கப்பட்ட மரபணு மாற்றப்பட்ட சீன அட்டைக்குஞ்சுகளைத் தான் அங்கு வளர்க்கப் போகிறார்கள் என்பதை ஏன் கூறவில்லை? இந்த ஆய்வறிக்கையை எழுதியவருக்குத் தெரிந்த புலமைசார் அறிவின் அடிப்படையில் சீன மரபணு மாற்றம் செய்யப்பட்ட அட்டை குஞ்சுகள் வளர்வதற்கான வெப்பநிலை, உப்பு மற்றும் காரத்தின் அளவுக்கும் - இயற்கையான இலங்கையின் வடகடல் அட்டை வளர்வதற்கான வெப்பநிலை, உப்பு மற்றும் காரத்தின் அளவுக்கும் சில மாறுபாடுகள் உள்ளன. 2010 - 2011 ஆம் ஆண்டு காலத்தில், கற்பிட்டியில் உள்ள சீன அட்டைக் குஞ்சுப் பண்ணையிலிருந்து கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் நாவாந்துறை, புங்குடுதீவு, காரைநகர் பகுதியிலும், கிளிநொச்சி கிராஞ்சியிலும் வளர்க்க முயற்சிக்கப்பட்ட சீன மரபணு மாற்றப்பட்ட அட்டைகள் வெகு விரைவாகவே அழிந்து போயின.

இது நடந்து சில வருடங்களுக்கு பின் 2014 லிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மேற்படி ஆய்வறிக்கையை வெளியிட்டது. அதில், இந்த அழிந்து போன சீன அட்டைகள் பற்றியோ அல்லது அந்த வளர்ப்பு முயற்சி ஏன் தோற்றுப்போனது என்பது பற்றியோ மூச்சு கூட விடவில்லை. யாழ்ப்பாணத்தில் கடல் வள ஆய்வை மேற்கொள்ள உருவாக்கப்பட்டதென கூறப்படும் இந்த நிறுவனம், 2010 - 2011 காலத்தில் சீன அட்டைக் குஞ்சுகளை கொண்டு உருவாக்கப்பட்ட பண்ணைகளினால் எந்த வகைப் பாதிப்பு ஏற்பட்டது என்று ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மீன்பிடி ஆராய்ச்சி நிறுவனம் 2014 இலேயே சரியான முறையில் தகவல்களை வெளியிட்டு, அதை மக்கள் மயப்படுத்தியிருந்தால் இன்று இலங்கையின் வட மேற்குக் கரைகள் எந்தவிதக் கரிசனைகளும் இல்லாமல் அட்டை வளர்ப்பு பண்ணைகளாக மாற்றப்படுவதை ஓரளவுக்கேனும் தடுத்திருக்க முடியும். தடுத்திருக்க முடியா விட்டாலும், அந்த விடயம் மக்களிடையே ஒரு விவாதத்திற்கு வந்திருக்கும். இந்த வளர்ப்பு முறையால் ஏற்படும் நன்மை தீமைகளையாவது அந்த மக்கள் அறிந்திருப்பர். அதன் அடிப்படையில் தம் வாழ்வியலை எதிர்கொள்ள முயன்றிருப்பர்.

## மீனவ சமூகத்துடன் கள ஆய்வு

இலங்கையில் தெற்கில், விவசாயத்திற்கான உரத் தட்டுப்பாட்டில் ஆரம்பித்து எரிபொருள், எரிவாயு மற்றும் உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்ய டொலர் இல்லாமல் ஆட்சியாளர்கள் விழிபிதுங்கிய நேரம் அது. மஹிந்த கோத்தாபயவின் ஆட்சிக்கெதிராக 'அரகலய' என்னும் - மக்கள் எழுச்சிப் போராட்டம் முகிழ் நிலையில் இருந்தது. அரக்கலயபோராட்ட களமாக காலிமுகத்திடல் பரிணமித்துக் கொண்டிருந்தது, போராடும் மக்களுக்கு பயத்தில் ஆட்சி அதிகாரத்துக்கு நெருக்கமான அரசியல்வாதிகளும் மேல்தட்டு வர்க்கமும் வெளியில் தலைகாட்ட முடியாமல் ஒளித்திருக்க தொடங்கிய நிலை. இலங்கையின் அதிகார வர்க்கமும் பாதுகாப்பு படையினர் கூட போராடும் மக்களுக்கு வழிவிட்டு

ஒதுங்கிய நேரம். ஆனால் வடக்கில் எந்தவித அசைவுகளோ மாற்றங்களோ நிகழ்வதை காண முடியவில்லை. தெற்கில் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் அப்படியே வடக்கில் இருந்த போதும், அங்கு வழமை போலவே அரச அதிகாரத்துக்கு நெருக்கமான அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் அதிகார மமதையில் மக்களை அணுகுவதில் எந்தத் தயக்கமும் காட்டவில்லை. ஏனெனில், பல தசாப்தங்களாக அடிபட்டு துன்பப்படும் மக்கள் கூட்டம் தமக்கு எதிராக எழுச்சியடைய மாட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரியும்.

வட இலங்கையில் தீவுப்பகுதியின் மீன்பிடிக் கிராமத்தினருக்கு அரச அலுவலக மண்டபத்திற்கு சமுகமளிக்கும் படி 'ஆணை' வந்தது. கூட்டத்துக்கு சமுகமளிக்க மறுப்பவர்களுக்கு இயந்திர படகுகளுக்கான எரிபொருள் நிறுத்தப்படுமென்று எச்சரிக்கை விடப்பட்டது. கூட்டம் கூடியது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருந்ததாகவும், கொழும்பில் முக்கியமான பேச்சுவார்த்தை ஒன்றில் அவர் இருப்பதனால் அவரால் பங்கு கொள்ள முடியவில்லை என்றும் அமைச்சரிடம் சேவைசெய்யும் ஒருவர் அறிவித்தார். பின்பு, அமைச்சர் சார்பில் தேர்தெடுக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு வாழ்வாதரம் வழங்கப்படப் போவதாக அறிவிக்கப்பட்டது. சில வலைத் துண்டுகளும், மிதவைகளும் சிலருக்கு வழங்கப்பட்டன. சிலருக்கு அட்டை வளர்ப்புப் பட்டி போடுவதற்கான முற்பணமாக, அரச அதிகாரிகளுடன் வந்திருந்த நிறுவனமொன்றின் பிரதிநிதி 200000 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். கூட்டத்தில் சலசலப்புக் கிளம்பியது. காசோலைகளைப் பெற்றுக் கொண்டவர்களுடைய கிராமத்தவர்கள் சிலர் கோபத்துடன் குரலெழுப்பினார்கள்.

**"நான் நினச்ச மாதிரியே நடந்து போச்சு. டேய், அட்டைப் பட்டிய எந்த கடலிலயடா போடப்போறியள்?"**

**"இத வேணாம் எண்டு நாங்கள் எத்தின வருசமா சொல்லுறம். எங்களுக்கு ஒரு நாய்க்கிருக்கிற மரியாத கூட நீங்கள் தரத் தயாரில்லை, என்ன?"**

**"2014 லிலேயே உங்கட மந்திரியிட்ட சொல்லி போட்டம். இந்த அட்டை வளர்ப்பு எங்கட மீன்பிடி தொழிலை பாதிக்குமெண்டு. "**

மீனவர்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்க - பயந்துபோன அதிகாரிகளும் மந்திரியின் சேவகர்களும் கூட்டம் முடிந்து விட்டதாக அறிவித்ததுடன், மண்டபத்தை விட்டு வெளியேறினார்கள். 2022 புரட்டாதி மாத நடுப்பகுதி. மஹிந்த பதவி இறங்கி, ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி, கோத்தபாய நாட்டை விட்டு ஓடி, ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகி, 'அரகலய' ஒடுக்கப்பட்டு, போராடியவர்கள் கைது செய்யப்பட்டார்கள். நாட்டையே குலுக்கிப் போட்ட அரசியல் நிகழ்வுகள் பல நடந்தபோதும். குறுகிய காலத்தில் அரசும் அரச தலைவர்களும் மாறிய போதும் வடக்கே ஒரே நபரே மறுபடியும் மறுபடியும் மீன்பிடி மந்திரியானார்.

2022 ஆரம்பத்திலிருந்து புரட்டாதி மாத காலப் பகுதிக்குள் காளான்கள் போல மன்னாரிலிருந்து தீவுப்பகுதி வரையான கடல் களங்கள் முழுவதும் ஏக்கர் கணக்கான அட்டைப் பண்ணைகள் முளைத்திருந்தன. பெரும் மூலதனத்தைக் கொண்ட வெளிநாட்டு நிறுவனங்கள் அந்த அட்டைப் பண்ணைகளின் உண்மையான உரிமையாளர்களாக இருக்கிறார்கள். ஆனால், கிராமங்களிலோ, இப்பண்ணைகள் ஊரைச் சேர்ந்தவர்களுக்கு உரித்தானதாகக் கூறப்பட்டது. சில மீன்பிடிக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பண்ணைகளை நடத்தும் நிறுவனங்களின் பினாமிகளாக செயற்படுகின்றார்கள் என்பதும் உண்மை. உதாரணமாக, அனலைதீவுக்கு உரித்தான பருத்தித்தீவுக் கடற்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பாரிய அட்டைப் பட்டிகளை தமக்கு உரித்தானதென்று எழுவைதீவில் வாழும் சில வறுமைப்பட்ட மீனவர்கள் கூறுகின்றனர். அவர்கள் உரிமைகோரும் அந்தஅட்டை பட்டிகளை அமைப்பதற்கோ அல்லது அவற்றை நிர்வகிப்பதற்கோ பொருளாதாரப் பலம் அற்றவர்கள்கள் என்பதை வெளிப்படையாக யாவரும் அறிவர். மீன்பிடி அமைச்சரின் நேரடி அனுசரணையுடன், அவருக்கு நெருக்கமானவர்களுக்கான நிறுவனத்தினால் நடத்தப்படும் பட்டிகளுக்கு எழுவைதீவு மீனவர்கள் சிலர் வெறும் பினாமிகள் மட்டுமே! இதை நேரடியான எனது களப் பயணத்தில் அறிந்து கொள்ள முடிந்தது.
இதே போன்றே, அட்டை வளர்ப்பினால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் இப் பிரச்சினை பற்றி இலங்கை மனித உரிமைகள்

ஆணையத்தை அணுகினர். சட்டத்துக்கு முரணாக அமைக்கப்பட்டுள்ள பண்ணைகள் பிடுக்கப்படல் வேன்றுமென்று மனித உரிமைகள் ஆணையம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை அகற்றும்படி மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்ப்பு 27.10.2022 அன்று வெளியிடப்பட்டது. பொறுப்பான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மனித உரிமைகள் ஆணையம் கூறியது போலவே சட்டத்துக்கு விரோதமான பல பட்டிகள் உள்ளதென்றும், அவை அகற்றப்படும் என்றும் ஐப்பசி 20, 2022 அன்று அறிக்கை விட்டார். ஆனால் எதுவும் நடக்கவில்லை. இன்றுவரை இது பற்றி தகுதி வாய்ந்த அதிகாரிகளிடம் வினவியபோது, தமக்கு அப்பட்டிகளின் உரிமையாளர்கள் யார் யார் என்று கண்டு பிடிக்க முடியாமையினால், சட்டத்துக்கு விரோதமான பட்டிகளை அகற்ற முடியாமல் உள்ளதெனவும் கூறினார்கள்.

14.12.2022 அன்று யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஆதாரவானவர்கள் மற்றும் பண்ணை உரிமையாளர்கள் எனத் தம்மை கூறிக்கொண்டோர் ஒரு ஊடகவியலாளர் சந்திப்பை நிகழ்த்தினர். சட்டவிரோதப் பட்டிகளை அகற்றும்படி, மனித உரிமை ஆணையம் கோரிக்கை வைத்தும் கூட டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான மீன்பிடி அமைச்சு இன்றுவரை அகற்றவில்லை. காரணம் என்னவென்று கேள்வி எழுப்பப்பட்டது. “ஆவண ரீதியான அனுமதியைப் பெறுவதற்கான காலதாமதத்தினை தவிர்க்கும் வகையில், தற்காலிக அடிப்படையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், குறித்த தற்காலிக அனுமதிகள் அமைச்சரினால் தான்தோன்றித்தனமாக வழங்கப்படுவதில்லை. கடற்றொழில் சங்கங்கள், நீரியல் திணைக்களம், நாரா, நக்டா, பிரதேச செயலகம் உட்பட்ட சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பரீட்சித்தே, குறித்த இடத்தில் கடலட்டைப் பண்ணைகளை அமைக்கப்படுகின்றன. ” என்று மேற்படி கேள்விகளுக்கு பதில் கூறப்பட்டன. அத்துடன், அந்த ஊடக சந்திப்பில் சட்டத்துக்கு முரணான முறையில் பட்டிகள் கட்டப்பட்டுள்ளன என்பதையும் அமைச்சர் டக்ளசின் ஆதரவாளர்கள் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டனர். ஆகவே, மீன்பிடி அமைச்சருக்கோ அல்லது அவரின் கீழ் உள்ளே நிறுவனங்களுக்கோ தெரியாமல் வட கடலில் எந்தவிதப் பண்ணை நடவடிக்கைகளும் நடைபெறவில்லை.

ஆவணி 2002 இல் நோர்வேயின் துறும்சோ பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்துக்கான ஆய்வொன்று முன்வைக்கப்பட்டது. இலங்கை போன்ற நாடுகளில் காணப்படும் இலஞ்சம், ஊழல், நிலையற்ற ஆட்சிமுறை போன்ற காரணிகளால் சரியான முறையில் நீலப் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பது சவாலாக உள்ளதென அதில் கூறப்பட்டுள்ளது. இலங்கையின் மீன்பிடி அமைச்சு மற்றும் அதன் நிறுவனங்கள் வெளியிட்ட தகவலின்படி, 2022 புரட்டாதி மாதம் நடுப்பகுதிவரை உருவாக்கப்பட்ட அல்லது பண்ணைகள் ஆரம்பிப்பதற்காக அளந்து விடப்பட்ட கடற்பரப்பின் தொகை வருமாறு:

இலங்கையிலேயே வடக்கில் மட்டும் பெரும் கடலட்டைப் பண்ணைகள் தற்போதுவரை (13.11.2022) உத்தியோக பூர்வமாக 616 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளன. வடக்கின் 4 கடல் மாவட்டங்களில் முல்லைத்தீவு தவிர்ந்த ஏனைய 3 மாவட்டங்களும் கடல் அட்டை வளர்ப்பிற்கு உகந்த மாவட்டங்கள் என கண்டுகொள்ளப் பட்டதனால் தாராளமாகப் பண்ணைகள் வழங்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இதுவரையில் 355 பண்ணைகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு, 265 கடல் அட்டைப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவற்றினைவிட மேலும் 209 பண்ணைகளிற்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது குடாநாட்டில் உள்ள 265 பண்ணைகளில் (அதாவது அரச நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்டவை) மிக அதிகமாக வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 118 பண்ணைகள் உள்ளன. இந்த 118 பண்ணைகளும் 250 ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 273 கடல் அட்டைப் பண்ணைகள் உள்ளதோடு, 200 பண்ணைகள் அமைப்பதற்கான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் தற்போது 79 கடல் அட்டைப் பண்ணைகள் உள்ளன. இதற்கு மேலாக, அந்தோணியார்புரம்

கடற்பகுதியில் 80 பண்ணைக்கான கோரிக்கையும், இலுப்பைக்கடவையில் 80 பண்ணைகளும், விடத்தல்தீவில் 150 பண்ணைகளும், அமைப்பதற்கான அனுமதி கள் மற்றும் தேவன்பிட்டியில் 54 பண்ணைகளுக்கான அனுமதியும் கோரப்படுகின்றன. இந்த தரவுகளில் “அனுமதி கோரப்பட்டுள்ளது” என்று குறிப்பிடப்படும் பண்ணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்பது இங்கு கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

தீவுப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பெரும்பாலான அட்டைப் பண்ணைகளைப் பார்ப்பதற்கும்,அதனால் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்திப்பதற்கும் கடந்த வருடத்தில் (2022) மூன்றாவது முறையாக புரட்டாதி மாதத்தில் எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்தக் கள ஆய்வில் சேர்த்த தகவல்களும், கடல் களத்தில் அரசும் அவர்களுடன் சேர்ந்து நிற்கும் சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்களின் செயற்பாடுகளும் மனதை நொருக்குவதாக இருந்தன. இந்த அடாவடித்தனங்களுக்கு எதிராக மக்கள் திரட்சி கொள்வதையும் நேரடியாக காணக் கிடைத்தது கொஞ்சம் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் அளித்தது.

## எனது களக் குறிப்பிலிருந்து சில வரிகள்

ஆரம்பத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுந்த கடலட்டை வளர்ப்புக்கு எதிரான மக்கள் போராட்டங்கள், செப்ரெம்பர் நடுப்பகுதியில் சற்று வலுவடைந்தன. மீன்பிடி அமைச்சரின் அரசியல் வரலாறு, மற்றும் அவரின் கட்சி அமைப்பு, இலங்கை அரசின் படைகளுடன் சேர்ந்து செய்த படுபாதகச் செயல்களை மக்கள் இன்றும் மறந்து போகவில்லை. அந்தப் படுபாதகக் கொடுமைகள் இன்றும் மக்களின் மனங்களில் இரத்தம் வடியும் மனக்காயங்களாக - பயத்தினை உருவாக்கும் நினைவுகளாகப் பதிந்துள்ளன. மேற்கூறப்பட்ட அமைச்சரின் நினைவுகளும் - இன்றுள்ள அவரின் அதிகாரப் போக்கும் மக்களை மௌனம் காக்கச் செய்திருந்தாலும், தெற்கில் நடந்து முடிந்த அரகலய போராட்டத்தினால் ஜனாதிபதி கோத்தாபயவை தேசத்தை விட்டு ஓட வைத்ததானது, சனங்களுக்கு எதிர்ப்புக் குரலை எழுப்பும் துணிவைக் கொடுத்தது. அதேவேளை, அமைச்சரும் அவரது சகபாடிகளும், அதிகாரிகளும் சேர்ந்து மக்கள் போராட்டங்கள் மேலெழுந்து விடாது தவிர்க்க பல வழிகளிலும் முயன்றனர். தனியார் நிறுவங்களின் பெரும்தொகை பணம் ஊர்களில் இறைக்கப்பட்டு, மீனவ சமூகம் பிளவுபடுத்தப்பட்டது. நாவந்துறை, பாஷையூர், கரையூர்/குருநகர் கிராமங்களின் மக்கள் ஒற்றுமைக்கு பெயர் போனவர்கள். ஊர் நலனுக்காக சேர்ந்து நிற்கும் வரலாறு கொண்டவர்கள். அந்த கிராமங்களில்கூட மக்கள் பிளவடைய வைக்கப்பட்டார்கள்.

பாரம்பரியமாகச் சிறகுவலை, களங்கண்டி மற்றும் இறால் கூடு வைத்து தொழில் செய்யும் யாழ். குடாக்கடல், அட்டை பண்ணைகளுக்காக தாரை வார்க்கப்பட்டது. பண்ணைப் பாலத்துக்கு கிழக்கு பக்கம் தொடக்கம் கவுதாரி முனை வரையிலான கடல் கூறு போட்டு சீன மூலதனத்தின் பினாமிகளுக்கு கொடுக்கப்பட்டது. போராட்டங்கள் வலுக்கும் நிலைமையைத் தவிர்க்க “பழையபடி” தகவல் தெரிவிப்பு கூட்டங்களை நடத்தினார்கள் அதிகாரிகளும், அமைச்சரின் கட்சியினரும். இரண்டாவது தடவையாக எனக்கு மறுபடியும் கடலட்டை வளர்ப்பு பற்றிய கூட்டத்தில் பங்கு கொள்ள வாய்ப்புக் கிட்டியது.

## அரசு அதிகாரிகள் ஆய்வாளர்களின் கருத்துப்படி

- இன்னும் சில தசாப்தங்களுக்குள் இலங்கையைச் சுற்றியுள்ள கரைகள் சார்ந்த கடற்பிரதேசம் எந்த ஜீவராசியும் வாழ முடியாத பிரதேசம் ஆகிவிடும்.
- ஏற்கனவே வறட்சியும் நன்னீர்த் தட்டுப்பாடும் காணப்படும் கரையோர மீன்பிடிக் கிராமங்கள் மனிதர் வாழ்வதற்கு தகுதியற்ற இடங்களாக போய்விடும்.
- வெப்ப அதிகரிப்பு காரணமாக புல் பூண்டு கூட முளைக்காத பூமியாகி விடும், கடல் சார்ந்த நிலம்.
- இதை எந்தவிதத்திலும் தடுக்க முடியாது. காரணம் தற்போது நிலவும் காலநிலை மாற்றமும் - புவி வெப்பமடைதலும்.
- ஆகவே, இப்போதிருந்தே கடலை எந்த வகையில் எதிர்காலத்துக்கு உகந்ததாக நாம் பாவிக்க வேண்டும் என்பதை அனைவரும்

- சிந்தியுங்கள். இப்போது உலக நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்ற நீலப் பொருளாதாரமே உங்களுக்கான எதிர்காலம்.
- இனி வரும் காலங்களில் ஒவ்வொருவரும் தனித்தனிப் படகுகள் வைத்து மீன் பிடிக்க முடியாது. அதற்கான மீனும் கடலில் இருக்கப்போவதில்லை. ஆகையால், இப்போது அரசாங்கம் முன்னெடுக்கும் அட்டை வளர்ப்பு திட்டம், பாசி வளர்ப்புத் திட்டம், மீன் வளர்ப்புத் திட்டங்கள் போன்றவற்றில் நீங்கள் இணைந்து கொள்வதே எல்லோருக்கும் நன்மை பயக்கும். உங்கள் அனைவருக்கும் ஆளுக்கு ஒரு துண்டாகக் கடலைப் பிரித்து தர முடியாது. இலாபகரமாக நீலப் பொருளாதாரம் இருக்க வேண்டுமெனில், பாரிய மூலதனங்கள் உள்ள நிறுவனங்களே இந்தக் கடல் விவசாயத்தைச் செய்ய முடியும். நீங்கள் கூலியாளர்கள், மற்றும் அந்த நிறுவனங்களுக்கு உட்பட்ட தொழிலாளர்களாகவும், உங்களை இணைத்துக் கொள்வதன் மூலமே உங்கள் பொருளாதாரத்தையும் அன்றாட ஜீவனோபாயத்தையும் கவனித்துக் கொள்ள முடியும். உங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகத் தான் மிக முக்கியமான கரிசனையுடன் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறோம்.
- பாசி வளர்ப்பும், அட்டை வளர்ப்பும் உங்கள் பிரதேசத்தில் நன்றாகச் செய்ய முடியும். ஆனால், தொடர்ச்சியான பாரம்பரிய மீன்பிடி முறை என்பது எந்த வித லாபத்தையும் அரசுக்கோ அல்லது சமூகத்துக்கோ தரப்போவதில்லை.
- 
- இன்றுள்ள உலகப் பொருளாதார நிலையில் பாரிய அமெரிக்க டொலர் வருமானத்தை தரவல்லது இந்தக் கடல் விவசாயம் மட்டும்தான்.
- உங்களுடைய தனிப்பட்ட நலன்களை விட, தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு இந்தக் கடல் வளங்களைப் பயன்படுத்துவதே நமது அரசினதும், அமைச்சர் அவர்களினதும் முக்கிய நோக்கமாகும்.

ஆகவே, தேவையற்ற முரண்பாடுகள் வன்முறைகளைத் தவிர்த்து, அனுமதியுடன் உங்கள் பிரதேசங்களில் கடல் விவசாயம் செய்பவர்களுக்கு ஆதரவு வழங்குமாறு வலியுறுத்துகிறோம். எதிர்ப்பவர்களுக்கும், போராட்டங்கள் என்ற பெயரில் சமூக அனர்த்தங்களை ஏற்படுத்த முயற்சி செய்பவர்களுக்கும் சட்டத்தின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு முன்பாக, சமுர்த்தி மற்றும் மீனவர்களுக்கான மானியக் கொடுப்பனவுகள், எரிபொருள் போன்ற கொடுப்பனவுகள் நிறுத்தப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

கூட்டத்திற்கு வந்திருந்த மீனவர்களுக்கு ஏதோ உலக மகா தத்துவத்தை போதித்த திருப்தியுடன் அதிகாரிகளும் கடலியல் விஞ்ஞானிகளும் அமர்ந்திருக்க, உணர்வு தெறிக்கும் மக்களின் வசனங்கள் வளாக மண்டபத்தை அதிர வைத்தன.

***“எல்லாத்தையும் அழிச்சு போட்டியள். இப்ப, இந்தக் கரைதான் கிடந்தது. இதுக்கும் நீங்க வேலி போட்டா. நாங்க எங்க தொழில் செய்கிறது ?”***

***“நாங்க பரம்பரை பரம்பரையாக பாதுகாத்த கரை இது. இப்போ, எங்களை இந்தக் கரையில கால் வைக்கக் கூடாதெண்டு சட்டம் போட நீங்க யாரு ?”***

***“எவனட்டையும் நாங்க கையேந்தி சீவிச்சதாக சரித்திரமே இல்லை. இப்ப, எங்களை இந்த கொம்பனிகாரங்களிட்ட கையேந்தச் சொல்லிறீங்களோ? ஒரு மணித்தியாலம் மினக்கெட்டால் கடலாச்சி ஆயிரம் ஆயிரமாய் அள்ளிக் கொட்டுவாள். அதை விட்டுப் போட்டு, ஆயிரம் ரூபா நாளாந்தக் கூலிக்கு எங்களை மாரடிக்க சொல்லிறியளே?”***

***“எங்கட அடிமடியில கை வச்சுப் போட்டியள். நாங்கள் சும்மா விடமாட்டம்.”***

யாருக்கு எதிராக, யாரால் மேற்படி எதிர்வினை வசனங்கள் மண்டாக்களாகப் பாய்ந்தன என்பதை மேலதிகமாக விளக்க தேவையில்லை. கூட்டம் குழம்பியது. கடலின் பிள்ளைகள் 'கெம்பியெழுந்தால்' யாரால் ஈடு கொடுக்க முடியும்?

இந்தக் கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் 2022 மார்கழி நடுப்பகுதியில், வடக்கின் பல கிராமங்களில் கடல்வள ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட்டங்கள் நடக்கின்றன. கிளிநொச்சி மாவட்டம் கிராஞ்சியில் (14.12.2022) 75 ஆவது நாளாக போராட்டம் நடப்பதாக அறியக் கிடைக்கிறது. தீவகம், அனலைதீவு மக்கள் மூன்று மாதங்களாக பருத்தித் தீவு கடலில் அமைக்கப்பட்டுள்ள 50 ஏக்கர் கடற்பண்ணையை அகற்றும்படி



கோரிக்கை வைத்துப் போராடுகிறார்கள். இந்தக் கோரிக்கைகளை செவிமடுக்காத மீன்பிடி அமைச்சும் அதிகாரிகளும்,150 ஏக்கர் அளவில் மேலும் மூன்று பட்டிகளை அமைக்கும் நடவடிக்கையில் சீன மூலதனத்தின் அடியாட்களுடன் சேர்ந்து ஈடுபட்டுள்ளனர். நாவாந்துறை, குருநகர், புங்குடுதீவு, வேலணை செட்டிப்புலம் மக்கள் தமது கடல் வளத்தையும் - அதன் இயற்கையையும் காவுகேட்கும் மரபணு மாற்றப்பட்ட கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிராகப் போராடுகிறார்கள்.

### மக்களின் கோரிக்கைகளும் அவற்றின் நியாயப்பாடுகளும்

அட்டைப் பட்டிகளை கள கடலில் அமைப்பதனால், மீன்கள் மீன்பிடி பாடுகளுக்கு வருவது தடைப்படுகிறது

மீனினங்கள் இனப்பெருக்கம் செய்ய தமது கடற்களங்களுக்கு வருகை தருவது, பிளாஸ்டிக் வலைகளினால் ஏக்கர் கணக்கான தூரத்துக்கு போடப்பட்டிருக்கும் வேலிகள் தடுக்கின்றன. இதனால், மீன்களின் இயற்கையான உற்பத்தி அளவு பாதிக்கப்படுகிறது.

அட்டைப் பட்டிகளை உருவாக்கப் பாவிக்கப்படும் பிளாஸ்டிக் வலைகள், உலோகக் குழாய்கள் மற்றும் இயற்கை சாராத உபகரணங்கள் கடலை மாசடையை வைக்கின்றன.

மாதக் கணக்கில் / வருடக்கணக்கில் கடலில் கிடக்கும் பிளாஸ்டிக் வலை வேலிகளில் பாசிகள், செழும்புகள் பிடித்து அவை கடலின் இயற்கையான நீரோட்டத்தை திசைதிருப்ப வல்லன. இதனால், நீரோட்டம் திசைமாறும் போது கரைக்கு வரும் நீரோட்டத்துடன் வலம்வரும் மீனினங்கள் வேறு திசைக்கு சென்று விடும். இது, கடலின் உயிரியல் சமநிலையைப் பாதிக்கும். அத்துடன், நீரோட்டம் மறிக்கப்படும் போது அது இன்னும் வலுப்பெறுகிறது. வலு அதிகரித்த கடல் நீரோட்டம் கரைகளில் மண்ணரிப்பை ஏற்படுத்தும். வடக்கு மாகாணத்தில், கரைக்கடல் மற்றும் களக்கடல் சார்ந்து தொழில் செய்பவர்களே பெரும்பான்மையானவர்கள். இவர்கள் சிறு தொழில்களான களங்கண்டி, இறால்கூடு, அடிவலை, முரல்வலை, சிறுவலை வீச்சு, இறால்மடி இழுப்பு, கணவாய் மற்றும் மீன் பறி வைத்தல் போன்ற கடற்தொழில் முறைகளை உபயோகிக்கின்றனர். இந்த தொழில்கள் கரையிலிருந்து அதிகப்படியாக 23 மீற்றர் வரையான ஆழத்தைக் கொண்ட கடலிலேயே செய்யப்படுகிறன. இத்தொழில்கள் செய்யும் களக் கடலை ஆக்கிரமித்து ஏக்கர் கணக்கான கடல் நிலத்தில் கடலட்டை வளர்க்கும் பட்டிகள் கட்டப்படும்போது, மக்கள் எங்கே போய் தங்கள் தொழிலைச் செய்வது? அன்றாட வருமானத்தில் சீவிக்கும் எமது வாழ்வு முறைக்கு தேவையான பொருளாதாரத்தை - பணத்தை யார் கொடுப்பார்? மக்களின் நியாயங்களுக்கும், அவர்களின் கேள்விகளுக்கும், என்னாலோ அல்லது வேறு ஒருவரினாலோ மேலதிகமாக விளக்கவுரையோ - உள்ளடக்க விளக்கமோ கொடுக்க வேண்டிய தேவை இல்லை.

தமது வாழ்க்கையை - வாழ்விடம் சார்ந்த இயற்கையை எவ்வாறு அட்டை வளர்ப்பு பாதிக்கிறது, எவ்வாறு தமது வயிற்றிலடிக்கிறது என விபரிக்கும் நியாயங்கள் அப்பட்டமானவை; சத்தியம் சார்ந்தவை; உண்மையின் வெளிப்பாடு. ஆனால், கடலட்டை வளர்ப்பை நடைமுறை படுத்திவருவதற்காக அரச நிர்வாகமும், மீன்பிடி அமைச்சும், அரசின் கடல்வள ஆய்வாளர்களும் கூறும் காரணங்களும் - நியாயங்களும் எவரின் - எந்த வர்க்கத்தின் நலன் சார்ந்தவை என்பது அம்பலப்படுத்தப்படல் வேண்டும்.

என்னை ஊட்டி வளர்த்து மனிதனாக்கிய - புரதத்தை ஊட்டி என்னை சிந்திக்க வைத்த என் கடல் தாயை கூறு போட்டு அவள் மீது வன்முறை செய்து, அவள் மடியில் சீன மரபணு மாற்றப்பட்ட அந்நியப் பொருளை விதைத்து வரும் அதிகார சக்திகள் கூறும் காரணங்கள் அக்கு வேறு ஆணி வேறாகப் பிடுங்கப்பட வேண்டியவை.

(தொடரும்)

‘இலங்கையில் பௌத்தம்’ என்னும் இந்தத்தொடர் பௌத்தம் பற்றி மானிடவியலாளர்களாலும் சமூகவியலாளர்களாலும், அரசியல் விஞ்ஞானிகளாலும் எழுதப்பட்ட ஆய்வுகள் பற்றி அறிமுகம் செய்வதாக அமைகின்றது. குறிப்பாக 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் பௌத்த சமய சீர்திருத்தவாதம், சமூகம், பண்பாடு, அரசியல், இன உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களில் அரசியல் பௌத்தத்தின் வகிபாகம் என்பன பற்றி ஆய்வாளர்களின் கருத்துக்கள் விரிவாக இந்தத் தொடரில் நோக்கப்படும். கணநாத் ஒபயசேகர, ஸ்டான்லி ஜே. தம்பையா, எச். எல். செனவிரத்தின, கித்சிறிமலல் கொட, சரத் அமுனுகம, ஜயதேவ உயன்கொட, குமாரி ஜயவர்த்தன, லெஸ்லி குணவர்த்தன ஆகிய இலங்கையின் சமூக விஞ்ஞானிகளின் நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் , ஹவ்வார்ட் றிஜின்ஸ், உர்மிலா பட்னிஸ், றிச்சார்ட் கொம்பிரிட்ஜ், யொனதன் ஸ்பென்சர் முதலிய இலங்கையரல்லாத ஆய்வாளர்களின் ஆய்வுகள் சிலவும் இந்தக் கட்டுரைத்தொடரில் விமர்சன நோக்கில் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளது.




**கந்தையா சண்முகலிங்கம்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.


# பத்தினித் தெய்வ வழிபாடும் சிங்கள பௌத்தப் பண்பாடும்

## ஒரு விமர்சன அறிமுகம்

பத்தினி வழிபாடு கேரளத்தில் இருந்து வந்து குடியேறிய மக்களால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தக் குடியேற்றம் 1214 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டது. இந்தக் குடியேறிகள் தற்போதைய வகைப்படுத்தலாக அமையும் மேல் மாகாணம், தென் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் ஆகிய இடங்களில் குடியேறினர். இவர்கள் சிங்கள மொழி பேசுவோராகவும் பௌத்தர்களாகவும் காலப்போக்கில் மாறினர். இவ்வாறாக அவர்கள் பௌத்த - சிங்களப் பண்பாட்டில் தம்மைக் கரைத்துக் கொண்டனர். கேரளத்தில் இருந்து வந்து இலங்கையில் குடியேறிய இன்னொரு பகுதி மக்கள் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பாணமைக்கு வடக்கே உள்ள பகுதிகளில் குடியேறினர். இங்கு வாழ்ந்து வந்த தமிழர்களுடன் கலப்புற்ற



கண்ணகை அம்மன்

Image Source : facebook.com/cheddipalayamkannaki

இந்தக்குடியேறிகள் பத்தினி வழிபாட்டைக் (கண்ணகி வழிபாடு) கிழக்கு மாகாணத்தில் வேரூன்றச் செய்தனர். சிங்களப் பகுதிகளிலும் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தமிழ்ப் பகுதிகளிலும் பரவிய பத்தினி வழிபாட்டு மரபு பற்றி விரிவான ஆய்வு நூல் ஒன்றைப் பேராசிரியர் கணநாத் ஒபயசேகர எழுதியுள்ளார். *The cult of Goddess Pattini* என்னும் இந்நூல்

1984 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலைக்கழகப் பிரசுரமாக வெளிவந்தது. இந்நூல் பற்றிய அறிமுகமாகவும் விமர்சனமாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

## பண்பாட்டு வேர்களைத் தேடுதல்

பத்தினித் தெய்வ வழிபாடு (The Cult of Goddess Pattini) என்ற பெயரில் 629 பக்கங்கள் கொண்ட பெருநூலை மானிடவியலாளர் கணநாத் ஒபயசேகர 1984 ஆம் ஆண்டு வெளியிட்டார். அந்நூல் சிக்காகோ பல்கலைக்கழக வெளியீடாக அமைந்தது. அவ்வேளை அவர் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் மானிடவியல் துறையின் தலைவராக இருந்தார். இலங்கையின் மேற்கு, தெற்கு, மத்திய மாகாணங்களில் சிங்களவர் மத்தியிலும், கிழக்கு மாகாணத் தமிழர்களிடையேயும் பெருவழக்காக இருக்கும் இவ்வழிபாடு பற்றி அவர் விரிவான கள ஆய்வுகளைச் செய்தார். ஆங்கில இலக்கியத்தைச் சிறப்புப் பாடமாகப் படித்துப் பட்டம் பெற்ற கணநாத் ஒபயசேகர மானிடவியல் துறையில் தீவிர அக்கறையோடு ஈடுபடத் தொடங்கினார். இந்நூலின் நூன்முகத்தில் அவர் கூறியிருப்பவை அவரின் புலமை ஆளுமையின் குண இயல்புகளை நன்கு விளங்கிக் கொள்ள உதவக் கூடியன.

“1955 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாக நான் வெளிவந்தேன். பேராதனையில் நான் படித்த காலத்தில் எனது தலைமுறையைச் சேர்ந்த மாணவர்கள் பலரைப் போன்று, எனது தனிநபர் அடையாளம் யாது? சமூக அடையாளம் யாது? என்பன பற்றி அறிந்து கொள்ள ஆவல் கொண்டேன். நான் எனது சொந்த ஊரைவிட்டு சிறுபிள்ளையாக இருந்த காலத்திலேயே வெளியேறி, கொழும்பிலும் பின்னர் கண்டியிலும் வாழ்ந்து வந்தேன். பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் எனது கிராமத்திற்கும் போயிருக்கிறேன். ஆனால் நான் எனது பிறந்த ஊரின் சமூக இருப்பின் (Social Existence) பாகமாக, அதனோடு இணைந்தவனாக, ஒருபோதும் இருக்க முடியவில்லை. மேற்கு, தெற்கு மாகாணங்களின் பெரும்பாலான கிராமங்களைப் போன்றே எனது கிராமமும் உள்வந்த பண்பாடுகளை இணைத்துக் கொள்ளும் செயல்முறையின் (Acculturation) தாக்கத்திற்கு உட்பட்டிருந்தது. மனோரதியத் தேடல் உணர்வால் உந்தப்பட்ட நான் கிராமத்தின் உண்மையான வாழ்வை உள்ளபடி அறிந்து கொள்வதற்காக வார இறுதி நாட்களிலும் பல்கலைக்கழக விடுமுறையின் போதும், வடமத்திய மாகாணத்தின் ஒதுக்குப் புறமான கிராமங்களுக்குப் போய், அங்கு திரிந்து, நாட்டார் பாடல்களையும், கிராமத்துப் புராண ஐதீகக் கதைகளையும் சேகரித்தேன். கிராமப் பண்பாடு பற்றிய தெளிவான புரிதல் நோக்கி நான் பயணிப்பதையும், எனது அந்நியமாதலில் இருந்து நான் விடுதலை பெறலாம் என்பதையும் உணர்ந்தேன். (ஆனால் அந்நியமாதலில் இருந்து விடுதலை பெறுதல் இயலாத, பயனற்ற முயற்சி என்பதை விரைவில் உணர்ந்து கொண்டேன்)”

## பத்தினி வழிபாடு

பத்தினி வழிபாடும் அதனோடு இணைந்த சடங்குகள் தொடர்பாகவும் பல்வேறு மரபுகள் இருந்து வந்தன. அவற்றுள் பிரதானமானவையான ஆறு மரபுகளைத் தெரிந்து கள ஆய்வினை தாம் 1956 ஆம் ஆண்டில் நடத்தியதாக கணநாத் கூறுகிறார். கள ஆய்வுக்காக அவர் தேர்வு செய்த பகுதிகள் கரையோரப்பகுதி (மேற்கு மாகாணமும், தெற்கு மாகாணமும்) சப்பிரகமுவ, மாத்தளை, சீனிகம, உறுபொக்க, இரத்தினபுரி ஆகிய ஆறு பகுதிகளாகும். இந்த இடங்களின் பெயர்களால் அறியப்பட்ட ஆறு மரபுகளின் விரிவான கள ஆய்வு பத்தினி வழிபாடு பற்றிய ஆழமான அறிவைப் பெற்றுக் கொள்ள அவருக்கு உதவியது.


இலங்கையில் பத்தினித் தெய்வத்தின் பிரதான கோவில் நூவன்வெலவில் (சப்பிரகமுவ) நவகமுவ என்ற இடத்தில் உள்ளது. இன்று இந்தக் கோயில் பௌத்த மடாலயம் ஒன்றின் பகுதியாக உள்ளது. கோயிலோடு, பௌத்த மடாலயம் பிற்காலத்தில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். நவகமுவவில் பத்தினித் தெய்வத்திற்குரிய ஆண்டுத் திருவிழா இப்போது வர்த்தக மயப்படுத்தப்பட்ட முறையில் பெருவிழாவாக நடைபெறுகிறது. பத்தினிக் கோயிலின் பூசாரி கப்புரால என அழைக்கப்படுவர். இவ்வழிபாட்டுடன் தொடர்புடைய பிரதான சடங்கு “ஹம்மடுவ” எனப்படும். ”ஹம்” என்றால் கிராமம் என்றும் “மடுவ” என்றால் மண்டபம் என்றும் பொருள். கிராமத்து மண்டபத்தில் மக்கள் கூடி நடத்தும் சடங்குதான் ஹம்மடுவ சடங்கு. இது அறுவடை முடிந்த பின் நடத்தப்படும் அறுவடைச் சடங்கு ஆகும். ஆண்டு தோறும் நடத்தப்படும் ஹம்மடுவ நோய், வரட்சி போன்ற பொதுவான இடர்களில்

இருந்து நீக்கம் பெறவும் நடத்தப்படும். தனிப்பட்ட ஒரு குடும்பம் அல்லது நபரின் நோய், துன்பம் என்பனவற்றின் நீக்கத்திற்காகவும் ஹம்மடுவ நடத்தப்படுவதுண்டு. அச்சடங்கு ஒரு குடும்பத்தோடு அல்லது தனி நபரோடு தொடர்புடையதாயின் ஆண்டுச் சடங்கு போன்று விஸ்தாரமானதாக இல்லாது சுருங்கிய வடிவில் நிகழ்த்தப்படும்.

### கண்டிப் பகுதியில் பத்தினி வழிபாடு

கரையோரப் பகுதிகளிலும், சப்பிரகமுவவிலும் கிராமத்தின் பிரதான தேவதையாகப் பத்தினி போற்றப்படுகிறாள். கண்டிப்பகுதியில், பத்தினி காவல் தெய்வமாக கருதப்படுகிறாள். கண்டி இராச்சியத்தின் அரசுச் சடங்குகளின் பாகமாக நான்கு காவல் தெய்வங்கள் உள்ளன. இவை விஷ்ணு, நாத, ஸ்கந்த (கத்தறகம) பத்தினி என்பனவாகும். இந்நான்கு கடவுளரின் கோயில்களையும் கூட்டாக "ஹத்தற தேவாலய" (நான்கு தேவாலயங்கள்) என அழைப்பர். கண்டியில் பிரதான பத்தினித் தேவாலயம் உள்ளது. இத்தேவாலயத்துடன் சடங்கு முறையில் தொடர்புபட்ட பத்தினித் தேவாலயங்கள் பல கண்டிப் பகுதியில் உள்ளன. இவற்றுள் "ஹங்குரன்ஹெட்ட", மாத்தளையின் "அன்பொக்க" ஆகியன முக்கியம் வாய்ந்தவை. கண்டிப் பகுதியில் பல சிறிய பத்தினித் தேவாலயங்களும் உள்ளன.

கிராமியத் தெய்வம் என்ற நிலையில், கண்டியில் பத்தினித் தெய்வத்தினை பிரதான கிராமத் தெய்வமாகக் கொள்ள முடியாது. கண்டியின் கிராமங்களில் நிகழ்த்தப்படும் வழிபாட்டுச் சடங்கு "கொஹம்ப கங்கரிய" எனப்படும். இச்சடங்கு கூட்டமாகப் பல கிராமியத் தேவதைகளுக்காக நடத்தப்படுகிறது. "கொஹம்பதெய்யோ" என்ற தெய்வம் "யக்கு" எனவும் அழைக்கப்படும். இதனை விட "தொளகதெய்யோ" (பன்னிரண்டு தெய்வங்கள்) என்று அழைக்கப்படும், பன்னிரண்டு தெய்வங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்றின் பெயர் "கிரி அம்மா" (பால்தாய்). கிரி அம்மா தெய்வம் கண்டியில் பத்தினியின் இடத்தை பெறுகிறது. கண்டி அரசுடன் இணைந்த பௌத்த சமயமரபில், பத்தினி புத்த சமயத்தையும் அரசையும் காவல் செய்கின்ற காவல் தெய்வமாக விளங்குகிறது. அங்கு பத்தினி வழிபாடு அரசுசார் சடங்கியலின் பாகமாக உள்ளது. கிரி அம்மா நாட்டார் சமய வழிபாடாக உள்ளது.




The Cult of the Goddess Pattini
by Gananath Obeyesekere

Image Source : www.thriftbooks.com

### கப்புரால

தேவாலயச் சடங்குகளைச் செய்பவர் கப்புரால என அழைக்கப்படுவார். கப்புராலவிற்கும் பௌத்த சமயத் துறவிகளான பிக்குகளிற்கும் இடையில் முக்கியமான வேறுபாடுகள் சில உள்ளன. பௌத்த பிக்கு ஒருவர் ஒருபோதும் ஹம்மடுவ போன்ற தேவதைச் சடங்குகளை நடத்துவதில்லை. அச்சடங்குகளின் போது சமுகமாகி இருப்பதும் இல்லை. கப்புரால சாதாரண பௌத்தர்களில் ஒருவராக இருப்பார். நவகமுவ பத்தினித் தேவாலயம் பௌத்த மடாலயம் ஒன்றுடன் சேர்ந்திருப்பது ஒரு விதிவிலக்கு. பாலத்தோட்ட, கஹட்டதுவ ஆகிய பத்தினித் தேவாலயங்களும் இவ்வாறு பௌத்த மடாலயங்களுடன் இணைந்து காணப்படுகின்றன. கரை நாட்டிலும் சப்பிரகமுவவிலும் கப்புரால,

**இலங்கையில் பத்தினித் தெய்வத்தின் பிரதான கோவில் றூவன்வெலவில் (சப்பிரகமுவ) நவகமுவ என்ற இடத்தில் உள்ளது. இன்று இந்தக் கோயில் பௌத்த மடாலயம் ஒன்றின் பகுதியாக உள்ளது. கோயிலோடு, பௌத்த மடாலயம் பிற்காலத்தில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். நவகமுவவில் பத்தினித் தெய்வத்திற்குரிய ஆண்டுத் திருவிழா இப்போது வர்த்தக மயப்படுத்தப்பட்ட முறையில் பெருவிழாவாக நடைபெறுகிறது.**

தேவாலயங்களின் பூசாரிகளாக உள்ளனர். இவர்கள் இப்பகுதிகளின் மேலாதிக்க சாதியான கொவிகம சாதியைச் சேர்ந்தவர்களாய் இருப்பர். கரையோரப் பகுதிகளின் கராவ, சலாகம கிராமங்களின் கப்புராலாக்கள் கராவ, சலாகம சாதியினராக இருப்பர். பேய், பிசாசு, ஆவிகள் ஆகியவற்றின் பூசாரிகள் கட்டாடிரால எனப்படுவர். கண்டி மாகாணத்தின் ஒதுக்குப் புறமான கிராமங்களில் கப்புரால வேலையைச் செய்பவர்களே, கட்டாடிரால வேலைகளையும் செய்கின்றனர். பத்தினித் தேவாலயப் பூசகர்களாக உள்ள கப்புரால, ஆண்களாகவே உள்ளனர். பெண்கள் பூசகர்களாக இருக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது. அது இப்போது மறைந்து வருகிறது. கப்புரால பூசாரிக் குடும்பங்கள் ஒன்றோடொன்று திருமண உறவுகளால் தொடர்புடையவனவாக உள்ளன. இவ்வேலை பரம்பரைத் தொழிலாக உள்ளது. கப்புரால உருவந்து ஆடுதல், பேயோட்டுதல் ஆகிய சடங்குகளைச் செய்வதில்லை. இவை கட்டாடிராலாக்களின் தொழிலாகும். பத்தினி போன்ற தெய்வங்கள் நல்ல தெய்வங்கள். அவை ஒருவரின் உடலுக்குள் புகுந்து அவரை உருவரச் செய்து ஆடப் பண்ணுவதில்லை. கப்புராலவும் "நல்ல" தெய்வங்களின் பூசகர் ஆதலால் அவர் இப்பணிகளைச் செய்வதில்லை. மத்திய மாகாணங்களின் கிராமப்புறங்களில் மட்டும் கப்புரால, கட்டாடிராலவின் பணிகளையும் ஆற்றுவார். ஆயினும் கண்டி நகரில் உள்ள பத்தினித் தேவாலயம் போன்ற தேவாலயங்களின் பூசாரிகள் கட்டாடிராலவின் பணிகளைச் செய்வதில்லை.

## தூய்மையும் துடக்கும்

பத்தினித் தெய்வம் "தூய்மை"யுடைய தெய்வம். அத் தெய்வத்தின் ஆலயத்தின் பூசாரியான கப்புராலவும் தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். துடக்கை ஏற்படுத்தும் புலால் உணவு, மதுபானம் என்பன விலக்கப்பட்டவை. இந்து சமயத்தின் வழிவரும் "தூய்மை" என்ற கருத்து தேவாலயத்தின் கப்புராலவின் ஒழுக்க விதிகளின் பின்னணியில் உள்ளது. ஆயினும் இன்று இவை இலட்சியங்களே. நடைமுறை வாழ்க்கையில் இவற்றைக் கடைப்பிடிப்பவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையினரே. ஆயினும் "கம்மடுவ" காலத்தில் கப்புராலவும், கிராமத்தவர்களும் தூய்மையைக் கடைப்பிடிக்கின்றனர். பிள்ளைப் பேறு, மரணம் ஆகியன 'கில்லி' எனப்படும் துடக்கை ஏற்படுத்தும். மாதவிலக்கில் உள்ள பெண்களும் துடக்கு உடையவர்கள். கிராமத்தில் மரணம் நிகழ்ந்தமை காரணமாக 'ஹம்மடுவ' சடங்கை துடக்கு நீக்கம் வரை ஒத்திப் போடுவதுண்டு. இது 'சமுதாயம்" (Community) முழுமையும் துடக்குடன் தொடர்புடைய குடும்பத்தோடு பிரிக்க முடியாத பிணைப்பை உடையது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

## 'ஆதுர' - கூட்டு வழிபாட்டுக் குழுவும் நோயாளிகளும்

ஹம்மடுவ சடங்கில் பங்கு பெறும் கிராமத்தவர் ஒவ்வொருவரும் கூட்டு வழிபாட்டுக் குழுவின் (Congregation) உறுப்பினராக விளங்குகிறார். ஹம்மடுவ சடங்கு 'நோயாளிகளை பீடித்த நோய்களையும் தோஷங்களையும் நீக்கும் சடங்கு ஆகும். ஆகையால் அச் சடங்கில் பார்வையாளராக இருப்போரும் நோயாளியாகவே பங்கேற்கின்றனர். கூட்டு வழிபாட்டுக் குழு + நோயாளி என்ற இரண்டு அர்த்தங்களையும் உள்ளடக்கிய கருத்தே 'ஆதுர' என்ற சொல்லால் சுட்டப்படுகிறது. நாட்டார் சமயத்தின் இவ்வுலக (This Worldly) அக்கறைகளை இது எடுத்துக் காட்டுகிறது. பௌத்த சமயத்தின், அப்பால் உலக (Other Worldly) அக்கறைகளில் இருந்து இது வேறுபட்டது. சிங்களக் கிராமிய சமூக வாழ்க்கையில் கப்புரால, பிக்கு ஆகிய இருவரதும் வகிபாகம் வேறுபட்ட இயல்புகளையுடையது.

## சடங்குகளை நடத்தும் நபர்கள்

ஹம்மடுவ சடங்கில் கப்புரால முக்கியமான பங்கினைப் பெறுகிறார். 'பெரவ' சாதியினரான மேளம் அடிப்போர் சடங்கின் போது மேளம் அடிப்பார்கள். 'ரதவ' என்று அழைக்கப்படும் துணி வெளுக்கும் சாதியினர் சடங்கிற்குத் தேவையான சுத்தமான துணிகளை வழங்குவர். "நவண்டன" (ஆசாரி) கப்புகளை வெட்டி நடுவதற்குரிய கத்திகளை வழங்குவார். 'கும்பல்' (குயவர்) குடம், பானை ஆகியவற்றை வழங்குவார். இன்று நவண்டன, கும்பல் என்ற இரு சாதியினரதும் சடங்கியல் முக்கியத்துவம் கிராமங்களில் குறைந்து வருகிறது. கிராமத்தவர்களும் சடங்குகளில் உதவி ஆட்களாகப் பங்குபற்றுவர். 'வட்டாண்டி' என்ற உதவியாளர்கள் கொம்பு முறிப்புச் சடங்கில் (அங்கிலிய) முக்கியமான பங்கேற்பர்.

## நாட்டார் இலக்கியமும் நாட்டார் சமயமும்

ஒரு நாட்டார் சமயத்திற்கு இணையான நாட்டார் இலக்கிய மரபும் இருப்பதுண்டு. சிங்கள சமூகத்தில் பத்தினி வழிபாட்டோடு தொடர்புடைய நாட்டார் இலக்கியம் 35 பாடல் தொகுப்புகள் (பந்திஸ் கொல்முற - *Thirty five song books*) வடிவில் உள்ளது. கப்புரால பூசாரிகள் இப்பாடல் தொகுப்புக்களை நன்கு கற்றவர்களாகவும், அவற்றின் படியான சடங்குகளை நிகழ்த்தும் தொழில்முறை நிபுணத்துவம் மிக்கவர்களாகவும் உள்ளனர்.

கிராமத்து மந்திரவாதிகளுக்கும் பேயோட்டுச் சடங்குகளை நிகழ்த்துபவர்களுக்கும், கப்புராலவிற்கும் உள்ள வித்தியாசத்தை கணநாத் ஒபயசேகர , மக்ஸ்வெபரின் மேற்கோள் ஒன்றை எடுத்துக்கூறி விளக்குகிறார். அம்மேற்கோளில் (பக் 22) உள்ள கருத்துக்களை எளிமைப்படுத்திய மொழிபெயர்ப்பாகக் கீழே தந்துள்ளேன்.

1. மந்திரவாதியும் பூசகரும் பல அம்சங்களில் வேறுபாடு உடையவர்கள்.
2. பூசகர் தொழில்சார் நிபுணத்துவ அறிவை உடையவர்.
3. பூசகரிடம் திட்டவட்டமான தெளிவான கிரியை ஒழுங்கும், கொள்கையும் இருக்கும்.
4. பூசகர் தொழில் முறையான பயிற்சித் தகுதிகளை உடையவராய் இருப்பார்.
5. மந்திரவாதிகள், தீர்க்கதரிசனம் கூறுவோர் போன்றவர்கள் தம்மிடம் உள்ள ஆளுமைக் கவர்ச்சியால் அற்புதங்களை நிகழ்த்தவும் அருள் வாக்குக் கூறவும் வல்லவர்கள்.

சிங்கள பௌத்தர்களால் வழிபடப்படும் நாத, விஷ்ணு, கத்தரகம (ஸ்கந்த) தெய்வங்களோடும் பிற நாட்டார் தெய்வங்களோடும் தொடர்புடைய நாட்டார் இலக்கியங்கள் பல உள்ளன. மேலும் பத்தினி தொடர்பான '35 பாடல் தொகுப்புக்கள்' ஒப்பீட்டளவில் வரையறையான ஒழுங்கமைப்பு உடையவை என அவற்றின் சிறப்பை ஒபயசேகர எடுத்துக் காட்டுகிறார். ஒபய சேகரவின் நூலின் இரண்டாம் பாகம் இப்பாடல் தொகுப்புக்களில் இருந்து பல பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பாகத் தருவதோடு, விரிவான விளக்கங்களையும் தருவதாக உள்ளது. கிழக்கு மாகாணத் தமிழர்களின் கண்ணகி வழிபாட்டோடு



Professor Gananath Obeyesekere

Image Source : island.lk

தொடர்புடைய நாட்டார் இலக்கியங்கள் இரண்டு உள்ளன. அவை (*i*) கண்ணகி வழக்குரை (*ii*) கண்ணகி அம்மன் குளிர்த்திப் பாடல்கள். இவை இரண்டையும் பற்றி விரிவான குறிப்புகளை நூலின் 15 ஆவது அத்தியாயத்தில் நூலாசிரியர் தந்துள்ளார். 'கண்ணகி வழக்குரை" பண்டிதர் வீ.சி.கந்தையா அவர்களால் 1965 ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கணநாத் ஒபயசேகரவின் பெரு நூலைப் பற்றி ஒரு சிறிய அறிமுகமாகவே இக்கட்டுரை அமைகிறது.

பத்தினித் தெய்வ வழிபாட்டோடு தொடர்புடைய சடங்குகள், கதைகள், பாடல்கள் பற்றிய விபரிப்பை 15 அத்தியாயங்களில் 620 இற்கும் மேற்பட்ட பக்கங்களில் எழுத வேண்டுமா, அதன் நடைமுறைப் பயன் என்ன என்று வாசகர் மனதில் ஓர் ஐயம் தோன்றலாம். நாட்டார் சமயம் பற்றிய ஆய்வுகளை இருவகையாகப் பிரிக்கலாம். நிகழ்காலத்தில் ஒரு சமயச் சடங்கு எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது? அது சார்ந்த கதைகள், பாடல்கள் என்ன கூறுகின்றன? என்று எழுதுவதை விவரண முறை ஆய்வு என்பர். முதலாவது வகை ஆய்வு இம்முறையில் அமைவது. இம்முறை விபரிப்பை 'Synchronic study' என்ற கலைச் சொல்லால் மானிடவியலாளர்கள் குறிப்பிடுவர். இன்னொரு வகை ஆய்வு வரலாற்று முறை ஆய்வு ஆகும். இதனை மானிடவியலாளர்கள் 'Diachronic study' என அழைப்பர். கணநாத் ஒபயசேகரவின் ஆய்வு இரண்டாவதான வரலாற்று முறை ஆய்வாகும். அவ்வாய்வு விவரண முறையை உள்ளடக்கியதே. ஆயினும் அங்கு முதன்மை பெற்றிருப்பது வரலாற்று ஆய்வாகும். 12 - 14 ஆம் நூற்றாண்டுகளில் கேரளத்தில் இருந்து வந்த மக்கள் இலங்கையின் மேற்கு மாகாணம், தென்மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், ஆகிய இடங்களில் குடியேறினார்கள். கொழும்பு முதல் கிழக்கு மாகாணத்தில் பாணமை வரையாக உள்ள கடற்கரைப் பகுதியில் இக் குடியேற்றங்கள் நிகழ்ந்தன. இவ்வாறு குடியேறியவர்களால் கொண்டு வரப்பட்ட பண்பாடே பத்தினி வழிபாடு.

கேரளத்தில் இருந்து குடியேறிய இன்னொரு பிரிவினர் பாணமைக்கு வடக்கே உள்ள கிழக்கு மாகாணத்தில் குடியேறினார்கள். இவ்வாறு குடியேறியவர்கள் கண்ணகி வழிபாட்டை மட்டக்களப்புப் பண்பாட்டில் வேரோடச் செய்தனர். இவ்விரண்டு குடியேற்றங்களும் சமாந்தரமாக ஏற்பட்டன. இவற்றிடையே தொடர்புகள் உள்ளன. கணநாத் ஒபயசேகரவின் பெருநூல் பத்தினி வழிபாடு பற்றிய வரலாற்று முறை ஆய்வாகும். இவ்வரலாற்று முறை ஆய்வின் பிரதான விடயம் புராணப் புனைவு உருவாக்கம் (Mythicization) பற்றியதாகும். பத்தினி வழிபாட்டை இலங்கைக்குக் கொண்டு வந்த வீர புருஷனான கஜபாகு மன்னனின் கதை ஒரு புராணப் புனைவுடன் கூடிய கதை. இக்கதையில் மறைந்திருக்கும் வரலாற்றுச் செய்திகள் எவை என ஒபயசேகர ஆராய்கிறார். கஜபாகு பற்றிய புனைவு, குடியேற்றம் பற்றிய புனைவு (Colonization Myth) ஆகும். கேரளத்தில் இருந்து வந்தோர் சிங்களப் பகுதிகளில் குடியேறி சிங்கள பௌத்தப் பண்பாட்டுடன் தம்மை ஒன்றிக் கலத்தல் (Assimilation) என்ற செயல்முறை மூலம் இணைந்தனர். பௌத்த சமய வழிபாட்டு முறைகளுள் பத்தினித் தெய்வ வழிபாடு புகுந்து கொண்டது. கிழக்குக் கரையோரத்தில் குடியேறியோர் தமிழ் அடையாளத்தையும், இந்து என்ற அடையாளத்தையும் உடையவர்களாய் அங்கு கண்ணகி வழிபாட்டைப் பேணிப் போற்றினர். இவ்விரு குடியேற்றங்கள் தொடர்பான புராணப் புனைவுருவாக்கச் செயல்முறையை மானிடவியல் கோட்பாடுகளின் பின்னணியில் ஆராய்வதே ஒபயசேகரவின் நூலின் பிரதான நோக்கமாகும்.

**பிற்குறிப்பு :**

கணநாத் ஒபயசேகர : பிறப்பு 02. 02. 1930 - வயது 93, இலங்கை. அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் மானுடவியல் துறையின் தகைசால் பேராசிரியராக விளங்கும் கணநாத் ஒபேசேகரே, இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்றவர். மானிடவியல், சமூகவியல் ஆகிய கல்வித் துறைகளில் ஈடுபாடு கொண்ட இவர், அத்துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆய்வாளராக விளங்கினார். இவரது Land Tenure In Village Ceylon: A Sociological And Historical Study எனும் ஆய்வு நூல், 1967இல் வெளிவந்தது. இந்நூலைத் தொடர்ந்து இலங்கையின் நாட்டார் சமயம், பௌத்த சமய சீர்திருத்த இயக்கம், வரலாறு, சமயம், பண்பாடு என்பன பற்றிய ஆய்வு நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார்.

**இவரது முக்கியமான சில நூல்கள் :**

**Land Tenure In Village Ceylon : A Sociological And Historical Study, 1967**
**The Cult Of The Goddess Pattini, 1984**
**Buddhism Transformed: Religious Change in Sri Lanka (with Richard Gombrich), 1988**
**Cannibal Talk : The ManEating Myth and Human Sacrifice in the South Seas, 2005**
**Karma and Rebirth, 2005**
**The Doomed King: A Requiem For Sri Vikrama Rajasinha, 2017**
**The Many Faces of the Kandyan Kingdom: 15911765, Lessons for our Time, 2020**

(தொடரும்)

இலங்கை முஸ்லிம்களின் இனத்துவ (ethnic) மூலத்தையும், வரலாற்றையும், இலங்கை முஸ்லிம்கள் எனும் இன அடையாளத்தினுள் கரைந்திருக்கும் பன்முக இன மரபுகளின் கலவையையும் தேடிய பக்கச்சார்போ, புனித நோக்குகளோ அற்ற ஒரு பரந்த அறிவியல்தன்மையுடன் கூடிய ஆய்வாக 'இலங்கை முஸ்லிம்கள் – இனத்துவ மரபும் சமூகவியலும்' என்ற இந்த கட்டுரைத்தொடர் அமைகிறது. குறிப்பாக இலங்கை முஸ்லிம்கள் என்போர் இன மரபு சார்ந்து அரபு மூலத்தையா அல்லது தமிழ் மூலத்தையா தங்கள் இனத் தொடர்ச்சியாகக் கொண்டுள்ளனர், இலங்கை முஸ்லிம்களின் இனத்துவ அடையாளமாக தமிழைக்கொள்ள முடியுமா?, ஒரு சமூகமாக இலங்கை முஸ்லிம்களுக்குள்ளே இருக்கும் பண்பாட்டு வேறுபாடுகள், உள்ளக வேறுபாடுகள் மற்றும் முரண்கள் அவற்றின் சமூகவியல் தன்மை ஆகியவற்றை இந்தத் தொடர் பரந்த ஆய்வுக்குட்படுத்துகிறது.



ஜிஃப்ரி ஹாசன்

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.
சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 'போர்க்குணம் கொண்ட ஆடுகள்', 'அகாலத்தில் கரைந்த நிழல்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.
இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

# இலங்கை போஹ்ராக்கள்

இலங்கை முஸ்லிம்களின் மற்றொரு உப மரபினமாக போஹ்ராக்கள் விளங்குகின்றனர். 'போஹ்ரா' (Bohras) என்ற சொல்லின் பொருள் 'வர்த்தகர்' என ஒரு ஆய்வுத்தகவல் குறிப்பிடுகிறது. அவர்களது சமூக வாழ்வியலுக்கும் இந்தச் சொல்லுக்குமான தொடர்பு உண்மையில் ஆழமானது. இந்த அர்த்தத்தில் பார்த்தால் 'போஹ்ரா' என்பது ஒரு காரணப்பெயராகவே இந்த சமூகத்தினருக்கு சூட்டப்பட்டிருப்பதை அவர்களது உலக வர்த்தகச் செயல்பாடுகளிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. உலகின் பல பாகங்களிலும் சிறப்பான முறையில் வர்த்தகம் மேற்கொள்கின்ற ஒரு சமூகப்பிரிவினராகவே போஹ்ராக்கள் பார்க்கப்படுகின்றனர். குறிப்பாக வட இந்தியாவிலேயே பெருமளவில் அவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.



Bohra Leader Sardar Saifuddin with first Prime Minister DS Senanayake

Image Sorce : roar.media

இந்தியாவின் வர்த்தக சமூகங்கள் இலங்கைக்கு வருகை தரவும், இலங்கையில் தங்கியிருப்பதற்குமான வாய்ப்பை 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய காலனித்துவ அரசு உருவாக்கிக் கொடுத்தது. இந்தச் சந்தர்ப்பம் வடமேற்கு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த போஹ்ராக்களுக்கும் வாய்த்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இலங்கையில் தங்களின் இருப்பை அமைத்துக் கொண்டு இலங்கையின் தேசிய பொருளாதாரத்தில் முக்கியம் வாய்ந்த சக்தியாக அவர்கள் மாறினர். போஹ்ராக்கள் தங்களது இனத்துவ மூலத்தை மேமன்களைப் போலவே குஜராத் வரைக்கும் நீட்டிக்கின்றனர். தங்களின் முன்னோர்கள் குஜராத்திகள் என அவர்கள் நம்புகின்றனர். அவர்களின் வீட்டு மொழியாகவும் குஜராத்திகளின் ஓர் உள்ளூர் மொழியே இருந்து வந்தது. தாவித்நிகபான் எனப்படும் இப்பேச்சு மொழி அவர்களின் நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது.

போஹ்ராக்கள் அவர்களது சமூக ஒழுங்கமைப்பு, அடிப்படைகள் சார்ந்து இரு பிரிவினராகக் கருதப்படுகின்றனர்.

### தாவூதிகள் (Dawoodis)
### சுலைமானிகள் (Sulaimanis)

இதில் தாவூதிகள் எண்ணிக்கையில் குறைவானவர்கள். இலங்கையில் போஹ்ராக்களின் மொத்தக் குடித்தொகையே 2500 பேர்தான் என்று ஒரு ஆய்வுத் தகவல் சொல்கிறது. இலங்கையின் பிரதான நகரங்களில் குறிப்பாக கொழும்பில்தான் இவர்கள் காணப்படுகின்றனர். பம்பலப்பிட்டியில் இவர்கள் செறிந்து வாழ்கின்றனர். போஹ்ராக்கள் கொழும்பில் விசாலமான பெரிய வீடுகளையே தங்கள் வசிப்பிடங்களாக நிர்மாணித்துள்ளனர். அல்லது முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து பெரிய பங்களாக்களை விலைக்கு வாங்கியுள்ளனர் என எம். எம். எம். மஹ்ரூஃப் குறிப்பிடுகிறார். இன்றும்கூட கொழும்பிலுள்ள பெரிய பங்களாக்கள் போஹ்ராக்களுக்குச் சொந்தமானவைதான்.

போஹ்ராக்கள் பெரும்பாலும் பாரிய வர்த்தக நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டனர். அவர்களின் நூற்றாண்டுகால பொருளாதார நடவடிக்கையாக இருந்தது மிக அன்றாடத் தேவையான பொருட்களின் ஏற்றுமதியும் இறக்குமதியுமாகும். அதிலும் குறிப்பாக அடிப்படைத் தேவையான பொருட்கள் ஏற்றுமதியே அவர்களின் பிரதான வர்த்தகமாக இருந்தது. உலக அரிசி ஏற்றுமதி, குதிரைகளுக்கான தீவனம், காகிதாதிகள் வர்த்தகம், தீக்குச்சித் தொழிற்சாலை, தேயிலை - ரப்பர் வர்த்தகம் போன்ற பொருளாதார நடவடிக்கைகளில் அவர்கள் மிகவும் ஈடுபட்டனர். T.A.J. Noorbhai, Moosajees, Akbar Alys, Adamalays, Akbar Bros, Jafferjees போன்ற வர்த்தக நிறுவனங்கள் மூலம் தங்களின் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இந்த வர்த்தக நிறுவனங்கள் இலங்கையின் பெரும் வர்த்தக கட்டமைப்பில் நுழைவதற்கான வாய்ப்புகளை போஹ்ராக்களுக்குத் திறந்துவிட்டன. 1970 - 71 இல், இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை வருவதற்கு முன்பு, இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் பதினொரு போஹ்ரா நிறுவனங்கள் இருந்தன. அவற்றின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை முந்நூறு பேர். இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உத்தியோகபூர்வ கணக்கெடுப்பாளர்களின் பட்டியலில் பின்வரும் உற்பத்திகளுக்கான போஹ்ராக்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர் : தென்னை நார், உள்ளூர் விளைபொருட்கள், தேங்காய் எண்ணெய், கொப்பரை, கொக்கோ, ஏலக்காய், தேங்காய், தேங்காய் துருவல் , கரி, மாசி, சாதிக்காய், மிளகு மற்றும் கிராம்பு. பல போஹ்ரா நிறுவனங்கள் டைரக்டரியின் வணிகப் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளன. கொழும்பு வர்த்தகப் பட்டியலில் போஹ்ராக்களும் நன்கு பிரதிநிதித்துவம் பெற்றனர். 1980 கள் மற்றும் 1990 களில், போஹ்ரா நிறுவனங்கள் உயர்மட்ட சுற்றுலா, மருத்துவ மருந்துகள் விநியோகம், அழகுசாதனப் பொருட்கள் உற்பத்தி மற்றும் சோப்பு, பற்பசை மற்றும் பல் தொடர்பான பொருட்கள், ஐஸ்கிரீம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தயாரிப்புகள் போன்ற துறைகளில் நுழைந்தன.[ii]

இந்தப் பொருளாதார விருத்தியானது போஹ்ராக்களை உயர் கல்வி நோக்கி உந்தியது. அதன் விளைவு, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் இலங்கை முஸ்லிம் சட்டமானிப் பட்டதாரி (LL.B.) போஹ்ரா சமூகத்தைச்

சேர்ந்த ஒருவரே என்கிற தகவலை *Calendar of the University of Ceylon for Sessions* **1955 - 1956** மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

இலங்கையின் போஹ்றாக்களின் பொருளாதார முக்கியத்துவம் எப்போதும் இலங்கை அரசாங்கங்களால் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. உதாரணமாக, 1920 - 1924 இலங்கை சட்ட சபையில், ஈ. ஜி. ஆதமலி இந்திய உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இதேபோன்று 1953 இல் இலங்கை சட்டசபையின் செனட்டுக்கான நியமன உறுப்பினராக போஹ்றா சமூகத்தைச் சேர்ந்த கே. ஆதமலி நியமிக்கப்பட்டார்.

போஹ்றாக்கள் இவ்வாறு பொருளாதாரம், கல்வி, அரசியல் என முக்கியமான தளங்களில் தங்களின் இருப்பைப் பலப்படுத்திக் கொண்டு வந்த அதேநேரம் மதம் சார்ந்த நடவடிக்கைகளிலும் கவனம் எடுத்துக் கொண்டனர். மதம் சார்ந்து போஹ்றாக்கள் இஸ்லாத்தை பின்பற்றுகின்றனர். ஆயினும் இஸ்லாத்தினுள் ஒரு சமய உட்பிரிவாகவே (*Sect*) அவர்கள் பார்க்கப்படுகின்றனர்.
அவர்களின் மதத் தலைவருக்கு அல்லது டாய் எல்முத்லக்கிற்கு (*DaielMutlaq*) முழுமையான ஆன்மீகக் கீழ்ப்படிதலைச் செலுத்துவது அவர்களின் இன்றியமையாத பண்பாக விளங்கியது. இச்சமூகத்தின் ஒரு விசித்திரமான நம்பிக்கை என்னவென்றால், இமாம் எப்போதும் இருக்க வேண்டும், அவரே எப்போதும் '*Dai*' ஐ வைத்திருக்க வேண்டும்; ஆனால் இமாம் ஒதுக்கமாக (*Seclusion*) இருப்பதால், டாய்க்கு மித்தாக் (*Mithaq* - விசுவாசப் பிரமாணம்) உரிமை உண்டு. அத்துடன், மதத்தின் அனைத்து நடைமுறை நோக்கங்கள் சார்ந்து மதத்தின் அதிகாரபூர்வமான விளக்கவுரையாளராகவும், சமூகத் தலைவராகவும் அவரே விளங்குவார் என மஹ்ரூஃப் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் போஹ்றா சமூகத்தினர், 1985 ஆம் ஆண்டில், டாய்எல்முத்லக் ஒருங்கிணைப்பு மசோதாவை நிறைவேற்ற விரும்பியபோது, அவர்கள் மித்தாக்கின் தன்னார்வத் தன்மையை வலியுறுத்தினர். இந்த மசோதா சட்டப்பூர்வமாக அவர்களின் மத மற்றும் சமூக நடவடிக்கைகள் அனைத்தையும் பம்பாயிலுள்ள டாயின் கீழ் கொண்டு வந்திருக்கும். பொதுவாக, கொழும்பிலுள்ள தாவூதி தூதுக்குழுவே அவர்களின் மைய நிர்வாக அமைப்பாகும். இதற்கு



Bohra leader at a tea party at Lakshmigiri with Governor Caldecott

Image Sorce : roar.media

பம்பாயைச் சேர்ந்த ஆமில் (*Amil*) தலைமை தாங்குகிறார். ஆமில் டாயால் நியமிக்கப்படுகிறார். ஜகாத் மற்றும் ஃபித்ரா (நோன்பு கால தர்மங்கள்) உட்பட அனைத்து நிலுவைத் தொகைகளையும் வசூலிக்க ஆமில் பொறுப்பாக உள்ளார். டாய்க்கும் இலங்கை போஹ்றாக்களுக்கும் இடையிலான இணைப்பாக ஆமில் செயற்படுவார். பம்பாயைச் சேர்ந்த போஹ்றா அறிஞர்களால் நடத்தப்படும் மத வகுப்புகளையும் அவரே இங்கு வழிநடத்துகிறார்.[iv]
இலங்கையில் போஹ்றா சமூகமானது அவர்களின் பிரபலமான குடும்பப் பெயர்களாலும் அறிந்துகொள்ளப்படுகிறது. அந்தவகையில் 'ஆதமலி' குடும்பம் பிரபலமானது. பெரும்பாலும் ஆண்களின் பெயருக்குப் பின்னால் ஜீ என்பதைச் சேர்த்துக் கொள்கின்றனர். கரீம் ஜீ, ஜாபர் ஜீ என அழைக்கப்பட்ட ஆண்கள் போஹ்றா சமூகத்தில் காணப்பட்டனர். அவர்களின் பெயரில் உருவான குடும்பங்கள் பிற்காலத்தில் போஹ்றா சமூகத்தில் பிரபலமான குடும்பங்களாக வளர்ந்திருந்தன.

## அடிக்குறிப்பு

**asianimage.co.uk**
**M.M.M. Mahroof The sub communities of the Muslims of Sri Lanka. (Exploring Sri Lankan Muslims: selected writing of MMM. Mahroof, edited by M.L.A. Cader, South Eastern University of Sri Lanka) p. 11**
**W.G. Goonaratne and R.S. Karunaratne, Tenth Parliament of Ceylon. p.725**
**M.M.M. Mahroof The sub communities of the Muslims of Sri Lanka. (Exploring Sri Lankan Muslims: selected writing of MMM. Mahroof, edited by M.L.A. Cader, South Eastern University of Sri Lanka) p. 10**

(தொடரும்)

இந்தியவம்சாவழி தொழிலாளர்களின் இலங்கை வருகை, அவர்களின் பிரஜாவுரிமை போன்ற பல விடயங்கள் தொடர்பேசுப்பொருளாக அமைந்திருக்கின்றன. ஆனால் கோப்பி பயிர்செய்கைக்குப் பின்னரான இந்தியவம்சாவழித் தமிழரின் வாழ்க்கை சூழல் எவ்வாறு அமைந்ததென ஒரு சில ஆய்வுகளே வெளிவந்துள்ளன. கண்டி சீமையிலே2 – சதிகளையும் சூழ்ச்சிகளையும் கடந்த வரலாறு என்ற இந்த வரலாற்றுத்தொடர் அந்த இடைவெளியை நிரப்புவதாக அமைகின்றது. இலங்கையில் கோப்பிப்பயிர்செய்கை முடிவுற்று தேயிலை பயிர்செய்கைக்கான ஆரம்பத்தினை எடுத்துக்கூறுகின்றது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்கள் தேயிலை தோட்டங்களில் பட்ட இன்னல்களையும் இடர்களையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது. கண்டி சீமைக்கு அழைத்துவரப்பட்ட தொழிலாளர்களின் உண்மை நிலையினை வரலாற்றுப் பார்வையினூடாக ஆதாரங்களுடன் எடுத்தியம்புகின்றது. இது வெறுமனே மக்களின் வாழ்வியல் பிரச்சினைசார் விடயங்களை மாத்திரம் தெளிவுப்படுத்தாமல், தொழில்சார், அரசியல், பொருளாதார, சமூகம் சார்ந்த பல்பரிமாண அம்சங்களினை வெளிகொணர்வதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



● இரா. சடகோபன்

இரா. சடகோபன் என்று எழுத்து உலகில் அறியப்பட்ட இராமையா சடகோபன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்பு பட்டதாரி ஆவார். அதன்பின் ஒரு சட்டத்தரணியாக தன்னை உயர்த்திக் கொண்ட இவர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் மூன்று நூல்களுக்குத் தேசிய சாகித்திய விருதுகளையும் பெற்றுள்ளார்.

விஜய் சிறுவர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரான இவர், 'சுகவாழ்வு' சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் ஆவார். இதனைத் தவிர மலையக மக்கள் மேம்பாடு தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். சடகோபன் ஊடகத்துறையில் ஆற்றிய பணிக்காகச் சிறந்த ஊடகவியலாளருக்கான ஜனாதிபதி விருதையும் பெற்றுள்ளார்

# சிறிமாவின் நான்குமுனை அரசியல் சதுரங்கம்



1950 களைத் தொடர்ந்துவந்த ஒன்றரை தசாப்த காலம் இலங்கைத் திருநாட்டை சிங்கள நாடாக மாற்றுவது தொடர்பான முயற்சிகளிலேயே கழிந்தது. அதனால் தமிழ்முஸ்லிம் சிறுபான்மையினர்கள் தமது எதிர்ப்பை தொடர்ந்து வெளிக்காட்டி வந்தனர். இதனால் அவ்வப்போது ரத்தக்களரிகளும் போராட்டங்களும் சத்தியாக்கிரகங்களும் வெடித்த வண்ணமே இருந்தன. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இலங்கையின் முதலாவது பிரதமரான டி . எஸ் . சேனநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்ட இனவாதக் கொள்கை களை அடுத்து வந்த அனைத்து பிரதமர்களும் உள்ளது உள்ளபடியாகவே முன்னெடுத்தனர். 1961 ஆம் ஆண்டு நாடு முற்றிலும் சிங்களமயமாக்கப்படு வதை எதிர்த்து பெடரல்

கட்சி மீண்டும் ஒரு சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தது. அவர்கள் அதற்கும் கொஞ்சம் அப்பால் போய் வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு என தனியான தனித்தமிழ் தபால் சேவை ஒன்றை *14* ஏப்ரல் *1961* ஆம் ஆண்டு ஆரம்பித்தார்கள். உடனடியாக அரசாங்கம் கொதித்தெழுந்து நாடெங்கிலும் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியது. இந்த முயற்சியில் ஈடுபட்ட சகலரையும் கைது செய்ய விசேட பொலிஸ் படை ஒன்று அனுப்பப்பட்டது.

பெடரல் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். நாடெங்கிலும் இன வன்முறைகள் தூண்டி விடப்பட்டன. ஆங்காங்கே தமிழர்கள் ரத்தம் சிந்தி இந்த மண்ணை புனிதப்படுத்தினார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாவதற்கான சகல பின்புலங்களும் தோற்றுவிக்கப்பட்டன. பிரசவிக்கப்பட்ட ஒவ்வொரு தமிழ்க் குழந்தையும் தமிழீழ விடுதலைக்கனவுடன் வளர ஆரம்பித்தது.

தார் பூசப்பட்ட ஒரு இருண்ட காலத்துக்கு ஊடாக இலங்கை வரலாறு ஒரு கருநாகம்போல் ஊர்ந்து சென்றது. *1964*ஆம் ஆண்டு மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டபோது வியூகம் அமைத்து மும்முனைத்தாக்குதலுக்கு தயாரான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை எவ்வாறு முறியடிக்கலாம் என கபட எண்ணங்களுடன் பல்வேறு வழிமுறைகளை யோசித்துப் பார்த்த திருமதி பண்டாரநாயக்கா அம்மையார், ஐக்கிய தேசியக் கட்சியின் மும்முனைத் தாக்குதலுக்கு எதிராக நான்கு பக்கத் தாக்குதலுக்குத் தயாரானார். அதன் பிரகாரம் அவர் முதல் நடவடிக்கையாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற அங்கத்தவர்களுடன் இரகசியமாக பேச்சுவார்த்தைகள் நடத்தி அவர்களுக்குப் பதவியும் பட்டமும் பணமும் தருவதாகத் தன் அரசாங்கத்தை நோக்கிக் கவர்ந்து இழுத்தார். மற்றும் ஒரு கபட நடவடிக்கையாக தனது



**இலங்கை இந்திய காங்கிரஸ் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்கள்**

Image source : www.thinakaran.lk

கட்சி சோசலிச கொள்கைகளின் நட்புறவுக் கட்சி என்று கூறிக்கொண்டு தேர்தலின் போது இலங்கை சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகள் போட்டியிடும் தேர்தல்தொகுதிகளில் தமது கட்சி போட்டியைத் தவிர்த்துக் கொள்ளும் எனவும், அவர்களுக்கு ஆதரவளிக்கும் எனவும் ஒப்பந்தம் ஒன்றை *1964* ஜூன் மாதம் செய்து கொண்டார். அதுமட்டுமன்றி இலங்கை சமசமாஜக் கட்சியை சேர்ந்த கலாநிதி என்.எம் . பெரேரா அவர்களை நிதி அமைச்சராகவும், சோல்மொண்டலி குணவர்த்தனவை பொதுவேலைத் துறை அமைச்சராகவும், அனில் முனசிங்கவை தொலைத் தொடர்பு அமைச்சராகவும் நியமித்து இடதுசாரிக் கட்சிகளைத் தந்திரமாகப் பிளவுபடுத்தினார்.

இந்தத் தேர்தலின்போதும் வழக்கமாகக் கூறுவதைப் போலவே, தான் பிரதமராக வந்ததும் இந்திய வம்சாவளிப் பெருந்தோட்ட தமிழர்களின் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பேன் என்று போலி வாக்குறுதி அளித்து அவர்களின் ஆதரவையும் பெற்றுக்கொண்டார். இதற்கும் அப்பால் சற்றே கீழே இறங்கி வந்து பெடரல் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து உரிய மாற்றங்களை செய்வேன்

என்று உறுதியளித்து வடக்கு - கிழக்கு தமிழரின் ஆதரவையும் பெற்று, வரலாற்றில் என்றுமில்லாதபடி கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைத்தார்.

இலங்கையின் அரசியல் வரலாறு இவ்விதம் ஒரு இருண்ட திசையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கையில் மலையக தமிழ் மக்களின் அரசியல் தொழிற்சங்க அமைப்பிலும் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. 1955 ஆம் ஆண்டு வரை இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற பெயரில் இருந்த, தொண்டமானைத் தலைமையாகக் கொண்டிருந்த இலங்கை இந்திய காங்கிரஸ் காலத்தின் தேவை கருதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்தியாவின் பெயரையும் இந்தியக் கொடியையும் இந்தியத் தேசிய கீதத்தையும் தம் தோள் மீதும் நெஞ்சிலும் சுமந்து கொண்டு 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இலங்கை என்ற இந்த நாட்டுக்குள் ஏன் வாழ வேண்டும், அவர்களை இந்தியாவுக்கே அனுப்பி விட்டால் என்ன? என்ற வன்மையான தொனியில் செயற்பட்டு வந்த, சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை அரசாங்கங்கள் ஓரளவுக்கு தமது நோக்கத்தினைப் பூர்த்தி செய்திருந்தன. எனவே இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் தொடர்ந்தும் இந்திய வம்சாவளி என்ற அடைமொழியை தமக்கு முன் போட்டுக் கொள்ள வேண்டுமா? என்ற கேள்வி அவர்களுக்கு முன் பூதாகரமாக எழுந்து நின்றது. இத்தனை காலமும் அதனை அவர்கள் ஒரு சிலுவையாகத்தான் சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்குப் புலப்படாமலேயே இருந்தது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அமைக்கப்பட்ட பின்னரும் கூட அதற்குள் தலைமைத்துவப் போட்டியும் பல்வேறு குழு அரசியலும் இருந்துகொண்டுதான் இருந்தது. ஏ.அசீஸ் தலைமைத்துவத்தைக் கைப்பற்ற பல முயற்சிகளைச் செய்தார். 1954ஆம் ஆண்டு ஹட்டனில் இடம்பெற்ற பேராளர் மாநாட்டில் தலைமைத்துவத்துக்கான தேர்தல் நடந்த போது ஏ.அசீஸ் வெற்றிபெற்றுத் தலைவரானார். தொண்டமானால் இந்தத் தோல்வியைச் சகித்துக்கொள்ளவோ ஜீரணித்துக்கொள்ளவோ முடியவில்லை. உட்கட்சி அரசியல் முற்றியதன் உச்சகட்டத்தில் 1955 ஆம் ஆண்டு அசீஸ் சங்கத்தில் இருந்து வெளியேறி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தை நிறுவினார். அதன் பின்னரும் கட்சியின் உட்பூசல் முற்றுப்பெறாத நிலையில் கட்சியின் உப தலைவர்களாக இருந்த கே.வெள்ளையன், சி.வி.வேலுப்பிள்ளை ஆகியோரும் விலகிச் சென்றனர். எனினும் இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸின் செல்வாக்கு குறைந்து போய்விடவில்லை. இக்காலத்தில் இச்சங்கத்தில் மொத்தம் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் இருந்துள்ளனர் என்று ஆய்வு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> பிரஜா உரிமை என்ற அடிப்படை மனித உரிமை, ஒரு மனிதனுக்கு ஒரு நாட்டில் இல்லாமல் போனால் அவன் நிலைமை உடலிலிருந்து உயிரை பிரித்து எடுத்துவிட்ட நிலைமை போன்றதுதான். அவனால் ஏனைய பிரஜைகள் போல் தம் வாழ்வை சகஜமாக நடத்திக் கொண்டு போக முடியாது.

இத்தகைய ஒரு பின்னணியில் தான் இலங்கையில் வாழ்கின்ற இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் தொடர்பான நாடற்றவர் நிலையையும் பிரஜா உரிமை தொடர்பான விடயத்தையும் தீர்மானிப்பதற்காக இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை ஆரம்பமானது. ஏற்கனவே 1954 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட நேரு - கொத்தலாவல ஒப்பந்தம் தோல்வி அடைந்திருந்த நிலையில் அதன் விஸ்தரிப்பாகவே இந்தப் பேச்சுவார்த்தை அமைந்தது. ஏற்கனவே இந்த மக்கள் கூட்டத்தினர் வாழ்க்கையின் எல்லா மூலைமுடுக்குகளிலும் முட்டிமோதித் தம் வாழ்க்கை எந்த இலக்குகளை நோக்கி நகர்கின்றது என்பதனைப் புரிந்துகொள்ள முடியாமல் மிகுந்த சோகப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அர்த்தமுள்ள வாழ்க்கை ஒன்று இல்லாமல் போன நிலையில் கால்போன போக்கில் நடந்து கொண்டிருந்தனர். தாய் தந்தையர் தமது பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகுமோ என்று ஒவ்வொரு நாளும் புலம்பிக் கண்ணீர் வடித்தனர். தாம் பெற்ற பிள்ளைகளை மகிழ்ச்சியுடன் பாடசாலைக்கு அனுப்பக்கூட அவர்களால் முடியாமல் இருந்தது. பிள்ளைகள் தாங்கள் பாடசாலைக்குப் போகவேண்டும் என்று அடம்பிடித்தால்



**இலங்கை - இந்திய காங்கிரஸுடன் கே.ஜி.எஸ். நாயர்**

Image Source : www.vaaramanjari.lk

“நீ படிச்சு அரச உத்தியோத்துக்கா போகப்போற” என்று ஓங்கி கன்னத்தில் அறைந்த சம்பவங்களும் மலையக மக்கள் வரலாற்றில் ஆங்காங்கே பதியப்பட்டுத்தான் உள்ளன.

பிரஜா உரிமை என்ற அடிப்படை மனித உரிமை, ஒரு மனிதனுக்கு ஒரு நாட்டில் இல்லாமல் போனால் அவன் நிலைமை உடலிலிருந்து உயிரை பிரித்து எடுத்துவிட்ட நிலைமை போன்றதுதான். அவனால் ஏனைய பிரஜைகள் போல் தம் வாழ்வை சகஜமாக நடத்திக் கொண்டு போக முடியாது. அவனது கால்கள் கூட இந்த மண்ணில் படக்கூடாது என்று தடைவிதித்து விட்ட ஒரு கையறு நிலை. அவர்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்டு விட்டன. கல்வி கற்கும் உரிமை, அரசாங்க உத்தியோகம் பெறும் உரிமை, சொந்தமாகக் காணித் துண்டு ஒன்றை வாங்கும் உரிமை, தமக்கென வீடு ஒன்றை கட்டிக் கொள்ளும் உரிமை, வெளிநாட்டுக்குச் செல்லக் கடவுச் சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் உரிமை, அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்று குழந்தை பெற்றுக் கொள்ளும் உரிமை, தமக்குக் குழந்தை பிறந்துள்ளது என்பதனைப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யும் உரிமை, ஒரு கிராம சேவகரின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை, அரசாங்க அதிபரின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை, உள்ளூராட்சி நிர்வாக அமைப்புக்களின் சேவைகளை பெற்றுக் கொள்ளும் உரிமை, பிரதேச செயலகங்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை என இப்படி மறுக்கப்பட்ட உரிமைகளின் பட்டியல் இன்னும் நீண்டு கொண்டே போகும். இப்போதும்கூட, பிரஜாவுரிமை வழங்கப்பட்ட பின்னரும்கூட, இந்த உரிமைகளில் சில மறுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

அதன் காரணமாக நாம் இப்போதும் இந்த நாட்டில் ஒரு மூன்றாம் தரப் பிரஜைதான் என்ற உணர்வுடன் தான்வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காலனித்துவக் காலத்தின் அடிமைச் சின்னமான ‘லயக்’ காமிராக்களில் நமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வரை நாம் அடிமைத்தனத்தில் இருந்து மீண்டு விட்டோம் என்று கூற முடியாது.

நான் எழுதும் இந்தக் காலத்தின் வரலாறு ஒரு கண்ணீரின் வரலாறாகவும் இருந்துள்ளது என்பதனை மீண்டும் ஒருமுறை கூறி வைக்கிறேன்.

(தொடரும்)

# ஒப்பாரிக் கோச்சியும் நூற்றாண்டுத் துயரும்



சேர் ஜோன் கொத்தலாவல மற்றும் ஜவஹர்லால் நேரு

Image Source : www.alamy.com

ஒரு நாட்டில் ஒரு நல்ல தலைவன் ஆட்சியில் இருந்தால் மட்டுமே அந்த நாடு சீரும் சிறப்பும் பெற்று செழித்து வளரும் என்பதை வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது. ஒரு நல்ல தலைவனை இழந்து ஒரு கொடுங்கோலனின் ஆட்சியில் ஒரு நாடு விழுந்தால் அந்த நாட்டின் மக்கள் எத்தனை கொடுமைகளை அனுபவித்திருப்பார்கள் என்பதற்கும் வரலாற்றிலிருந்து ஆதாரங்களை எடுத்துக்காட்ட முடியும். இந்த வரலாறுகள் எழுதப்படுவதற்கான முக்கியமான காரணமே அவற்றில் இருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் எனக்குத் தெரிய எந்த ஒரு கொடுங்கோன்மைத் தலைவனும் வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு திருந்தி வாழ்ந்ததாக வரலாறு எங்கேயாவது ஒரு குறிப்பைப் பதிவு செய்து இருக்கிறதா என்பதை காணமுடியவில்லை.

**“ ஒவ்வொரு ஐந்து ஆண்டுக்கும் என மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் நாட்டு மக்களை எந்த அளவுக்கு ஆட்டிப்படைக்க முடியுமோ அந்தளவுக்கு ஆட்டிப்படைத்து, அட்டூழியங்கள் பல செய்து, உதைத்து, மிதித்து, குரல்வளையை நசுக்கி, பந்தாடி, நைந்து நாராய்ப் போகுமளவுக்கு நாட்டைக் கொண்டுபோய் நடுத்தெருவில் விட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள்.**

நமது நாடு சுமார் 3 ஏகாதிபத்திய ஆட்சிகளின் கீழ் சுமார் நான்கு நூற்றாண்டு காலமாக அடிமைப்பட்டிருந்தது. நாம் சுதந்திரமான வாழ்க்கையாக சுமார் 75 ஆண்டுகளை மட்டுமே அனுபவித்திருக்கிறோம். ஆனால் ஒரு அர்த்தமுள்ள மகிழ்ச்சிகரமான இனிமையான ஒரு வாழ்க்கையை இந்த நாட்டு மக்கள் அனைவரும் அனுபவித்திருக்கிறார்களா என்று ஒரு கேள்வியை கேட்டால் எத்தனை பேரால் அதனை "ஆம்" என்று ஆமோதிக்க முடியும்? இப்போதும் கூட சிலர் "வெள்ளைக்காரன் ஆட்சி தொடர்ந்தும் இந்த நாட்டில் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்" என்று அங்கலாய்ப்பதைக் காணலாம். ஒவ்வொரு ஐந்து ஆண்டுக்கும் என மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் நாட்டு மக்களை எந்த அளவுக்கு ஆட்டிப்படைக்க முடியுமோ அந்தளவுக்கு ஆட்டிப்படைத்து, அட்டூழியங்கள் பல செய்து, உதைத்து, மிதித்து, குரல்வளையை நசுக்கி, பந்தாடி, நைந்து நாராய்ப் போகுமளவுக்கு நாட்டைக் கொண்டுபோய் நடுத்தெருவில் விட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள். இன்று நாம் நடுத்தெருவில் கூட இல்லை. நாற்றம் பிடித்த குப்பைக் குழிக்குலிருந்து எழுந்து வெளியே வரமுடியாத அளவுக்கு அமிழ்ந்து போய் வீசப்பட்டுக் கிடக்கின்றோம். எல்லோருக்குமே இந்த வாழ்க்கை மிகவும் சலித்துப் போய்விட்டது.

இந்த நாட்டில் உரிமை உள்ள மக்களுக்கே இப்படியானதொரு கதி வந்து வாய்த்தது என்றால், சுதந்திரம் அடைந்த அடுத்த கணத்திலேயே நாடற்றவர்களாகப் போய்விட்ட மலையக மக்களின் கதி என்னவாக இருந்திருக்கும்? 1948 ஆம் ஆண்டு பறிக்கப்பட்ட மலையக மக்களின் பிரஜாவுரிமையை மீண்டும் பெற்றுக்கொள்ள 40 ஆண்டுகள் சென்றன. ஒரு மனிதனின் வாழ்க்கையில் 40 ஆண்டுகள் இல்லாமல் போய்விட்டால் அவன் உயிர் வாழ்ந்து என்ன பிரயோஜனம்? ஆயுட்கால சிறைத் தண்டனை அனுபவித்து விட்டு 60 வயதில் விடுதலை பெறுபவரின் வாழ்க்கையில் என்ன மிச்சம் இருக்கப்போகிறது? அப்படிப்பட்ட வாழ்க்கையை நான்கு தசாப்த காலங்கள் அனுபவித்தவர்கள் மலையக மக்கள். 1948 ஆம் ஆண்டு பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட பின்னர் எத்தனை போராட்டங்கள் சத்தியாக்கிரகங்கள் நடத்தியும் " நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள் உனக்கு விதிக்கப்பட்ட விதி அதுதான் " என்று வாளாவிருந்தார்கள் ஆட்சியில் இருந்தவர்கள்.

அதற்குப் பின்னர் 1954 ஆம் ஆண்டு இந்த நாட்டின் பிரதமராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவல இந்தியப் பிரதமரான ஜவஹர்லால் நேருவுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அந்தப் பேச்சுவார்த்தையின் போது இலங்கையிலிருக்கும் நாடற்றவர்கள் அனைவரையும் இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கொத்தலாவல நேருவிடம் கூறியபோதும், "காலனித்துவ காலத்தில் இந்தியாவிலிருந்து பல்வேறு காரணங்களுக்காக தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் அங்கேயே நிரந்தரமாகக் குடியேறும் எண்ணத்துடன் சென்றவர்களே அன்றி அவர்களுக்கு மீண்டும் தாய்நாட்டுக்குத் திரும்பி வரும் எண்ணம் இருக்கவில்லை, ஆதலினால் அந்தந்த நாடுகளில் அவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டு அங்கேயே வசிப்பதற்கு வகை செய்யவேண்டும் " என்று உறுதியாக மறுத்துவிட்டார். அவர்களுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அந்த அளவில் நின்று போய்விட்டது.

அதற்குப் பின்னர் சுமார் பத்து ஆண்டுகள் வரையில் நாடற்றவர்கள் என்று நாமகரணம் சூட்டப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழ் மக்களை இந்தியாவிற்கு அனுப்பிவிட வேண்டும் என்ற இலங்கை அரசாங்கத்தின் எண்ணம் நிறைவேறவில்லை. அவர்கள் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு மரணிக்கும் வரை மௌனமாக இருந்தனர். அவர்கள் எதிர் பார்த்தபடியே 1964 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு மறைந்து, லால் பகதூர் சாஸ்திரி பிரதமராக பதவியேற்ற கையுடன் அவசர அவசரமாக மற்றுமொரு பேச்சுவார்த்தையை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் ஏற்பாடு செய்தார். ஜவஹர்லால் நேரு அளவுக்கு வலிமையான ராஜதந்திரக் கொள்கைகளைக் கொண்டிராத லால் பகதூர் சாஸ்திரி, மிக விரைவிலேயே ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் வலைவீச்சில் சிக்கிக்கொண்டார். அதன் பிரகாரம் இரண்டு மூன்று சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அதன் பின்னர் 1964 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி ஸ்ரீமாவோ - சாஸ்திரி

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி, அத்தருணத்தில் இலங்கையில் நாடற்றவர்கள் என்ற பரிதாபகரமான நிலையின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 9 லட்சத்து 75 ஆயிரம் பேரின் தலைவிதி இலங்கையில் வசிப்பதா, அல்லது இந்தியாவுக்குப் போவதா என்ற கேள்வியில் ஊசலாடத் தொடங்கியது.



சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம்
Image Source : sirimavobandaranaike.org

ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் பின்வருமாறு அமைந்தன :

1. இந்த ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையில் நாடற்ற நிலையில் வசிக்கின்ற இந்திய வம்சாவளித் தமிழர்கள் 9 லட்சத்து 75 ஆயிரம் பேரின் பிரஜா உரிமைப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் .
2. அதன் பிரகாரம் ஐந்து லட்சத்து 25 ஆயிரம் பேருக்கு இந்தியா பிரஜாவுரிமையை வழங்குவது என்றும் 3 லட்சத்து 25 ஆயிரம் பேருக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்குவது என்றும் , எஞ்சியிருக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் தொடர்பில் எதிர்காலத்தில் இரு நாடுகளும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி ஏற்பாடு ஒன்றைச் செய்து கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
3. இந்த ஒப்பந்தம் இரண்டு நாடுகளும் கையெழுத்திடப்பட்டு பதினைந்து வருட காலத்துக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.
4. மற்றும் 7 பேருக்கு இந்திய அரசு குடியுரிமை வழங்கும் பட்சத்தில், நான்கு பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கபட வேண்டும் என்ற விகிதாசாரம் பின்பற்றப்படும்.
5. இந்திய நாட்டுக் குடியுரிமை பெற்றுச் செல்லும் ஒவ்வொருவருக்கும் அவரது பயண நடவடிக்கையின் முடிவில் 40 ஆயிரம் ரூபாய் இலங்கைப் பணம் வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தம் எல்லாவிதங்களிலும் மனிதாபிமானம் அற்றது என்று பல கோணங்களில் பல தரப்பினராலும் கண்டனம் செய்யப்பட்டது. மற்றும் இந்த ஒப்பந்தமானது மலையக மக்களுக்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாத மக்கள் மீது சற்றும் அக்கறை கொள்ளாத இரண்டு மூன்றாம் தரப்பு மனிதர்களால் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதேசமயம் மலையக மக்களிடமோ அல்லது மலையக மக்களின் தலைவர்களிடமோ " உங்களுக்கு இதில் உடன்பாடு உண்டா? " என்று ஒரு வார்த்தைகூட கேட்காமல் தன்னிச்சையாக தங்களுக்குள் செய்யப்பட்டதாகும். இந்த உடன்படிக்கை தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் என். சண்முகதாசன் தன் கருத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார் : “சிறிதும் மனிதாபிமானமற்ற இரண்டு அரசாங்கங்களால் திரைமறைவில் இரகசியமாக செய்துகொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் ஒரு கேவலமான பண்டமாற்று ஒப்பந்தமாகவே கருதப்படவேண்டும். மனித உயிர்களை மனித உயிர்களாக மதிக்காமல் உயிரற்ற ஜடப் பொருளாகக் கருதி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்தல் வருவதற்கு சற்று முன்னர் அவசர அவசரமாக செய்துகொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் தேர்தல் வெற்றியை மனதில் கொண்டதாகவும் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைக் கிளறிவிட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு கபட நாடகமாகும்.”

உண்மையும் அதுதான். அடுத்து வந்த 15 ஆண்டுகளுக்கு எதற்காக தம்மைப் பிடித்து இவ்வாறு கண்காணாத ஒரு தேசத்துக்கு அனுப்புகிறார்கள் என்று தெரியாமலேயே விலங்குகளைப் போல் ரயில் பெட்டிகளில் அடைக்கப்பட்டு இந்தியாவின் ஒரு அந்நியத் தேசத்தில் கொண்டுபோய் விடப்பட்டார்கள். அந்தத் துயரமிகுந்த 15 வருட காலமாக பண்டாரவளையில் இருந்து தலைமன்னார் வரை " ஒப்பாரிக் கோச்சி " என்ற ஒரு கோச்சி கண்ணீரும் கம்பலையுமாக இம் மக்களின் துன்ப துயரங்களைச் சுமந்துகொண்டு தள்ளாடித் தள்ளாடி ஓடிக்கொண்டிருந்தது. (தொடரும்)

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டின் நிலைபேறுகைக்கு ஸ்திரத்தினை வழங்குகின்றது. இலங்கையில் உள்ள வளசெழிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றக்கூடியது. இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பைக் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, அதில் அடையாளப்படுத்தக்கூடிய வளங்கள் அல்லது இதுவரை கண்டறியப்பட்ட வளங்கள் தொடர்பாக தெளிவுடுத்துவதாகவும், அந்த வளங்களின் இப்போதைய பயன்பாடற்ற முறைமையை மாற்றியமைத்து உச்சப்பயனைப் பெறுதல், அதனூடே வடக்கு – கிழக்கின் விவசாயத்துறை, உட்கட்டமைப்பு, கடல்சார் பொருளாதாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியும் 'உள்ளூர் பொருளாதார அபிவிருத்தியும்' என்ற இந்த கட்டுரைத்தொடர் விளக்குகின்றது.




அமரசிங்கம் கேதீஸ்வரன்

பொருளியல் துறையில் சிரேஷ்ட வளவாளராகவும், பயிற்றுனராகவும் செயற்பட்டு வருகின்ற அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளராவார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் இளமாணி மற்றும் முதுமாணிப்பட்டம் பெற்ற இவர் 2012ஆம் ஆண்டு 'திட்டமிடல் மூல தத்துவங்கள்' என்ற நூலினை வெளியிட்டுள்ளார்.


## வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரத்தில்

# கால்நடைத் துறையின் பங்குபற்றலும் வாய்ப்புக்களும்



வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் மற்றுமொரு வாய்ப்பு மிக்க வளமாகக் காணப்படும் கால்நடைத் துறையில், இப்பிரதேசத்தில் காணப்படும் நிலவளம் முக்கிய ஆதாரமாகக் காணப்படுகிறது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 15.2 சதவீதத்தைக் கொண்ட கிழக்கு மாகாணத்தினதும் 13.5 சதவீதத்தைக் கொண்ட வடக்கு மாகாணத்தினதும் நிலப்பரப்புக் கூட்டுத்தொகை 28.7 வீதமாகக் காணப்படுகின்றது. இந்த அதிகளவான நில அமைவின் காரணமாக திறந்தமுறைக் கால்நடை வளர்ப்புப் பாரம்பரியத்தைக் கொண்ட கால்நடைத்துறை வளர்ச்சியடைந்துள்ளது. கால்நடை வளர்ப்புத் துறையின் ஆதாரத்துடன் மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் வாழ்வாதார வாய்ப்பு ஏற்படுவதனால் இத்தொழில்துறை ஒரு கவர்ச்சிமிக்க வாழ்வாதார மூலமாக செயற்பட்டு வருகிறது. இத்துறையின் அபிவிருத்தியிலும் ஆக்கத்திறனிலும் அரசு, மற்றும் அரசுசாரா முதலீடுகளின் காரணமாக துறைசார் பங்களிப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கால்நடைத்துறையின் பிரதான வகிபாகத்தில் மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, எருமை வளர்ப்பு, கோழிவளர்ப்பு என்பன பாரிய அளவிலும் பன்றி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, செம்மறியாடு வளர்ப்பு என்பன குறைந்த மட்டத்திலும் இடம்பெற்று வருகின்றன. நாட்டின் போசாக்கு மட்டத்தை உயர்ந்த தரத்தில் பேணுவதற்கும் போசாக்கு உணவை வழங்குவதற்கும், புரதம் நிறைந்த நிறை உணவான பால், இறைச்சி, முட்டை என்பவற்றுடன்



திறந்தவெளியில் மாடு வளர்ப்பு

Image Source : www.jaffnagallery.lk

இதனோடு தொடர்புடைய இணை உணவு வகைகளும் பங்களிப்புச் செய்வதுடன், தாவர உணவை உண்போரின் பிரதான உணவாக பாலும் பால் சார்ந்த உணவுகளும் காணப்படுகின்றன. எருது மாடுகளிலிருந்து கிராமிய மட்டத்தில் இழுவைசக்தி பெற்றுக் கொள்ளப்படுவதுடன் நிலச்செழிப்பை பாதுகாப்பதற்கும் பேணுவதற்குமான சூழலுடன் நட்புக் கொண்ட இயற்கை உரமும் பெறப்படுகிறது.

கால்நடை வளர்ப்பானது சமூக ,கலாசார ,பாரம்பரியப் பெறுமதிகளுடன் மட்டுமன்றி மிக வறிய குடும்பங்கள் எதிர்நோக்கும் எதிர்பாராத ஆபத்துக்களின் போதெல்லாம் காசாக்கக்கூடிய பணச்சொத்தாகவும் இருந்து வருகின்றது. அத்துடன் கால்நடைகளிலிருந்து பெறப்படும் பதனிடப்படாத தோலானது, தோல் கைத்தொழிலுக்கான பிரதான மூலப்பொருளாகாவும் இருந்து வருகிறது. இந்தக் கைத்தொழில் மூலம் உருவாக்கப்படும் வேலைவாய்ப்பும் அதிகளவானதாகவே காணப்படுகின்றது. இலங்கையின் மொத்தப் பால் உற்பத்தியில் 17 சதவீதத்தினை கிழக்கு மாகாணமும் 12 சதவீதத்தினை வடக்கு மாகாணமும் வழங்கி வருவதுடன் நாட்டின் 30 சதவீதக் கால்நடையை கிழக்கு மாகாணமும் 24 சதவீதக் கால்நடையை வடக்கு மாகாணமும் உள்ளடக்கி மொத்தக் கால்நடையில் 54 சதவீதப் பங்கை வழங்கி வருகின்றன.

## மாடு வளர்ப்பு

வடக்கு கிழக்கு மாகாணங்களின் கால்நடைத்துறையின் பிரதான பங்கை வகிக்கும் துறையாக மாடுவளர்ப்புக் காணப்படுகின்றது. அதிலும் பண்ணை முறை வளர்ப்புக்குப் பதிலாக திறந்த வெளி மாடு வளர்ப்பே பிரதான இடத்தைப் பெறுகிறது. தரிசாக விடப்பட்டுள்ள நிலங்களிலும் ஒதுக்கீட்டு நிலங்களிலும் மேய்ச்சலுக்காக திறந்த முறையில் வளர்க்கப்படும் மாடுகள், அதிகளவில் பாரம்பரிய இனங்களாகவும் உள்ளூர் வர்க்கங்களாகவும் காணப்படுகின்றன. கால்நடைகளைத் தரமுயர்த்தும் திட்டம் நடைமுறைப்படுத்தாத காரணத்தினால், தேறிய வருவாய் மிகக் குறைந்த வளர்ப்பு முறையாகவே இது இருந்து வருகிறது. ஒப்பீட்டு அடிப்படையில் பராமரிப்புச் செலவு குறைந்த வளர்ப்பு முறையாக இருந்த போதும் அடிக்கடி

விபத்துக்குள்ளாதல், காட்டு மிருகங்களின் தாக்கத்துக்குள்ளாதல், களவு போதல் போன்றன காரணமாக எதிர்பாராத இழப்பைப் பெற்று வருகின்றது. மாடு வளர்ப்போரின் எண்ணிக்கையை ஆராயும் போது கிழக்கு மாகாணத்தில் கலப்பின மாடுகள் 129,153 ஆகவும், உள்ளூர் இன மாடுகள் 409,761 என்றவாறாக மாடுகள் மொத்தமாக 538,914 காணப்படுகின்றன. வடமாகாணத்தில் கலப்பின மாடுகள் 192,907 உம், உள்ளூர் மாடுகளில் 210,548 உம் என மொத்தமாக 413,455 மாடுகள் காணப்படுகின்றன. இவ்வகையில் வடக்குகிழக்கு மாகாணங்களில் மொத்தமாக 952,369 மாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இம்மாடுகளில் வடமாகாண மாவட்டங்களான வவுனியாவில் 101,947 மாடுகளும் முல்லைத்தீவில் 88,595 மாடுகளும் மன்னாரில் 80,883 மாடுகளும் கிளிநொச்சியில் 53,215 மாடுகளும் யாழ்ப்பாணத்தில் 76,815 மாடுகளும், கிழக்கு மாகாண மாவட்டங்களான திருகோணமலையில் 105,272 மாடுகளும் மட்டக்களப்பில் 310,641 மாடுகளும் அம்பாறையில் 123,001 மாடுகளும் வளர்க்கப்படுகின்றன.

கலப்பின மாடுகள், கால்நடை அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்கைமுறை சினைப்படுத்தல் மூலமாகவும் உள்ளூர் பண்ணையாளர்களுக்கு நல்லினக் காளைகளை வழங்குவதனூடாகவும் வேறு மாகாணங்களிலிருந்து கலப்பின மாடுகளை இடமாற்றுவதனூடாகவும் பெருக்கப்பட்டு வருகின்றன. இவ்வகை இனங்களில், எமது இரு மாகாணங்களுக்கும் பொருந்தக்கூடிய வர்க்கங்களாக கேர்சி கலப்பினங்களும், சகிவால் கலப்பினங்களும் பொருத்தமாகக் காணப்படுகின்றன. கலப்பின மாடுகளிலிருந்து அதிகளவில் பாலினை பெற்றுக் கொள்ள முடிவதுடன் இவை வீடுகளிலேயே வளர்ப்புச் செய்யப்படுவதால் எதிர்பாராத இழப்புக்கள் குறைவாக இருந்துவருகிறது. உணவு, மருந்து ஆகியவை முறையாக விநியோகிக்கப்பட்டு உரிய காலத்தில் சினைப்படுத்தும் போது நல்ல பயனைத் தரக்கூடியதாகவுமுள்ளது. இதற்கென மேய்ச்சல் தரையின் தேவைப்பாடும் இல்லை என்பதனால் நிலப்பரப்புக் குறைந்த பண்ணையாளர்களும் இவ்வளர்ப்புக்குப் பொருத்தமானவர்கள் ஆகின்றனர். நல்லினப் புற்களை சிறிய தரைப்பகுதியில் வளர்ப்பு செய்வதனூடாகவும் பண்ணை முறையில் உற்பத்தி செய்யப்பட்டு பதனிடப்பட்ட புல்லினை வழங்குவதனூடாகவும் வீட்டுக் கழிவுகள் மற்றும் சூழலிலுள்ள பொருத்தமான இலை, குழைகளை வழங்குவதனூடாகவும் பலர் இவ்வளர்ப்பு முறையில் வெற்றிகரமாகச் செயற்பட்டு பண்ணை அடிப்படையில் அதிகளவில் ஈடுபடும் பண்ணையாளர்களாக மாறி வருகின்றனர். மொத்த பால் நிரம்பலில் இப் பகுதியினரே அதிகளவிலான பாலினை வழங்கிப் பங்களித்து வருகின்றனர். வடக்குகிழக்கு மாகாணங்களின் கால்நடை வளர்ப்பில் பால் உற்பத்தியே பிரதான பங்கு வகிக்கிறது. வடக்கு மாகாணத்தின் மொத்த மாடுகளில் 110,940 மாடுகளும் கிழக்கு மாகாணத்தின் 101,726 மாடுகளும் பால் தரும் மாடுகளாக காணப்படுகின்றன. அம்பாறையில் 47,470 மாடுகளும் மட்டக்களப்பில் 32,966 மாடுகளும் வவுனியாவில் 28,240 மாடுகளும் யாழ்ப்பாணத்தில் 25,311 மாடுகளும் முல்லைத்தீவில் 22,468 மாடுகளும் மன்னாரில் 22,406 மாடுகளும் திருகோணமலையில் 21,290 மாடுகளும் கிளிநொச்சியில் 12,569 மாடுகளும் பாலுக்காக வளர்க்கப்படுகின்றன. மொத்தப் பால் உற்பத்தி என்ற வகையில் கிழக்கு மாகாணத்தில் நாள் ஒன்றுக்கு 154,505 லீற்றர் பாலும் வடமாகாணத்தில் 114,045 லீற்றர் பாலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த உற்பத்தியளவில் கிழக்கு மாகாணத்தில் 18,920 லீற்றர் பால் குடும்ப நுகர்வுக்கும் 22,210 லீற்றர் பால் உள்ளூர் விற்பனைக்கும் பயன்படுவதுடன் நாளாந்தம் 101,636 லீற்றர் பால் ஏனைய பகுதிகளுக்கும் சென்று சேர்கிறது. மில்கோ, நெஸ்லே, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் துறையினர் ஆகியோரால் இவ்விரு மாகாணங்களிலும் பால் கொள்வனவு செய்யப்படுகிறது.

ஒப்பீட்டு அடிப்படையில் ஆராயும் போது 452,369 மாடுகள் காணப்படும் இவ்விரு மாகாணங்களிலுமிருந்து 10 சதவீதமான மாடுகளிலிருந்து மட்டுமே பால் உற்பத்தி பெறப்படுகிறது. மாடு வளர்ப்பு முறையை வாழ்வாதாரத் தொழிலாகச் செய்துவரும் கால்நடைப் பண்னையாளர்களை நோக்கும் போது வட மாகாணத்தில் 05 மாடுகளுக்கும் குறைவாகக் கொண்டவர்கள் 49,777 பேரும் கிழக்கு மாகாணத்தில் 30,388 பேரும் காணப்படுவதுடன், கிழக்கு மாகாணத்தில் 05 தொடக்கம் 15 மாடுகளைக்

கொண்டவர்கள் 18,910 பேரும் 15 தொடக்கம் 25 மாடுகளைக் கொண்ட வளர்ப்பாளர்கள் 5,718 பேரும் காணப்படுகின்றனர். இதே போல் வட மாகாணத்திற்கான வளர்ப்பாளர்களில் 6 தொடக்கம் 10 மாடுகளைக் கொண்டோர் 11,928 பேரும் 11 தொடக்கம் 50 மாடுகளைக் கொண்டோர் 3,440 பேரும் 50 தொடக்கம் 100 வரையான மாடுகளைக் கொண்டோர் 607 பேரும் 101 மேல் கொண்டவர்கள் 416 பேரும் காணப்படுகின்றனர். இவ்வகையில் பட்டியாக மாடுகளை வளர்ப்போர் என பார்க்கும் போது கிழக்கில் 5,798 பேரும் வடக்கில் 4,463 பேருமாக மொத்தமாக 10,261 பேர் பண்ணையமைப்பில் மாடுகளை வளர்ப்பவர்களாகவும் பால், இறைச்சி, எரு என்பவற்றை நிரம்பல் செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர். வடக்கு கிழக்கு மாகாணங்களின் மேற்படி உரிமையமைப்பினை ஆராயும் போது சிறியளவிலான கால்நடைச் சொந்தக்காரர்களின் உரிமையமைப்பே பெரியளவில் காணப்படுகின்றது. இவர்களால் பராமரிக்கப்படும் மாடுகள் உத்தமமான பால் உற்பத்தியை வழங்குகின்றன. பாரியளவில் மாடுகளை வளர்ப்பவர்களால் பால் தொடர்பில் போதியளவு விளைவை அவர்கள் சமூகத்துக்கு பெற்றுக் கொடுக்க முடியவில்லை. மாடுகளிலிருந்து பாலைக் கறப்பதில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக உத்தமப் பயன்பாடு என்பது இடம்பெறாதேயுள்ளது.

மாடு வளர்ப்புத் தொடர்பில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இலங்கை கால்நடைப் பொருளாதாரத்தில் சிறப்பு மிக்க பகுதிகளாகும். நாட்டின் மொத்தக் கால்நடைகளில் 54 சதவீதமான கால்நடைகள் இம்மாகாணத்திலேயே காணப்படுகின்றன. எனினும் இத்தொழில்துறையின் மீது ஈடுபடுபவர்கள் திருப்தியாக வருமானத்தை உறுதி செய்வதற்குத் தடையாக பல சவால்களும் இருந்து வருகின்றன. திறந்த முறையிலான வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்களின் வளர்ப்பு முறையில் இறைச்சிக்காக மாடுகள் வளர்ப்பு இடம்பெறுவது முதன்மையாகவும் பால் மற்றும் ஏனைய வருமானங்கள் உப நோக்கங்களாகவும் காணப்படுவது இதில் சவாலாக அமைகிறது. மாடுகளின் இறைச்சியைத் தடை செய்வது என்ற அறிவிப்பின் பின்னர் இவர்களின் வாழ்வாதாரம் மீது பலத்த ஒரு அடி விழுந்திருந்தது, எனினும் கொள்கையளவில் மட்டுமே இது கூறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாமையால் இப்போது மௌனமாகியுள்ள பிரச்சினையாகக் காணப்படுகின்றது. எனினும் கொள்கையளவில் இம்முடிவு இன்னமும் கைவிடப்படாமையால் இந்த முடிவினால் வடக்குகிழக்கு மாகாணங்கள் அவதியுறப்போவது தடுக்கமுடியாததாகும்.



பட்டி முறையில் மாடு வளர்ப்பு

Image Source : www.virakesari.lk

இதனைத்தவிர இரண்டாவது பிரச்சினையாக திறந்த வளர்ப்பில் உள்ள மாடுகளின் தரம் படிப்படியாகக் குறைந்து வருவதும் பாரம்பரிய இனங்களால் பலன் எதுவும் கிடைக்காத காரணத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பாரம்பரிய சினைப்படுத்தல் தொழில்நுட்பம் காரணமாக மாடுகளின் தரம்

**மாடு வளர்ப்புத் தொடர்பில் வடக்கு– கிழக்கு மாகாணங்கள் இலங்கை கால்நடைப் பொருளாதாரத்தில் சிறப்புமிக்க பகுதிகளாகும். நாட்டின் மொத்தக் கால்நடைகளில் 54 சதவீதமான கால்நடை கள் இம்மாகாணத்திலேயே காணப்படுகின்றன. எனினும் இத்தொழில் துறையின் மீது ஈடுபடுபவர்கள் திருப்தியாக வருமானத்தை உறுதி செய்வதற்குத் தடையாக பல சவால்களும் இருந்து வருகின்றன.**

தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்வதனால் இறைச்சிக் கிடைப்பனவுக்கும் இவை பொருத்தமற்றதாகி விடுவதுடன் இதில் ஈடுபடும் வளர்ப்பாளர்களின் மெய்வருமானத்தில் மிகக் குறைந்த அடைவுமட்டத்திற்கே வருவாய் பெற்றுக் கொள்ளக்கூடியதாக மாறிவருகிறது. இருந்தபோதும் இப்பிரச்சினையைத் தவிர்த்து உண்மை வினைத்திறனைப் படிப்படியாக உயர்த்திக் கொள்வதற்காக கால்நடை அபிவிருத்தி திணைக்களம் காத்திரமான பங்கை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. 2021 ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் 36 கால்நடைப் போதானாசிரியர் பிரிவுகள் மூலம் 33,490 கால்நடைகளுக்குச் செயற்கை முறைச் சினைப்படுத்தல் செய்ய திட்டமிடப்பட்டு, 23849 மாடுகளுக்குச் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. இதேபோல கிழக்கு மாகாணத்தில் 39 கால்நடைப் போதானாசிரியர் பிரிவுகள் மூலம் 20,000 மாடுகளுக்குச் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தரமுயர்த்தும் திட்டங்களில் நல்லின விந்துக்களை நேரடியாகப் பெற்றுத் தரமுயர்த்துவதுடன் நல்லினக் காளைகளை பண்ணை முறையில் மாடுவளர்ப்பவர்களுக்கு வழங்கி அதன் மூலமும் இயற்கையான தரமுயர்த்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனை விட திறந்த வளர்ப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ள மற்றொரு பிரச்சினையாக மேய்ச்சல் தரைப் பிரச்சினையைக் குறிப்பிடலாம். வடக்குகிழக்கு மாகாணங்களில் பெருமளவு தரிசு நிலங்கள் காணப்படும் போதும் இவை சட்டரீதியாகப் பிரகடனப்படத்தப்பட்ட மேய்ச்சல் தரைகளாக இல்லாதுள்ளதனால், பெரும்போக காலத்தில் திறந்த வளர்ப்பாளர்களால் முறையான வளர்ப்பை உறுதி செய்ய முடியாது போகிறது. நல்ல வயல் நிலங்கள் அண்டியுள்ள இந்தத் தரைப்பரப்புக்கள் நெல் விவசாயிகளினால் வரையறையற்று நெற்செய்கைக்கு பயன்படுத்துவதனாலும் கமநல கட்டளைச்சட்டத்தின் கீழ் மாடுகளை வேறு இடங்களுக்கு இடம் மாற்ற வேண்டி ஏற்படுவதனாலும் ஐப்பசி தொடக்கம் மாசி வரையான காலபகுதியில் பண்ணை முறையிலான மாடு வளர்ப்பாளர்கள் கடும் நெருக்கடியை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

மாவட்டங்கள் மாறி வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லுதல், பாதுகாப்பற்ற காடுகளுக்குள் மேய்ச்சலுக்கு கொண்டு செல்லும் போது ஏற்படும் விலங்குத்தாக்கம், நீர் பெருக்கெடுத்து செல்லும் வாய்க்கால் தரைகளில் மேய்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் போது ஏற்படும் உயிரிழப்பு, அடைமழைக்காலத்தில் ஏற்படும் கன்றுகளின் உயிரிழப்பு, குளிர்த்தாக்கம் போன்ற காரணங்கள் தொடரான நட்டத்தை இவ்வளர்ப்பாளர்களுக்கு ஏற்படுத்தி வருகின்றன. இதனை விட திருடர்களினால் திட்டமிட்டு நடாத்தப்படும் திருட்டு நடவடிக்கைகளும் அவற்றை ஆதாரப்படுத்தி, கட்டுப்படுத்த முடியாத சூழலை உண்டாக்கி, திறந்தமுறை மாடு வளர்ப்புக்குச் சவாலை ஏற்படுத்துகின்றது.

இவ்வகையில் சவால் நிறைந்த வாழ்வாதாரத் தொழிலாக மாடு வளர்ப்பு காணப்பட்ட போதும் நிலை பேறுடைய ஏனைய தன்மைகளினால் வடக்குகிழக்கின் முக்கியமான பொருளாதார வாழ்வியல் தொழிலாக தொடர்ந்து முதன்மை பெற்றுச் செயல்படுவதை இவ்வாய்வில் உறுதி செய்ய முடியும்.

(தொடரும்)




யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர்

Image Source : tamilmirrorcanada.blogspot.com


● கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.


# 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் வடஇலங்கையின் தமிழர் பொருளாதாரம்

பேராசிரியர் சின்னப்பா அரசரத்தினம் வட இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு வரலாறு பற்றி பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர். இந்தக் கட்டுரைகள் யாவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை. இவை தமிழில் மொழிபெயர்க்கப்படாமல் இருப்பது பெரும் குறையே. 1982 ஆம் ஆண்டில் அவரின் ‘The Historical Foundation of the Economy of Tamils of North Sri Lanka‘ எனும் சிறுநூல் வெளியாயிற்று. அந்நூலில் 17 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரையான பொருளாதார வரலாற்றை பகுப்பாய்வு நோக்கில் அவர் விபரித்திருந்தார். இந்தத் தமிழ்க் கட்டுரை அந்நூலின் முற்பகுதியில் எடுத்துரைக்கப்பட்ட 17 ஆம்,18 ஆம் நூற்றாண்டின் வரலாற்றைக் கூறுகிறது.

## குடாநாட்டின் சன அடர்த்தி

வடக்கு வாழ் தமிழர்களின் சனத்தொகை வளர்ச்சியில் 16 ஆம் நூற்றாண்டு முதல் ஒரு தொடர்ச்சியை அவதானிக்க முடிகிறது. வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி என்ற நான்கு பிரிவுகளைக் கொண்டதான யாழ்ப்பாணக் குடாநாடு, வட பகுதியின் சனப் பரம்பலின் குவிமையமாக இருந்தது. இவை நான்கும் மிக அடர்த்தியான சனத்தொகையைக் கொண்டிருந்தன. ஆனையிறவுக்குத் தெற்கே பூநகரி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் பரவலாகச் சிதறியிருந்த கிராமங்களில் யாழ்ப்பாணத்தவர்கள் இடம்பெயர்ந்து குடியேறத் தொடங்கினர். இதனால் 20 ஆம் நூற்றாண்டில் இந்தப் பகுதிகளின் சன அடர்த்தி உயர்ந்தது. இருப்பினும் வன்னிப் பெருநிலப்பரப்பின் நெல் வயல்களை நோக்கி யாழ்ப்பாணத்தில் இருந்து உழைப்பாளர்களின் பருவகால இடப்பெயர்வு இருபதாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இடம்பெற்று வந்தது.

யாழ்ப்பாணத்தின் குடியிருப்புக்கள் சன அடர்த்தி மிக்கனவாய் இருந்தன. இவ்வாறு சனத்தொகை அடர்த்தியும் செறிவும் இருந்த காரணத்தால் அங்கு மக்களிடையே பொருளாதார உறவுகள் விருத்தியுற்றன. பிராந்திய ரீதியான சிறப்புத் தேர்ச்சியும் அங்கு ஏற்படலாயிற்று. அத்தோடு பண்டங்களதும், சேவைகளதும் பரிவர்த்தனையும் வளர்ச்சியடைந்தது. இலங்கையின் பிற பகுதிகளில் இருந்து தனிமைப்பட்டதாக பொருளாதாரம் வளரவும், பிற இடங்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களின் பாதிப்புக்களிற்கு உட்படாது இருக்கவும் இது உதவியது. 17 ஆம் நூற்றாண்டு முதல் யாழ்ப்பாணத் தமிழர்களின் சனத்தொகை வளர்ச்சி பற்றிய சில சான்றுகள் கிடைத்துள்ளன. இது அதிர்ஷ்டம் என்றே கூற வேண்டும். டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 1658 இல், முதல் வேலையாக அதன் சனத்தொகையைக் கணக்கிட்டனர். இதனை அப்போதைய முதலாவது கொமாண்டர் நிறைவேற்றினார். அக் கணிப்பின்படி அங்கு 120,000 மக்கள் இருந்தனர். 1680 களில் இதனைவிட ஒழுங்கான சனத்தொகைக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டபோது மொத்தச்சனத்தொகை 169,299 என்று மதிப்பிடப்பட்டது. இன்னொரு சனத்தொகை மதிப்பீடு 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடத்தப்பட்டபோது 187,599 எனக் கணிப்பீடு செய்யப்பட்டது. இத்தொகையில் 85% யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசித்தனர். ஆகவே 18 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தின் சனத்தொகை ஏறக்குறைய 150,000 ஆக இருந்துள்ளது. ஒரு சதுரமைலிற்கு 350 பேர் அப்போது வாழ்ந்தனர். நவீன காலத்திற்கு முற்பட்ட சமூகங்களில் இத்தகு சனஅடர்த்தி, அதிக அளவினது என்றே கூறலாம்.



பேராசிரியர் சின்னப்பா அரசரத்தினம்
Image Source : en.wikipedia.org

## பிரித்தானியர் காலத்தில் சனத்தொகை மதிப்பீடுகள்

பிரித்தானியர் ஆட்சியின் போது முதலாவது சனத்தொகை மதிப்பு 1814 இல் நடத்தப்பட்டது. இம்மதிப்பீட்டின்படி யாழ்ப்பாணப் பட்டணத்தில் (யாழ்ப்பாணத்தின் டச்சு கொமாண்டரின் எல்லைக்குள்) 103,849 பேர் வாழ்ந்ததாகக் கணக்கிடப்பட்டது. இது 18 ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர் செய்த மதிப்பீடுகளில் இருந்து குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காட்டுகிறது. பிரித்தானியர் இதைத் தொடர்ந்து 1827 இல் ஒரு மதிப்பீட்டை நடத்தினர். அவ்வேளை சனத்தொகை யாழ்ப்பாணப்பட்டணத்தில் 123,188 ஆகக் காணப்பட்டது. பிரித்தானியர் ஆரம்பகாலத்தில் நடத்திய இம்மதிப்பீடுகளின்படி சனத்தொகை குறைவாகக் காணப்பட்டதற்குரிய காரணம் யாது என்பது சிந்தனைக்குரியது. டச்சுக்காரர் தவறாகக் கணக்கிட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. 1871 ஆம் ஆண்டில் பிரித்தானியர் ஆட்சியில் முறைப்படுத்தப்பட்ட சனத்தொகைக் கணிப்பீடு நடத்தப்பட்டது. அப்போது வடமாகாணத்தின் சனத்தொகை 281,666 ஆகவும் யாழ்ப்பாண மாவட்டத்தின் சனத்தொகை 246,063 ஆகவும் காணப்பட்டது. 1871 மதிப்பீடுகள், டச்சுக் கொமாண்டர் ஒரு

நூற்றாண்டுக்கு முன்னர் நடத்திய சனத்தொகை மதிப்பீட்டோடு ஒத்துப்போவதைக் காணமுடிகிறது. 1827 இல் இருந்து ஆண்டுக்கு சராசரியாக 1.3% வீத அதிகரிப்பு ஏற்பட்டது எனக் கொண்டால் மட்டுமே 1871 இன் மதிப்பீடு 1827 இன் மதிப்பீட்டோடு பொருந்தக் கூடியதாய் இருக்கும்.

ஆனால் 1871 இற்கும் 1931 இற்கும் இடையில் நடத்தப்பட்ட பத்தாண்டுக்கு ஒரு தடவையான சனத்தொகை மதிப்பீட்டின் அதிகரிப்பு வீதத்துடன் ஒப்பிட, 1.3% வீத அதிகரிப்பு உயர்வானதாக இருப்பதால், டச்சுக் கொமாண்டரின் மதிப்பீடு ஏற்றுக் கொள்ளக்கூடியதாகத் தெரிகிறது. 1871 இன் பின்னர் வடக்கில் தமிழர் சனத்தொகை அதிகரித்துச் சென்றது. இந்த அதிகரிப்பின் பெரும் பகுதி யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கே உரியதாகவும் இருந்தது. வடக்கே தமிழர் மாவட்டங்களில் சனத்தொகை அடர்த்தியில் முன்னரைவிட அதிகளவு வேற்றுமைகள் ஏற்படவில்லை.

## குடியிருப்பு முறையும் கிராமங்களும்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் குடியிருப்பு முறையில் அதிகளவுமாற்றங்கள் கடந்த 400 ஆண்டுகளில் ஏற்படவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள்ளே உள்ளக இடப்பெயர்வுகளும் பெரிய அளவில் ஏற்படவில்லை. உவர் நீர் பிரச்சினை காரணமாக உற்பத்தி வளம் குறைந்த பகுதிகளில் இருந்து அருகே உள்ள பகுதிகளிற்கு மக்கள் இடம்பெயர்ந்திருக்கலாம். இது விதிவிலக்கானதே. போத்துக்கேயரின் காணிப் பதிவேடுகளின்படி யாழ். குடாநாட்டில் 128 கிராமங்கள் இருந்தன.

| | |
|---|---|
| வலிகாமம் | 61 |
| தென்மராட்சி | 24 |
| வடமராட்சி | 15 |
| பச்சிலைப்பள்ளி | 28 |
| மொத்தம் | 128 |

யாழ்ப்பாணத்தில் டச்சுப் பிரிடிகண்ட (மதபோதகர்) ஆக 1658 முதல் 1664 வரை கடமையாற்றிய வண.பால்தேயு என்பவர் தனது தேசப்படத்தில் 44 கிராமங்களைக் குறித்துள்ளார். இவற்றுள் 29 கிராமங்களின் பெயர்களையும் விபரங்களையும் தந்துள்ளார். போர்த்துக்கேயர் காலத்திற்கு சுமார் 50 வருடங்கள் கழிந்த பின் வண வலண்டஜின், (Valentijin) குடாநாட்டின் நான்கு பிரிவுகளிலும் இருந்து 42 கிராமங்களின் பெயர்களைத் தந்துள்ளார். இந்தப் புள்ளிவிபரங்கள் காட்டுவது யாதெனில் மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இவ்விடைக் காலத்தில் ஏற்படவில்லை என்பதே. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் வலிகாமம் பிரிவுதான் அதிக சன அடர்த்தியுள்ள பகுதியாக இருந்து வந்துள்ளது. அங்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர் சன அடர்த்தியுடையனவாக இருந்த கிராமங்கள் இன்றுவரை அவ்வாறே இருந்து வருகின்றன. பச்சிலைப்பள்ளிப் பிரிவில் முன்பு குடியிருப்புக்கள் நிலைத்திருந்தன. பின்னர் அங்கிருந்து இடப்பெயர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். அங்கிருந்து வடமராட்சிக்கு மக்கள் சென்றிருக்கலாம். வடமராட்சியில் குடியேற்றங்களும் புதிய நிலம் பயிர்ச்செய்கைக்குக் கொண்டு வரப்பட்டதும் இடம்பெற்றன. காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய தீவுகளை நோக்கியும் இடப்பெயர்ச்சி நடைபெற்றுள்ளது. வன்னிப் பகுதிக்கு 20 ஆம் நூற்றாண்டிலேயே மக்கள் இடம்பெயர்ந்தனர். இதற்கு இரு காரணங்கள் இருந்தன. ஒன்று யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் சனத்தொகை அதிகரிப்பால் நிலத்தட்டுப்பாடு நிலவியது. அடுத்ததாக அரசாங்கம் குளங்களைப் புனரமைத்து வன்னியின் நிலங்களை மக்களைக் குடியேற்றுவதற்காகத் தயார் செய்தது. இப்பகுதிகள் சிலவற்றிற்கு இந்தியத் தொழிலாளர்கள் இடம்பெயர்ந்து சென்றதும் வளர்ச்சிக்குத் தூண்டுதலாக அமைந்தது.

## சமூக நிறுவனங்களும் சட்ட முறைமையும்

சனத்தொகை வளர்ச்சிக்கு அடுத்ததாக யாழ். மாவட்டத்தில் சமூகநிறுவனங்கள் வளர்ச்சியுற்றமை ஒரு குறிப்பிடத்தக்கதொரு நிகழ்வாகும். அத்தோடு அங்கு மக்களிடையே நிலையான உறவுகளைப் பேணுவதற்கேற்ற சட்டமுறைமையும் வளர்ச்சியுற்றது. இலங்கைத் தமிழர் வெவ்வேறு இடங்களில் இருந்து வந்து குடியேறியவர்களாதலால், குடியேறிகள் சமூகம் ஒன்றின் வளர்ச்சிக்கு நிறுவனங்களும், சட்டமுறைமையும் வளர்ந்திருப்பது அவசியமானதாகும். நிலத்தில் தனிச் சொத்துரிமை கோரும் நிலை வளர்ந்ததும் முக்கியமானது. 17 ஆம் நூற்றாண்டிலேயே இத்தகைய நிலை ஏற்பட்டிருந்ததா என்பதைக் கூறமுடியவில்லை. ஆயினும் 1675 இல் டச்சுக்காரர் காணிகளைப் பதிவு செய்யத் தொடங்கிய போது நிலத்தில் சிற்றுடைமை என்பது பொதுவான ஒரு நடைமுறையாக இருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டில், வீடும் அதனைச் சுற்றித் தோட்டக்காணியும் இருக்கும். இவ்வாறு பல வீடு வளவுகளின் தொகுதியாக கிராமக் குடியிருப்புக்கள் இருக்கும். இந்நிலமும் பல துண்டுகளாகப் பிரிவுபட்டு தனியாட்களின் உடைமைகளாக இருக்கும். நிலத்தில் தனியுரிமையின் வளர்ச்சி நீண்ட காலத்திற்கு முன்பே ஏற்பட்டிருந்தது. தம் நிலங்களைச் சுற்றி மக்கள் வேலியடைத்துக்கொள்ளும்

முறை நீண்டகாலத்திற்கு முன்பே ஏற்பட்டு விட்டது என்பதைக் கொண்டு இதனை அறியலாம். குடியேற்ற நாட்டுக் காரியதரிசியாகவிருந்த ரெனன்ற் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சிங்களப் பகுதிகளோடு இதனை ஒப்பிட்டு அங்கு தமக்குச் சொந்தமான நிலத்தைப் பற்றி மக்கள் இவ்வளவு அக்கறை காட்டுவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சொத்துரிமை, யாழ்ப்பாணத்தில் வளர்ச்சியுற்ற நீதி நிறுவனங்களாலும் பேணப்பட்டது. தேசவழமையில் கூறப்பட்ட வழமைகளும் நடைமுறைகளும் யாழ்ப்பாணத்தில் எப்போது வேரூன்றின என்பதைக் கூறுவதற்கு இயலாதுள்ளது. 1707 ஆம் ஆண்டில் டச்சுக்காரர் முதலியார்களை அழைத்து இச்சட்டத்தைத் தொகுக்கும்படி கூறியபோது, வழமைச் சட்டம் ஒன்றிற்கு நிலையான பாதுகாப்பை அவர்கள் வழங்கினர். யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் இருந்தே இச்சட்ட முறையின்படி நீதிபரிபாலனம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அக்காலத்தில் இருந்தே ஒரு தரப்பினருக்காக இன்னொருவர் வாதாடுவதும், நீதிபதி போன்ற ஒருவர் தீர்ப்பு வழங்குவதுமான முறைமை வளர்ச்சியுற்றிருந்தது. தேசவழமை மூன்று வகைச் சொத்துரிமையை ஏற்றிருந்தது. பெண்கள் விவாகம் செய்து கொள்ளும்போது பெற்றுக்கொண்ட சீதனம், பெற்றோரிடமிருந்து ஆண் மகன் பெற்றுக் கொண்ட முதுசொம், விவாகத்திற்குப் பின்னர் கணவனும் மனைவியும் தேடிக் கொண்ட சொத்துக்களான தேடிய தேட்டம் என்ற மூன்று வகைச் சொத்துக்கள் இருந்தன. மூன்று வகைச் சொத்துக்கள் என்ற வகைப்பாடு சொத்தினை உடைமை கொள்ளுதல், அதனைமாற்றுதல் அல்லது விற்றல் என்பனவற்றில் ஒரு ஒழுங்கு முறையை ஏற்படுத்தியதோடு, பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பையும் உறுதி செய்தது. இவ்விதமான சிக்கல் நிறைந்த உரிமைகளையும், கட்டுப்பாடுகளையும் கொண்ட சட்டமுறைமை யாழ்ப்பாணத்தவர்களை வழக்காடும் தன்மையுடையவர்களாய் ஆக்கியது எனலாம். இப் பண்பினை 17 ஆம் நூற்றாண்டின் மத்தியிலேயே அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆயினும் அது சமூகத்தின் நிலைபேற்றுக்கும், அதன் பழமை பேணும் இயல்புக்கும் காரணமாயிற்று. அடுத்தடுத்து வந்த காலனித்துவ ஆட்சியாளர்களின் ஆட்சியின் போது சமூகம் உருக்குலையாமல் நிலைத்து நிற்கவும் இது உதவியது.

## யாழ்ப்பாணச் சாதி முறையின் தனித்துவம்

தாம் எங்கிருந்து வந்தார்களோ அந்த இடத்தினின்றும் வேறுபட்ட இயல்புகளையுடைய சாதி முறை யாழ்ப்பாணத்தவர்களிடம் உருவாகியிருந்தது. பிராமணர்கள் பெரும் எண்ணிக்கையில் இல்லாதிருந்தமையால், தென்னிந்தியாவின் பிராமணிய நியமங்கள் இங்கு முழுமையாகப் புகவில்லை. சாதிகள் வழமையான தொழில்களையே செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருக்கவில்லை. ஓரளவுக்கு சமூக பொருளாதார அசைவியக்கம் ஏற்பட்டது. தென்னிந்தியாவில் இருந்தது போன்ற சாதித் தொழில்களும், அவற்றைச் சார்ந்த நியமங்களும் பின்பற்றப்படவில்லை. விவசாயமும் அதனைச் சார்ந்த தொழில்களும் மதிப்புக்குரிய தொழில்களாக இருந்தன. மீன்பிடித் தொழிலும், கடல் சார்ந்த உற்பத்திகளும் தென்னிந்தியாவை விட இங்கு மதிப்பில் உயர்ந்தனவாக இருந்தன. இதனால் மீன்பிடித் தொழில் வளர்ச்சியுற்றது. மீன்பிடித் தொழில் சார்ந்த சமூக அசைவியக்கம் ஏற்படுதல் சாத்தியமாயிற்று. சனத்தொகையில் பெரும்பான்மையினராக இருந்த வேளாளர், விவசாயத் தொழில் சாதியினராக இருந்தனர். இது அவர்களின் மேலாதிக்கம் வளரக் காரணமாயிற்று. அவர்களின் இத்தகைய மேலாண்மை சமூக உறுதி நிலைக்கு வழியேற்படுத்தியது. சமூகத்தின் உறுதியான முன்னேற்றத்திற்கும் பொருளாதார உறவுகளின் வளர்ச்சிக்கும் இது உதவியது.

## வர்த்தக நோக்கிலான பண்ட உற்பத்தி

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பழைய குடியிருப்புப் பகுதிகளில் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தக்கூடிய காணிகள் யாவும் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற காணிகளாக மாற்றப்பட்டன. கிராமங்களுக்கு அருகேயுள்ள காட்டுப்பூமியில் குடியிருப்புக்களும் தோட்டங்களும் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டன. உவர் நிலங்களை மீட்கும் திட்டங்களும் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்டன. உவர் நீர் உள்நுழையாமல் தடுப்பணைகள் போடப்பட்டன. டச்சுக்காரர் நாவற்குழிப் பகுதியில் இது தொடர்பாகப் பயனுள்ள திட்டத்தைச் செயற்படுத்தினர். தரிசு நிலங்களின் ஏல விற்பனை மூலமும் பயிர்ச்செய்கைக் காணிகளின் அளவு கூடியது. 1670 கள் முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை தரிசு நில விற்பனை ஒழுங்காக நடைபெற்றது. யாழ். மாவட்டத்தில் நிலத்திற்கான தேவை மிகப் பெரிய அளவில் இருந்ததால் நிலங்களைப் பணம் கொடுத்து ஏல விற்பனையின் போது மக்கள் கொள்வனவு செய்தனர். தெற்கேயுள்ள வன்னிப் பகுதிக்கும் மக்கள் குடிபெயர்ந்து சென்றமை ஓரளவுக்கு நிலத்தட்டுப்பாட்டைத் தீர்க்க உதவியது. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் இவ்வாறு தெற்கே இடம்பெயர்தல் நடைபெற்றது. ஆயினும் 20 ஆம் நூற்றாண்டில் அரசாங்கம் நீர்ப்பாசனப் புனரமைப்பு வேலைகளைச் செய்ததால் இவ்விடப்பெயர்வு துரிதப்படுத்தப்பட்டது.

மண்ணின் இயல்புக்கும் காலநிலைக்கும் ஏற்ற பயிர்ச் செய்கைத் தொழில்நுட்பத்தை மக்கள் பயன்படுத்தத் தொடங்கினர். மழைக் காலத்தில் பயிரிடப்படும் நெல்லின் உற்பத்திக்காகப் பெரும் பகுதி நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. நெல் அறுவடை முடிந்ததும் பலவகைத் தானியங்கள் பயிரிடப்பட்டன. இத்தானியங்கள் மக்களுக்கு உணவாகப் பயன்பட்டதோடு, கால்நடைக்கான தீவனத்தையும் வழங்கின. யாழ்ப்பாணத்தவர்கள் நெற் செய்கைக்குரிய நிலத்தைப் படிப்படியாக காசுப் பயிர்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தும் முடிவை நீண்ட காலத்திற்கு முன்பே செய்தனர். இது எப்போது நிகழ்ந்தது என்பதைத் திட்டவட்டமாக கூறமுடியாது. 17 ஆம் நூற்றாண்டிலேயே தோட்டப் பயிர்ச்செய்கை யாழ்ப்பாணத்தில் வளர்ச்சியுற்றிருந்தது. வலிகாமம் வடக்கிலும், கிழக்கிலும், வடமராட்சியிலும் சந்தைக்கான தோட்ட உற்பத்தி வளர்ச்சி பெற்றிருந்தது. 17 ஆம் நூற்றாண்டில் தான் இங்கு புகையிலை உற்பத்தியும் பெருகியது. காசுப் பயிர்களில் இது தலைமையிடத்தையும் பிடித்தது. யாழ்ப்பாணத் தமிழர்களின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பன்முகப்படுத்தலும், சிறப்புத் தேர்ச்சியும் மிகுந்த முக்கியம் வாய்ந்த விடயமாகும். சந்தையை நோக்கிய பண்ட உற்பத்தி பெருகிறது. அது பணப் பொருளாதாரத்தின் விருத்திக்கு வழியமைத்தது. பிழைப்பூதியப் பயிர்களின் உற்பத்தி கிராமங்களுக்கிடையிலான பரிவர்த்தனையை அதிகரித்தது. பருத்தித்துறை, சாவகச்சேரி, அச்சுவேலி, சுன்னாகம், சங்கானை முதலிய கேந்திர சந்தைப்பட்டணங்கள் குடாநாட்டில் தோன்றின. இவற்றால் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தின் முக்கியமான அம்சமாக வர்த்தகம் அமைந்தது. யாழ்ப்பாணம் வர்த்தகப் பரிவர்த்தனைக்குரிய மையமாயிற்று. இறுதியில் யாழ்ப்பாணம் தென்னிந்தியாவுடனும் இலங்கையின் தென்பகுதியுடனும், கிழக்குப் பகுதியுடனும் கடல் வர்த்தகத்தை வளர்த்துக்கொள்வதற்கு இது உதவியது.

17 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதலாக யாழ்ப்பாணம் இந்தியாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்தது. வங்காளம், கருநாடகக் கரை, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் இருந்து அரிசி யாழ்ப்பாணத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டது. இறக்குமதியில் தங்கியிருத்தல் காலப்போக்கில் அதிகரித்தது. 17ஆம் நூற்றாண்டிலும் 18 ஆம் நூற்றாண்டிலும் யாழ்ப்பாணத்தின் நுகர்வுத் தேவையின் அரைப் பங்கு, இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மூலம் நிறைவு செய்யப்பட்டது.

### இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகம்

சனத் தொகைப் பெருக்கமும், அதிகரித்த சனத்தொகைக்கு வேண்டிய உணவை உள்ளூரிலேயே முழுமையாக உற்பத்தி செய்ய முடியாத நிலையும் வர்த்தகத்தின் தேவையை அதிகரித்தன. 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதலாக யாழ்ப்பாணம் இந்தியாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்தது. வங்காளம், கருநாடகக் கரை, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் இருந்து அரிசி யாழ்ப்பாணத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டது. இறக்குமதியில் தங்கியிருத்தல் காலப்போக்கில் அதிகரித்தது. 17ஆம் நூற்றாண்டிலும் 18 ஆம் நூற்றாண்டிலும் யாழ்ப்பாணத்தின் நுகர்வுத் தேவையின் அரைப் பங்கு, இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மூலம் நிறைவு செய்யப்பட்டது. இறக்குமதி தடைப்பட்ட வேளையில் உணவுப் பற்றாக்குறை, விலைகளின் உயர்ச்சி ஆகிய நெருக்கடி நிலை ஏற்பட்டது. இதனால் ஆட்சியாளர்கள் அரிசியின் விலையைத் தாழ்ந்த மட்டத்தில் வைத்திருப்பது நன்மையானது என்பதைக் கண்டனர். அரிசியின் விலையின் ஏற்ற இறக்கங்கள் ஏனைய பொருட்களின் விலைகளையும் பாதித்ததோடு கூலியின் ஏற்ற இறக்கமும் அரிசியின் விலைக்கு ஏற்ப அமைந்தது. நெற்செய்கை நடைபெறாத பகுதிகளில் வாழ்ந்தவர்கள் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியையும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியையும் தம் நுகர்வுத் தேவைக்காகக் கொள்வனவு செய்ய வேண்டியிருந்ததால் நாட்டில் பணப் புழக்கம் இருந்தது. பணப் புழக்கம், வசதிபடைத்த செல்வந்த வகுப்பினர் மத்தியில் மட்டுமல்லாது சாதாரண மக்கள் மத்தியிலும் இருந்தது. இது நவீனத்திற்கு முந்திய சமூகங்களில் காணப்படாத ஒரு இயல்பாகும். யாழ்ப்பாணத்தில் காசுப் புழக்கம் அதிகரித்ததற்குக் காரணம் இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகமாக இருந்தமையாகும். புழக்கத்தில் இருந்த நாணயம் முழுவதும் அந்நிய நாணயங்களாக இருந்தன. அவற்றுள் இந்திய நாணயங்களே அதிகம். தங்க நாணயங்களும், பகோடா, பணம் (Fanam) என்பனவும் உயர் பெறுமதியுடையனவாய்

இருந்தன. செப்பு நாணயங்கள் குறைந்த பெறுமதி உடையவை. காசு என்பது செப்பு நாணயமாகும். இவை உள்ளூரிலும் அச்சிடப்பட்டன. மலபார், கருநாடகம், வங்காளம் ஆகிய இடங்களில் இருந்து வந்த வர்த்தகர்கள் பகோடா, பணம், காசு ஆகிய வகை நாணயங்களை இங்கு கொண்டு வந்தனர்.



பணம் ( Fanam ) நாணயம்

Image Source : www.dema-coins.com

## புகையிலை உற்பத்தியும் ஏற்றுமதியும்

யானை, புகையிலை என்ற இரண்டினதும் ஏற்றுமதியால் உயரிய வருமானம் கிடைத்தது. யாழ்ப்பாணத்து அரசர்கள் காலம் முதல் யானையின் ஏற்றுமதி நல்ல வருவாயைத் தரும் வர்த்தகமாக இருந்தது. இவ் வர்த்தகம் போர்த்துக்கேயர், டச்சு ஆட்சிக் காலங்களிலும் தொடர்ந்தது. 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் யானைகளிற்குக் கிடைத்த ஏற்றுமதி விலை மிக உச்ச நிலையை அடைந்தது. மொகலாய அரசும் தெற்கேயுள்ள நாயக்கர் அரசும் யானைகளைப் பெரும் தொகையில் கொள்வனவு செய்தன. ஆண்டுதோறும் 200,000 புளோரின் (ஏறக்குறைய ரூ. 160,000) யானை ஏற்றுமதியால் கிடைத்தது. வங்காளம், கோல்கொண்டா, தஞ்சாவூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த செல்வந்த வணிகர்கள் இவற்றைக் கொள்வனவு செய்தனர். அவர்கள் இவற்றுக்காக வெள்ளி, தங்க நாணயங்களைச் செலுத்தினர். டச்சு ஆட்சியில் யானை ஏற்றுமதி கொம்பனியின் ஏகபோக உரிமையாக இருந்தது. இதனால் ஏற்றுமதி வருமானம் முழுவதும் டச்சு அரசின் திறைசேரிக்கு வரவு வைக்கப்பட்டது. தரகுப் பணம், ஏற்றியிறக்கல் செலவுகள், கூலி உழைப்பு என்பனவற்றின் மூலம் சிறிய பங்கு வருமானம் சமூகத்திற்குக் கிடைத்தது. 18 ஆம் நூற்றாண்டில் பின்னரைப் பகுதியில் யானை ஏற்றுமதி வருமானம் குறையத் தொடங்கியதால் யாழ்ப்பாணக் கொமாண்டர் பிரிவின் அரசு வருமானம் அரசுச் செலவைவிடக் குறைந்ததால் பற்றாக்குறை ஏற்பட்டது. இதன் விளைவாக நாணயத்தின் நிரம்பல் அளவும் குறைந்து தட்டுப்பாடு ஏற்பட்டது.

வருமானத்தைத் தேடித்தந்த இன்னொரு ஏற்றுமதிப் பொருள் புகையிலையாகும். 17 ஆம் நூற்றாண்டிலும் அதற்கு பின்னரும் புகையிலை சிறிய அளவில் பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆயினும் 18 ஆம் நூற்றாண்டிலேயே இது உச்சத்தையடைந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏற்றுமதிகளில் பிரதான இடத்தையும் பெற்றது. தென்மலபார் பகுதியில் யாழ்ப்பாணப் புகையிலைக்கான கேள்வியும் இக்காலத்திலேயே அதிகரித்தது. திருவிதாங்கூர் அரசு எழுச்சி பெற்றது. அதன் மன்னன் புகையிலை வியாபாரத்தின் தனியுரிமையைத் தன்னிடம் வைத்திருந்தான். அப்போது யாழ்ப்பாணப் புகையிலைக்கு திருவிதாங்கூரில் நல்ல சந்தை வாய்ப்புக் கிடைத்தது. யாழ்ப்பாணத்தோடு நிலையான வர்த்தக உறவு ஏற்பட்டது. திருவிதாங்கூர் மன்னனின் பிரதிநிதிகளாகவிருந்த வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தின் துறைமுகங்களிற்குக் கப்பல்களில் வந்து புகையிலையைக் கொள்வனவு செய்து கொண்டு சென்றனர். இவர்கள் புகையிலை உற்பத்தியாகும் பகுதிகளில் தமது முகவர்களை வைத்திருந்தனர். வர்த்தகர்கள் தமது முகவர்கள் ஊடாக கமக்காரர்களுக்கு முற்பணத்தை வழங்கி அறுவடையின் போது புகையிலையைக் கொள்வனவு செய்தனர். குடியான் விவசாயிகளான புகையிலைச் செய்கையாளர்களிற்கு கடன் தேவைப்பட்டது. இக்கடனை வழங்கிய வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையில் புகையிலையைக் கொள்வனவு செய்தனர். சில கமக்காரர்கள் பிறரின் உற்பத்தியையும் தாம் கொள்வனவு செய்து புகையிலையைப் பதனிட்டு சந்தை விலையில் தரகர்களுக்கு விற்கக்கூடியவர்களாயும் இருந்தனர். இத்தரகர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தின் முயற்சியாளர்களாய் இருந்தனர். செட்டிகளும் பிறரும் கூட இத்தரகுத் தொழிலில் ஈடுபட்டனர். தரகர்கள் மலையாளி வர்த்தகர்களுக்குப் புகையிலை விற்றும் லாபம் அடைந்தனர். புகையிலை உற்பத்தியால் பணம் உழைக்கலாம் என்பதை உணர்ந்த விவசாயிகள் புகையிலையை கூடியளவு நிலத்தில் பயிரிடத் தொடங்கினர். 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புகையிலைச்

செய்கை நிலத்தின் அளவு அதிகரித்தது. வடமராட்சி, வலிகாமம் கிழக்கு ஆகிய பகுதிகளில் விவசாயிகள் புகையிலையைப் பயிரிடத்தொடங்கினர். மன்னார், வன்னி ஆகிய இடங்களிலும் புகையிலை பயிரிடப்படலாயிற்று.

1783 ஆம் ஆண்டின் அறிக்கையொன்று புகையிலை உற்பத்தி பற்றிய விரிவான புள்ளி விபரங்களைத் தருகின்றது. ஆண்டுதோறும் 1 மில்லியன் முதல் 1.3 மில்லியன் இறாத்தல் அளவான புகையிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. 19,500 இறாத்தல் கொண்ட ஒரு சிப்பம் புகையிலை தரத்தைப் பொறுத்து ரூ.40 முதல் ரூ.120 வரை வேறுபடும் விலைகளில் ஏற்றுமதி செய்யப்பட்டது. தரகர்களுக்குப் 10 வீதம் தரகுப் பணமாகக் கிடைத்தது. திருவிதாங்கூர் அரசர் தனியுரிமையைத் தானே வைத்துக் கொண்டிருந்தபடியால் யாழ்ப்பாணத்து வர்த்தகர்களால் ஏற்றுமதி வியாபாரத்தைச் செய்ய முடியவில்லை. டச்சுக்காரர் 20 வீத ஏற்றுமதி வரியை அறவிட்டனர். வரியை அறவிடுதல் ஒப்பந்தக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. 1790 களில் டச்சு அரசாங்கத்தின் புகையிலை ஏற்றுமதிக் குத்தகை வரி வருமானம், ஆண்டுக்கு ரூ.50,000 ஆக இருந்தது. 20 மலையாள ஏற்றுமதியாளர்கள் புகையிலைக்குரிய விலையை பகோடா, பணம் (Fanam) ஆகிய நாணயங்களில் கொடுத்தனர். இதனால் இந் நாணயங்கள் நாட்டிற்குள் புழக்கத்தில் வந்தன. யானை வர்த்தகம் போலல்லாது புகையிலை வர்த்தகம் சமூகத்தின் பல்வேறு பகுதியினருக்கும் நன்மையைத் தந்தது. கமக்காரர்கள், கூலி உழைப்பாளர்கள், (வண்டிகள், படகுகள் மூலம்) புகையிலையை ஏற்றி இறக்குவோர், புகையிலைத் தரகு வியாபாரிகள் எனப் பல பிரிவினர் இதனால் நன்மை பெற்றனர். புகையிலைப் பயிர் யாழ்ப்பாணப் பொருளாதாரத்தின் உயிர்நாடியான உற்பத்தியாக விரைவில் மாற்றம் பெற்றது. இவ்வாறு முக்கிய உற்பத்தியாக மாறிய புகையிலை வர்த்தகத்தின் ஏற்ற இறக்கங்கள், யாழ்ப்பாணத்தின் வாழ்க்கையைப் பாதிப்பதாக மாறியது.

### ஏற்றுமதி வர்த்தகம்

17 ஆம் 18 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வேறு பல பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டன. இவை ஒவ்வொன்றும் சிறிய அளவு உடையனவாயினும் யாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது கணிசமான அளவுடையனவாக அவை இருந்தன. யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்திற்கு இவற்றின் பங்களிப்பும் கணிசமான அளவினதாக இருந்தது. இப்பொருட்களில் பனை மரமும், பனை உற்பத்திகளும் முக்கியமான ஏற்றுமதிகளாக



பகோடா நாணயம்

Image Source : marudhararts.com

இருந்தன. மலையாளம், கருநாடகம், மதுரை ஆகிய இடங்களிற்கு பனை மரம் ஏற்றுமதி செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தினதும், தென்னிந்தியாவினதும் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பனை மரங்களின் ஏற்றுமதியில் ஈடுபட்டனர். பனங்கிழங்கு, பனாட்டு என்பன கொழும்புக்கும், காலிக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. பனை மரம், இந்தியாவில் நல்ல விலையில் விற்பனையாயிற்று. ஒருகாலத்தில் பனை மரத்தின் ஏற்றுமதி அதிகரிப்பால் யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் உள்ள பனந்தோப்புக்கள் அழியும் நிலை ஏற்பட்டது. ஊர்மக்களும், முதலியார்கள் தலைமைக்கார்களும் முறைப்பாடு செய்ததை அடுத்து டச்சுக்காரர் பனை மரங்களைத் தறிப்பதைத் தடைசெய்யும் பிரமாணங்களை இயற்றினர். யாழ்ப்பாணத்தின் இன்னோர் ஏற்றுமதியாக சாயவேர் விளங்கியது. காரைநகர், தீவுப்பகுதிகள், மன்னார் ஆகிய இடங்களில் உற்பத்தியான சாயவேரைக் கொண்டு துணிகளுக்குச் சாயமிடுவதற்கான சாயம் தயாரிக்கப்பட்டது. இந்தச்சாயம் தென்னிந்தியாவின் நெசவுத் தொழிலாளர்கள் கிராமங்களில் விற்பனையாகியது. 17ஆம் நூற்றாண்டில் சாயவேர் ஏற்றுமதி பெருமளவில் நடைபெற்றது. சாயவேர்ச் செடியை அதிக அளவில் ஏற்றுமதிக்காகப் பிடுங்கிய காரணத்தால் அது அழிவுற்றிருக்கலாம். இதனால் 18 ஆம் நூற்றாண்டில் இது ஏற்றுமதி செய்யப்படவில்லை. உள்ளூரில் கிடைக்கும் மரத்தடிகளையும், பனை ஓலைகளையும் கொண்டு தயாரிக்கப்படும் பாய்கள், கூடைகள் போன்ற கைவினைப் பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. பனங்கட்டி, தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய் என்பனவும் ஏற்றுமதியாயின. 1680 ஆம் ஆண்டில் ஒரு வருட காலத்தில் யாழ்ப்பாணத்தின் துறைமுகங்களில் இருந்து 256 கப்பல்களில் பல்வேறு வகைப் பொருட்கள் ஏற்றி அனுப்பப்பட்டன.

## நெசவுத் தொழில்

டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தில் நெசவுத் தொழிலை வளர்ப்பதற்கு விரும்பினர். யாழ்ப்பாண அரசர் காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் சிறிய அளவில் நெசவுத் தொழில் வளர்ச்சியுற்றிருந்திருத்தல் வேண்டும். போத்துக்கேயர் ஆட்சியில் இது ஊக்குவித்து வளர்க்கப்படவில்லை. நெசவுப்பொருட்களின் வர்த்தகத்தில் பெருமளவில் ஈடுபட்ட டச்சுக்காரர், யாழ்ப்பாணத்தில் ஏற்றுமதிக்கான நெசவு உற்பத்தியை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தனர். 1659 - 60 காலத்தில் தென்னிந்தியாவில் பஞ்சம் ஏற்பட்ட போது மதுரையைச் சேர்ந்த கைக்கோளர் சாதி நெசவாளர்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் குடியேறுவதற்கு தூண்டுதல் அளிக்கப்பட்டது. கைக்கோளர் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தின் துறைமுகத்திற்கு அண்மையிலுள்ள கிராமங்களிலும், மன்னார் தீவிலும் குடியேறின. இந்தியாவிலிருந்து பருத்தி நூல் இறக்குமதி செய்து, நெசவு செய்வதற்காக கைக்கோளர் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் உற்பத்தி செய்த துணியினை டச்சுக்காரர் கொள்வனவு செய்தனர். தென்னிந்தியாவின் நிலமையில் முன்னேற்றம் ஏற்பட்டதும் இலங்கைக்கு குடிபெயர்வோர் தொகை குறைந்தது. யாழ்ப்பாணத்தில் நெசவுத் தொழில் தனித்த ஏற்றுமதித் தொழில்துறை என்று கூறுமளவிற்கு ஒருபோதும் வளர்ச்சியடையவில்லை. யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் உள்ளூர்த் தேவைக்கே போதுமானதாக இருக்கவில்லை. வங்காளத்திலிருந்தும், கர்நாடகக் கரையிலிருந்தும் நெசவுப் பொருட்கள் இங்கு இறக்குமதியாயின. இந்தியாவைவிட இங்கு சாயவேர் மூலம் கிடைத்த சாயம் தரத்தில் உயர்ந்ததாக இருந்ததால், டச்சுக்காரர் துணிகளுக்குச் சாயமிடும் தொழிலை யாழ்ப்பாணத்தில் ஊக்குவித்தனர். தென்னிந்தியாவில் இருந்து துணியை இறக்குமதி செய்து அதற்குச் சாயம் இட்ட பின்னர் ஐரோப்பாவிற்கும், பட்டேவியாவிற்கும் ஏற்றுமதி செய்தனர். தென்கிழக்காசிய நாடுகளிற்கும் இது பட்டேவியா ஊடாகச் சென்றது. இத்தொழிலில் சில தொழில்நுட்ப முன்னேற்றங்களும் ஏற்பட்டன. சாயவேரை உரலில் போட்டு இடித்துச் சாயத்தைப் பெறும் முறை முன்னர் இருந்தது. டச்சுக்காரர் வேரை அரைப்பதற்கு ஒரு இயந்திரத்தை அறிமுகம் செய்தனர். இந்த இயந்திரத்தை இரண்டு எருதுகளைக் கொண்டு இழுத்து இயக்க முடிந்தது. மண் பானைகளில் வேரைப் அவிப்பதற்கு பதிலாக செம்பினால் ஆன கேற்றல்கள் உபயோகப்பட்டன. வேரைச் சுத்தம் செய்வதற்கு குளத்தின் நீரை உபயோகித்தனர். அக்குளம், சேறு வாரி ஆழப்படுத்தப்பட்டது. இத் தொழில்நுட்ப முன்னேற்றங்களால் உற்பத்திச் செலவு குறைத்தது. சாயமிடுதல், வர்ணம் தீட்டுதல் ஆகிய தொழில்களும் வளர்ச்சியுற்றன. டச்சுக்காரர் 18 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை சாயமிட்ட துணிகளின் ஏற்றுமதியில் லாபம் பெற்று வந்தனர். நெசவாளர்களுக்கும், சாயமிடுவோருக்கும் வேலை வாய்ப்புக் கிடைத்தது. அவர்களின் உற்பத்திப் பொருட்கள் உள்ளூர் சந்தையிலும் விற்பனையாயின. கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கும் அவை ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ் ஏற்றுமதிகளாலும் குறிப்பிடத்தக்க அளவு லாபம் கிடைத்தது.

## யாழ்ப்பாணத்தின் வர்த்தக சமூகம்

யாழ்ப்பாணத்தில் பல் தேசங்களிலிருந்தும் வந்த வர்த்தகர்கள் குடியேறி இருந்தனர். வங்காளியர், தமிழ்ச் செட்டிகள், தெலுங்குச் செட்டிகள், தென்னிந்தியப் பரதவர்கள், மலையாளிகள், சோழியர், தமிழ் முஸ்லிம்கள், மாப்பிள்ளை முஸ்லிம்கள் என்ற பல அந்நிய தேசத்தவர்கள் ஏற்றுமதி வர்த்தகத்தைச் செய்தனர். யாழ்ப்பாணத்தின் துறைமுகத்திற்கு அருகில் இருந்த இடத்தில் போத்துக்கேயர் முஸ்லிம்களைக் குடியிருத்தினர். அவர்கள் இன்றும் அப்பகுதியில் இருந்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தின் நில உடைமையாளர் குடும்பங்கள் சிலவும், கரையோரப் பகுதிகளில் வாழ்ந்தோரும் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். உள்ளூரைச் சேர்ந்த இவ்வர்த்தகர்கள் ஏற்றுமதியாளர்களுக்கும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கும் நடுவே இடைத்தரகர்களாகச் செயற்பட்டனர். யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதி மக்கள் சிறு வள்ளங்களில் பொருட்களை ஏற்றிக்கொண்டு மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களிற்குச் சென்று வந்தனர். டச்சுக்காரர்களின் கொள்கைகள் உள்ளூர் வர்த்தக முயற்சிகளை வளரவிடாது தடை செய்வனவாய் இருந்தன. தாம் வர்த்தகம் செய்த பொருட்களை உள்ளூர் வர்த்தகர்களும் போட்டியிட்டுக் கையாள்வதை டச்சுக்காரர் அனுமதிக்கவில்லை. பொருட்களுக்கு தீர்வை உயர்வாக இருந்தது. கப்பல் போக்குவரத்திற்கும் அனுமதி பத்திரங்களைப் பெறவேண்டும் என்ற விதிமுறை இருந்தது.

## முத்துக் குளிப்பு


முத்துக் குளிப்பு மூலம் அரசாங்கத்திற்கு நல்ல வருமானம் கிடைத்தது. அத்தோடு அதன் மூலம் உள்நாட்டுக்குள் பணம் வந்து சேர்ந்தது. முத்து குளிப்பு நடைபெறும் வேளைகளில் அதனோடு இணைந்த பல தொழில் முயற்சிகளும் நடைபெற்றன. முத்துக் குளிப்பு ஆண்டு முழுவதும்

நடைபெறும் தொழில் அன்று. முத்துக்கள் எந்த அளவு விளைந்திருக்கின்றன, அவை வளர்ந்து முதிர்ச்சி பெற்றுள்ளனவா என்பனவற்றைப் பொறுத்து முத்துக் குளிப்பு ஆரம்பிக்கப்படும். மாதோட்டத்திற்கும் குதிரைமலைக்கும் இடைப்பட்ட கரையோரப் பகுதிகளில் முத்துக் குளிப்பு ஏதாவது ஒரு இடத்தில் நடைபெறப் போவதாக அறிவிப்பு செய்யப்பட்டதும், அப்பகுதியில் பல தொழில்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். தூத்துக்குடியையும், மன்னாரையும் சேர்ந்த சுழியோடிகளான முத்துக் குளிப்போர் அங்கு வந்து சேர்வார்கள். நல்ல விளைச்சல் உள்ள சந்தர்ப்பத்தில் 700 வரையான படகுகள் அங்கு முத்துக் குளிப்பில் ஈடுபடுத்தப்படும். 50 நாட்கள் வரை முத்துக் குளிப்போர் அங்கு தங்கித் தொழில் புரிவர். கரையோரங்களில் தங்களின் கொட்டில்களை அமைத்து பத்தாயிரம் பேர் வரை அக்காலத்தில் அங்கு தங்கி இருப்பர். அங்கு பலவிதமான பொருட்களையும் விற்பனை செய்யும் வியாபாரிகள் கடைகளை வைத்திருப்பர். யாழ்ப்பாணம், மன்னர் ஆகிய இடங்களில் இருந்தும் பிற இடங்களில் இருந்தும் வரும் வியாபாரிகள் அங்கு கூடுவர். பொருட்களின் கொள்வனவும் விற்பனையும் அங்கு இடம்பெறும். இந்தியா, பாரசீகம், அராபியா ஆகிய தேசங்களின் துறைமுகங்களில் இருந்து புறப்பட்டு செல்வம் படைத்த வணிகர்கள் முத்துக்களை கொள்வனவு செய்வதற்காக அங்கு வந்து சேர்வார்கள். இக்காலத்தில் அரசாங்கத்திற்கு வரி மூலம் கிடைக்கும் வருமானத்தின் அளவைக் கொண்டு அங்கு நடைபெற்ற வர்த்தக நடவடிக்கைகளின் அளவை மதிப்பிடலாம். 1753 ஆம் ஆண்டில் அரிப்புக் கடற் பகுதியில் நடைபெற்ற முத்துக் குளிப்பின்போது 65000 டச் புளோரின்கள் அரசாங்க வருவாயாக கிடைத்தது. யாழ்ப்பாணக் கொமாண்டரின் வரவு செலவு நிலை 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் உறுதியானதாக இருந்தது. அரசாங்கம் தனிப்பட்ட வரிகள் என்ற வகையில் பலவித வரிகளை அறவிட்டது. காணிகளுக்கும் காணிகளில் இருந்து கிடைக்கும் விளைபொருட்களிற்கும் வரிகள் அறவிடப்பட்டன.

## ஒல்லாந்த அரசின் வரவும் செலவும்

ஏற்றுமதி, இறக்குமதி வரிகள் மூலமும் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைத்தது. வீதிக் கடவைகளிலும், இறங்கு துறைகளிலும் வரிகள் விதிக்கப்பட்டன. நகரப் பகுதிகளின் கடைவீதிகளில் உள்ள கடைகளிலிருந்தும், பலவித கைவினைத் தொழில் செய்வோரிடமிருந்தும் வரிகள் அறவிடப்பட்டன. முத்துக் குளிப்பு எப்போது நடைபெறுகிறதோ அவ்வாண்டில் பெருந்தொகைப் பணம் அரச வருவாயாக கிடைக்கும். இவற்றை விட சில பொருட்களின் வர்த்தகம் அரசின் தனி உரிமையாக இருந்தது. யானைகள், சில துணி வகைகள், மிளகு, வாசனைப் பொருட்கள் என்பன அரசின் தனி உரிமை வர்த்தகப் பொருட்கள் ஆகும். வருவாயுடன் ஒப்பிடும் பொழுது யாழ்ப்பாண கொமாண்டர் பிரிவில் செலவுகள் குறைவு. டச்சுக்காரர்களின் நிர்வாக அமைப்புகளிலும் ராணுவ தளவாடங்களிலும் அதிக அளவில் செலவு செய்யும் தேவை இருக்கவில்லை. சட்டம் ஒழுங்கு தொடர்பான பிரச்சனைகள் குறிப்பிடும் படியாக இருக்கவில்லை. சுதேசிகளான அதிகாரிகளைக் கொண்டு உள்ளூர் நிர்வாகம் நடத்தப்பட்டது. அவர்களின் சம்பளம் மிகக் குறைவானதாகும்.

யாழ்ப்பாணத்தை முதன் முதலில் கைப்பற்றிய ஆண்டு தொடக்கம் டச்சுக்காரர்களுக்கு செலவிற்கு மிஞ்சிய அளவில் வருமானம் அங்கு கிடைத்தது. டச்சு ஆட்சியின் முடிவு வரை இந்நிலை நீடித்தது. விதிவிலக்காக சில சந்தர்ப்பங்களில் அரசாங்கக் கொள்கைத் தவறு காரணமாக அல்லது எதிர்பாராத நிகழ்வு காரணமாக ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது துறையில் இருந்து வருவாய் குறைவடைந்த சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆயினும் பொதுவாக அரச வருவாய் உயர்வாக இருந்தது. 1660 களில் ஆண்டுதோறும் யாழ்ப்பாணத்தின் வருமானம் 200000 முதல் 290000 டச் புளோரின்களாக இருந்தது. செலவுகள் 93000 முதல் 200000 வரை புளோரின் இருந்தது. மற்ற இரு மாகாணங்களினதும் வரவு செலவுகளோடு இதனை ஒப்பிடுதல் பயனுடையது. 1660 களில் இந்த இரு மாகாணங்களும் பற்றாக்குறையை வெளிப்படுத்தின. வருவாயை விட செலவுகள் கூடுதலாக இருந்தன. ஏனைய இரு மாகாணங்களில் இந்த பிரச்சனைகள் ஓரளவு தீர்க்கப்பட்ட பின்னர் 1670 களில் காலி மாவட்டத்தில் செலவை விட கூடிய வருவாய் ஈட்டப்பட்டு மேன்மிகை காட்டப்பட்டது. இருப்பினும் காலியின் மேன்மிகையை விட யாழ்ப்பாணத்தின் மேன்மிகை மிக உயர்வானதாக இருந்தது. யாழ்ப்பாணத்தோடு ஒப்பிடும்போது மற்ற இரு மாகாணங்களும் பரப்பளவில் பெரியனவாக இருந்தன. கொழும்பு, காலி என்ற இரு துறைமுகங்களின் ஊடாக நடைபெற்ற வர்த்தகத்தின் அளவு கூடியதாக இருந்தது. ஆயினும் அவற்றிலிருந்து கிடைத்த மொத்த வருமானம் சில வேளைகளில் யாழ்ப்பாணத்தை விட குறைவாக இருந்தது சில ஆண்டுகளில் வருமானம் செலவிற்குப் போதிய அளவாக இருக்கவில்லை. ஆகையால் முழு இலங்கையிலுமாக ஏற்பட்ட பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு யாழ்ப்பாணத்தில் கிடைத்த வருமானம் உதவி செய்தது.




**யாழ்ப்பாண நகர் வரைபடம் – 17 ஆம் நூற்றாண்டு**


Image Soruce : www.alamy.com

இலங்கையின் மற்ற பகுதிகளை விட யாழ்ப்பாணத்தில் இருந்து ஒல்லாந்தர் அதிகளவு வருமானத்தை ஈட்டினர். தனிநபர் வரியாகவும், நிலவரியாகவும் கூடிய அளவு வருமானம் அவர்களுக்குக் கிடைத்தது. இதற்கான காரணத்தை அறிந்து கொள்ளல் வேண்டும். யாழ்ப்பாணத்தின் நிலப் பரப்பளவும், சனத்தொகையும் ஒப்பீட்டு அளவில் குறைவு. நிலவளமும் குறைவு. ஆனால் டச்சுக்காரர்கள் அங்கு கூடிய அளவு வரியை அறவிடக்கூடியதாக இருந்தது. தென்பகுதியில் தொடர்ச்சியான யுத்தங்களால் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டது. மக்கள் பெரும் இன்னல்களை அடைந்தனர். தென்பகுதியுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்தில் அத்தகைய சீர்குலைவு ஏற்படவில்லை. ஒல்லாந்தர் போர்த்துக்கேயருடன் யாழ்ப்பாணத்தில் நடத்திய யுத்தங்கள் குறுகிய காலத்தில் முடிவடைந்தன. யாழ்ப்பாணம் விரைவில் வழமை நிலைக்குத் திரும்பியது. புதிய எஜமானர்களுக்கு ஏற்றபடி நடந்து கொள்ள யாழ்ப்பாணத்தவர்கள் முனைந்தனர். கிராம மட்டத்திலும் மாவட்ட நிலையிலும் நிர்வாக முறையில் தொடர்ச்சி இருந்தது. குறிப்பாக சட்டங்களிலும் நீதி ஒழுங்கமைப்பிலும் அதிக மாற்றங்கள் ஏற்படவில்லை. இதனால் வரி விதிப்பிலும் அதனை அளவீடு செய்வதிலும் தொடர்ச்சி இருந்தது. ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் அறவிடப்பட வேண்டிய வரி விபரத்தை போர்த்துக்கீசர் குறித்து வைத்தனர். டச்சுக்காரர் திட்டவட்டமான முறையில் நிர்வாக ஆவணப் பதிவுகளை பேணுவதில் கவனம் செலுத்தினர். *1674* ஆம் ஆண்டு முதல் டச்சுக்காரர் ஒவ்வொரு கிராமத்துக்கும் தனித்தனியான வரிப் பதிவேடுகளை எழுதி வைத்துக் கொண்டனர். தோம்புகள் என்று கூறப்படும் இப் பதிவேடுகள், யாழ்ப்பாணத்தில் தான் முதன்முதலில் எழுதப்பட்டன என்பது முக்கியமானது. இதனைவிட யாழ்பாணத்தின் வரிமுறையில் தனிநபர் மீதான வரி, சிங்கள கிராமங்களுடன் ஒப்பிடும்போது குறைவாக இருந்தது. தனிநபர் வரிகள் கூட ஊழியம் செய்வதற்கு பதிலாக பணத்தால் ஈடுசெய்யக்கூடியனவாக இருந்தன. வரியை பணமாக அறவிடுதல் முறை சரியாக கணக்கு வைப்பதற்கு உதவியது. ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் வரவேண்டிய வரிகளை

திட்டவட்டமாகக் கணக்கிடவும் அறவிடவும் முடிந்தது.

### டச்சு ஆட்சியில் வரி விதிப்பு

டச்சு ஆட்சியின் போது பல தனிநபர் வரிகள் பணக் கொடுப்பனவாக மாற்றப்பட்டன யாழ்ப்பாணத்தின் நான்கு பிரிவுகளிலும் தீவுப் பகுதிகளிலும் ஒவ்வொரு வயது வந்த ஆண்மகனும் செலுத்த வேண்டிய தலைவரி என ஒரு வரி இருந்தது. இதனை பணமாக (ஊழியமாக அல்லாது) செலுத்த முடிந்தது. பெரும்பான்மையினர் ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று பணம் வரியாக செலுத்தினர். வியாபாரிகளும் கைவினைத் தொழில் செய்பவரும் ஆறு பணம் வரை செலுத்தினர். விவசாயத் துறையை சேர்ந்த மக்களில் பணக்காரர்களும் ஏழைகளும் ஏறக்குறைய ஒரே அளவுத் தொகையையே தலைவரியாகச் செலுத்தினர். 1677 இல் யாழ்ப்பாணத்தில் தோம்புகள் எழுதும் வேலை நிறைவெய்தியது. அக்காலம் முதல் டச்சுக்காரர் தலைவரியை ஆண்டுககு 8 பணமாக உயர்த்தினர். போத்துக்கேயர் காலம் முதல் பொருளாதார நடவடிக்கைகள் அதிகரித்திருந்தன. காணிகளின் விலை உயர்வடைந்திருந்தது. பணப் புழக்கம் அதிகரித்து இருந்தது. மக்கள் வரிகளை பணமாகவே செலுத்தக்கூடிய நிலையில் இருந்தனர். 1677 இல் வரியை உயர்த்திய போது பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. அடுத்த ஆண்டில் வரியில் கழிவு கொடுத்து, விதிக்கப்பட்ட வரியை டச்சுக்காரர் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதன் பின்னர் பெரும்பான்மையான வரியிறுப்பாளர்கள் 2 அல்லது 3 பணம் வரியாக செலுத்தி வந்தனர்.




யாழ் கோட்டை வரைபடம்


Image Soruce : lankapura.com

கைவினைத் தொழில்களை செய்யும் தொழில் செய்பவரிடம் டச்சுக்காரர் வரியை அறவிட்டனர். இவ்வரி சேவைக் கடமையிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஒவ்வொரு கைவினைஞரிடமிருந்தும் அறவிடப்பட்டது. ஆரம்பத்தில் இவ்வரி, குறித்த தொழில்களைச் செய்யும் சாதிக்குரிய வரியாக இருந்தது. குறித்த சாதியின் கிராமத் தலைமைகாரன் இதனை அறவிட்டு வழங்க வேண்டும். தலைமைக்காரனிடம் குறிப்பிட்ட ஒரு தொகை அறவிடப்படும். அதனை அவர் தன் சாதிக்காரர்களிடம் பங்கு போட்டு அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். தலைமைகாரர்களும் வரி அறவிடுவோரும் இம்முறையினை துஷ்பிரயோகம் செய்தனர். இதனால் ஊழல் மலிந்தது. டச்சுக்காரர் 1696 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு தனி நபரிடமும் இருந்து அறவிடப்படும் வரியாக இதனை மாற்றினர். தோம்பு அட்டவணையில் வரி செலுத்த வேண்டியவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு தனிநபர்களிடம் வரி அறவிடப்பட்டமையால் சனத்தொகை பெருக்கத்திற்கேற்ப அறவிடப்பட்ட வரியின் தொகை உயரலாயிற்று.

அதிகாரி வரி என்றும் இன்னொரு வரி அறவிடப்பட்டது. இதுவும் தனிநபர் வரியாகும். கிராமத்தவர்கள் அதிகாரி என்னும் பதவியில் உள்ளவரின் பராமரிப்புக்காக இவ்வரியைச் செலுத்தினர். காலப்போக்கில் இவ்வரி மூன்று சாதியினரால் மட்டும் செலுத்தப்படும் வரியாக இருந்தது. குறித்த சாதியினரிடம் இருந்து ஒரு ஆளுக்கு ஒரு பணம் அதிகாரி வரியாக அறவிடப்படும். யாழ்ப்பாண இராச்சியக் காலத்தைய பழமையுடைய மூன்று சாதிகள் இவ்வரியை செலுத்தினர். இவ்வாறு செலுத்துவதை அச்சாதியினர் தமது அந்தஸ்தைக் குறிக்கும் கௌரவமாக கருதினர். தமது சாதி அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள விரும்பிய வேறு சில சாதிகளும் இவ்வாறு வரி செலுத்த விருப்பியதை அறிய முடிகிறது.

### ஊழியம்

தனியார் வரிகளை விட தேக ஆரோக்கியமுள்ள ஒவ்வொரு ஆணும் கட்டாய உழைப்பைச் சேவையாக வழங்க வேண்டியிருந்தது. இது “ஊழியம்” என அழைக்கப்பட்டது. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பொது வேலைகளின் போது இவ்வூழியம் உடல் உழைப்பாக வழங்கப்பட்டது. இச் சேவையைச் செய்யத் தவறுவோர் ஆண்டுக்கு ஒரு றிக்ஸ் டொலர் அல்லது 12 பணம்




**சின்னப்பா அரசரத்தினம் எழுதிய நூல்**

Image Soruce : noolaham.net

தண்டப் பணமாக செலுத்த வேண்டும். பணம் படைத்த விவசாய சாதியினரும், பரதேசிகள் எனப்படும் வெளிநாட்டவர்களும், செட்டிகளும், பிறவர்த்தகர்களும், முஸ்லிம்களும் உடல் உழைப்பாக ஊழியம் செய்யாது பணமாக இவ்வரியை செலுத்தினர். இவர்கள் தவிர பிற யாவரும் ஊழியம் செய்தனர். டச்சுக்காரர் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட பொது வேலைகள் பல இக்கட்டாய உழைப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. அணைக்கட்டுகளையும், கால்வாய்களையும் திருத்தல், புதிதாக அமைத்தல், பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஏற்றி இறக்குதல், பல்லக்குகளில் ஆட்களைச் சுமந்து செல்லல், வீதிகளை அமைத்தல், கோட்டைகளையும் பாதுகாப்பு அரண்களையும் கட்டுதல், மரங்களைத் தறித்து கொடுத்தல், வேறு பல சேவைகளை செய்தல் என்பன ஊழிய வேலைகளில் அடங்குவனமாக இருந்தன.

ஆரம்பத்தில் ஊழியத்திற்கு பதிலாக தண்டப் பணத்தை வசதி படைத்தவர்கள் செலுத்தினர். காலப்போக்கில் பணமாக செலுத்துபவர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்தது. நாட்டில் அக்காலத்தில் பணப் புழக்கம் அதிகரித்துச் சென்றதை இது எடுத்துக் காட்டுகிறது. ஊழியம் செய்ய முன்வருவோர் தொகை, குறைவதைக் கண்ட டச்சுக்காரர் தமது வேலைகளை செய்விக்க ஆட்கள் கிடைக்க மாட்டார்கள் என்று எண்ணி வரியை இருமடங்காக அதிகரிப்பதற்கு யோசனை செய்தனர். ஊழியத்திற்கு பதில் தண்டப்பணத்தை அறவிடும் முறையை முற்றாக ஒழிப்பதைப் பற்றியும் சிந்தித்தனர். 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஊழிய தண்டப் பணமாக கிடைத்த வருமானம் 75000 புளோரின்களாக இருந்தது.

### தோம்பு எனப்படும் நிலவரி அட்டவணைகள்

வேறு பல வகை வரிகளும் ஒல்லாந்தர்களால் அறவிடப்பட்டன. இவ்வரிகள் நிலத்திலிருந்து கிடைக்கும் உற்பத்தி பொருட்கள் மீதான வரிகளாகும். நில வாடகைக்கான பதிவேடுகள் தமிழில் எழுதப்பட்டன. இவை யாழ்ப்பாண அரசின் காலத்தில் இருந்து பேணப்பட்டு வந்தன. நிலத்தின் உரிமை, குறித்த நிலத்திற்கான வாடகை என்னும் இரு விடயங்களில் டச்சுக்காரர் கவனம் செலுத்தினர். அவர்களது ஆட்சிக்காலத்தில் கடைசி ஐம்பது வருடங்களில் நிலவரி அட்டவணைகள் ஒழுங்காகப் பேணப்பட்டன. நில அளவையாளர்கள் குழு ஒன்று ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று கிராமத் தலைமைக்காரர் வைத்திருந்த நிலப் பதிவேடுகளை பரிசோதித்தது. நிலத்தை அளந்து நிலம் பற்றிய விவரங்களை பதிவு செய்தது. நிலவரைபடம் ஒன்றை தயாரித்தது. இந்த வேலையின் நோக்கம் யாதெனில் கிராமங்களில் செல்வாக்குள்ள மனிதர்கள் வரி கொடுக்காமல் மறைத்து வைத்திருக்கும் நில உடைமை விபரங்களை வெளிக்கொணர்வதாகும். இவர்கள் இவ்வாறு மறைத்து வைத்திருந்ததன் மூலம் அரசுக்கு வர வேண்டிய வரியை கொடுக்காது ஏய்த்து வந்தனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. புதிய தோம்புகளை எழுதிய பின்னர் டச்சு அரசின் வருமானம் 70000 புளோரின்களாக அதிகரித்தது. ஒவ்வொரு கிராமத்திற்கும் உரிய நிலம் அந்த கிராமத்திற்குரிய மரபு வழி பெயரால் குறிப்பிடப்பட்டது. ஒருவருக்கு உடைமையாக உள்ள நிலத்தின் நெற்காணி எவ்வளவு, தோட்டக்காணி எவ்வளவு என்ற விபரங்களும் குறிப்பிடப்பட்டன. குறித்த நிலத்தில் வீடு உள்ளதா, அங்கு எவ்வளவு பனை - வேம்பு - இலுப்பை மரங்கள் உள்ளன போன்ற விடயங்களும் இத்தோம்புகளில் பதியப்பட்டன.

நிலத்திற்காக ஒரு வரி அறவிடப்பட்டதோடு அந்நிலத்தில் உள்ள தோட்டம் அங்குள்ள பழ மரங்கள் என்பனவற்றும் வரி அறவிடப்பட்டது. தோம்புகளில் மரங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டதால் அதன்படி வரியைக் கணக்கிட முடிந்தது. பனை, வேம்பு, இலுப்பை ஆகிய மரங்கள் ஒவ்வொன்றிற்கும் வரி சேர்க்கப்பட்டு நிலத்தின் வரியுடன் கூட்டி கணக்கிடப்பட்டது.

## தானிய வரி

நிலத்திலிருந்து அறுவடைசெய்த தானியத்திற்கு வரியாக, விளைவின் பத்தில் ஒரு பங்கு அறவிடப்பட்டது. விவசாயிகள் தானியவரி பற்றி அடிக்கடி முறைப்பாடு செய்து வந்தனர். நிலத்திற்கு அறவிடப்பட்ட வரிக்கும் மேலாக, அறுவடை செய்த தானியத்திற்கு எனவும் வரி அறவிடப்பட்டது. இது விவசாயிகளின் வரிச் சுமையை அதிகரித்தது. இந்த வரியைக் கழித்துவிடும்படி விவசாயிகள் பலமுறை வேண்டுகோள் விடுத்தபோதும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. அறுவடைக் காலத்தில் டச்சுக்காரர் நெல்லை வரியாக அறவிட்டு தமது இராணுவத்தினதும் சிவில் உத்தியோகத்தினரதும் உணவுத் தேவைக்காக உபயோகித்தனர்.

## வரி எதிர்ப்புக் கிளர்ச்சிகள்

வரி அறவிடுவதற்கான தோம்புகளை பதிவு செய்தமையினால் அரசு மீதான அதிருப்தி அதிகரித்தது. நவீன காலத்தில், வரலாற்றில் முதன்முதலாக விவசாயக் குடியானவர்களின் கிளர்ச்சி ஏற்பட்டது. பதிவுக்காரர்களான உத்தியோகத்தர் குழு, கிராமங்களுக்குச் சென்றபோது, அந்தக்குழுவினர் கிராமத்தில் நிலத்தின் உடைமையாளர்களாக உள்ளவர்களை தமது உறுதிகளுடன் சமுகமளிக்கும்படி கட்டளையிடுவர். இதனால் தமக்கு கூடிய வரி விதிக்கப்பட போகிறதே என்று மக்கள் அஞ்சினர். பதிவு நடைமுறையை கைவிடும்படி அரசாங்கத்துக்கு முறையிட்டனர். பதிவு நடைமுறையை கைவிட்டால் இப்போது அறவிடப்படும் வரியைவிட இரண்டு மடங்கு வரியைச் செலுத்துவதாகவும் கூறினர். பெருந்தொகையான காணிகள் பதிவு செய்யப்படாமல் இருந்தன. அந்தக்காணிகளின் அறுவடை மீதான வரி அறவிடப்படவில்லை. கிராமங்களில் செல்வந்தர்களான நில உடமையாளர்கள், இதனால் வரியில் இருந்து தப்பிக் கொண்டனர் என்ற உண்மைகள் தெரியவருகின்றன. இந்தச்செல்வந்தர்கள் கிராமத்தில் ஏழைகளை வரி உயர்வுக்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தூண்டிவிட்டார்கள். ஏழைகள் மத்தியிலும் வரி உயர்வு பற்றிய அச்சம் இயற்கையாகவே இருந்தது. கிராமத்துத் தலைவர்களின் தலைமையில் திரண்ட கிராமத்து ஏழைகள் கிராமங்களைவிட்டு வன்னிக்குத் தப்பிச் சென்றனர். இவ்வாறு கிராமங்களை விட்டு குடிபெயர்தல், தென்னாசியா எங்கணும் விவசாயக் குடியான்களால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒன்றாகும். வடமராட்சி, தென்மராட்சி என்ற பகுதிகளிலும் இவ்விதமாக விவசாயிகள் எண்ணிக்கை குறைந்தது. வன்னியைச் சேர்ந்த பனங்காமத்துக் கயிலை வன்னியன், தப்பியோடியவர்களுக்கு பாதுகாப்பு அளித்தான். வலிமைமிக்க கயிலை வன்னியன் டச்சுக்காரரோடு பகைமை பூண்டவனாய் அவர்களை எதிர்த்து வந்தான். தப்பியோடிச் சரண்புகுந்து வன்னிக் கிராமங்களில் தங்கிய விவசாயிகள் டச்சுக்காரருக்கு வரி கொடுக்காமல் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

## ஆனையிறவு இராணுவ முகாம்

யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளுக்கு கிளர்ச்சி பரவாதிருப்பதற்காக டச்சுக்காரர்கள் கிளர்ச்சியை அடக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இடையே கிளர்ச்சியாளர்களிடையே தொடர்பாடலைத் தடுத்தனர். வன்னியிலிருந்து தென்மராட்சிக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்திச் சேதம் விளைவித்த கொள்ளைக் கூட்டத்தை அடக்கினர். இதற்காக ஆனையிறவில் தற்காலிகமாக இராணுவமுகாம் ஒன்றை அமைத்து யாழ்ப்பாணத்தை வன்னியிலிருந்து தொடர்பு இல்லாமல் பிரித்து வைத்தனர். இதனால் கிளர்ச்சி வலுவிழந்து அடங்கிப்போனது. சில மாதங்கள் கழிந்ததும் மக்கள் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பினர். டச்சுக்காரர்கள் காணிப் பதிவுகளை மீளத் தொடங்கி 1677 ஆம் ஆண்டில் அவ்வேலையை முடித்தனர்.

## இறக்குமதிப் பொருட்களின் தட்டுப்பாடு

டச்சுக்காரர் ஆட்சியில் மக்களின் பொருளாதார நிலை எவ்வாறு இருந்தது என்பது குறித்து கருத்துப் பேதத்திற்கும், ஊகங்களுக்கும் இடம் உள்ளது. யாழ்ப்பாண மக்கள் சுபீட்சமாக வாழ்ந்தனரா அல்லது வறுமையில் வாடினரா என்பது பற்றி டச்சு அதிகாரிகளின் எழுத்துகளிலும் முரண்பாடான கருத்துக்கள் உள்ளன. டச்சுக்காரர் ஆட்சியின் தொடக்க காலத்தில் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர் என்பது தெளிவு. டச்சுக்காரர் வர்த்தகத்திலும், வியாபார நடவடிக்கைகளிலும் கட்டுப்பாடுகளை விதித்ததால் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. தொழில்நுட்பத்தில் தேர்ச்சி உடையவர் தொழில் முயற்சிகளில் ஈடுபடுதல் தடைப்பட்டது. வங்காளம், கோல்கொண்டா, தஞ்சாவூர், மதுரை போன்ற இடங்களோடு இருந்துவந்த தூரதேச வர்த்தகம் பெரும் பாதிப்புக்கு உள்ளானது. உள்ளூர்த் தரகர்கள் இத் தூரதேசத்து வர்த்தகர்களுக்கு உதவிசெய்து வருவாய் ஈட்டி வந்தனர். டச்சுக்காரர்களின் வர்த்தகக் கொள்கையால் அந்நிய வர்த்தகர்களுக்கு வருமானம் இல்லாதுபோயிற்று. இந்தியாவில் இருந்து இறக்குமதியான பொருட்கள், டச்சு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டதால் அதனால்

வர்த்தகர்களுக்குக் கிடைத்த லாபம் அரசுக்கு கிடைக்கலாயிற்று. அத்தோடு இறக்குமதிப் பொருட்களின் விலைகள் உயர்ந்தன. தம் கப்பல்களில் பொருட்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டு வர்த்தகர்களின் எண்ணிக்கை குறைவடையத் தொடங்கியது. இதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. முக்கியமாக அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டது. 17 ஆம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாணம், தன் அரிசித் தேவைக்காக இறக்குமதியில் தங்கியிருக்கும் நிலையை அடைந்தது. அரிசித் தட்டுப்பாடு அதன் சந்தை விலையை பன்மடங்கு உயர்த்தும் விளைவை கொண்டது. அரிசி விலை உயர்வின் காரணமாக கூலியின் அளவும் உயர்ந்து சென்றது. இறக்குமதித் தடையால் பாதிப்புற்ற இன்னொரு நுகர்வுப் பண்டம் புடவையாகும். தமிழர்கள் தமது புடவைத் தேவையை இந்திய இறக்குமதி மூலமே நிறைவு செய்தனர். டச்சுக்காரர் துணி, புடவை வகைகள் மீது கூடிய வரியை விதித்தனர். இதனால் தனியார் வர்த்தகம் தடைப்பட்டது. புடைவைகளின் இறக்குமதி குறைந்து, விலைகள் உயர்ந்தன. உள்ளூர் நெசவு உற்பத்தியாளர்களால் யாழ்ப்பாண மக்களின் தேவையை ஈடுசெய்ய முடியவில்லை.




Painting of Jaffna fort by C. Steiger in 1710

Image Source : www.archaeology.lk

### பணப் பொருளாதாரம்

1680 களில் யாழ்ப்பாணப் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. இவ்வாறு வாதிடுகின்ற அதிகாரிகள் அதற்குச் சான்றாக பணப் புழக்கம் அதிகரித்திருந்ததை சுட்டிக்காட்டுகின்றனர். நெற்காணியின் விலையும் 50 வருட எல்லையில் உயர்ந்ததென்றும், காணியின் தரத்தைப் பொறுத்து இவ்விலை உயர்வு 60 வீதம் முதல் 120 வீதம் வரை வேறுபட்டதாக இருந்தது என்றும் கூறப்படுகிறது. உழைப்பாளர்களின் கூலி 100 வீதத்தால் அதிகரித்தது என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். அத்தோடு பெரும் எண்ணிக்கையினர் தமது ஊழியக் கடமைக்குப் பதில், பணமாக தண்டப் பணத்தைச் செலுத்த முன்வருகின்றனர் என்றும் இவ்வாறு வரிப் பணம் செலுத்துவோர் தொகை அதிகரித்தல் பொருளாதாரச் சுபீட்சத்தின் அறிகுறி என்றும் குறிப்பிட்டனர். இது உண்மையாக இருக்கலாம். ஆனால் நாம் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வையும், கூலியின் உயர்வையும் தொடர்புபடுத்தியும் பார்த்தல் வேண்டும். அத்தோடு பணப் புழக்கத்தின் அதிகரிப்பால் சமூகத்தின் எந்தப் பிரிவினர் நன்மை பெற்றனர் என்பதையும் நோக்குதல் வேண்டும். தென்னாசியப் பிராந்தியத்தில் அடிக்கடி ஏற்பட்ட வளர்ச்சியும், பொருளாதார மந்தமும், பஞ்சங்களும் உள்நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவித்தன. இதனால் வேலையின்மையும் அதிகரித்தது. ஒல்லாந்தர் காலத்தில் ஏற்பட்ட பணப் பொருளாதாரத்தின் வளர்ச்சியால் எத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டன என்பதும் சிந்தனைக்குரிய விடமாகும்.

### சம்பளங்களும் கூலிகளும் அரிசி விலையும்

வேலைவாய்ப்பு, பொருளாதார நடவடிக்கைகள் என்பனவற்றில் டச்சுக் காலத்தில் தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்பட்டதைக் காட்டும் பல குறி காட்டிகள்

**யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளுக்கு கிளர்ச்சி பரவாதிருப்பதற்காக டச்சுக்காரர்கள் கிளர்ச்சியை அடக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இடையே கிளர்ச்சியாளர்களிடையே தொடர்பாடலைத் தடுத்தனர். வன்னியிலிருந்து தென்மராட்சிக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்திச் சேதம் விளைவித்த கொள்ளைக் கூட்டத்தை அடக்கினர். இதற்காக ஆனையிறவில் தற்காலிகமாக இராணுவமுகாம் ஒன்றை அமைத்து யாழ்ப்பாணத்தை வன்னியிலிருந்து தொடர்பு இல்லாமல் பிரித்து வைத்தனர்.**

*உள்ளன. ஓரளவிற்கு கல்விகற்ற இளைஞர்கள் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கீழ்நிலை நிர்வாகப் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர். கம்பெனியின் அலுவலகங்களில் இவர்களில் பலர் மொழிபெயர்ப்பாளர்களாகவும், வருவாய்த் துறையில் பல்வேறு பதவிகளிலும், பாடசாலைகளில் ஆசிரியர்களாகவும் கடமையாற்றினர். இவற்றால் நல்ல வருவாயைப் பெறமுடிந்தது. பாடசாலை ஆசிரியர்களாக இருந்தோருக்கு காணிகளின் விற்பனை மாற்றங்கள் போன்ற நொத்தாரிஸ் வேலை மூலம், முத்திரை வரியில் ஒருபகுதி தரகாகக் கிடைத்தது. வேறுபல சலுகைகளும் கிடைத்தன. மேற்குறித்த வகையான உத்தியோகர்களுக்கு 8 முதல் 9 புளோரின் வரை மாதச் சம்பளம் கிடைத்தது. 24 புளோரின் ஆகக்கூடிய மாதச் சம்பளமாக இருந்தது. தச்சுத் தொழிலாளர், கொல்லர்கள், கல்தச்சர்கள் போன்றவர்களுள் தொழில்திறன் மிக்கவர்களுக்கு 18 புளோரின்கள் வரை மாதக் கூலியாகப் பெறமுடிந்தது. இவ்வகைப் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வெண்சட்டை உத்தியோகத்தர்களுடன் ஒப்பிடக்கூடியவர்களாக இருந்தனர். பயிற்சி பெறாத உடல் உழைப்புக் கூலிகளுக்கு ஒரு மாதத்திற்கு 6 புளோரின் கூலி வழங்கப்பட்டது. கூலித் தொழிலுக்கு தீவிரத் தட்டுப்பாடு காணப்படும் காலங்களில் கூலிக்கும் மேலதிகமாக ஒரு பறை அரிசியும் வழங்கப்பட்டது. பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்கும் பயிற்றப்படாதோருக்கும் பெரியளவில் தேவை இருந்தது. அரசாங்கம் அவர்களுக்கு கூலி வேலை வழங்கியது. தனியாரிடமும் கூலி வேலை செய்ய முடிந்தது.*

*கூலி விகிதங்களை அரிசியின் விலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பயன்தருவது. ஏனெனில் அரிசியின் விலையே கூலியை நிர்ணயிப்பதாய் இருந்தது. ஏனெனில், அரசியின் நிரம்பல் போதியதாகவுள்ள காலங்களில் ஒரு பறை அரிசியின் விலை 3/4 புளோரின் ஆகும். 32 கொத்து அரிசி ஒரு பறை அளவுடையது. ஒரு பறை, 44 இறாத்தல் அளவிற்குச் சமமானது. அரிசி நிரம்பல் குறைந்த காலத்தில் அதன்விலை ஒரு பறை 1 1/2 புளோரின் அளவுக்கு உயரும். சிலவேளை இதனைவிட உயர்விலையிலும் விற்கப்படும். ஆகக் குறைந்த மாதக்கூலியான 6 புளோரின்களை பெறும் ஒரு கூலியாளின் குடும்பம், சம்பளத்தின் அரைப் பங்கினைக் கொண்டு அரிசியைக் கொள்வனவு செய்தால், 4 பறை அரிசி கிடைக்கும். ஆகையால் கூலி சீவியத்திற்குப் போதியது என்றே கூறலாம். ஒரு குடும்பத்திற்கு தேவையான உடை, மீன், கறிச்சரக்குகள், எண்ணெய் போன்ற எல்லாப் பொருட்களையும் விலை கொடுத்து சந்தையில் உயர்விலைகளில் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. கைவினைஞர்களும், விவசாயிகளும், சமூகத்தின் செல்வந்தப் பிரிவினரும் தமது வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை வசதிகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. மேல் குறிப்பிட்டது போன்று சமூகத்தின் வறியபிரிவினர் தங்கள் வருமானத்தின் கணிசமான தொகையை வரியாகச் செலுத்தினர். அவர்கள் கொடுக்க வேண்டிய வரி நிலையான ஒரு தொகையாக இருந்தது. ஆனால் வேலையும் உழைப்பும் வருமானமும் எல்லா மாதங்களிலும் ஒரே சீரானதாக இருக்கவில்லை. 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரிசியின் விலை இரண்டு மடங்காக உயர்ந்தது. ஒரு பறை அரிசி 1 1/2 புளோரின் விலை விற்கப்பட்டது. ஆயினும் இந்த அளவுக்கு கூலிகள் உயரவில்லை. கிடைக்கும் சான்றுகளை ஆராய்ந்து பார்க்கும்போது பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.*

### அடிமை முறை

*அக்காலத்து ஆவணங்களில் அடிமை முறை பற்றி மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படுவதைக் காணலாம். அடிமைகள் என்ற வகைப்படுத்தப்பட்டோரில் பெரும்பான்மையினர் தாழ்த்தப்பட்ட சாதியினராக இருந்தனர். இவர்கள் எஜமான்களால் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டவர்களாக இருந்தனர். இவர்களுள் ஒரு பகுதியினர் காலப்போக்கில் அடிமை நிலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டனர். இருந்தபோதும் அவர்கள் தமது எஜமான்களின் காணிகளில் தொடர்ந்து குடியிருந்து வரலாயினர். அத்தோடு எஜமான்களுக்கு சில*

சேவைக்கடமைகளைச் செய்துவந்தனர். சட்டம் தொகுக்கப்பட்டபோது அடிமைகளின் உரிமைகள் அதில் வரையறுத்துக் கூறப்பட்டன. முதலியார்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோதும் சட்டக்கோவையில் உரிமைகள் குறிப்பிடப்பட்டன. டச்சுக்காரர் அடிமைகளைக் கொண்டு வேலை செய்வித்தபோதும் கூலியை வழங்கத் தொடங்கினர். இந்தக் கூலியைப் பெற்றோர் அதனைச் சேமித்தனர். இந்தச் சேமிப்பை தமது எஜமான்களுக்குக் கொடுத்து அடிமை நிலையில் இருந்து விடுதலை பெற்றனர்.




ஒல்லாந்து கிழக்கிந்திய கம்பெனி இலட்சினை

Image Source : threeblindmen.photoshelter.com

இந்தியாவிலிருந்து அடிமைகள் இறக்குமதி செய்யப்பட்டதால் அடிமைகளின் எண்ணிக்கை இந்தக்காலத்தில் அதிகரித்தது. ஆசியாவின் கரையோர நாடுகளில் இக்காலத்தில் அடிமை வியாபாரம் சுறுசுறுப்புடன் இயங்கியது. பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவில் நிலவிய அமைதியின்மையும், குழப்ப நிலையும் பெரும் எண்ணிக்கையில் ஆட்கள் தம்மை அடிமைகளாக விற்கும் நிலையை உருவாக்கியது. டச்சுக்காரர்கள் அடிமைகளை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்தனர். ஆனால் இவர்களைவிட யாழ்ப்பாணத்தின் செல்வந்தர்களே கூடியளவு அடிமைகளைக் கொண்டு வந்தனர். அடிமைகள் தங்களை விடுவித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். டச்சுக்காரர்களின் அடிமைகளாக இருந்த நளவர்கள், 1784 ஆம் ஆண்டில் தம்மை அடிமைச் சேவைக் கடப்பாட்டிலிருந்து விடுவிக்கும் படியும், அதற்காக தாம் ஆண்டுக்கு பத்துப் புளோரின்கள் செலுத்துவதாகவும் சம்மதம் தெரிவித்துக் கோரிக்கை விடுத்தனர். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு அடிமைக்கும் 2 1/4 புளோரின்கள் வரி அறவிடப்பட்டது. 1694 96 காலத்தில் கருநாடகக் கரைப்பகுதியிலிருந்து 35879 அடிமைகள் இறக்குமதி செய்யப்பட்டனர். இவ்வடிமைகளை தனிநபர்களான செல்வந்தர்கள் இறக்குமதி செய்தனர். ஒவ்வொரு அடிமைக்கும் 11 பணம் அல்லது 21 புளோரின்கள் வரி இவர்களால் கொடுக்கப்பட்டது. இந்த அடிமைகள் வீட்டுவேலைக்கும், தோட்ட வேலைக்கும் உபயோகிக்கப்பட்டனர். டச்சுக்காரர்களுக்குச் செய்யவேண்டிய ஊழியத்தைச் செய்வதற்காகவும் அடிமைகள் பயன்பட்டனர். இவ்வாறு அடிமைகளை ஊழியத்திற்கு அனுப்புவதன் மூலம் தாம் செய்ய வேண்டிய ஊழியத்திற்காக கொடுக்க வேண்டிய தண்டப்பணத்தை செலுத்துவதிலிருந்து எஜமான்கள் தப்பிக் கொண்டனர்.

## ஒல்லாந்தர் காலத்தில் எழுச்சி பெறும் யாழ்ப்பாண வர்த்தக சமூகம்

பணக்கார வகுப்பினர்கள் பல்வேறு பொருளாதார வாய்ப்புகளைப் பயன்படுத்தி நன்மை பெற்றனர். வர்த்தகர்களும், தரகர்களும் பெருஞ் செல்வத்தை ஈட்டினர். தரகு வேலையில் நல்ல லாபம் கிடைத்தது. புகையிலைத் தரகும், யானை ஏற்றுமதித் தரகும் குறிப்பாக நல்ல வருவாயைத் தந்தன. புகையிலைத் தரகர்கள், மலையாளி வர்த்தகர்கள் திருவிதாங்கூர் அரசனின் முகவர்கள் ஆகியவர்களுடன் வர்த்தகப் பேரம் செய்தனர். யானை ஏற்றுமதித் தரகர்கள் இந்தியாவின் செல்வந்த வர்த்தகர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். வங்காளத்தின் நவாப். கோல்கொண்டா அரசன், தஞ்சை நாயக்கர் முதலிய பலமிக்க அரசர்களுடன் வர்த்தகம் செய்தனர். யாழ்ப்பாணத்திற்கு வந்து தங்கியிருந்து வர்த்தகம் செய்தவர்களும் பலர் இருந்தனர். இலங்கையின் பிற பாகங்களுடனும் வர்த்தகம் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தின் வர்த்தகர்களில் பல சமூகப் பிரிவினர்கள் இருந்தனர். செல்வந்த நில உடைமையாளர்கள் பலர் வர்த்தகர்களாயினர். இவர்களுக்கு முதலியார்கள் என்ற பட்டப் பெயரும் இருந்தது. கடலோடிகளும், மீன்பிடித் தொழில் செய்வோருமான சிலரும் வர்த்தகர்களாய் இருந்தனர். யாழ்ப்பாணத்தில்

குடியேறியிருந்த செட்டிகளும் பரம்பரையாக வர்த்தகம் செய்பவராய் இருந்தனர். இவர்களை விட யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டினரான வர்த்தகர்களும் தங்கி இருந்தனர். இவ் வெளிநாட்டவர்களில் சிலர் செல்வாக்குமிக்க வர்த்தகர்களாவர். யாழ்ப்பாணத்து முஸ்லிம்களும் இக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் வர்த்தகத்தில் முக்கியமான பங்காற்றினர். 1675 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 300 முதல் 400 வரையான முஸ்லிம் குடும்பங்கள் இருந்தன. இவர்களில் பெரும்பங்கினர் இலங்கையின் கிழக்கு, மேற்கு கடற்கரையோரத்தில் சிறு வர்த்தகத்தில் ஈடுபட்டனர். இவர்களுள் சிலர் மதுரை, தஞ்சாவூர் போன்ற இடங்களுடனான வர்த்தகத்தில் ஈடுபட்டனர். முஸ்லிம்களுள் சிலர் செல்வந்தர்களான தொழில் முயற்சியாளர்களாக இருந்தனர். தம் வர்த்தக முயற்சிகளை பல்வேறு துறைகளுடன் விரிவாக்கம் செய்து ஊகவாணிபத்திலும் இம் முஸ்லிம்கள் ஈடுபட்டனர். இந்து வர்த்தகர்களோடு இணைந்தும் வர்த்தகம் செய்தனர். வர்த்தகம் செய்த உள்ளூர்க்காரர்கள் வரிகளைக் குத்தகைக்கு எடுத்து அறவிடும் வேலையிலும் ஈடுபட்டனர். இக்காலத்தில் ஐரோப்பாவிலும் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை குத்தகையாகப் பெற்று அறவிடும் வியாபார நடவடிக்கை பரவலாக இருந்தது. டச்சுக்காரர் இலங்கையில் இம்முறையைப் புகுத்தினர். அவர்கள் பல வரிகளை பண்டங்கள் மீதும், சேவைகள் மீதும் விதித்தனர். இவ்வரிகளை ஆண்டுக் குத்தகைக்கு ஏலத்தில் விடுவர். இந்தக் குத்தகைகளை உள்ளூர் வர்த்தகர்கள் பலர் ஏலத்தில் விலைகூறிப் பெற்றுக் கொள்வர். இந்த ஏல வியாபாரம் சிறு தொகையிலிருந்து பெருந்தொகை வரை வேறுபட்டது. உதாரணமாக அராலியின் மீன் சந்தையின் குத்தகை 380 புளோரின்கள் ஆகும். ஆயின் யாழ்ப்பாணத் துறைமுகத்தின் சுங்கவரிக் குத்தகை 1761 ஆம் ஆண்டில் 50,000 புளோரின்களாக இருந்தது. இந்தக் குத்தகையை யாழ்ப்பாணத்தவர்களான பல வர்த்தகர்கள் ஒன்று சேர்ந்து குத்தகைக்குப் பெற்று நடத்தினர்.

இதில் பல சாதியைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டனர். முஸ்லிம்களும் வரிக் குத்தகை வியாபாரத்தில் ஈடுபட்டனர். இது போன்ற வியாபார முயற்சிகளில் பல சாதிகளைச் சேர்ந்தோரும் ஒன்று சேர்ந்து பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவது வழக்கம். இவ்வாறான ஒத்துழைப்பு பிற துறைகளிலும் காணப்பட்டது எனலாம். யாழ்ப்பாணத்தில் பணக்காரர்களான வர்த்தக சமூகம் ஒன்று ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

## பன்முகப்பட்ட பொருளாதார வளர்ச்சியும் மந்தநிலையும்

டச்சு ஆட்சியின் கீழ் தமிழ்ப்பகுதிகளில் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியும், ஸ்திரநிலையும் இருந்து வந்தது என்று இக்கட்டுரையின் முடிவுரையாகக் கூற விரும்புகிறேன். நாட்டின் பொருளாதார அடித்தளம் இக்காலத்தில் இடப்பட்டது. யாழ்ப்பாணத்தின் நான்கு பகுதிகளிலுமுள்ள கிராமங்களில் சிற்றுடைமைக் குடியான் விவசாயம் நிலைபேறுடையதாக அமையலாயிற்று. இந்தக் கிராமங்களில் பல, காசுப் பயிர் உற்பத்திக்கும், சந்தையை நோக்கிய விவசாயத்திற்கும் மாறின. இரண்டாவதாக கடலோடுதலும், வர்த்தக முயற்சிகளும் வளர்ச்சியுற்றன. வர்த்தகத்தில் ஈடுபட்ட குழுக்கள் கடலில் கப்பல்களைச் செலுத்தி வர்த்தகம் செய்தல், மீன்பிடிப் பொருட்களை வாங்குதலும் விற்றலும், தரகு வியாபாரம் ஆகியவற்றில் ஈடுபட்டன. இதனால் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் செல்வந்தர்கள் தோற்றம் பெற்றனர். கைவினைஞர்களுக்கும் பல்வேறு கைப்பணித் தொழில் செய்வோருக்கும் பெரும் வேலைவாய்ப்புப் பெருகியதோடு தொழிற்திறன்களும் வளர்ச்சியுற்றன. விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் ஆகிய எல்லாத் துறைகளிலும் தொழிலாளர்கள் கூலியானது பிழைப்பு மட்டத்தை விட உயர்வாக இருந்தது. பணப் புழக்கம் அதிகரித்திருந்தது. அத்தோடு இக்காலத்தில் குடாநாட்டின் சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக மேன்மிகையான மக்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்து குடியேறுவதும் நடைபெற்றது. நெல்லும் பிற தானிய வகைகளும் வன்னியிலிருந்து குடாநாட்டுக்கு கொண்டு வரப்பட்டன.

டச்சு ஆட்சியில் வடபகுதியின் பொருளாதாரம் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக அமைந்தது. லாபம் தரும் பண்டங்களின் வர்த்தகத்தில் டச்சுக்காரர் தனியுரிமையை ஏற்படுத்தினர். வடபகுதியின் காணிச் சொத்துக்கள் மூலம் கிடைக்கும் உற்பத்தி வருவாயிலிருந்து எவ்வளவு உச்சமான அளவினை வரியாகப் பிழிந்து எடுக்க முடியுமோ அவ்வளவுக்கு வரி விதிப்பை உயர்த்தினர். இலங்கையின் தென் பகுதியின் வருவாயைவிடச் செலவு அதிகமானதால் ஏற்பட்ட பற்றாக்குறையை, வட பகுதியின் வரி அறவீடு மூலம் ஈடுசெய்வதும் அவர்களின் நோக்கமாக இருந்தது. விவசாயத்தில் சிறப்புத் தேர்ச்சி ஏற்பட்டதால் தானியங்களுக்கான சந்தை விரிவடைந்தது. இதனால் உணவுப்

பொருட்களின் விலைகள் சந்தையால் தூண்டப் பெற்று உயர்ச்சியடைந்தன. குறிப்பாக அரிசியின் விலை அதிகரித்தது. இந்தியாவில் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் யாழ்ப்பாணத்தில் உணவுப்பொருட்களின் விலைகள் உயர்ந்ததால், மக்களுக்கு கஷ்டம் விளைந்தது. டச்சு ஆளுநர்களுள் யாழ்ப்பாணத்தில் இறுதியாக கடமையாற்றிய வன்டர் கிறாவ் (*Van der Graef*) என்பவர் 1794 ஆம் ஆண்டில் எழுதிய அறிக்கையில் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாண வாசிகள், முன்பு நன்றாக உறுதியான நிலையில் வாழ்ந்தார்கள். ஆனால் இப்போது மேலும் மேலும் வறியவர்களாகிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர் எழுதினார். தாம் பெற்ற கடன்களைத் தீர்க்க வகையில்லாதவர்களாய் பலர் காணிகளையும், பிற உடைமைகளையும் விற்றனர். இவ்வாறு விற்போர் எண்ணிக்கை பிற பகுதிகளை விட யாழ்ப்பாணத்தில் அதிகமாக இருந்தது. யாழ்ப்பாணம் சனஅடர்த்தி மிக்கதாயும், உணவுத் தேவைக்காக இறக்குமதியில் தங்கியிருக்கும் பகுதியாகவும் இருந்ததால் யாழ்பாணத்திற்குள்ளேயும் அதற்கு வெளியேயும் இருந்து வரும் மாற்றங்களின் தாக்கத்திற்கு அது உட்படுவதாக இருந்தது.

**அடிக்குறிப்புக்கள்**

1. Memoir of Anthony Paviljeon Commander of Jaffnapatnam to his Succes bor,Instructions from the Governor General and Council of India to the Governor of Ceylon 1656 to 1665. Transl Sophia ieters (Colombo 1908), p. 108.
2. Memoir of Hendrick Zwaardecroon, Commandeur of Jaffna patnam, 1697 (Colombo 1911), P 16.
3. Memoir by Anthony Mooyaart, 1766 Translation, by Sophia Pieters (Colombo 1910) p.3.
4.Census of Ceylon Return of the population of the Island of Ceylon (Colombo 1827).
5. Census of Ceylon 1871 (Colombo 1873)
6. P.E.Pieris, The Kingdom of Jaffna patnam, 1645 (Colombo 1920. pp. 4752).
7. P. Baldaeus, Beshrijving der OostIndische Kusten, Malabaar en Choromandel.... alsook het keijserrijck Ceylon (Amsterdam 1672) pp. 16172
8. F. Valentijn, Oud en Nieww OostIndien (Dordrecht 1726), Vol. I Ceylon, pp. 3031.
9. This can be seen in any one of the many extant thombos of Jaffna completed in the 18th Century. National Archives of Sri Lanka. Dutch Records 6822 to 6857
10. J.E.Tennent, Ceylon, An account of the Island.... (London 1859), Vol.1,p.532.
11. Baldaeus, op. cit., p. 187.
12. H.W.Tambiah, Laws and customs among the Tamils of Jaffna (Colombo 1954), pp. 34 ff.
13. Kolianale Archief (The Hague), 1164, f. 43. Letter of 30 November 1670.
14. See, for example Memoir of Julius Stein van Gollenesse, 1751, Ed, by S,Arasaratnam (Colombo 1974), pp. 723.
15. Koloniale Archief, 1244, f. 81. Letter of 9 January 1681.
16. Diary of Jan Schreuder, Governor of Ceylon 18 July 1760. Hooge Regeering Van Batavia, 535.
17. Based on accounts of Ceylon in the V.O.C's papers. Koloniale Archief.
18. Schereuder to Van der Graaf 7 October 1784, Mackenzie Collection, Private, 72, III (India Office Library, London)
19. Ibid.
20. Memoir of Van der Graaf 15 July 1794, Hooge Regeering, 586.
21. Memoir of Jan Schreuder 16 August 1760. Hooge Regeering, 577.
22. Memoir of Golleneses, 1751, pp. 778.
23. Koloniale Archief.1322, f. 576, Letter of 18 January 1688.
24. Koloniale Archief. 1120. f. 160. Letter of 12 November 1659.
25. Koloniale Archief. 798, f. 474. Letter of 16 July 1671.
26. F.de Qusyroz. The temporal and spiritual conquest of Ceylon. Translation. by. S.G. Perera (Colombo 1930), IT. P. 666.
27. For a detailed description of the pearl fishery and the trade in pearls, see p. Van Dam, Beschryvinge van de Oostidische Compagnie S. Gravenhage 1932. Bk. II. Part 2. pp. 41233.
28. Memoir of Joan Gideon Loten 1757 (Colombo 1757), p. 41.
29. Information derived from V.O.C.records in Koloniale Archief.
30. Memoir of Rijcklofvan Goens, 1675 (Colombo 1932), p. 42.
31. Koloniale Archief, 1213, f. 261. Letter of 14 December 1677.
32. Koloniale Archief, 1322, f.139 Letter of 18 January 1688.
33. Memoir of Hendrick Zwaardercroon, 1697 (Colombo 1911). p. 21.
34. Memoir of Zwaardecroon, pp. 2122.
35. Memoir of Zwaardecroon,pp. 2223
36. Memoir of Van de Graaf, 15 July 1794.
37. Koloniale Archief, 1213, f. 247. Letter of 9 September 1677.
38. S.Arasaratnam, "Trade and agricultural economy of the Tamils of Jaffna during the second half of the 17th Century, Tamil Culture, IX, 4 (1961), pp. 1012.
39. Koloniale Archief, 1252, f. 204, Letter of 16 March 1681.
40. Koloniale Archief, 1322, f, 576, Letter of 18 January 1688.
41. Memoir of Jan Schreuder, 16 August 1760.
42. Memoir of Baron van imhoff 1740 (Colombo 1911), p. 76.
43. Memoir of Zwaardecroon, pp. 2021.
44. Memoir of Van der Graaf, 15 July 1794.
45. Memoir of Zwaardecroon, p. 21.
46. Valentijn, op cit, Vol I, p.214.
47. Appendix to Memoir of Schreuder August 1760, Hooge Regeering 533.
48. Memoir of Van der Graaf, 15 July 1794.

ஈழம் சார்ந்தும் ஈழப்பிரச்சினை சார்ந்தும் ஆங்கிலத்திலும் தமிழல்லாத பிற மொழிகளிலும் பல்வேறு நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. 2009 இற்கு பின்னர் வெளியாகிய அபுனைவு நூல்களை அவற்றின் சமூக – அரசியல் முக்கியத்துவம் கருதி தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கோடு ‘திக்குகள் எட்டும்’ என்ற தொடர் வெளிவருகின்றது. இத்தொடரின் மூலம் தமிழ் சூழலுக்கு தமிழல்லாத பரப்பில் நடைபெறும் ஈழம் சார்ந்த வெளிப்பாடுகள் அறிமுகமாகும்.




# நிலவியலின் துயரம்

சிவராஜா ரூபன்

சிவராஜா ரூபன் அவர்கள் 1993 ஆம் ஆண்டு சிறுவனாக இருக்கும்போது ஈழத்திலிருந்து நோர்வேக்குப் புலம்பெயர்ந்தார். தற்போது கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு, நாடகம் மற்றும் ஊடகம் ஆகிய தளங்களில் இவர் செயற்பட்டு வருவதுடன் அரசியல், சமூகம், கலை, இலக்கியம் சார்ந்தும் எழுதி வருகிறார். ஈழம், தமிழகம், மற்றும் புலம்பெயர் ஊடகங்கள், இதழ்களில் இவரது எழுத்துக்கள் தொடர்ந்து வெளிவருகின்றன.

‘எதிர்ப்பரசியல்’, ‘அதிகார நலனும் அரசியல் நகர்வும்’ (உலக அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு), ‘எழுதிக் கடக்கின்ற தூரம்’ (கவிதைத் தொகுப்பு), ‘கலைப்பேச்சு’ (திரை நூல் அரங்கு) என்பன இவரது படைப்புகளாகும்.




**நிலவியலின் துயரம் –தமிழ், ஆங்கிலப் பதிப்புகள்.**

Image Source : www.linkedin

இந்தப் புத்தகத்தின் அரைவாசிப்பகுதி நூலாசிரியரின் இளமைக்காலம், குடும்பம், அவரது கிராமத்தின் வாழ்வுச் சூழல், 1980 களின் நடுப்பகுதி வரையான இலங்கைத்தீவின் அரசியல், போராட்ட நிலைமைகள் குறித்த விடயங்களைப் பேசுகின்றது. மீதமுள்ள பகுதி வெளிநாடு ஒன்றுக்குப் பயணமாகும் இலக்குடனான முன்னெடுப்புகள், அதில் எதிர்கொண்ட சிக்கல்கள், போராட்டங்கள் என்பவற்றைப் பகிருகின்றது.

ஈழத்திலிருந்து 1980 களின் நடுப்பகுதியில் போர் மற்றும் குடும்பப் பொருளாதார நிலைமைகள் காரணமாகத் தனது 17 ஆவது வயதில் புலம்பெயர்ந்த இளைஞனைப் பற்றிய கதையே ‘The Sadness of Geography’ எனும் இந்த நூல். இதனை எழுதியவர் லோகதாசன் தர்மதுரை. யாழ். மாவட்டத்தின் சங்கத்தானை கிராமத்தைப் பூர்வீகமாகக்கொண்ட இவர், 1986 இலிருந்து கனடாவில் வசித்துவருகின்றார். அங்கு ஒரு கணினித்துறைப் பொறியியலாளராகப் பெருநிறுவனமொன்றில் பணிபுரிகின்றார். புலம்பெயர்ந்து முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் (2019) தனது கதையைப் புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

## தன்னனுபவக் கதை - அபுனைவு

இந்நூல் முற்றிலும் ஒரு தன்னனுபவக்கதை. இலக்கியத்தில் அபுனைவு வகைமைக்குள்

அடங்குகின்றது. சங்கத்தானைக் கிராமமும் - அதன் வாழ்வின் ஒரு பகுதியும் - வெளிநாடொன்றில் வதிவிடம் தேடி அலையும் இளைஞனின் போராட்டங்களும் பற்றியது இந்தக்கதை. கதையாசிரியர் தன் குடும்பத்தின் கதையைத் தனித்தனி அத்தியாயங்களில் தனித்தனிப் பாத்திரங்களாக முன்வைக்கின்றார். வெளிநாடொன்றில் வதிவிட உரிமை தேடும் அவருடைய போராட்டம் கால நீட்சியுடையது. ஒன்றல்ல இரண்டல்ல, பல்வேறு நாடுகளில் பிடிபடுதல், சிறை அடைப்பு, முகாம் வாழ்வு, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் சட்டவிரோதமாக எல்லையைக் கடத்தல், போலிக் கடவுச் சீட்டுடன் விமானமேறுதல் போன்ற பயணங்களின் தொகுப்பாகவும் அமைகிறது.

தந்தை நகை வணிகராகவிருந்த காரணத்தால் ஊரிலும் சுற்றுவட்டாரத்திலும் மிகுந்த செல்வாக்கும் செல்வச் செழிப்புமுடைய குடும்பம் இவர்களுடையது. ஆனால் போர் உக்கிரமடைந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, நகை வணிக வீழ்ச்சி காரணமாக குடும்பம் மிகுந்த வறுமைக்குள் தள்ளப்படுகின்றது. உலகெலாம் அலைந்து வாழ்வு தேடிய ஒரு தலைமுறையின் வாழ்வைப் பிரதிபலிக்கின்றது ஆசிரியரின் அனுபவம். கதை சொல்லலின் போக்கில் ஈழப் போரும் அரசியலும் வாழ்வும் பேசப்படுகின்றன.

### போர்ச்சூழல்

*1983* ஆம் ஆண்டில் தொடங்குகின்றது கதை. இராணுவத்தின் சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றிலிருந்து தப்புவதற்காக வீட்டியிலிருந்து பற்றைகள், தோட்டங்களைக் கடந்து நெடுந்தூரம் ஓடுவது பற்றிய விபரிப்புடன் தொடங்குகிறது புத்தகத்தின் முதலாவது அத்தியாயம். உயிரச்சத்தோடு ஓடியொளிதல், தப்பித்தல், வீடு திரும்புதல் என மிக நுணுக்கமான விபரணைகளை அந்த அத்தியாயம் கொண்டுள்ளது. " இத்தனை ஆண்டுகள் கழிந்தும் வெறுங்கால்களுடன் தார்ச்சாலையில் ஓடும்போது எழுந்த மெல்லிய ஓசை இன்றும் என் காதுகளில்

> **இந்நூல் முற்றிலும் ஒரு தன்னனுபவக்கதை. இலக்கியத்தில் அபுனைவு வகைமைக்குள் அடங்குகின்றது. சங்கத்தானைக் கிராமமும் அதன் வாழ்வின் ஒரு பகுதியும் வெளிநாடொன்றில் வதிவிடம் தேடி அலையும் இளைஞனின் போராட்டங்களும் பற்றியது இந்தக்கதை. கதையாசிரியர் தன் குடும்பத் தின் கதையைத் தனித்தனி அத்தியாயங்களில் தனித்தனிப் பாத்திரங்களாக முன்வைக்கின்றார்.**

ஒலித்தபடி இருக்கின்றது " என அந்த நினைவுகளை மீட்கின்றார் லோகதாசன். கறுப்பு ஜூலைக்கு முன்னரானதும் பின்னரானதுமான சிங்களதமிழ் இன முரண்பாடுகளின் பின்னணி, தகவல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பகிரப்படுகின்றது. ஈழ விடுதலைப் போராட்டமும் போராளி இயக்கங்களும் உருவாகுவதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டமை குறித்தும் தொட்டுச் செல்லப்படுகின்றது.

ஒளிவுமறைவின்றித் தன் குடும்பத்தைப் பற்றியும் தன்னைப் பற்றியும் எடுத்துரைக்கின்றார். குறிப்பாக தந்தை, தாய், சகோதரர்கள் குறித்த நிகழ்வுகளை விபரமாகப் பகிர்ந்துள்ளார். அவர்களுக்காகத் தனித்தனி அத்தியாயங்கள் ஒதுக்கப்பட்டு, அவர்கள் பற்றிய அறிமுகம் நிகழ்கின்றது. பின்னர் கதையின் ஓட்டத்தில் முக்கிய பாத்திரங்களாக அவர்கள் பற்றிய கதைகள் வெவ்வேறு சம்பவங்களின் ஊடாகச் சொல்லப்படுகின்றன.

தந்தை பற்றி மிக வெளிப்படையாகப் பேசப்படுகின்றது. ஒரே வீட்டில் தாயுடனும் தாயின் தங்கையுடனுமாக இரண்டு மனைவிகளுடன் குடும்பம் நடாத்தியதை எழுதுகின்றார். அதனால் எழுந்த குடும்பப் பிரச்சினைகள், உறவுச் சிக்கல்கள், தாயைத் தந்தை நடாத்திய விதம், அதனால் தந்தைக்கும் இவருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளும் பேசப்படுகின்றன. ஆண் மைய குடும்ப அமைப்பினைத் தன் குடும்ப மனிதர்கள், நிகழ்வுகள், சூழல்கள், அனுபவங்களுக்கூடாக விபரிக்கின்றார்.

இராணுவத்தின் சுற்றிவளைப்புத் தேடுதலின் பின்

அன்றைய நாள் கிராமத்தின் இளைஞர்கள் பலர் காணாமற் போயிருந்தனர். அந்தக் காணாமற் போதல் இரண்டு அடிப்படைகளிலாலானது. ஒன்று இராணுவத்தினராற் சில இளைஞர்கள் பிடித்துச் செல்லப்பட்டனர். மற்றையது, இளைஞர்கள் இயக்கங்களில் இணைந்தமையைக் குறிக்கின்றது. இது அன்றைய காலகட்டச் சூழ்நிலையைப் பிரதிபலிக்கின்றது. இது ஒரு நாளின் சம்பவமாக லோகதாசனின் அனுபவப் பதிவில் இருந்தாலும், அது ஆயுதப் போராட்டத்திற்கான அழுத்தமும் திணிப்பும் எழுந்த புறநிலையைப் பிரதிபலிக்கின்றது.

### குடும்பப்பின்னணி - சமூக நடைமுறை

உறவு - உணர்வு நெருக்கம் இல்லாத அதேவேளை சமூக அந்தஸ்து மற்றும் கல்வி, தொழில் வெற்றியைக் குறிக்கோளாகக் கொண்ட குடும்ப நிலைமைகள் குறித்தும் பகிரப்படுகின்றது. குறிப்பாகத் தந்தை, குடும்பத்தை ஒரு வணிக அமைப்புப் போல அணுகியதாகவும் வெற்றி மட்டுமே அளவீடாக இருந்ததாகவும் வர்ணிக்கப்படுகின்றது. குடும்பம் சார்ந்த பகிர்வுகள் நுண்ணுணர்வு மிக்கவை. தாயார் பெருத்த அவமானங்களையெல்லாம் எப்படித் தாங்கிக் கொண்டார், தாயின் கையறு நிலை, சகிப்பின் எல்லை போன்றவற்றை இன்றுவரை தன்னாற் புரிந்து கொள்ள முடியவில்லை என்று குறிப்பிடுகின்றார்.

லோகதாசன் குடும்ப நலனுக்காக எல்லாவற்றையும் சகித்துக்கொண்ட மனவுறுதியும் துணிச்சலுமுடையவராகத் தனது தாயாரைக் காண்கின்றார். இன்று தான் எப்படியாக உருவாகியிருக்கின்றேனோ தனது அந்த ஆளுமையைத் தனக்குள் வடிவமைத்ததில் தாயாரின் பங்கினையும் நினைவுகூருகின்றார். தாயகத்திற் தனது குடும்பத்தினது வாழ்வு எத்தகையதொரு சாதிய அமைப்புமுறையைப் பேணியதாக இருந்தது அல்லது தந்தை அதனைப் பேணுவதற்கு எத்தகைய முக்கியத்துவத்தினைக் கொடுத்தார் என்பதைப் பல்வேறு சம்பவங்கள் மூலம் சொல்கின்றார். தொழிலாளர்களோடு ஒன்றாக அமர்ந்து உணவு உண்டமைக்குத் தண்டனை, சந்தையில் வாழைப்பழம் விற்றமைக்குத் தண்டனை, கடலில் நீந்துவதை மீனவர்களுடன் தொடர்புபடுத்தியமை, சொந்தக்காரர்கள் தவிர்ந்த கிராமத்தின் குழந்தைகளுடன் விளையாட அனுமதிக்காமை போன்ற இன்னபிற சம்பவங்கள் புத்தகத்தில் இடம்பெறுகின்றன. அவற்றையெல்லாம் மீட்டுப்பார்ப்பதோடு மட்டுமல்லாமல் அவற்றை நிராகரிக்கின்ற அல்லது அவை சார்ந்த தனது பிற்கால - சமகால நிலைப்பாட்டினையும் பலவிடங்களில் லோகதாசன் வெளிப்படுத்துகின்றார். " துரதிர்ஷ்டவசமாக அந்த நேரத்தில் சாதி அமைப்பு இலங்கையில் வாழ்வோடு பிணைந்த நடைமுறையாக இருந்தது. அத்தகைய ஒரு குறிப்பிட்ட ஏற்பாட்டுடன் வளரும் போது இது எல்லா இடங்களிலும் சகஜமான, வாழ்வோடு ஒட்டியிருக்கவேண்டிய அம்சமென்று நினைப்பது எளிது." என்கிறார்.

ஒரு விடயம் சிக்கலுக்குரியது. " சங்கத்தானைக் கிராமம் முந்நூறுக்கும் அதிகமில்லாத குடும்பங்களைக் கொண்டது. அதிற் பெரும்பான்மையினர் தந்தையின் சாதியைச் சேர்ந்தவர்கள். மீதமுள்ளவர்கள் சாதி குறைந்த கிராமத்தவர்கள் " என்கிறார். மீனவர்கள், விவசாயிகள், பொதுத்தொழிலாளர்களை அவ்வாறு விளிக்கின்றார். சமூகநீதி சாதியத்திற்கு எதிரான பார்வையுடன் இச்சொல்லாடல் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அந்த விபரிப்பு சாதியப் படிமுறைகளைப் பேணிய - பேணுகின்ற ஒரு சமூக அமைப்பினைப் பதிவுசெய்கின்றது. ஆனால் சமூகநீதி பற்றிய பிரக்ஞையுடன் எழுதும்போது, குறைந்த சாதி என்று எழுதமுடியாது. *Oppressed caste* / *Oppressed people* / *Oppressed villagers* என்பதே பிரக்ஞைபூர்வமான பதம். பெண்கள் பற்றிய சமூகத்தின் பார்வையும் அவர்கள் எப்படியாக நடாத்தப்பட்டார்கள் என்பதையும் தனது தாய் பற்றிய குறிப்புகளோடு பகிர்கின்றார்.

### பாதித்த சம்பவங்கள்

இவர் விடுதியிற் தங்கியிருந்து சென்.ஜோன்ஸ் கல்லூரியிற் பயின்ற காலத்திற்தான் யாழ் நூலக எரிப்பு நிகழ்கிறது. தீவைக்கப்பட்டதையடுத்துச் சம்பவ இடத்திற்கு விடுதியிலிருந்து தீயணைப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்ட மாணவர்களில் ஒருவனாக அது குறித்த நேரடி அனுபவங்களையும் அது ஏற்படுத்திய தாக்கத்தினையும் கையறு நிலையில் நின்றதையும் துயரம்தோய விபரிக்கின்றார்.

“சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது வானம் அடர்ந்த புகையுடன் அதீத மஞ்சள் நிறமாக இருந்தது. மூக்கைத் துளைக்கும் வகையிற் கடுமையான நாற்றம் வீசியது. வெப்பத்தின் சக்தி மிகவும் உக்கிரமாக இருந்தது. அது நம்மைக் கிட்ட நெருங்கிவிடக்கூடாது என்று அச்சுறுத்துவது போல் இருந்தது. மக்கள் எறும்புப் புற்றில் எறும்புகளைப் போல எல்லாத் திசைகளிலும் ஓடினர். நம்பிக்கை தகர்ந்திருந்தது. கட்டடத்தின் பெரும்பகுதி ஏற்கனவே தீயில் எரிந்து கொண்டிருந்தது. எங்களால் எதுவுமே செய்ய முடியவில்லை “

1984 இல் ஒரு முறை விடுதியிலிருந்து விடுப்புப்பெற்று குடும்பத்தினைப் பார்க்க வீடு செல்லும் போது தொடருந்தில் நடந்த ஒரு சம்பவத்தினைப் பகிர்ந்துகொள்கின்றார். அது இராணுவத்தினரால் பாலியல் ரீதியான வன்முறைக்கு உட்பட்ட சம்பவம். அந்தச் சம்பவத்தினை மிக வெளிப்படையாக எழுதியுள்ளார். தமிழ்ச் சூழலில் ஒரு ஆண் தனக்கு நடந்த ஒரு பாலியல் வன்முறையை எழுதுவது சாதாரண விடயமல்ல.

இது அவருடைய மனத்துணிவினதும் முதிர்ச்சியினதும் வெளிப்பாடு. அதன்போது எதிர்கொண்ட மன - உடற் போராட்டம், அந்தச் சம்பவம் ஏற்படுத்திய மனக்குமைவு, அவமானம் இன்றுவரை அவரைத் தொந்தரவு செய்யும் துன்பியல் என்பதைப் பல இடங்களில் இந்நூலிற் பேசியிருக்கின்றார்.

தொடருந்துப் பெட்டியொன்றில் இவர் மட்டும் அமர்ந்திருக்கின்றார். இவரது இருக்கையை நோக்கி வந்த இராணுத்தினர் சுற்றிவர நின்றபடி இவரைப் பரிகாசம் செய்திருக்கின்றனர். ஒரு இராணுவத்தினன் பக்கத்து இருக்கையில் அமர்ந்து இவரது காற்சட்டைக்குள் கையைவிட்டு ஆணுறுப்பினை அழுத்தி, விந்துவெளியேறும் வரை தூண்டியிருக்கின்றான். அப்போது சுற்றிநின்ற இராணுவத்தினர் கூச்சலிட்டுக் கேலிசெய்திருக்கின்றனர். அற்பமாகப் பார்த்தனர் என்றும் எழுதுகின்றார்.

” தொடருந்தின் ஜன்னல் ஊடாக வெளியே பார்க்கிறேன். சிறுவயதிலிருந்து என் புறங்கைபோலப் பரிச்சயமாக இருந்த அந்த நிலத்தோற்றம் இப்போது மிக அந்நியமாகவும் கொடூரமாகவும் தோற்றமளித்தது ” என அந்நேர மனநிலையைச் சொல்கிறார். ஒரு குற்றவாளி தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லப்படுவது போன்ற உணர்வுடன் வீட்டுக்குச் சென்றதாகவும் அந்தச் சம்பவத்தின் பின்னான மனநிலையை எழுதுகின்றார்.

அந்தச் சம்பவம் ஏற்படுத்திய கோபம், அவமானம், இயலாமை, குழப்பம், பழிவாங்கும் உணர்வு என, பின்உழல்வு (*posttrauma*) நிலைபற்றி நிறையவே பேசுகின்றார். நூலின் இறுதியில் இடம்பெற்றுள்ள பின்னுரையிற்கூட அச்சம்பத்தின் பின்உழல்வு பற்றியும் அதனை அண்மையிற்தான் ( இந்தப் புத்தகத்தில் வெளிப்படையாகப் பகிர்வதற்கு முன்) தன் மனைவியிடம் மட்டும் பகிர்ந்து கொண்டதாகக் கூறியுள்ளார்.

## இயக்கத்தில் இணையும் உந்துதல்

அவமானம் உயிரைத் தின்றுகொண்டிருந்தது என்றும் அந்தத் துன்புறுத்தும் நினைவுகளிலிருந்து ஓடியொளிய முடியாது என்பதையும் ஒரு கட்டத்தில் உணர்ந்து கொள்கின்றார். சிறீலங்கா இராணுவத்தினைப் பழிவாங்கும் மனஉந்துதலோடு இயக்கத்தில் இணையும் முடிவினை எடுத்ததாகவும் குறிப்பிடுகின்றார். இயக்கத்தில் இணைவதற்கான பிரயத்தனங்களின் போதான அனுபவங்களும் விரிவாகப் பகிரப்படுகின்றன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரச்சாரப் பிரிவில் போஸ்ரர் ஒட்டுதல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், நிதிசேகரித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்ட கதைகள் நூலில் உள்ளன. ஆமியைச் சுடவேண்டுமென்பதே அவர் இயக்கத்தில் இணைவதன் இலக்காக இருந்திருக்கிறது. இயக்கங்களுக்கிடையிலான அதிகார மோதல்கள், படுகொலைகளாற் சலிப்பும் ஏமாற்றமுமடைந்த நிலை, குடும்பத்தின் பொருளாதார நிலைமையைச் சீர்செய்தல் போன்ற காரணங்களுக்காக வெளிநாட்டுக்குச் செல்லும் முடிவினை எடுக்கின்றார்.

## வெளிநாட்டுப் பயண முனைப்பு

ஜேர்மன் நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு புகலிட அனுமதியும் வேலைவாய்ப்பும் கொடுக்கின்றார்கள் என்ற வாய்வழிக் கதையை நம்பி கொழும்புக்குப் புறப்படும் லோகதாசன், ஏஜென்சிக்காரனால் ஏமாற்றப்பட்டுத் தங்குவதற்கு இடமின்றிக் கொழும்பு வீதிகளில் பல நாட்கள்

அலைகின்றார். பதினேழு வயதில், இனக்கலவரம் நிகழ்ந்து நாட்டில் அரசியற் பதற்றமும் தமிழர்களுக்கெதிரான பௌத்த சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைகள் - வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஒரு சூழலில் கொழும்பு வீதிகளில் அலைந்த அனுபவங்கள் பகிரப்படுகின்றன. தங்குவதற்கு பணமின்றி காலிமுகத்திடல் கடற்கரையில் இரவுகளில் படுத்துறங்கியிருக்கின்றார். திக்குத்தெரியாத காட்டிற் தனித்துவிடப்பட்ட நிலைமையை ஒத்தவை அந்த அனுபவங்கள்.

## தன்னலமற்று உதவிய மூன்று பெண்கள்

பாஸ்போர்ட்டையும் பணத்தையும் ஏஜென்சியிடம் பறிகொடுத்துக் கையறு நிலையிற் செய்வதறியாது கொழும்புத் தெருக்களில் அலைகிறார் லோகதாசன். கொழும்பில் பிறந்து வளர்ந்த தேவி என்ற ஒரு தமிழ் இளம்பெண் பாஸ்போர்ட்டையும் பணத்தையும் மீட்டுக் கொடுக்கின்றார். தேவியின் மிடுக்கும் துணிச்சலும் செயற்திறனும் அபாரானவை. லோகதாசன் கொழும்புக்கு வரும்போது தொடருந்தில் தற்செயலாகச் சந்தித்த பெண் அவர். கொழும்பில் செய்வதறியாது லோகதாசன் அலைந்து திரிந்த தருணத்தில் மீண்டும் தற்செயலாக ஒரு சந்திப்பு நிகழ்கிறது.

இவரின் நிலையைக் கேட்டறிந்து எந்தவிதப் பிரதிபலனையும் எதிர்பாராது தன்னலமற்று உதவுகின்றார் தேவி. ஒரு த்ரில்லர் படத்தினைப் பார்ப்பது போன்ற உணர்வைத் தருகின்றது ஏஜென்சியைக் கண்டுபிடிப்பதற்கும் பாஸ்போர்ட்டினையும் பணத்தினையும் மீட்டெடுப்பதற்கும் தேவி மேற்கொண்ட நடவடிக்கைகள். 80 களின் நடுப்பகுதியில் இத்தகையதொரு மனத்துணிவும் செயற்திறனும் மிக்க தமிழ்ப்பெண் தேவி; என்னை மிகவும் கவர்ந்த பாத்திரங்களில் தேவி பாத்திரம் முதன்மையானது. உதவிசெய்த பின்னர், லோகதாசனுக்கும் தேவிக்குமிடையில் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. " அவருடைய தொடர்பு விபரத்தை நான் கேட்கவில்லை. அவருடைய தன்னலமின்மைக்கு நன்றி சொல்லும் வாய்ப்பும் எனக்குக் கிட்டவில்லை. ஒரு முறை தொடருந்தில் என்னைச் சந்தித்தது மட்டுமே எமக்கிடையேயான பழக்கம். ஆனால் உண்மையான அர்த்தத்தில் அவர் என் உயிரைக் காப்பாற்றியவர். ஒரு நாள் அவர் இந்நூலைப் படிக்கக்கூடும். நான் அவருக்கு எவ்வளவு நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்வார் என்று நம்புகிறேன்" என தேவியை நன்றியோடு நினைக்கிறார் நூலாசிரியர்.

தேவி மட்டுமல்ல, பயணத்திற்கான நிதி உறுதிப்படுத்தல் ஆவணத்தினை ஏற்பாடு செய்துகொடுக்கும் நளினி மற்றும் ஜேர்மனிக்கு பயணப்படுவதற்கு முன்னர் சிலநாட்கள் தனது வீட்டில் தங்குவதற்கு முன்பின் அறிமுகமில்லாத இவருக்கு இடமும் உணவும் கொடுத்த முஸ்லிம் பெண் ஆகியவர்களும் முக்கியமான உதவிகளைச் செய்த பெண்களாவர். இக்கட்டான ஒரு சூழலிற் சிக்கியிருந்தவரை அவற்றிலிருந்து மீட்டு விமானமேறுவதற்கான சூழலை அமைத்துக் கொடுத்தவர்கள் இந்த மூன்று பெண்களுமே.

## ஜேர்மன் - பிரான்ஸ் - பிரித்தானியா - கனடா

இலங்கையிலிருந்து ஜேர்மனுக்குச் சென்று, அங்கு பிடிபட்டு, முதலிற் சிலநாட்கள் சிறையிலிருக்கிறார். பின்னர், அகதிகளுக்கான தடுப்பு முகாம் வாழ்வு. அடுத்து, பிரான்ஸிலுள்ள தமையனின் ஏற்பாட்டில் ஜேர்மனியிலிருந்து கார்களில் வெவ்வேறு ஏற்பாட்டாளர்களின் பொறுப்பில் பிரான்சிற்குப் பயணமாகின்றார். அங்கும் நிரந்தர இருப்புக்குரிய வாய்ப்புகளைக் கண்டடைய முடியாத நிலையில், போலிக் கடவுச்சீட்டுடன் கனடாவிற்குப் பயணமாகும் திட்டம் பாரிஸ் விமானநிலையத்திலேயே தடைப்படுகிறது. பிடிபட்டுச் சிறையிலடைக்கப்படுகின்றார். தமையனின் ஏற்பாட்டில் விடுதலையாகி, பின் மீண்டும் போலிக்கடவுச்சீட்டுடன் இலண்டனுக்கான பயணம் தொடங்குகிறது.

பிடிபடாமல் லண்டனைச் சென்றடைந்தபோதும், அங்கு வதிவிட உரிமை, கல்வி, வேலைவாய்ப்புப் பெறுவதிலுள்ள சிக்கல்களால் அங்கும் இருப்பினை நிலைநிறுத்த முடியவில்லை. அங்கிருந்து கனடாவுக்கான பயணமே அவர் எதிர்பார்த்த இறுதி இலக்கினை நிறைவேற்றுகின்றது. தொடர் தோல்விகள், நம்பிக்கை இழப்புகளுக்கு மத்தியில் மீண்டும் மீண்டும் விடாமுயற்சியால் இறுதி இலக்கு நிறைவேறுகின்றது.
தனி ஒருவரின் வாழ்வு தேடும் போராட்டங்களின்

அனுபவப் பகிர்வாக இருந்தாலும், இது வெளிநாடுகளில் வாழ்வு தேடிய ஒரு தலைமுறையின் அனுபவங்களை விரிக்கின்றது. இன்னொரு வகையிற் சொல்வதானால் தனிமனிதனின் கதையாக இருந்தாலும் இது ஒரு சமூகத்தின் கதையைப் பிரதிபலிக்கின்றது. சமாந்தரமாக இலங்கை அரசியல் நிகழ்வுகள், வரலாற்று ரீதியான அதன் போக்குகள் பேசப்படுகின்றன. அவை வலிந்த திணிப்புகளாக அல்லாமல், தனது சொந்த அனுபவத்திலிருந்தும் அறிதலுக்குட்பட்ட நிலைகளிலிலிருந்தும் முன்வைக்கப்படுகின்றன.

## தொடர் தோல்விகள் - சிறை - போலிக் கடவுச்சீட்டுடன் பயணம்

லோகதாசனுடைய போராட்டம் தனக்கும் குடும்பத்திற்குமான வளமான ஒரு வாழ்வை அமைத்துக் கொள்வதற்கான முனைப்பாகும். அதன் முதற்படி வெளிநாடொன்றுக்குச் சென்றடைதலும் அங்கு வதிவிட உரிமையைப் பெற்று வேலைவாய்ப்பினைப் பெறுவதாகும். அந்தப் போராட்டத்தின் இலக்கினை அவர் அத்தனை சுலபமாக அடைந்துவிடவில்லை. தொடர் தோல்விகள், காலதாமதங்கள் மட்டுமல்ல; போலிக் கடவுச்சீட்டுடன் பயண முயற்சிகளாற் சிறைபட்டு ஒரு குற்றவாளியாக முத்திரையும் குத்தப்பட்டிருக்கிறார். ஒவ்வொரு நாட்டிலும் பட்டபாடுகள், எதிர்கொள்ளல்கள், அகதி முகாம் வாழ்வு, சிறை அனுபவங்கள் விபரிக்கப்படுகின்றன.

" சிறை பெரும் மனச்சோர்வை ஏற்படுத்தியது. ஆனால் உண்மையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தமை பெரிய மோசமானதாக இருக்கவில்லை. நீண்ட காத்திருப்பே மோசமானதாக இருந்தது. அடுத்த நிமிடம் என்ன நடக்கப்போகின்றது என்பதை அறியாத நிலை என்னை மிகவும் தொந்தரவு செய்தது. ஒவ்வொரு மணி நேரமும் ஒரு யுகம்போல் தோன்றியது " என்கிறார்.

## நூலின் பிரதிபலிப்பு

அன்றைய காலகட்டத்தில் நாட்டின் அரசியல் பொருளாதாரக் காரணங்கள், அவற்றின் பாலான நிர்ப்பந்தங்கள் காரணமாக வெளிநாட்டுக்குப் புறப்பட்ட இளைஞர்கள் எத்தகையதொரு நெருக்கடியான ஆபத்தான பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது என்பதன் பிரதிபலிப்பாக இந்நூலின் பின்பாதியை மதிப்பிடமுடியும். இத்தகைய தன்னனுபவப் பாடுகளை எழுதுவதென்பது அடிப்படையில் மனதில் நீண்டகாலமாகச் சுமந்து திரிகின்றதும் மனதை அரித்துக் கொண்டிருக்கின்றதுமான நினைவுகளை இறக்கிவைப்பதற்கு உதவக்கூடியது. நூலாசிரியர் தனது பின்னுரையில் அதனைத்தான் கூறுகின்றார்.

இந்த நினைவுக் குறிப்புகளை எழுதுவது தனது வாழ்வின் பெரும்பகுதியை ஆக்கிரமித்திருந்த மோசமான நினைவுகளைக் கையாள்வதற்கான முதற்படி என்றும் தன்னை ஒரு வலுவான மனிதனாக்க இதனை எழுதியமை பங்களித்துள்ளதாகவும் கூறுகின்றார். இந்தவகை எழுத்திற்கு மூன்று பரிமாணங்கள் உள்ளன. ஒன்று எழுதியவர் சார்ந்தது. மற்றையது வாசகர்களுக்குக் கடத்தக்கூடிய உணர்வும் அறிதலும். இந்த இரண்டிற்கும் அடுத்தது இதன் பயன்பாடு, ஆவணப்பெறுமதி, காலப்பிரதிபலிப்பு, பேசாப்பொருட்களை மிக வெளிப்படைத்தன்மையோடு பேசியமை போன்ற பரிமாணங்களாகும்.



லோகதாசன் தர்மதுரை

Image Source : canadianimmigrant.ca

(தொடரும்)

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம் மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக 'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற இத்தொடர் அமைகிறது.





நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.


இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.


# பிராமண மத வரம்பைக் கடந்த மக்கள் களம்

இப்போது கடந்துகொண்டிருக்கும் வரலாற்று மாற்றம் பற்றித் தெளிவு பெறுவதில் சிரமம் இருக்க இயலும். ஏற்படவுள்ள மாற்றத்தின் பேறாக வெளிப்படும் புதிய வாழ்முறையின் தாற்பரியங்களை வைத்தே பலரும் மாற்றம் நிகழ்ந்துள்ளது எனக் கண்டறிய வாய்ப்புப் பெறக்கூடும். ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் நடந்தேறிய மாற்றத்தைக் கணிப்பதில் கூடத் தெளிவீனம் உள்ள நிலை ஆய்வுலகில் பல இடங்களில் உள்ளன. பக்தி இயக்கம் பற்றிய கணிப்பு அவற்றுள் ஒன்று. பக்திப் பேரியக்கத்தின் ஊடாக மேற்கிளம்பி வந்தது பிராமண மதமே எனும் கருத்து பலரிடமும் நிலவக் காணலாம். இந்து சமயம் என்பதை வரையறை செய்யத் தவறுவதனால் நேர்ந்துள்ள இடர்ப்பாடு அது. அன்றைய மாற்றத்தின் ஆதார சுருதி நாவுக்கரசர் பிரதிநிதித்துவப்படுத்திய வெள்ளாளரா? ஞானசம்பந்தரை வெளிப்படுத்திய பிராமணரா? என்பதில் தெளிவேற்படும்போது தான் அன்றைய மாற்றத்தின் தாற்பரியங்களையும் விளங்கிக்கொள்ள இயலும். சென்ற அமர்வில் அது குறித்து உரையாடி இருக்கிறோம்.



**பக்திப் பேரியக்கத்தின் ஊடாக மேற்கிளம்பி வந்தது பிராமண மதமே எனும் கருத்து பலரிடமும் நிலவக் காணலாம். இந்து சமயம் என்பதை வரையறை செய்யத் தவறுவதனால் நேர்ந்துள்ள இடர்ப்பாடு அது.**



காரைக்கால் அம்மையார் சிலை

Image Source : art.nelson-atkins

இன்றைய உலகை ஏகாதிபத்தியத் திணை தலைமை ஏற்று நடத்தி வருகிறது. அரை நூற்றாண்டுக்கு முன்னர் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணிக்கு சோவியத் யூனியன் தலைமையில் இயங்கிய சோசலிச முகாம் பாரிய சவாலாக அமைந்தபோது ஒடுக்கப்பட்ட தேசங்கள் 'அணிசேரா நாடுகள்' என ஒன்றிணைந்து ஏகாதிபத்தியத்தால் பரிபூரணமாகச் சுரண்டப்படுவதில் இருந்து பாதுகாப்புக் கவசம்பெற சோசலிச அணி உதவி புரிந்தது. சோவியத் யூனியன் தகர்ந்து ருஷ்யா தனிமைப்பட்ட போது சோசலிச முகாமும் வலுக்குன்றியது. சோவியத் அமைப்பில் அங்கம் வகித்த உக்ரேனை ருஷ்யாவுடன் யுத்தத்துக்குத் தூண்டி ருஷ்யாவை மேலும் பலவீனப்படுத்தும் தந்திரோபாயத்தை ஏகாதிபத்திய அணியால் (திணையால்) முன்னெடுக்க இயலுமாக உள்ளது.

ஏகாதிபத்தியத்துக்கு இன்று சவாலாக இருப்பது முன்னாள் சோசலிச நாட்டின் மிச்சமீதியல்ல; தொடர்ந்து மாற்று வழிமுறை வாயிலாக ஒடுக்கப்பட்ட தேசங்களை அரவணைத்தவாறு புதிய வடிவிலான சோசலிசப் பாணி ஒன்றைக் கட்டமைத்து வளரும் மக்கள் சீனமே ஏகாதிபத்தியத்தால் பெரும் அச்சுறுத்தல் எனக் கண்டுணரப்படுகின்றது. தைவான், ஜப்பான், இந்தியா போன்ற களங்களைப் பயன்படுத்தி யுத்தத்துக்குள் இழுத்துவிட முயன்றும் கூட சீனா மோதலைத் தவிர்த்து சிந்தனைத்தளத் தாக்கத்தால் ஏகாதிபத்தியத் தந்திரோபாயங்களை வீழ்த்தியபடி முன்னேறி வருகிறது.

முன்னர் பெரும் அச்சுறுத்தலாக இருந்த ருஷ்யாவை விடவும் புதிதாக வளர்ந்து வருகிற மக்கள் சீனமே , தாங்கள் பேண முயலும் ஏற்றத்தாழ்வுச் சமூகக் கட்டமைப்பைத் தகர்த்துவிடும் தலையாய அபாயமாகி உள்ளது என்பதனை ஏகாதிபத்தியத் திணை விளங்கிக்கொண்டுள்ளது. ஏற்றத்தாழ்வான வாழ்முறையை யுத்தங்கள் வாயிலாக வென்றெடுத்து வந்த வெள்ளாளர் தலைமையானது அரசியல் பலம் முற்றிலும் தம்மிடமே உள்ளது என்ற புரிதலுடன் பிராமணருக்கு அதீத புனிதக் கற்பிதங்களை வழங்கி வந்தனர். அன்றைய சூழலில் கருவறைக்குள் தொழிலாற்றி நிலவுடைமையிலும் வளர்ந்துவந்த பிராமணர்கள் தமக்கான பிராமண மதத்தை மேலோங்கச் செய்வதனைவிடவும் அனைத்துச் சமூக சக்திகளையும் அரவணைக்கும் வண்ணம் அவரவரது சமயங்களின் மேலாண்மைகளையும் உட்படுத்தி இயங்க வேண்டும் என்ற புரிதலுடனேயே செயற்படலாயினர். வேளாண்மைச் சமூகத் தலைமையை வெற்றிகொள்வதே தலையாய பணி என்ற வகையில் வெள்ளாளர் தமக்கான இறையென முன்னிறுத்திய சிவனை, ரிக் வேதம் இழிவாகக் கருதிய போதிலும் புதிய மதத்துக்கான தனிப்பெரும் கடவுளாகப் போற்றுவதற்குப் பிராமணர்கள் பின்னிற்கவில்லை.

### வணிக - வேளாண்மைச் சமூகங்கள் இடையேயான முரணியக்கம்

சுடலைப்பொடி பூசி நர்த்தனமிடும் சிவனை முழு முதல் கடவுளாக்கும் கோட்பாட்டு எழுச்சிக்கான தொடக்கத்தை வணிகச் சாதியைச் சேர்ந்தவரான காரைக்காலம்மையார் ஏற்படுத்திச் சென்றார். வணிகச் சமூக நலன் பேணும் சமணப் பள்ளியில் கற்றுத்

தேர்ந்து அதன் விருத்திக்கு உழைத்த நாவுக்கரசர் சிவ நடனத்தைக் காணப்பெறும் வாய்ப்புக் காரணமாக மனிதப் பிறப்பும் விருப்புக்கு உரியதென இலட்சியப்படுத்தியதன் ஊடாகப் பக்திப் பேரியக்கத்தை வழிப்படுத்தி இருந்தார். தமக்கான நட்பு சக்தியும் வேளாண்மைச் சமூக மேலாதிக்கத்துக்கான கருத்தியலை வடிவப்படுத்தியதுமான பிராமண வர்ணத்தாருக்கு ஆன்மிகத் தளத்தில் அதியுச்ச இடத்தையும் நாவுக்கரசர் வலியுறுத்தினார்.

'பிந்தி வந்த கொம்பு செவியை மேவி வளர்ந்துவிட்டதைப்' போல நவீன சமூகத்தில் ஏகாதிபத்தியத்துடன் கூட்டமைத்த பிராமண உயர் குழாத்தினரது அதிகாரத்துக்கு எதிராகப் போராட வேண்டிய தேவை வெள்ளாளருக்கு ஏற்பட்டது. பிராமணருக்கு வழங்கிய அதீத புனித மேலாண்மையைக் காலம் தாழ்த்திப் புரிந்துகொண்ட வெள்ளாளர்கள் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் தமக்கான ஆன்மிக மேலாதிக்கத் தத்துவமாக சைவசித்தாந்தத்தை உருவாக்கி இருந்தனர். மூன்று, நான்கு நூற்றாண்டுகள் கடப்பதற்குள் சமூக பொருளாதார மேலாதிக்கத்தைத் தக்கவைக்கும் நோக்குடன் சமரச முரணில் ஏற்பட்ட இணக்கத்தின் பேறாக சமஸ்கிருதத்தின் வாயிலாகவே சைவசித்தாந்தம் தமிழுக்குக் கைவரப்பெற்றது என நம்பவும் தொடங்கி இருந்தனர். பிரித்தானிய ஆட்சி ஏற்பட்ட பின்னரே (குறிப்பாக ஏகாதிபத்திய சகாப்தத்துடன்) மீண்டும் பிராமண - வெள்ளாள மோதல் முன்னிலைக்கு வந்தது.

இருபதாம் நூற்றாண்டின் நடுக்கூறு அளவிலேயே தமிழின் சொந்த வெளிப்பாடாக மேற்கிளம்பிய சைவசித்தாந்தம் பின்னர் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்ட உண்மை தெளிவுபடுத்தப்பட்டது. இத்தகைய மோதல் - இணக்கம் - மீண்டும் முரண் என்ற வளர்ச்சிப் போக்கைக் கவனம் கொண்ட



ஞானசம்பந்தர் - குழந்தைப் பருவம்

Image Source : ta.wiktionary.org

இன்றைய மெய்யியல் சிந்தனையாளர்கள், பிராமணர் - பிராமணரல்லாதார் மோதலின் ஊடாகவே எமக்கான சமூக மாற்றச் செல்நெறி இயக்கம் நடந்தேறி வருவதாகக் கருதலாயினர். வட இந்தியாவில் மேலாதிக்கச் சமூக நியதி தொடக்கம்பெற்ற போது உருவாகி இருந்த ஏற்றத்தாழ்வை நால்வர்ணக் கோட்பாடாகப் பிராமணியம் வடிவப்படுத்தி இருந்தது. அங்கே நிலவுடைமையை அதிகம் பெற்றிருந்த பிராமணர் ஆன்மிகப் புனிதத்தையும் முன்னிறுத்தித் தமது வர்ணமே முதல் நிலைக்குரியது எனக் கூறும் தர்ம சாத்திரங்களையும் வடித்தனர். வர்த்தகத்தின் வாயிலாக மேல்நிலை பெற்ற

வைசியர்கள் தமக்கான கருத்தியலாக அவைதிக மதங்களைக் கண்டு அவற்றை ஆதரித்த போது பிராமண மதம் பின்னடைந்து பௌத்தமும் சமணமும் செல்வாக்குடையனவாக மாறியிருந்தன.

கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் பின்னர் அந்த அவைதிக மதங்கள் வீழ்ச்சி அடைந்து பிராமணர்களது ஆதிக்கம் மேலோங்கி வந்த காரணத்தால் வைதிக நெறிக்கும் அவைதிக நெறிக்கும் இடையேயான மோதலை முன்னிலைக்கு உரியதாகக் கருதுவோருளர். அம்பேத்கர் 1956 இல் பௌத்த மதத்தைத் தழுவியமையை முன்னுதாரணமாகக் கொண்டு வைதிக சமயம் வீழ்த்தப்பட்டால் சமூக விடுதலை சாத்தியப்படும் என நம்பிப் பரப்புரை செய்யப்படுவதனை அவதானிக்கலாம். எமக்கான சமூக மாற்றத்தில் கருத்தியல் மோதல் முதல் நிலை வகிப்பது மெய். ஆயினும் எத்தகைய சமூக பொருளாதார அடித்தள மாற்றத்தின் பேறாக இந்தக் கருத்தியல் மோதல் வெளிப்பாடு அடைகிறது எனும் தெளிவற்ற சூழலில் முன்னெடுக்கப்படும் இத்தகைய மத மாற்றச் செயற்பாடுகள் உரிய பெறுபேற்றை எட்ட இயலாத நெருக்கடியையே ஏற்படுத்தும்.

வட இந்தியாவில் இடம்பெற்ற வைதிக அவைதிக மதங்கள் இடையேயான மோதலுக்குரிய ஒழுங்குப் பிரகாரம் அதே வகைப்பட்ட முறையில் தமிழகத்தின் வரலாற்று இயக்கம் அமைந்திருக்கவில்லை. அங்கே பிராமண - சத்திரியர் இடையே நிலவிய உறவு போலத் தமிழக நிலை இல்லை. இங்கே சத்திரிய வர்ணமே கிடையாது என்ற கருத்து மனங்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. மருதத் திணை மேலாதிக்கத்தின் வாயிலாக ஆட்சியைப் பெற்ற அரசர்கள் 'சத்திரியர்கள் போலப்' பார்க்கப்பட்டாலும் அவர்களுக்கான சமூகத் தளமும் அவர்களைத் தலைமையாகக் கொண்டு நிலவுடைமையைப் பெற்ற வெள்ளாளச் சாதிக்குரியது தான். மேலாதிக்கம்பெற்ற வெள்ளாளர் ஆளுந்தகைமையைப் பெற்ற போதிலும் கையகப்படுத்திய நிலத்தில் உழைக்கும் சூத்திர வர்ணத்தவராகவே பிராமணக் கருத்தியலால் வரையறுக்கப்பட்டிருந்தனர். மேலான அரசியல் அதிகாரம் இருந்தபோது 'சற்சூத்திரர்' என்ற தரவேறுபாடே போதுமானதாக உணரப்பட்டு இருந்தது. அவர்களுக்கான அரசியல் ஆதிக்கம் விஜயநகரப் பேரரசால் தரவிறக்கம் அடைந்த பின்னரே வெள்ளாள - பிராமணக் கருத்தியல் மோதல் மேற்கிளம்பலாயிற்று; சைவசித்தாந்தம் வெளிப்படுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ்விரு தரப்பாருக்கு இடையிலான மோதல், சமரச முரண் என்ற வகைப்பட்டது; அடிப்படையான பொருளுற்பத்தி முறையை மாற்றாமல், எவரது அதிகாரம் கூடுதல் வலுவுடையது எனும் திணை மோதல்!

முன்னதாக கி.மு. 63 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் சமத்துவ ஊடாட்டமிக்க திணைகள் இடையேயான வணிக எழுச்சியின் வெளிப்பாடாக தமிழ்ப் பண்பாட்டின் அடித்தளமாக ஆசீவக மதம் வெளிப்பட்டிருந்தது பற்றிப் பார்த்து வந்துள்ளோம். மருதத் திணை மேலாதிக்கம் ஏற்பட்டபோது (கிமு 3 ம் நூற்றாண்டு முதலாக) ஆசீவகம் முன்னிறுத்திய சமத்துவ நோக்கு ஏற்கவிலாததாக மாறவும் மேலாதிக்கம்பெற்ற வேளாண்மைச் சக்தி வடக்கிலிருந்து வந்த பிராமண மதத்தைக் கையேற்றுக்கொண்டது. அதனை அப்படியே உள்வாங்கி இருக்கவில்லை. பிராமண மதம் தமிழ் வேளாண் குடிகளது இயற்கை வழிபாட்டுடன் இணைந்த புதிய வளர்ச்சியை இங்கே எட்டியிருந்தது. அதனை வீழ்ச்சியுறச் செய்த வணிக மேலாதிக்கம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டின் பின்னர் சமத்துவ ஊடாட்டமுடைய வணிகக் கருத்தியலான ஆசீவகத்தைக் கைவிட்டவாறு மேலாதிக்கவாத வணிகக் கருத்தியலை வெளிப்படுத்தும் வட இந்திய அவைதிக மதங்களைக் கையேற்று வளர்த்தெடுத்தது பற்றியும் அறிவோம்!

ஆக, வணிக - வேளாண் சமூகங்கள் இடையே தமக்கமைவான பொருளுற்பத்தி உறவு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்

என்ற வரலாற்று நிர்ப்பந்தம் ஏற்படும் நிலையில் தமது நலனைப் பேண ஏற்புடையதான சமூக அமைப்புக் கட்டமைக்கப்படுவதனைச் சாத்தியப்படுத்த வேண்டியிருந்தது. அந்தச் சூழலுக்கான கருத்தியல் தள மோதல்களே அவைதிக - வைதிக மதங்களின் வாயிலாக வெளிப்பட்ட இந்தக் கருத்தியல் போராட்டங்கள் என்பது தெளிவு. பண்பாட்டுப் புரட்சியூடாக வெற்றிகொள்ளப்பட்ட சமூக மாற்றம் இது. பக்தி இயக்கத்தின் வாயிலாக ஏற்பட்ட அரசியல் - சமூக - பொருளியல் எழுச்சியில் (கி.பி. 8 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்) நிலப்பிரபுத்துவக் கட்டமைப்புக்கான விருத்தி இங்கே சாத்தியப்பட்டிருந்தது என்பதனூடாக இதனைப் புரிந்துகொள்ள இயலும். அதேவேளை, பக்திக் கோட்பாட்டை முன்வைத்தவர் வணிகச் சாதியைச் சேர்ந்த காரைக்காலம்மையார் என்பதும் அதற்கான மெய்யியல் வடிவத்தையும் இயங்காற்றலையும் வழங்கிய நாவுக்கரசர் வணிகக் கருத்தியலுக்கு உரிய சமணப் பள்ளியில் இருந்து வந்தவர் என்பதையும் எவ்வகையில் புரிந்துகொள்வது?

> **சிவன், விஷ்ணு ஆகிய முழுமுதற் கடவுளரைப் பக்திப் பேரியக்கம் ஏற்புடையதாக ஆக்கிச் சைவமும் வைணவமும் தமிழர் மதங்கள் எனப் பரப்புரை செய்யப்பட்ட போது இரண்டுடனும் உறவு பாராட்டிய முருக வழிபாட்டை வணிகச் சாதியினர் முன்னிறுத்தியமை தனி ஆய்வுக்கு உரியது. பின்னர் அருணகிரிநாதர், குமரகுருபரர் போன்றோர் ஊடாக முருக வழிபாடு முன்னிலை பெற்ற இரண்டாவது பக்தி இயக்கம் குறித்தும் நுண்ணாய்வு அவசியமானது!**

### இந்து சமய வடிவத்தில் சைவ நெறி

பண்பாட்டுப் புரட்சி வாயிலாக நிலப்பிரபுத்துவக் கட்டமைப்புச் சாத்தியப்பட்ட போதிலும் நிலவுடைமையின் பொருளுற்பத்தி உறவுக்கு ஏற்புடையதாக அமைந்த சாதி முறைமை என்பது அடுத்துள்ள வளர்ச்சியில் முதலாளித்துவ அமைப்பை வென்றெடுக்கத் தடையாக இருந்துள்ளது எனும் கருத்து நிலவுகிறது. முதலாளித்துவ மாற்றத்தை எட்டியிருந்த ஐரோப்பியரது இடையீட்டின் காரணமாகவே சாதியத்தை வலுவான அடித்தளமாகக் கொண்டிருந்த பொருளுற்பத்தி முறையைத் தகர்த்து மூலதன விருத்தியைச் சாத்தியமாக்க இயலுமாயிற்று என்ற வகையில், வர்க்க பேதங்களைத் தகர்த்து சமத்துவ சமூக அமைப்பை வென்றெடுக்கவும் ஐரோப்பியப் புரட்சி அனுபவங்களைக் கற்றுப் பிரயோகிக்க வேண்டி உள்ளது என்பர்.

சாதிகளைத் தகர்த்து வர்க்க அணிசேர்க்கைக்கான மாற்றத்தை எட்டும்போது மட்டுமே பாட்டாளி வர்க்கச் சிந்தனையைக் கையேற்றுப் பிரயோகித்துச் சமத்துவச் சமூகத்தைப் படைப்பதற்கான வாய்ப்புக் கிட்டும் என்ற நம்பிக்கை எமக்கான பிரத்தியேகச் சமூக முறைமையையும் அதற்கே உரித்தான வரலாற்று மாற்றப் போக்குகளையும் கண்டுணரதாததன் பேறு. இன்றைய வரலாற்றுக் கட்டமேகூட எமது சமூக முறைமையை நினைவூட்டுவதாகவே உள்ளது. ஏற்றத்தாழ்வுச் சமூக முறை வர்க்க அடிப்படையில் மட்டும் இயங்கி வந்திருக்கவில்லை. முழுச் சமூக சக்தியாக (திணையாக) ஆதிக்க சாதி சுரண்டலை மேற்கொண்டதைப் போன்றதே இன்றைய தேசங்கள் மீதான ஏகாதிபத்தியத்தின் சுண்டலும். மேலாதிக்கச் சாதிகள் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சுரண்டி வந்ததைப்போல நவகாலனித்துவ முறைமையில் எமது தேசங்கள் ஏகாதிபத்தியத் திணையால் சுரண்டப்படுகிற நிலையைத் தகர்த்தால் அன்றி முதலாளித்துவ வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை எட்டி ஏகாதிபத்தியமாகப் பரிணமித்துவிட்ட மேலைத்தேசங்களில் வர்க்கப் புரட்சி ஏற்படப் போவதில்லை என்பதனைக் கண்டுகொள்ளாமல் இருக்க இயலாது.

வர்க்கப் புரட்சியாக அன்றி, பல்வேறு வர்க்கங்களையும் ஐக்கியப்படுத்தியவாறு ஏகாதிபத்தியப் பிணைப்பைத் தகர்ப்பதனூடாக அனைத்துத் தேசங்கள் இடையே சமத்துவத்தை வென்றெடுப்பதே ஒடுக்கப்பட்ட தேசங்கள் கட்டியெழுப்புகிற சோசலிசக் கட்டமைப்பு என்பதாக இன்றைய வரலாற்றுத் திருப்பம் ஏற்பட்டுள்ளது!

வர்க்கச் சமூக (ஐரோப்பிய) அமைப்பில் அதிகாரத்தில் இருந்த வர்க்கத்தை அழித்தொழித்துப் புதிய வர்க்கங்களை உடைய சமூக அமைப்பு எழுச்சி பெற்று வந்ததைப் போல முழுச் சமூக சக்திக்குரிய (திணை அரசியலுக்குரிய) எமக்கான செயலொழுங்கு அமைந்திருக்கவில்லை. இங்கே முன்னெடுக்கப்படுகிற விடுதலைத் தேசியச் சோசலிச நிர்மாணத்தில் பாட்டாளி வர்க்கச் சோசலிசக் கட்டமைப்புப் போன்று முதலாளித்துவம் அழித்தொழிக்கப்படுவதில்லை. தேசிய முதலாளித்துவத்தையும் ஐக்கியப்படுத்தியவாறு விடுதலைத் தேசியம் விருத்திபெறுகிற போதுதான் கொடுமுடியாகத் திகழும் ஏகாதிபத்திய உச்சத்தை வீழ்த்தித் தேசங்கள் இடையே சமத்துவத்தை வென்றெடுக்க இயலும்.

ஐரோப்பியச் சமூகத்தில் (அன்றைய கிரேக்கம், ரோம்) ஆண்டான் - அடிமை வர்க்கங்கள் இல்லாது ஒழிக்கப்பட்டு நிலப்பிரபுத்துவ அமைப்பு எழுச்சி பெற்றபோது அந்தப் புதிய சமூக முறைமைக்கான மதமாக கிறிஸ்தவம் வடிவம் பெற்றிருந்தது. கிறிஸ்தவத்தையே ஐரோப்பியச் சமூகம் முழுமையும் (நிலப்பிரபுக்கள், பண்ணையடிமைகள், கைவினைஞர்கள்) ஏற்றொழுகினர். அதிகாரம்பெற்ற கிறிஸ்தவ மதத்தால் விலக்கப்பட்ட வணிகத்தை அங்கே சிறுபான்மைச் சமூகமாகச் சிதறுண்டு வாழ்ந்த யூதர்கள் மேற்கொண்டனர். அரச - சமூக - பண்பாட்டு ஆதரவற்ற வணிகம் உள்ளூர் மட்டங்களில் ஒடுங்கியிருந்த போது அன்றைய உலக வர்த்தகத்தை இந்திய - சீன - அரபு வணிகர்களே மேற்கொண்டு வந்தனர். இந்தியாவில் தமிழக வணிகர்களே முதல் வரிசைக்குரிய மேலாண்மையை நீண்டகாலம் பெற்றிருந்தனர்; குறிப்பாகச் சோழப் பேரரசர் இராசேந்திரனால் கடாரம் (மலேசியா, இந்தோனேசியா) மீது யுத்தம் மேற்கொள்ளப்பட்டு மேலாதிக்கத்தை மேற்கொள்ள நேர்ந்தது , தமிழ் வணிகர்களது பாதுகாப்பு, நலன் என்பவற்றைப் பேணும் பொருட்டாகவே.

எமக்கான நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பில் வணிகம் ஆதார சக்தியாகப் பயன்கொள்ளப்பட்டது. உள்ளூரிலும் வணிகர்களின் பொருட்டு வழக்காடச் சிவன் நேரில் வந்து திருவிளையாடல் புரிந்ததான புராண வழக்காறு இங்குள்ளது. இந்தப் பின்னணியுடன் வணிகத் தரப்பின் ஒரு பகுதியினர் அறநெறிக் காலத்தின் (கி.பி. 27 ஆம் நூற்றாண்டுகள்) வணிக மேலாண்மை தகர்க்கப்பட்டு பக்திப் பேரியக்கத்தின் ஊடாக நிலப்பிரபுத்துவ மேலாதிக்கம் ஏற்படுவதற்குப் பணியாற்றியமையை விளங்கிக்கொள்ள முயற்சிக்கலாம். அறநெறிக்கால அரசு விவசாய விருத்தியில் அக்கறையற்று வர்த்தக நலனுக்கே முன்னுரிமை வழங்கியபோது ஈழத்துணவு இறக்குமதியாக்கப்பட வேண்டி இருந்தது. இத்தகைய வெளிநாடுகளுடனான வர்த்தக ஈடுபாடுடையோர் அதீத செல்வச் செழிப்பில் திளைத்தனர். கடல்கடந்த வர்த்தகர்களுடன் உள்ளூர் வணிகர்களுக்கான வர்க்க முரண்பாடு காரணமாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர், சமூக மாற்ற சக்திகளுக்கு உதவிபுரிந்து, தமக்கானதாகச் சொல்லப்பட்ட வணிக மேலாதிக்கத்தை தகர்ப்பதற்கு வழிகோலியுள்ளனர் என்பது தெளிவு!

வணிக மேலாதிக்க மதங்களாக பௌத்தமும் சமணமும் திகழ்ந்த நிலை மாற்றமடைந்து நிலப்பிரபுத்துவ மேலாதிக்கம் ஏற்பட்ட பின்னர் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வணிகத் தரப்பினர் தமக்கான பழைய மதங்களைப் பின்பற்றினராயினும் கணிசமானோர் முருக வழிபாட்டை முன்னிறுத்தி இந்து சமயத்தைத் தழுவினர் (பலர் இஸ்லாத்தைத் தழுவும் வகையில் வணிகக் கருத்தியல் சார்ந்த அந்தப் புதிய மதமும் தமிழகத்தில் அறிமுகப்பட்டு இருந்தது). சிவன், விஷ்ணு ஆகிய முழுமுதற் கடவுளரைப் பக்திப் பேரியக்கம் ஏற்புடையதாக ஆக்கிச் சைவமும் வைணவமும் 'தமிழர் மதங்கள்' எனப் பரப்புரை செய்யப்பட்ட போது இரண்டுடனும் உறவு பாராட்டிய முருக வழிபாட்டை வணிகச் சாதியினர் முன்னிறுத்தியமை தனி

ஆய்வுக்கு உரியது. பின்னர் அருணகிரிநாதர், குமரகுருபரர் போன்றோர் ஊடாக முருக வழிபாடு முன்னிலை பெற்ற இரண்டாவது பக்தி இயக்கம் குறித்தும் நுண்ணாய்வு அவசியமானது!

ஆதிக்கச் சாதிக்குரிய ஒரு பரம்பொருளுக்கு உட்பட்ட பரிவாரத் தெய்வங்கள் சர்வ வல்லமையுடன் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளமை கவனத்துக்குரியது. ஆதிக்கச் சாதியின் 'மேன்மைகொள் சைவமும் வைணவமும்' ஏனைய சாதிப் பிரிவினர்களது குலக் கடவுளர்களை ஆட்படுத்தி அரவணைத்த சமாதான சகவாழ்வு தொடர ஏற்ற வகையில், நிலப்பிரபுத்துவக் காலகட்டத் தேவையை நிறைவு செய்ய ஏற்றதாக, இங்கே இந்து சமயம் தோற்றம்பெற்றது. பரந்த ஐக்கியத்தைக் கட்டியெழுப்பிய இந்த இந்து சமயம், முந்திய பிராமண மதத்தினின்றும் பல வகைகளில் வேறுபட்டது. பிராமண மதம் வீரயுகத்தில் சிறு நிலவுடைமை பெற்ற சிறியதொரு குழுவான கிழார்களதும் அரசினதும் ஏற்பினைப் பெற்ற பிரத்தியேகமான ஒரு சமயப் பிரிவு. ஏனைய இன மரபுக் குழுக்களின் கடவுளருடன் ஊடாட்டம் கொள்ள அவசியமற்றது. இந்து மதத்தின் முழுமுதல் பரம்பொருள் நிலப்பிரபுக்களுக்கு முழுச் சமூகமும் கட்டுப்பட்டு இயங்குவதைப்போல நாட்டார் சமயங்களின் மேல் ஆதிக்கம் செலுத்தவல்லது.

### சாதி பேதங்களும் சமூக ஒருங்கமைவும்

'சாதிச் சமயங்களை ஒன்றிணைத்து சமயங்களின் சமயமாக இயக்கம் கொண்ட இந்து மதம்' என்பதனை விளங்கிக் கொள்வதற்கு அமைவாக அடுத்த அத்தியாயம் "நாட்டார் சமயங்களும் இந்து மதமும்" என்பதாகத் தொடர உள்ளது. செமிட்டிக் மதங்களான யூத, கிறிஸ்தவ, இஸ்லாம் போன்றவை ஒரு கடவுள் - இறைதூதர் - பைபிள் (பழைய/புதிய ஏற்பாடுகள்), குர் ஆன் என வடிவமைக்கப்பட்ட ஒரு புனித நூல் - தலைமைத்துவமான ஒரு அமைப்பு என இயங்கும்போது இந்து சமயம் அவ்வாறு எத்தகைய கட்டமைப்பையும் கொண்டிராது முரண்படுகிற பல கடவுளர்களை வழிபட்டுப் போற்றுகிற காரணத்தால் இதனை ஒரு மதமாகக் கருத இயலாதெனக் கூறுகிறவர்கள் உள்ளனர். வர்க்கச் சமூக முறைக்குப் பொருத்தமுடையதாக இயங்கிய 'செமிட்டிக்' மதங்களினின்றும் வேறுபட்டதான வாழ்முறையின் வெளிப்பாடு இந்து சமயம். வர்க்கப் பிளவுறாமல் இன மரபுக் குழுக்கள் சாதிகளாக மாற்றம்பெற்று நீடிக்கும் எமக்கான திணை மேலாதிக்க வாழ்வியலில் இன மரபுக் குழுக்களின் வழிபாட்டு அம்சங்களது நீடிப்புத் தொடர்வதற்கு இங்கே அனுமதிக்கப்பட்டது!

வளமான பரந்த நிலப்பரப்பு இங்கே காணப்பட்டதன் காரணமாக வென்றடக்கப்பட்ட திணைகளுக்கு உரிய இன மரபுக் குழுக்கள் தத்தமது பண்பாட்டுக் கோலங்களுடன் சாதிகளாக இயங்க அனுமதிக்கப்பட்டன. அங்கே இன மரபுக் குழுக்கள் தகர்க்கப்பட்டு சுரண்டப்படும் வர்க்கங்கள் என ஆக்கப்பட்ட போது இத்தகைய பண்பாட்டு நீடிப்புக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. ஆதிக்க வர்க்கத்தின் ஒரு கடவுள், ஒரு திருச்சபை, அதிகாரம்பெற்ற புனித நூல் என்பவற்றுக்கு சுரண்டப்படும் வர்க்கங்கள் கட்டுப்பட வேண்டி இருந்தது!

இங்கே மேலாதிக்கம்பெற்ற ஆதிக்கச் சாதிக்கான சிவன், சாதிய மேலாதிக்கத்தின் அடையாளம். வெள்ளாளர் அனைவரும் சம உரிமையுடன் அவருக்கு ஆலயம் அமைக்க இயலும். ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கான காத்தவராயன், மதுரை வீரன் போன்றோர் அந்த மக்கள் மத்தியில் இருந்து வந்தபோதிலும் 'மேன்மைகொள் சைவ நீதிக்கு' ஆட்படுத்தும் வகையிலான புராணக் கதைகள் வாயிலாக சிவனுடன் பிணைக்கப்பட்டு உள்ளனர். ஆதிக்கச் சாதியினர் அனைவரும் நிலவுடைமையாளராக இருந்ததில்லை. சாதி மேட்டிமைக்காக வெள்ளாளர்கள் அனைவரும் சிவனைப் பிரதிஷ்டை செய்ய அனுமதிக்கப்படாலும் கூட, அவர்களுக்கு உள்ளேயும் நிலவுடைமை பெற்ற வர்க்கமாக உள்ள பிரிவினரே 'தூய சைவர்களாக' சிவனே கதி என இயங்குவர். வெள்ளாளர்களில் சொத்துரிமை அற்ற வர்க்கப் பிரிவினர் தமக்கான நாட்டார் வழிபாட்டில் கூடுதல் கரிசனங்கொள்வர். வேற்றுமைகளுக்குள் ஒற்றுமை பேணும் இத்தகைய சாதிய வாழ்வியல் குறித்துத் தொடர்ந்தும் அலசும் அவசியம் உள்ளது.


(தொடரும்)

ஆங்கிலேயர்களின் ஆட்சியால் இலங்கைக்கு கிடைத்த சில பேறுகளில், மேலைத்தேச மருத்துவமுறையின் உள்நுழைவும் ஒன்றாகும். அதுவரை தனியே சுதேச மருத்துவத்தையே நம்பியிருந்த இலங்கை மக்கள், மேலைத்தேய மருத்துவத்தின் அறிமுகத்தோடு தீர்க்கப்படமுடியாத பல நோய்களையும் குணப்படுத்த முடிந்தது. இறப்புவீதம் பெருமளவுக்கு குறைந்தது. இவ்வாறான மேலைத்தேய மருத்துவத்து றையை இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் வளர்த்தெடுக்க, அமெரிக்க மருத்துவ மிஷனரிகள் மேற்கொண்ட பணிகள் அளப்பரியவை. அவ்வாறு மேலைத்தேய மருத்துவத்தை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வளர்த்தெடுக்க தம் வாழ்வையே அர்ப்பணித்த மருத்துவர்களையும், அவர்களது பணிகளின் தனித்துவத்தை யும், இலங்கையின் வடபகுதியில் மேலைத்தேச மருத்துவத்துறை 1820 முதல் இப்போதுவரை வளர்ந்து வந்த முறைமைகளையும் தொகுத்து தருவதாக 'யாழ்ப்பாண மருத்துவ வரலாறு' என்ற இந்தக் கட்டுரைத் தொடர் அமைகின்றது.




**பாலசுப்ரமணியம் துவாரகன்**

பாலசுப்ரமணியம் துவாரகன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். 2005 – 2008 காலப்பகுதியில் சுகாதார அமைச்சில் கடமையாற்றி யுள்ளார். இக்காலப்பகுதியில் 10 இற்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார் ஆளுமைகளை நேர்காணல் செய்து கனடாவிலிருந்து வெளிவரும் 'வைகறை' வாரப்பத்திரிகையிலும் 'காலம்' சஞ்சிகையிலும் பிரசுரித்துள்ளார். கலாநிதி. சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலரின் பதிப்பாசிரியர்.
கடந்த 14 வருடங்களாக யாழ். போதனா மருத்துவமனையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றும் துவாரகன் 2018 இல் யாழ். போதனா மருத்துவமனையில் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகத்தில் மேலைத்தேச மருத்துவ வரலாற்றை ஆவணப்படுத்தி யுள்ளார். இவர் மருத்துவ அருங்காட்சியகத்துக்குப் பொறுப்பு அலுவலராக விளங்குவதுடன் மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி அவர்களது வழிகாட்டலில் யாழ்ப்பாணத்தில் தனித்துவமான மருத்துவ அருங்காட்சியகம் உருவாகக் காரணமானவர். இங்குள்ள தொலைமருத்துவப் பிரிவில் பன்னாட்டு மருத்துவ வல்லுநர்கள், பேராசிரியர்கள் வாரந்தோறும் கலந்துகொள்ளும் இணையவழி தொலைமருத்துவக் கருத்தமர்வுகளின் இணைப்பாளராகவும் செயற்படுகின்றார்.


**1835 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்கத்தா மருத்துவக்கல்லூரி : ஆசியாவில் மேலைத்தேச மருத்துவம் கற்பிக்கப்பட்ட 2ஆவது மிகப் பழைமை வாய்ந்த மருத்துவக்கல்லூரி**

Image Source : British Library

# யாழ்ப்பாணத்தில் கிறீனது இறுதி நாள்கள்

*1838.11.29 அன்று யாழ்ப்பாணத்தில் பிறந்த மருத்துவர் எட்வின் லோசன் கொச் ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணத்தில் பயின்று தனது 20 ஆவது வயதில் அரச புலமைப்பரிசிலைப் பெற்று கல்கத்தா மருத்துவக் கல்லூரிக்குச் சென்று மருத்துவப் பட்டம் பெற்றார். இவர் கொழும்பு மருத்துவபீடத்தின் ஆரம்ப விரிவுரையாளர்களில் ஒருவராகவும் இதன் 2 ஆவது அதிபராகவும் கடமையாற்றினார்.*

*1870 இல் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு மருத்துவபீடத்தின் முதலாவது அணி மாணவர்களது 2 ஆவது விரிவுரையின் போது உரையாற்றிய மருத்துவர் எட்வின் லோசன் கொச், அந்தக் காலப்பகுதியில் வடபகுதியில் பிரபல்யமடைந்துவரும் ஐரோப்பிய*

மருத்துவத்தின் மகத்துவத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார் :

“ ஏராளமான வடபகுதி மக்கள் ஐரோப்பிய மருத்துவத்தின் நன்மையை அனுபவிப்பதை எனது நேரடி அனுபவத்திற் கண்டிருக்கிறேன். அங்கு அமெரிக்க மிசனரியினரால் ஆரம்பிக்கப்பட்ட ஐரோப்பிய மருத்துவத்தை இலங்கையின் வேறெந்தப் பகுதி மக்களையும் விட அதிகளவானோர் பின்பற்றுகின்றனர். வடபகுதி மக்கள் சுதேச மருத்துவர்களைக் கைவிட்டு மேலைத்தேச மருத்துவத்துக்கு திரும்பியுள்ளமையக் காணமுடிகிறது. இலங்கைத்தீவில் வேறு எந்த மருத்துவமனையை விடவும் யாழ்ப்பாணத்தில் ஆபத்து உதவி மருத்துவமனையை நாடிவந்து சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகமானதாகும்”

இது மேலைத்தேச மருத்துவம் அப்பகுதி மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி வெற்றிபெற்றிருப்பதை உணர்த்துகிறது. இதனால் அப்பகுதியில் சேவையாற்ற அதிக எண்ணிக்கையான மருத்துவர்களது தேவையை உணர்ந்த மருத்துவர் கிறீன் அங்கு சுதேச மொழியில் ஐரோப்பிய மருத்துவத்தைப் போதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார். இதற்காக ஆங்கில மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

கிறீனுக்கு 3 ஆவது பெண் குழந்தை (Mary Ruggles Green) 1870 இல் பிறந்தது. கிறீனது சகோதரி மேரியின் பெயரால் இந்தக்குழந்தை அழைக்கப்பட்டது.

மானிப்பாயிலிருந்த கிறீனது மருத்துவக் கல்லூரியில் 1871 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 பேர் கொண்ட புதிய மாணவர் அணியினர் மருத்துவம் பயில ஆரம்பித்தனர்.

இவர்களில் மூவர் அந்தக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த முன்னணி சுதேச மருத்துவர்கள் மூவரின் நெருங்கிய உறவினர்களாக இருந்தமை கிறீனுக்கு மகிழ்ச்சியையும் தனது பணிகுறித்த திருப்தியையும் ஏற்படுத்தியது.

**கிறீனது 8 ஆவது அணி மருத்துவ மாணவர்கள் : தமிழ் மொழி மூலம் மருத்துவம் பயின்ற 3 ஆவது அணி (1871-1873)**

ஜே. அமரசிங்கர்
எஸ். அருணாசலம்
எம். இராமலிங்கம்
வி. சித்திரவேலு
வி. சதாசிவம் பேற்ஸ்
எஸ் சரவணமுத்து
எஸ். சின்னத்தம்பி
எஸ். சின்னையா
கே. தில்லையம்பலம்
கே. வைத்திலிங்கம்
கே. வேலுப்பிள்ளை

மருத்துவர் கிறீன் 1871 இல் குழந்தை பிறப்புப் பற்றிய சிறு நூலை தமிழில் எழுதி 3000 பிரதிகள் அச்சிட்டு வெளியிட்டார். இந்தக்காலப்பகுதியில் கிறீனும் மனைவியும் தமது ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியநிலைக்கு ஆளாயினர்.

கிறீன் தனது மருத்துவத் தேவை கருதி யாழ்ப்பாணத்திலிருந்து அமெரிக்காவுக்கு ஓரிரு ஆண்டுகளில் திரும்புவது குறித்து போஸ்ரன் அமெரிக்க மிசன் சங்கத்துக்குக் கடிதம் எழுதினார். யாழ்ப்பாணத்தில் தனது இடத்துக்கு வேறு ஒரு மருத்துவரை நியமிக்குமாறு இந்தக்கடிதத்திலே கேட்டிருந்தார்.

மானிப்பாயிலிருந்த கிறீனது மருத்துவக் கல்லூரியில் 1871 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 11 பேர் கொண்ட புதிய மாணவர் அணியினர் மருத்துவம் பயில ஆரம்பித்தனர். இவர்களில் மூவர் அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த முன்னணி சுதேச மருத்துவர்கள் மூவரின் நெருங்கிய உறவினர்களாக இருந்தமை கிறீனுக்கு மகிழ்ச்சியையும் தனது பணிகுறித்த திருப்தியையும் ஏற்படுத்தியது.

*1871* இல் கிறீன் தம்பதியினருக்கு *4* ஆவது குழந்தை கிடைத்தது. கிறீன் தம்பதியினருக்குக் கிடைத்த முதலாவது ஆண் மகவு இது. கிறீன் தனது பெண்பிள்ளைகள் மூவருக்கும் சகோதரிகளின் கிறித்துவப் பெயரையை வழங்கியிருந்தார்.

கிறீன் தனது மகனுக்கு அமெரிக்கர்களுக்கும் தமிழர்களுக்கும் பொதுவான ஒரு பெயரையே வழங்க விரும்பினார். "Nathan", அமெரிக்கர்களுக்கும் தமிழர்களுக்கும் பொதுவான ஒரு பெயராகும். இந்தப்பெயரை அமெரிக்கர் "நேத்தன்" என்று உச்சரிப்பார்கள் தமிழர் "நாதன்" என்று சொல்வார்கள்.

யோகநாதன், கணநாதன், சிவநாதன், கடம்பநாதன் முதலான இறைவனை நினைவூட்டும் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டும் மரபு தமிழர்களிடையே இன்றும் வழக்கில் உண்டு. தமிழிலே வழங்கப்படும் நாதன் என்பது நாதா என்ற சம்ஸ்கிருத மூலச்சொல்லிருந்து வந்தது. இச்சொல் தலைவன், கடவுள், கணவன் முதலானோரைக் குறிக்கப் பயன்படுகிறது. அதேவேளை நாதன் என்பது கிறித்துவப் பெயராகவும் விளங்குகிறது. இந்த நாதன் என்ற சொல் தமிழில் இயேசுநாதரைக் குறிக்கவும் பயன்படுகின்றது.




Dr. Edwin L. Koch

Image Source : Some-milestones-in-history-of-colombo

கிறீனது மகன் நேத்தன் (நாதன்) *1894* இல், யேல் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். பின்னர் மருத்துவம் பயில்வதற்காக கிறீன் மருத்துவம் பயின்ற நியூயோர்க்கில் உள்ள மருத்துவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்கள் கல்லூரியில் சேர்ந்து *1898* இல் எம்.டி. பட்டத்தைப் பெற்றார். நேத்தன் நியூயோர்க்கிலிருந்த சென் லூக்ஸ் மருத்துவமனையில் நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணராகப் (Thoracic Surgeon) பணியாற்றினார். இவர் அமெரிக்க நெஞ்சறை சத்திரசிகிச்சை கழகத்தின் தலைவராக *1925* இல் தெரிவு செய்யப்பட்டார். *1955* ஆம் ஆண்டு *83* ஆவது வயதில் கிறீனது மகன் மருத்துவர் நேத்தன் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**யாழ்ப்பாணத்தில் மருத்துவர் கிறீனது இறுதி நாள்கள்**

மருத்துவர் கிறீன் *18* பேர் கொண்ட புதிய மாணவர்களது அணியை *1872* இல் ஆரம்பித்தார். ஓர் அணியைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியை ஆரம்பித்து *3* வருடங்களுக்குப் பின்னரே அடுத்த அணியினர் மருத்துவம் பயில உள்ளீர்க்கப்படுவார்கள். கிறீன், தான் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய பின்னரும் மானிப்பாய் மருத்துவக் கல்லூரியைத் தொடர்ச்சியாக இயங்கக் கூடியநிலைக்கு கொண்டுவருவதற்கு அயராது பாடுபட்டதுடன் உள்ளூரில் பணியாற்றக்கூடிய போதியளவு

மருத்துவர்களை உருவாக்குவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

**கிறீனது 9 ஆவது அணி மருத்துவ மாணவர்கள் : தமிழ்மொழி மூலம் மருத்துவம் பயின்ற 4ஆவது அணி (1872-1875)**

ஏ. அமரசிங்கம்
ஆர். அம்பலம்
ரி. கனகசபை
சி.குமாரவேலு
ரிச்சாட் எஸ். அடம்ஸ்
பென்ஜமின் லோரன்ஸ்
வி. செல்லப்பா
என். எல். ஜோசுவா
என். தம்பிமுத்து
எம். நன்னித்தம்பி
ஆபிரகாம் வி. நரசிங்கர்
ஜோசுவா கே. பெரியதம்பி
வி. பொன்னம்பலம்
கே. பொன்னம்பலம்
எஸ். பொன்னம்பலம்
முத்தையா எஸ். ரோப்ஸ்
என். மூத்ததம்பி
வி. வேதாவனம்

மருத்துவர் கிறீனிடம் மருத்துவம் பயின்ற மாணவர்களான மருத்துவர் சப்மான் வைத்திலிங்கம், மருத்துவர் சி.ரி. மில்ஸ் ஆகியோர் மானிப்பாய் மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவமனையிலும் கிறீனுக்கு உதவியாகப் பணிபுரிந்தனர். எல்லாமாக 6 பேர் இங்கு பணிபுரிந்தனர். இவர்களுக்கான வேதனம் பிரித்தானிய அரசிடமிருந்து கிடைத்த நன்கொடையிலுருந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நோயாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணத்திலிருந்தும் வழங்கப்பட்டது. மருத்துவர் கிறீனுக்கு அமெரிக்க மிசனரியினர் ஊதியம் வழங்கினர்.
அக்காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் மேலைத்தேச மருத்துவ வசதிகள் போதியளவு கிடைக்கவில்லை. இதனால் கீழைத்தேசத்தில் பணியாற்றும் கிறித்துவ மிசனரி ஊழியர்களதும் அவர்களது குடும்பத்தவர்களதும் மருத்துவத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, அமெரிக்காவின் போஸ்ரனிலுள்ள அமெரிக்க மிசன் சங்கம், மருத்துவ மிசனரிகளையும் காலத்துக்குக்காலம் பிறதேசங்களுக்கு அனுப்பிவந்தது. மருத்துவர் கிறீனும் யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க மிசன் சங்கமும், (ACM in Jaffna) அமெரிக்க மிசன் சங்கத்தின் பிரதான நோக்கத்தை விட்டு விலகிச் செல்வதான எண்ணம் போஸ்ரனிலுள்ள பிறதேசங்களுக்கு மிசனரிகளை அனுப்பும் அமெரிக்க மிசன் சங்கத்துக்கு (ABCFM) ஏற்பட்டது. எனினும் யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க மிசனரியினரும் மருத்துவர் கிறீனும் ஆற்றும் நற்பணியைக் கருதி இதனை ABCFM மன்னித்திருக்கலாம்.

**ஆசியாவின் பழைமைவாய்ந்த மருத்துவமனையும் மருத்துவக் கல்லூரிகளும்**

*1820* இல் யாழ்ப்பாணத்தில் பண்டத்தரிப்பு என்ற இடத்தில் அமெரிக்க மிசனரி மருத்துவரான ஜோன் ஸ்கடர், டிஸ்பென்சரி ஒன்றை நிறுவினார். இதுவே மேலைத்தேச (ஐரோப்பிய) மருத்துவத்தைப் பரப்பும் நோக்குடன் உலகிலேயே முதலாவதாக அமைக்கப்பட்ட மேலைத்தேய மருத்துவ மிசன் டிஸ்பென்சரியாகும் (The First Western Medical Mission Dispensary of the World). **1823** இல் பாண்டிச்சேரியில் பிரெஞ்சு அரசாங்கத்தால் மேலைத்தேச மருத்துவக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது (Ecole de Medicine de Pondicherry). இதுவே ஆசியாவின் மிகப் பழைமைவாய்ந்த மேலைத்தேச மருத்துவக் கல்லூரியாகும். **1956** இல் இது இந்திய அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது. இந்தியாவின் முதலாவது பிரித்தானிய கவர்னர் ஜெனரலாக விளங்கிய லோர்ட் வில்லியம் பென்ற்றிங் அவர்களால் கல்கத்தா மருத்துவக்கல்லூரி **1835** இல் ஆரம்பிக்கப்பட்டது. இது இந்தியாவில் மட்டுமன்றி ஆசியாவில் தாபிக்கப்பட்ட மிகப் பழைமைவாய்ந்த மேலைத்தேச மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. சென்னை மருத்துவக் கல்லூரியும் **1835** இல் ஆரம்பிக்கப்பட்டது.
**1852** ஆம் ஆண்டளவில் கட்டப்பட்ட கல்கத்தா மருத்துவக்கல்லூரி மருத்துமனைக் கட்டடம் ஒன்று ஆசியாவில் உள்ள மிகப்பழைமை வாய்ந்த மருத்துவமனைக் கட்டடமாகத் தற்போதும் விளங்குகிறது. அந்தக்கட்டடம் வெறும் தட்டையான சுவர்களால் கட்டப்படவில்லை. கட்டடக்கலையின் அழகியலே அதன் சிறப்பம்சம். யாழ்ப்பாணத்தில் இவ்வாறான கட்டடக்கலையின் அழகியலைக் கொண்ட எந்த ஒரு அரச மருத்துமனைக் கட்டடமும் கடந்த **100** வருடங்களில் கட்டப்படவில்லை.
மருத்துவர் கிறீன் **1848** இல் மானிப்பாயில் ஆரம்பித்த மருத்துவக் கல்லூரி அமெரிக்க மருத்துவ மிசனரிகளால் ஆசியாவில் ஆரம்பிக்கப்பட்ட மிகப் பழைமைவாய்ந்த மருத்துவமனையாகும்.

(தொடரும்)

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.




சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSc, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.







# இஸ்ரேல் நாட்டின் பாலுற்பத்தி துறை சொல்லும் செய்தி

இஸ்ரேல் எனும்போது எமக்கு உடனடியாக பல அரசியல் விடயங்கள் நினைவுக்கு வரும். நீண்டகால பலஸ்தீன இஸ்ரேல் மோதல், ஹிட்லரின் யூத இனச் சுத்திகரிப்பின் பின் உருவாகிய நாடு, பலம்மிக்க இஸ்ரேலிய இராணுவம் என பல விடயங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றைவிட விவசாயத்தில், குறிப்பாக விலங்கு வேளாண்மையில் இஸ்ரேலியர் அடைந்திருக்கும் சாதனையை எம்மில் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். இன்றைய நிலையில் ஒரு இஸ்ரேலியப் பசு, 305 நாட்களைக் கொண்ட பசுக்களின் வருடத்தில், 12000 - 14000 லீட்டர் பாலைச் சுரக்கிறது. ஒரு அமெரிக்கப் பசு 10000 லீட்டர் வரையிலும், ஒரு அவுஸ்ரேலியப் பசு 6000 லீட்டர் வரையிலும், ஒரு இலங்கைப் பசு 600 லீட்டர் வரையிலும் கறப்பதை ஒப்பிட்டால் அதன் பிரம்மாண்டம் புரியும்.

இஸ்ரேல், மத்திய கிழக்கில் அமைந்துள்ள மிகச் சிறிய நாடு. அதிக வெப்பமும் தண்ணீர் தட்டுப்பாடும் வறண்ட நிலப்பரப்பும் ( மூன்றில் இரண்டு பங்கு பாலைவனம் ) கொண்ட அந்தப் பிராந்தியத்தில், அதிக உற்பத்தியைக் கொண்ட கால்நடை வளர்ப்பு மிகக் குறைந்த சாத்தியத்தையே கொண்டிருந்தது. கால்நடைகளை சிறப்பாக வளர்க்கக் கூடிய புல் வெளிகளை அங்கு காண முடியாது என்பதுடன் வறட்சியைத் தாங்கக்கூடிய, உற்பத்தி குறைந்த உள்ளூர் கால்நடைகளே ( டமாஸ்கஸ் இன பசுக்கள்) வாழ்ந்திருந்தன. இந்நிலை

நவீன இஸ்ரேலின் உருவாக்கம் நிகழ்ந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாற்றமடையத் தொடங்கியது. யூதர்களின் நாட்டை உருவாக்குதல் எனும் எண்ணக் கருவுக்கு உயிர் கொடுக்கத் தொடங்கிய காலகட்டங்களில் அந்தப் பிராந்தியத்தில் காணப்பட்ட வறட்சியை தாங்கும் டமாஸ்கஸ் இன மாடுகளுடன் நெதர்லாந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Holstein friesian மாடுகள் கலப்பு செய்யப்பட்டு புதிய சந்ததிகள் உருவாகின. தொடர்ச்சியான இனக்கலப்பு செயன்முறைகள் காரணமாக அதிக பாலுற்பத்தியையும் வறட்சியையும் தாங்கக் கூடிய "இஸ்ரேலிய பிரீசியன்" இன மாடுகள் உருவாகின. இந்தக் கலப்பு இன உருவாக்கத்துக்கு கனடா, ஐக்கிய அமெரிக்க நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட Holstein friesion இன மாடுகளும் பயன்பட்டன.



ஆரம்பகால பண்ணைகள்

Image source : commons.wikimedia.org

உலக யுத்தத்தின் பின் ஐரோப்பிய நாடுகளிலிருந்து அகதிகளாக இஸ்ரேலுக்கு வரும் யூத மக்களின் எண்ணிக்கை அதிகரிக்க, அவர்களுக்கான பால் உற்பத்தித் தேவையும் கூடியது. இந்த நிலையில் இஸ்ரேலின் உருவாக்கத்துக்கு அமெரிக்கா வழங்கிய மீட்பு மற்றும் மீள் கட்டுமான நிதியில் கணிசமாக friesian இன மாடுகளை இறக்குமதி செய்து, மாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டனர். அதன்பின் தொடர்ச்சியான ஆய்வுகளையும் முறையான பாராமரிப்பையும் செய்து, இன்றைய திகதிக்கு உலகின் மிகச் சிறந்த மாடுகளை உருவாக் கியுள்ளனர். தமக்கு மாடுகளை வழங்கிய நெதர்லாந்து, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் மாடுகளின் உற்பத்தித் திறனையும் இஸ்ரேலின் மாடுகள் மிஞ்சியதுதான் சிறப்பானது.

இன்று இஸ்ரேலில் 750 வரையான பண்ணைகளில் 125000 வரையிலேயே மாடுகள் உள்ளன. இந்த மாடுகளைக் கொண்டுதான் பாரியளவில் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. (மாடுகளின் எண்ணிக்கையும் பண்ணைகளின் எண்ணிகையும் குறையும் அதே வேளை, ஒரு மாட்டின் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளது.) இன்னுமின்னும அந்த மாடுகளின் அடுத்த சந்ததிகள் அதிக பால் உற்பத்தியை தரும் வகையில் தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்டு, அவற்றின் எண்ணிக்கை குறைக்கப்படும் வகையில், திட்டங்கள் தீட்டப் படுகின்றன. இலங்கை இந்திய நாடுகளில் மாடுகளின் எண்ணிக்கை அதிகமாகவும் உற்பத்தித் திறன் குறைவாகவும் உள்ளன.(இன்று உலகில் இந்தியா அதிக பால் உற்பத்தியை செய்கின்ற போதும், அவர்களின் ஒரு மாட்டின் பால் உற்பத்தி மிக மிகக் குறைவு. எண்ணிக்கை அடிப்படையில் தான் அவர்களின் உற்பத்தி தீர்மானிக்கப்படுகிறது. இது வினைத்திறன் அற்ற முறையாகும். இந்தியாவிலும், குறிப்பாக குஜராத் பகுதிகளில் இஸ்ரேல் வகையான பண்ணைகள் இஸ்ரேலின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளன.)

இஸ்ரேலிய மாட்டுப் பண்ணைகளின் சிறப்பு என்னவென்றால் அங்குள்ள பெரும்பாலான மாடுகள் கணணி மயப்படுத்தப்பட்டுள்ளதுதான். மாடுகளில் பொருத்தப்பட்டுள்ள சென்சார்கள், மத்திய வலையமைப்பில் தொடர்பில் இருப்பதால், ஒவ்வொரு மாடு தொடர்பான சகல விடயங்களும் அங்கு பதிவுசெய்யப்படும். பொதுவான விடயங்களான இனம், வயது, உரிமையாளர் விபரம் தவிர்ந்து இதயத் துடிப்பு, கர்ப்ப நிலை, சினை அறிகுறி, வெப்பநிலை மாற்றம், பாலின் அளவு, பாலின் தரம் என மிக நுண்ணிய விடயங்களும் அளவிடப்பட்டு, மத்திய வலையமைப்புக்கு தெரியப்படுத்தப்படுவதனூடாக, அந்தந்தப் பகுதியின் கால்நடை வைத்தியர்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப அலுவலர்களுக்கு தகவல் சென்றடையும். பின்னர், அவர்கள் தமது கடமையை சரிவரச் செய்வார்கள். இப்படியான

வலையமைப்பு உலகில் வேறு எங்கும் இந்தளவு வினைத்திறனாகக் கிடையாது.

இங்குள்ள மாடுகள் 100% செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலமே சினைப்படுத்தப்படுகின்றன. மாடுகளைச் சினைப்படுத்த "sion" எனும் நிறுவனம் செற்படுகிறது. நவீன முறையான உபகரணங்களும் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பையும் இந்த நிறுவனம் கொண்டிருப்பதால் இனப்பெருக்க செயற்பாடுகள் பெரிதும் தோல்வியடைவதில்லை. மிகச் சிறந்த காளைகள் தேர்வு செய்யப்பட்டு தொடர்ச்சியான ஆய்வுகள் மற்றும் முறையான மேலாண்மை செயற்பாடுகளின் அடிப்படையில் மிக மிகப் பொருத்தமான காளைகளின் விந்தணுக்கள் மூலம் பசுக்கள் சினைப்படுத்தப் படுகின்றன. அடிக்கடி அந்த விந்தணுக்களின் தரம் சோதிக்கப்படுவதோடு தரம் குறைந்தவை நீக்கப்படும். கன்றுகளின் பால் உற்பத்தி, தரம், நோய் எதிர்ப்பு தன்மை என பல விடயங்கள் அவதானிக்கப்பட்டும் காளைகள் தேர்வுசெய்யப்பட்டு விந்தணுக்கள் சினைப்படுத்தலுக்கு பயன்படும். இங்குள்ள பசுக்கள், காளைகளின் விபரங்கள் "Israeli breeding and herd book" எனும் புத்தகமாக பதியப்பட்டு பராமரிக்கப்படும். அத்துடன் அந்தப் புத்தகத்திலுள்ள விடயங்கள் அடிக்கடி செம்மை செய்யப்படும். இந்தப் புத்தகத்தை தயாரிக்கும் குழுவில் இஸ்ரேலிய அரசு நிறுவனங்கள், கூட்டுறவுகள், பால் பண்ணைச் சங்கங்கள், கால்நடை வைத்தியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், சினைப்படுத்தும் நிறுவனம் என பலர் இடம்பெற்றிருப்பார்கள். பால் மாடு வளர்ப்பின் முக்கிய நிறுவனமாக Israeli dairy board செயற்படும். மாடு வளர்ப்பு தொடர்பான சகல விடயங்களையும் இந்த அமைப்பே கையாளுகிறது. பால் உற்பத்தி, மாடு வளர்ப்புத் தொடர்பான கொள்கைகள், தீர்மானங்களை இஸ்ரேலிய அரசு சார்பாக இந்த அமைப்பே கையாளும்.

பாலுற்பத்தி இங்கு அரசால் தீர்மானிக்கப்படும் கோட்டா முறையிலேயே இடம்பெறுகிறது. ஒவ்வொரு பண்ணையும் வருடா வருடம் உற்பத்தி செய்யத்தக்க பாலின் அளவு நாட்டின் தேவைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும். இது மாதத்துக்கு கணிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். உற்சவ காலங்களில் இந்தக் கோட்டா அதிகரிக்கப்படும். பாலின் விலை சந்தையின் உற்பத்திச் செலவின் அடிப்படையில் அடிக்கடி மாற்றம் செய்யப்படும். இங்கு 100% முறைப்படுத்தப்பட்ட (Formal) பாலுற்பத்தியே நிகழ்கிறது. உற்பத்தியாகும் ஒரு துளி பாலும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டது.

இஸ்ரேல் ஒரு வறண்ட நாடு. சகல பருவங்களிலும் தண்ணீர் கிடைப்பது அரிதெனும் நிலையில், குறைந்தளவில் தகுந்த பருவத்தில் பயிர் செய்யும் புற்களை, சைலேஜ் எனும் ஊறுகாய் செய்தும் இறக்குமதி செய்தும் (பெரும்பாலும் வறட்சியான



**Kibbutz பண்ணைக் குடியேற்றம்**

Image source : www.shutterstock.com

காலத்தில்) பயன்படுத்துகின்றனர். (இன்று இஸ்ரேல் நாடு 90% கடல் நீரை நன்னீராக மாற்றிப் பயன்படுத்துகிறது என்பதும், இதன் காரணமாக விவசாயம் மற்றும் புல் வளர்ப்பு மேம்பட்டுள்ளது). சைலேஜ், கோதுமை, சோளம், புற்கள்,பார்லி, பருத்திக் கொட்டை மற்றும் ஏனைய வர்த்தகத் தீவனங்களைக் கலந்து நவீன முறையான TMR (Total mixed ration) உணவூட்டலை இன்றைய மாடுகளுக்கு வழங்கி வருகின்றனர். மாடுகளின் உற்பத்தி, வயது, காலநிலை, உடற்பருமனுக்கு ஏற்ப உணவுத் தேவை கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. நாடு முழுவதும் 20 - 25 வரையான பிராந்திய உணவுக் கலவை நிலையங்கள் (Regional feed mixed center) நிறுவப்பட்டு அவற்றின் மூலம் பண்ணைகளுக்கு தினமும் இரண்டு தடவை

**இஸ்ரேலில் 750 வரையான பண்ணைகளில் 125000 வரையிலேயே மாடுகள் உள்ளன. இந்த மாடுகளைக் கொண்டுதான் பாரியளவில் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. (மாடுகளின் எண்ணிக்கையும் பண்ணைகளின் எண்ணிகையும் குறையும் அதே வேளை, ஒரு மாட்டின் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளது.)**



**காலில் சென்சார் - pedometer**

Image source : www.fwi.co.uk

உணவு வழங்கப்படுகிறது. பண்ணையாளர்களுக்கு உணவு பயிரிடல், உணவு தயாரித்தல் போன்ற பொறுப்புகள் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு நிலையம் 60 வரையான பண்ணைகளுக்கு உணவை கலந்து வழங்குகின்றது.

இன்று இஸ்ரேல் இந்த நிலைமைக்கு வருவதற்கு அவர்களின் பண்ணைகளின் செயற்பாடுகள் மிக முக்கிய காரணமாகும். Kibbutz மற்றும் Moshav எனும் இரண்டு வகையான பண்ணை அமைப்புகள் அங்கு உள்ளன. 1910 களில் ஆரம்பிக்கப்பட்ட கால்நடைப் பண்ணைகள் kibbutz முறையிலேயே தொடங்கின. இது ஒரு வகையான கூட்டுறவுப் பண்ணைகள். சியோனிச மற்றும் சோசலிச எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த வகைப் பண்ணைகள் இஸ்ரேலின் உருவாக்கத்தில் மிக முக்கிய பங்காற்றியவை. கால்நடை வளர்ப்பு மற்றும் பயிர் விவசாயம் போன்றன இந்த முறையிலேயே அங்கு இடம்பெற்றன. நாடற்ற நிலையிலிருந்த உலகளாவிய யூதர்கள், ஒரு ஓர்மத்துடன் இணைந்து தமது உற்பத்திகளை கூட்டிணைவிலான kibbutz பண்ணைகள் மூலம் பெருக்கினர். அதுவும் வறண்ட , தண்ணீர் குறைந்த மண்ணில். பண்ணையில் குழுக்களாக இயங்கி உற்பத்திகளை பெறுவார்கள். சகலரும் இந்தப் பண்ணையில் ஏதாவது ஒருபணியைச் செய்வார்கள். குறித்தளவு உற்பத்திகளைப் பகிர்ந்து கொள்வார்கள். பெற்றோர் பண்ணைகளில் வேலை செய்ய, குழந்தைகள் பொதுவான பிள்ளை மடுவங்களில் வைத்து பராமரிக்கப்பட்டார்கள். (வவுனியாவில் டேவிட் ஐயா, வைத்தியர் ராஜசுந்தரம், சந்ததியார் போன்றோர் உருவாக்கிய காந்தீயம் போன்ற அமைப்புகள் இந்த எண்ணக்கருவ அடிப்படையாக கொண்டது. தெற்கு வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மலையக - தமிழ் மக்களை வவுனியாவின் பல பகுதிகளில் இஸ்ரேல் பாணியில் குடியமர்த்தி பண்ணைகளை தொடங்கியிருந்தனர்). இன்றைய நவீன காலத்துக்கு ஏற்ப இந்த kibbutz எண்ணக்கருவும் மாற்றமடைந்துள்ளது.

இன்றைய திகதியில் இஸ்ரேலின் 40 - 45% கால்நடைப்பண்ணைகள் kibbutz வகையினவே.

இன்னொரு பண்ணை முறையாக moshav அமைந்துள்ளது. இவை குடும்ப பண்ணைகள். எனினும் பொதுவான இயந்திர வளங்களை இவர்கள் பாவிக்க முடியும். இன்றைய திகதியில் 55% வரை இந்தவகை பண்ணைகள்தான். இந்த இரண்டு வகை பண்ணை வளர்ப்பு முறைகளும் சேர்ந்துதான் இஸ்ரேலின் பாலுற்பத்தியை இன்றைய வெற்றிகரமான நிலைக்கு கொண்டு வந்துள்ளன.

## இயந்திர உற்பத்தி

பெரும்பாலும் பால்கறத்தல் செயற்பாடு இயந்திரங்களைக் கொண்டுதான் இடம்பெறுகிறது. இஸ்ரேலில் பால்பண்ணைத்துறை தொடர்பான பல நவீன இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றின் உதவியின் மூலம் உச்சபட்ச பாலுற்பத்தியை வினைத்திறனாக பெற முடிகிறது. நேரவிரயம் குறைக்கப்படுகிறது. முக்கியமாக சுத்தமான பாலைப் பெறமுடிகிறது. பல இயந்திரங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இலங்கையின் மிகப்பெரிய பண்ணைகளில் பாவிக்கப்படும் பல நவீனரக இயந்திரங்கள் இஸ்ரேலிய நிறுவனங்களின் உற்பத்திகளே. உதாரணமாக, இஸ்ரேலின் "Afimilk" எனும் நிறுவனம் மாடுகளின் உடற் சுட்டிகளை அறியும் மென்பொருட்களையும் வன்பொருட்களையும் உலகம் முழுவதும்



**இஸ்ரேலின் அதிநவீனப் பண்ணை**

Image source : www.financialexpress.com

விற்கும் ஒரு முன்னோடி நிறுவனமாகும். நவீன *Artificial intelligent* தொழில்நுட்பத்தை கறவை மாட்டுப் பண்ணையத்தில் பிரயோகிக்கும் முன்னோடிகள் அவர்கள். அதிக பாலுற்பத்தி, குறைந்த செலவு, மாடுகளின் ஆரோக்கியம் மற்றும் குறைந்த கரியமில வாயு வெளியேற்றம் எனும் இலக்கை கொண்டு செயற்படுபவை. (உலக வெப்பமுறலுக்கு கறவை மாடுகள் முக்கிய காரணம் என்றபடியால் முடிந்தவரை மாடுகளில் இருந்து வெளியேறும் பச்சை வீட்டு வாயுக்களின் அளவை குறைக்கும் படியான மேலாண்மையில் அவர்கள் கவனம் செலுத்துகின்றனர்). பண்ணைக் கழிவுகளைக் கொண்டு உயிர்வாயு முதலான சக்தி வகைகளை அதிகளவில் உருவாக்குகின்றனர். இஸ்ரேலியர்கள், ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். கறவை மாடுகள் தொடர்பான தொடர்ச்சியான ஆய்வுகள், மிகச் சிறந்த மாடுகளையும் தொழில் நுட்பத்தையும் மேலாண்மை முறைகளையும் இயந்திரங்களையும் உருவாகியுள்ளது. ஆய்வுகளுக்கு அரசும் தனியாரும் அதிக முதலீடு செய்கின்றன. நிதி ஒதுக்குகின்றன.

## இஸ்ரேலின் பால் பண்ணை அனுபவத்தில் இருந்து இலங்கை பெறக் கூடிய விடயங்கள்

இலங்கையில் அதிகளவில் மாடுகள் உள்ள போதும் உற்பத்தி மிக மிக குறைவு. அதாவது இரண்டு மூன்று லீட்டர் வரையான உற்பத்தி. எனவே தொடர்ச்சியான இனக்கலப்பு முறை மூலம் அதி சிறந்த மாடுகளை உருவாக்கலாம். மாட்டுப் பண்ணைகளின் எண்ணிக்கை மிக அதிகம். அதனையும் குறைத்து, முடிந்தளவு சிறந்த பண்ணைகளை உருவாக்கலாம். இலங்கையைப் பொறுத்தவரை கால்நடை வளர்ப்புத் துறை அரசின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. இதன் காரணமாக அதன் வினைத்திறன் மிக மிக குறைவு. இஸ்ரேலில், அவை அரசு - தனியார் என இரண்டு பக்கமும் இணைந்தது. அதனைப் போலவே சில செயற்பாடுகளை தனியார் மயப்படுத்தலாம். குறிப்பாக சினைப்படுத்துதல் செயன்முறையை.

இலங்கையில் செயற்கைமுறைச் சினைப்படுத்துனர்கள் தமது பணிக்கு பதிலாக, சிகிச்சை அளித்து பணம் சேர்ப்பதில் தான் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர்.

இஸ்ரேலில் உள்ள மாடுகளின் சகல தரவுகளும் பதிவு செய்யப்பட்டு தனித்தனியாக அவதானிக்கப்படுகின்றன. இலங்கையில், மாடுகளின் எண்ணிக்கையே இன்னமும் சரிவரக் கணக்கிடப்படவில்லை. குத்துமதிப்பாகவே சொல்லப்படுகிறது. அதனை அறியக்கூடிய பணியாளர்களும் கால்நடை பராமரிப்புத் துறையில் இல்லை. உண்மையில், இலங்கையிலுள்ள மாடுகள் முறையாகக் கணக்கிடப்பட்டு அதற்கேற்ப சரியான திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் மிகக் குறைந்த வசதியுடைய துறையாக கால்நடைத்துறையே உள்ளது. கால்நடைகளுக்கு தகுந்த மருத்துவம் பார்க்க கூடிய வசதிகள் கிடையாது. மருந்துகள் கிடையாது. வாகனங்கள் கிடையாது.எரிபொருள் கிடையாது. ஊழியர்கள் கிடையாது. முதலில் அந்தத் துறையை சிறப்பாகக் கட்டியெழுப்பினால் பல பிரச்சனைகள் தீர்க்கப்படும். இருபது - முப்பது வருடங்களுக்கு முன், வரையறுக்கப்பட்ட ஊழியர் அளவே இன்றும் இருக்கின்ற காரணத்தால் பல பணிகளை ஊழியர்களால் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது. வெறுமனே மாடுகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து மட்டுமே பால் உற்பத்தியைக் கூட்டமுடியாது. கால்நடைகளைக் கையாளும் துறையையும் நவீன மயப்படுத்த வேண்டும்.

இலங்கையில் இன்றும் மேய்ச்சல் பிரச்சனை அதிகளவில் உள்ளது. முறையான உணவு - ஊட்டம் கிடையாது. இலங்கையைவிட வறண்ட நாடான இஸ்ரேல், முறையாக தமது வளங்களை முகாமை செய்து வெற்றிகரமான கால்நடைவளர்ப்பைச் செய்கின்றது. இங்கு, தேவையற்ற விதத்தில் மாடு வளர்ப்புடன் மதத்தை இணைத்து அரசியல் செய்கின்றனர். உற்பத்தியற்ற மாடுகளைக் கழிக்க வேண்டும் .அதனை செய்ய இங்கு மதம், அரசியல் குறுக்காக நிற்கிறது. இதனால், உற்பத்தியற்ற மாடுகள் உற்பத்திகூடிய மாடுகளுடன் போட்டி போட்டு உணவு வளங்களை குறைக்கின்றன. கால்நடை உணவு தொடர்பான முறையான மேலாண்மை செய்யப்பட்டால் இலங்கையின் கால்நடை வளர்ப்பின் பல பிரச்சனைகள் தீர்க்கப்படும்.




**இஸ்ரேலிய பிரீசியன் மாடு**

Image source : breeds.okstate.edu

தொடர்ச்சியான ஆய்வுகள் அவசியம். கால்நடை வளர்ப்பின் நவீன முறைகள் உட்புகுத்தப்பட வேண்டும். இந்தப் பணிகளை பல்கலைக் கழகங்கள் சிறப்பாக செய்யலாம். இதற்குரிய நிதியை அரசு வழங்க வேண்டும். ஆய்வுகள், ஆராய்சிகள் தொடர்ச்சியாக செய்யாது போனால் பொருத்தமற்ற பழைய மேலாண்மை முறைகளே இந்தக் காலத்திலும் தொடரும்.

இலங்கையில் கறக்கும் பாலின் தரம் மிகக் குறைவு. விரயமாதல் அதிகம். பால் கறக்கும், சேமிக்கும், விநியோகிக்கும் முறைகளும் தரம் குறைந்தவை. பால், உயிர்த் திரவம். நேரம் செல்லச் செல்ல பழுதாகும் அளவும் அதிகம். இஸ்ரேலில் இவை மிகச் சிறப்பாக முகாமை செய்யப்படுகிறது. முடிந்தவரை மாடுகளுக்கு நோய்த் தடுப்பு செய்யப்பட்டு நோய்கள் வருமுன் காக்கப்படுகின்றன. பண்ணைகளின் சுகாதாரம் மிக சிறப்பாகப் பேணப்படுகிறது. இலங்கையின் பெரும்பாலான பண்ணைகள் சுகாதாரமற்றவை. பால் சேகரிக்கும் பாத்திரங்கள் தரமற்றவை. பண்ணைச் சுகாதாரத்தை மேம்படுத்தாது, நோய் நிலைகளுக்கு நுண்ணுயிர் கொல்லிகளை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இது இன்னும் பாலின் தரத்தை சீர்குலைப்பதோடு மனித சுகாதாரத்தையும் கடுமையாகப் பாதிப்புக்கு உட்படுத்துகிறது.

இப்படியாக, பல விடயங்களை இஸ்ரேலின் பாலுற்பத்தித் துறையின் மூலம் அறிய முடியும். அந்த நடைமுறைகளில் சிலவற்றை இங்கு நடைமுறைப்படுத்தினாலே இலங்கையில் பால் உற்பத்தியை கணிசமாக உயர்த்த முடியும். தன்னிறைவும் காணமுடியும்.

(தொடரும்)

நாள்தோறும் நாம் உணவாகக் கொள்ளும் தானியங்கள், காய்கறிகள், சுவையூட்டிகள், பாலுணவுகள் என்பவற்றின் குணங்கள் மற்றும் பயன்பாடு பற்றிக் கூறும் நூல் பதார்த்தகுணம் என்று அறியப்படும். அகத்தியர், தேரையர் முதலானோரின் பெயர்களில் பதார்த்தகுணம், குணபாடம் போன்ற தலைப்புகளில் பலநூல்கள் கிடைக்கின்றன. இவ்வகையில் இலங்கை யாழ்ப்பாணத்தில் ஆக்கப்பெற்ற நூல்களுள் ஒன்றே இருபாலைச்செட்டியார் என்று அறியப்படும் ஒரு மருத்துவரால் ஆக்கப்பெற்ற பதார்த்தசூடாமணியாகும். இற்றைக்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் இலங்கை வருகைக்குப் பின்னர் ஆக்கம் பெற்ற இந் நூலில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு இவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு உணவு வகைகள் தொடர்பில் கூறப்பட்டுள்ளவற்றை 'பதார்த்த சூடாமணி' என்ற இத் தொடர் ஆராய்கின்றது.



பால. சிவகடாட்சம்

பால. சிவகடாட்சம் அவர்கள் இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாவரவியலை பிரதான பாடமாகக் கொண்டு உயிரியல் விஞ்ஞானத்துறையில் (B.Sc. Hons) சிறப்புப் பட்டம் பெற்றவர். இலண்டன் இம்பீரியல் கல்லூரியில் (London Imperial College) டிப்ளோமா சான்றிதழும், இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளதுடன் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் B.Ed பட்டமும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியற் பீடத்தில் மூத்த விரிவுரையாளராகவும் அதன் தலைவராகவும் பதவி வகித்த இவர் பின்னர் கனடாவில் உள்ள ரொறொன்ரோ கல்விச்சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள மார்க் கார்னோ கல்லூரியில் விஞ்ஞான மற்றும் உயிரியற் பாட ஆசிரியராகப் பணியாற்றினார்.

இலங்கையிலிருந்து 1971 – 1973 காலப் பகுதியில் விஞ்ஞானக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்த 'ஊற்று' என்ற மாத சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், 1970– 1971 காலப்பகுதியில் வெளிவந்த தமிழமுது இலக்கிய மாத இதழின் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றிய சிவகடாட்சம் (அவர்கள்) தொடர்ச்சியாக ஆய்வுக்கட்டுரைகளையும் இலக்கிய கட்டுரைகளையும் எழுதி வருகின்றார்.



# தக்காளி:

## இடைக்காலத்தில் வந்து சேர்ந்த இன்றியமையா உணவு

காய்க்குக் கபம்தீரும் காரிகையே இவ் இலைக்கு
வாய்க்கிரந்தி வேக்காடு மாறும்காண் – தீக்குள்
அணக்கிடு வற்றல் உறுபிணியோர்க்கு ஆகும்
மணத்தக்காளிக்கு உள்ளவாறு

**- பதார்த்த குணவிளக்கம் -**

மணத்தக்காளியின் காய்க்கு சளி தீரும். இதன் இலைக்கு வாயில் ஏற்படும் கிரந்தி, சூடு என்பன மாறும். இதன் வற்றல், நோயாளிகளுக்கு நல்ல பத்திய உணவாகும் என்பது மேற்காணும் பாடல் தரும் செய்தி.

'மணத்தக்காளி' என்னும் ஒரு கீரை பற்றி இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்க

ஒரு சுவையூட்டியாக மாறிவிட்டதோ அவ்வாறே எமக்கு மிகவும் வேண்டிய காய்கறிகளுள் ஒன்றாகத் தக்காளியும் இடம்பிடித்துக்கொண்டுள்ளது. இந்தியாவில், அதிலும் குறிப்பாக வட இந்தியாவில் தக்காளி இல்லையேல் சமையலும் இல்லை என்னும் ஒரு நிலைதான் இன்று உள்ளது.

தக்காளியின் பிறப்பிடம் தென்னமெரிக்காவில் உள்ள மெக்சிக்கோ அல்லது பெரு நாடாக இருத்தல் வேண்டும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். மெக்சிக்கோ நாட்டின் நாகுவா (Nahuatl) மொழியில் தக்காளியின் பெயரான ரொமற்றில் (tomatl) என்னும் பெயரிலிருந்து பிறந்ததே, ஆங்கிலத்தில் இதனைக் குறிக்கும் ரொமேற்றோ (tomato) என்னும் பெயராகும்.

பொது ஆண்டு 1521 இல் மெக்ஸிகோவின் ஆஸ்டெக் நகரமான டெனோச்சிட்லானைக் கைப்பற்றிய ஸ்பானியத் தளபதியான ஹெர்னான் கோர்டெஸ் என்பவரே தக்காளியை ஐரோப்பாவிற்கு எடுத்துச்சென்ற முதல் நபராக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. 1540 களின் முற்பகுதியில் ஸ்பெயின் நாட்டில் தக்காளிப் பயிர்ச்செய்கை ஆரம்பமாகிற்று. எனினும் மற்ற ஐரோப்பிய நாடுகள் தக்காளியை உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை.



மணத்தக்காளி
Image Source : apps.lucidcentral.org

வாய்ப்பில்லை. எனினும் மருத்துவக் குணங்கள் மிகுந்த இந்தக் கீரை கிடைத்தால் அதனை விரும்பிச் சமைத்து உண்ணத் தயாராக இருப்பவர்களும் உள்ளனர். “ மைந்தரை வளர்க்கும் மணத்தக்காளி ” என்னும் ஒரு பழமொழியும் உண்டு. நோய் எதிர்ப்புச்சக்தியை ஊக்குவிக்க மணத்தக்காளி உதவும் என்கிறார்கள். இதன் காரணமாகவே இந்தப் பழமொழி உருவாகியிருத்தல் கூடும்.

சொலனேசீ (Solanaceae) தாவரக்குடும்பத்தைச் சேர்ந்த மணத்தக்காளியின் தாவர விஞ்ஞானப்பெயர் Solanum nigrum என்பதாகும். தக்காளியும் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தாவரம் தான். மணத்தக்காளி அல்லது மணித்தக்காளி என்று அறியப்படும் கீரைபற்றி பதார்த்த சூடாமணி, பதார்த்த குணவிளக்கம் ஆகிய பழந்தமிழ் மருத்துவ நூல்களில் பேசப்படுகிறது. அதேசமயம் தக்காளி பற்றி எவ்வித குறிப்பும் காணப்படவில்லை. இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. ஏனெனில் பதினாறாம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பியரால் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட காய்கறிகளுள் தக்காளியும் ஒன்றாகும். இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்னர்தான் தக்காளி இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் அறிமுமாயிற்று. மேற்கு நாட்டவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மிளகாய் எவ்வாறு இன்று எமது சமையலில் அத்தியாவசியமான

இத்தாலியின் புளோரன்ஸ் மக்கள் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை தக்காளியை வெறும் மேசை அலங்காரமாகப் பயன்படுத்தினர். தக்காளியின் சொலனேசீ (Solanaceae) குடும்பத்தைச் சேர்ந்த டெட்லி நைட்ஷேட் அல்லது பெலடோனா (Belledona) என்று அறியப்படும் நச்சுத்தாவரம் ஒன்றின் இலைகளைத் தக்காளியின் இலைகள் ஒத்துக் காணப்பட்டதால் மக்கள் இதனை உண்பதற்குப் பயந்தனர். தக்காளிக்கு “விஷ ஆப்பிள்” என்னும் பெயரும் அக்காலத்தில் வழங்கப்பட்டது.

தக்காளி ஏழைகளைப் பாதிப்பதில்லை என்றும் உயர்குடியினர் அதை சாப்பிட்ட பிறகு நோய்வாய்ப்பட்டு இறந்துவிடுவார்கள் என்றும் அக்காலப்பகுதியில் நம்பப்பட்டது. இதில் உண்மை என்னவென்றால், பணக்கார ஐரோப்பியர்கள் ஈயம் அதிகமுள்ள உணவுத் தட்டுகளைப் பயன்படுத்தினார்கள். தக்காளியில் அதிக அமிலத்தன்மை இருப்பதால், இந்தக் குறிப்பிட்ட தட்டுகளில் வைக்கப்படும் போது, தக்காளிப்பழம் தட்டில் உள்ள ஈயத்தை கசியவிடும். இதன் விளைவாக ஈய நச்சுத்தன்மையால் பலர் இறக்க நேரிட்டது.





Image Source : www.homefortheharvest.com

“பழி ஓரிடம் பாவம் ஓரிடம்” என்னும் பழமொழிக்கேற்ப ஈயத்தட்டில் பிறந்த விஷத்துக்கான பழி தக்காளி மேல் விழுந்தது. மரத்தால் செய்யப்பட்ட தட்டுகளில் தக்காளியை வைத்து உண்ட ஏழை மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. 1800 கள் வரை குறிப்பாக இத்தாலியில் தக்காளியை ஏழை மக்கள் மட்டுமே சாப்பிட்டதற்கு இதுவே காரணம்.

தக்காளி 1597 இல் இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, இத்தாலியில் ஏற்பட்ட நிலையே இங்கும் ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் தக்காளியின் சிவப்பு நிறத்தை விரும்பியபோதும் அதன் நச்சுத்தன்மை குறித்த சந்தேகம் அவர்களிடம் தொடர்ந்து இருந்தது. இதன் காரணமாகவே அமெரிக்கர்களும் 1835 ஆம் ஆண்டு வரை தக்காளியை அறுவடை செய்யத்துணியவில்லை.

ஸ்பெயின் மற்றும் இத்தாலியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்கத்தில் பல முன்னேற்றங்களுக்குப் பிறகு 18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் தக்காளி பற்றிய பார்வை மாறியது. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தக்காளி ஆசியாவிற்கு வந்தது. சிரியாவில் இருந்த இங்கிலாந்து தூதர் ஜான் பார்கர் என்பவரின் வழிகாட்டுதலின் கீழ் முதலாவது தக்காளிப் பயிர்ச்செய்கை அங்கு தொடக்கி வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், சிரியா, ஈரான் மற்றும் சீனாவில் தக்காளி மிகவும் பிரபலமடைந்தது.

போதிய ஆதாரங்கள் இல்லாததால், இந்தியாவில் தக்காளி எப்போது, எங்கிருந்து பயிரிடப்பட்டது என்பது பற்றித் தெளிவாக அறியமுடியவில்லை. எனினும் ஆங்கிலேயர்களே தக்காளியை இந்தியாவிலும் இலங்கையிலும் பரவலாக அறிமுகப்படுத்தினர் என்பதை ஏற்றுக்கொள்ளலாம். இன்று இந்தியா 12 மில்லியன் தொன்களை உற்பத்தி செய்து தக்காளி உற்பத்தியில் இரண்டாவது பெரிய நாடாக உள்ளது. சிறிய சாறு நிறைந்த ‘செர்ரி தக்காளி’யில் (cherry tomato) இருந்து பெரிய நார்த்தன்மை உடைய ‘பீவ்ஸ்டீக் தக்காளி’ (beefsteak tomato) வரை பலதரப்பட்ட தக்காளி வகைகள் பயிரிடப்பட்டுவருகின்றன.

எம்மவர்களால் சமைத்து உண்ணப்படும் பிரதான காய்கறிகளுள் ஒன்றாக தக்காளி உள்ளது. கறிக்குழம்புகளில் பழப்புளிக்குப் பதிலாகத் தக்காளியைச் சேர்ப்பது இப்போது வழக்கமாகிவிட்டது. மேற்கு நாட்டவரின் சலாட்டுகளில் தக்காளிப் பழம் பச்சையாக உண்ணப்படுகின்றது.



இவற்றைத் தவிர இன்று உலகில் விளையும் தக்காளியின் பெரும்பகுதி பதப்படுத்தப்பட்டுத் தயாரிக்கப்படும் பல்வேறு உணவுகளின் மூலப்பொருளாகப் பயன்படுகின்றது. பதப்படுத்தப்பட்ட தக்காளி, தக்காளிச் சாறு, தக்காளி கெட்ச்அப் (*tomato ketchup*), தக்காளி சோஸ் (*tomato sauce*), தக்காளி ப்யூரி (*puree*), தக்காளி பேஸ்ட் (*paste*) மற்றும் சூரிய ஒளியில் உலர்த்தப்பட்ட தக்காளி பல்ப் (*pulp*) என்பவற்றின் தயாரிப்புக்கு பயன்படுகின்றது.










ஏனைய பழங்கள், காய்கறிகளுடன் ஒப்பிடும்போது தக்காளி அதிகமாக தகரப் பெட்டிகளில் அடைத்து விற்பனை செய்யப்படுவதற்கு அதில் உள்ள அதிக அமிலத்தன்மை முக்கியமான காரணமாகும். பதப்படுத்தப்பட்ட உணவுத் தயாரிப்புகளில் முன்னணி வகிக்கும் H. J. HEINZ கொம்பனி பென்சிலிவேனியாவின் பிற்ஸ்பேர்க் நகரில் தொடங்கப்பெற்ற பின்னர், விற்பனைக்கு வந்த மிகப்பிரபலமான உற்பத்திப் பொருள் ஹெய்ன்ஸ் தக்காளி கெட்ச்அப் (HEINZ TOMATO KETCHUP) ஆகும். இந்த நிறுவனம் **1876** ஆம் ஆண்டில் இருந்து தக்காளி கெட்ச்அப் விற்பனையைத் தொடங்கியது. இப்போது தக்காளி கெட்ச்அப், ஓஹியோ மற்றும் அயோவாவில் உள்ள ஹெய்ன்ஸ் ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

**1897** ஆம் ஆண்டில் ஜோசப் காம்ப்பெல் (*Joseph A. Campbell*) என்பார் கெட்டிப்படுத்தப்பட்டு தகரப் பெட்டியில் அடைக்கப்பெற்ற தக்காளி சூப்பை (*tomato soup*) விற்பனைக்குக் கொண்டு வந்தார். இந்த சூப் மூலம் காம்ப்பெல்லின் வருவாய் பெருமளவில் அதிகரித்தது. பொதுமக்கள் இந்தத் தக்காளி சூப்புக்கு மிகுந்த வரவேற்புக் கொடுத்தனர். தகரப்பெட்டிக்குள் அமுக்கப்பட்ட காம்ப்பெல் நிறுவனத்தின் புதிய கண்டுபிடிப்பு உலகம் சூப்பை அணுகும் முறையை மாற்றியது. தகரப்பெட்டிக்குள் சேமித்து வைப்பதால் சூப்கள் திடீரென மலிவு விலையிலும், அணுகக்கூடியதாகவும் மாறின.

தக்காளி விட்டமின் சி (*vitamin C*) மற்றும் லைகோபீன் (*lycopene*) ஆகியவற்றின் நல்ல மூலமாகும். இது உடலின் இயற்கையான பாதுகாப்பை வலுப்படுத்த உதவுகிறது. தக்காளி புரோஸ்டேட் புற்றுநோயைத் (*prostrate cancer*) தடுக்கிறது. தக்காளியில் நிறைந்துள்ள லைகோபீன் மற்றும் கரோட்டினாய்ட் நிறமிகள் செல்களை, குறிப்பாக புரோஸ்டேட் செல்களை ஃப்ரீ ரேடிக்கல்களால் ஏற்படும் சேதத்திலிருந்து பாதுகாக்கின்றன.

தக்காளி ஆரோக்கியமான கண்பார்வை, தோல் மற்றும் கூந்தலைப் பராமரிக்கிறது. தக்காளியில் நிறைந்துள்ள கரோட்டினாய்டுகள் உடலில் விட்டமின் ஏ (*Vitamin A*) ஆக மாற்றப்படுகின்றன. விட்டமின் ஏ நல்ல பார்வை, பளபளப்பான கூந்தல் மற்றும் மென்மையான, நன்கு ஈரப்பதமான சருமத்திற்கு வேண்டிய ஊட்டச்சத்து ஆகும். இதய நோய்கள் வராமல் தடுக்க தக்காளி உதவும். ஒட்சியெதிரிகள் (*antioxidants*) நிறைந்துள்ள தக்காளி ஆரோக்கியமான இரத்தநாளங்களைப் பேண உதவுகிறது. மேலும், உணவு நார்ச்சத்து (*dietary fibre*) நிறைந்துள்ள தக்காளி கெட்ட கொலெஸ்ரெறோலின் (*LDL - cholesterol*) அளவைக் குறைக்க உதவுகிறது. தக்காளியில் ஹிஸ்டமைன் (*histamine*) என்ற வேதிப்பொருள் உள்ளது, இது தோல் அரிப்பு (*skin rashes*) மற்றும் ஒவ்வாமை எதிர்வினைகளைத் தூண்டும். *Solanum lycopersicum* என்பது தக்காளியின் தாவர விஞ்ஞானப் பெயர்.

**தக்காளி ஆரோக்கியமான கண்பார்வை, தோல் மற்றும் கூந்தலைப் பராமரிக்கிறது. தக்காளியில் நிறைந்துள்ள கரோட்டினாய்டுகள் உடலில் விற்றமின் ஏ (Vitamin A) ஆக மாற்றப்படுகின்றன.**

(தொடரும்)

ஈழத்தில் யாழ்ப்பாணம் தனக்கென சிறப்பான உணவுப் பழக்கவழக்கங்களையும் மருத்துவத்தில் சில விசேட முறைகளையும் கொண்டிருந்தது. ஆயினும் அந்நியர் ஆட்சி, பூகோளமயமாதல், வர்த்த நோக்கிலான வாழ்வியல், நாகரிகமோகம் என்பன அந்த உணவுப்பழக்கவழக்கத்தைக் குலைத்துப்போட்டது. அதன் விளைவாக, ஆரோக்கியக் குறைபாடுகள், தொற்றா நோய்கள் என பலவீனமான சமுதாயம் ஒன்று நம்மிடையே உருவெடுத்துள்ளது. இந்த நிலையை மாற்றியமைத்து, மீண்டும் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப எமது பாரம்பரிய உணவு முறைமையை மீட்டெடுக்க வேண்டும். ஈழத்தமிழர்களின் உணவுப்பழக்க வழக்கங் கள், உணவுகள் என்பன தொடர்பாக சித்தமருத்துவம், தற்கால உணவு விஞ்ஞான ஆய்வு என்பவற்றின் நோக்குநிலையில் விளக்குகின்றது 'மாறுபாடில்லா உண்டி' என்ற இந்தக்கட்டுரைத்தொடர்.




**தியாகராஜா சுதர்மன்**

தியாகராஜா சுதர்மன் அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவ பட்டதாரியும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உணவு விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா பட்டதாரியும், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உளவளத்துணை டிப்ளோமா பட்டதாரியும் ஆவார்.
அரச சித்த மருத்துவ உத்தியோகத்தராகப் பணிபுரியும் இவர் ஒரு சிறுகதை எழுத்தாளருமாவார். இவர் 'ஆகாரமே ஆதாரம்' எனும் நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்.




# ஈழத்துக் கடலுணவுகளும் சாதக பாதகங்களும்

இறைச்சி வகைகளுடன் ஒப்பிடும்போது பொதுவாகக் கடல் உணவுகளே சிறந்த ஆரோக்கியமிக்க உணவு வகைகளாகக் கருதப்படுகின்றன. கடல் உணவுகளானது இதய நோய்கள், வாதநோய்கள், உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, அதியுடற் பருமன் போன்றவற்றின் தாக்கங்களைக் குறைக்கின்றன.

இதற்கு காரணம் கடல் உணவுகளில்,

- நிரம்பிய கொழுப்புக்கள் (Saturated fat) குறைவு. அதேவேளை இதயத்துக்கு ஆரோக்கியத்தை தரக்கூடிய ஒமேகா 3 (Omega 3) கொழுப்பமிலங்கள் உட்பட, நிரம்பாத கொழுப்புக்களையும் (Unsaturated fatty acids) கொண்டவை. ஒமேகா 3 கொழுப்பமிலங்களில் விசேடமாக Eicosatetraenoic acid (EPA). Docosahexaenoic acid (DHA) என்பன எல்லாக் கடல் உணவுகளிலும் காணப்படுகின்றன. இக்கொழுப்பமிலங்கள் இரத்த அழுத்தத்தையும், இதயத் துடிப்பையும் சீராக வைத்திருக்க உதவுவதுடன், இதய இரத்தக்குழாய்களின் தொழிற்பாட்டுக்கும், மூளை விருத்திக்கும் பார்வைக்கும் உதவுகின்றன. ஒப்பீட்டளவில் அதிகளவு கொழுப்பைக் கொண்டதனாலேயே ஒருவகை மீன் நெய்த்தோலி / நெத்தலி மீன் எனப்படுகின்றது.
- மீனில் உள்ள புரதம் தரமானதும் அதிகளவு அமினோஅமிலங்களைக் கொண்டதும் இலகுவாகச் சமிபாடு அடையக்கூடியதும் ஆகும். இவற்றின் நிறையில் 18 - 20 வீதம் புரதத்தைக் கொண்டுள்ளன. இங்கு வெவ்வேறுபட்ட மீன்வகைகள் வெவ்வேறுபட்ட பயன்களைக்



கருவாடு சமைக்கும்போது உப்பின் அளவு மிகக்குறைத்து பயன்படுத்துதல் வேண்டும்.

கொண்டுள்ளன. கடல் மீன்கள், நன்னீர் மீன்கள், மீன் வகைகளில் உப இனங்கள் என வகைகள் வேறுபடுகின்றன.

- கடல் உணவுகள் கல்சியம் சத்துக்கான சிறந்த உணவுப் பொருட்களாகும். சிறிய மீன்வகைகள் சிறந்தவை. இறாலின் தலைப்பகுதி அதிக கல்சியத்தைக் கொண்டது.
- அதிகளவு உயிர்ச்சத்து D கொண்டவை. கல்சியம் அகத்துறிஞ்சலுக்கு உயிர்ச்சத்து D அவசியம். இதனால் கடல் உணவுகளில் இருந்து கல்சியம் இலகுவாக அகத்துறிஞ்சப்படுகின்றது.
- மீன்வகைகளில் அகத்துறிஞ்சக் கூடிய நிலையில் இரும்புச்சத்து உள்ளது.
- மட்டியில் அதிகளவு நாகச்சத்து, செலனியம், அயோடின் என்பன காணப்படுகின்றன. இதனால் கண்டக்கழலை நோய் வராமல் பாதுகாக்கக்கூடியது.

ஒரு நாளைக்கு சமைத்த கடல் உணவுகள் குறைந்தது **60** கிராம் தொடக்கம் **120** கிராம் வரை உண்ணலாம். கருவாட்டு வகை எனில் **45** கிராம் தொடக்கம் **60** கிராம் வரை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரேமாதிரியான கடல் உணவுகளை உண்பதிலும் பார்க்க பல வகைகளையும் உண்பது சிறந்தது. பொதுவாக கிழமையில் **2 - 3** நாட்கள் இவ்வாறாக கடல் உணவுகளை உட்கொள்வதுடன் ஏனைய நாட்களில் ஏனைய இறைச்சி, பருப்புக்கள் போன்ற உணவுகளை உட்கொள்வது நன்று. கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மார் ஒருநாளுக்கு தேவையான அளவினை குறைந்தது **120** கிராம் ஆகவும் கிழமையில் கடல் உணவுகளை அதிக நாட்கள் எடுத்தலும் நன்று.

### கடல் உணவுகளின் விசேட பயன்கள்

மீன் - இரத்த அழுத்தத்தை சீராகப் பேணும். நிறைந்த புரதங்களைக் கொண்டிருப்பதனால் தசை வளர்ச்சிக்கு உதவும். அதிகளவிலான உயிர்ச்சத்துக்களையும் கனிமங்களையும் கொண்டிருப்பதனால் நோயெதிர்ப்புச் சக்தி, நரம்புகள் மற்றும் என்புகளின் ஆரோக்கியத்துக்கு சிறப்பானது.

கணவாய் - அதிகளவிலான இரும்புச்சத்தைக் கொண்டுள்ளது. இதனால் குருதிச்சோகை ஏற்படாது.

நண்டு - ஞாபகமறதி ஏற்படுவதைக் குறைக்கும். இரும்புச் சத்து, போலேற், B12 அதிகம் கொண்டது. குருதிச்சோகையை மாற்றும்.

இறால் - செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் உற்பத்தியை அதிகரிக்கும். குருதிச்சோகையை தடுக்கும்.

கூனி இறால் - நிறைந்த கற்ப சத்துக்களைக் (Antioxidants) கொண்டது.

பொதுவான மேற்படி நன்மைகளுடன் கடல் உணவுகளின் சில சிறப்பான நன்மைகளை சித்தமருத்துவம் கூறுகின்றது.

## நண்டு

> **“நண்டினிற் றாது நட்ட நணுகாது சுரங்கண் ணோய்போம்**
> **கொண்டமேல் வீக்கம் வாதங் குறைந்துடல் வாடு மென்ப...”**
>
> பக்.89, அமிர்தசாகரம் பதார்த்தசூடாமணி

நண்டினை உட்கொண்டால் தாதுக்கள் விருத்தி உண்டாகி உடல் பலமடையும். சுரங்கள், கண் நோய் என்பனவற்றுக்கு சிறந்தது.

உடல் வீக்கம் குறையும் (குருதிச்சோகையால் ஏற்பட்ட உடல் வீக்கம்), வாதம் பலவீனப்படும். சிலருக்கு அஜீரணம் ஏற்பட்டு வயிற்று வலி ஏற்படும். இதனால் உடல் சோர்ந்து போகும். இவற்றினாலேயே நண்டு சமைக்கும்போது அதிகம் உள்ளி, இஞ்சி சேர்ப்பதுண்டு. நண்டினை இரசமாக (Soup) அல்லது கூழ் உணவு வகையில் சேர்த்துச் சமைப்பது சிறந்தது.

### சுறா, அயிரை, திருக்கை

**"சுறாக்கறி கிராணி குன்மஞ் சூலைவன் னதிசா ரத்தோ
டறாப்பிணி சுரமும் போக்கு மயயிரைமீ னரோசி போக்கும்
சிறார்க்கு நன்றாகு மன்னஞ் செரித்திடுந் திருக்கை மீனால்
உறவாத பித்தந் நாளு முறும்பசி பெலனுண் டாமே"**

*பக்.90, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி*

சுறாமீன் கறி - நாட்பட்ட நிணக்கழிச்சல், வயிற்றுப்புண், வயிற்று வலி, தீவிரமான கழிச்சல் இவற்றுடன் கூடிய காய்ச்சலுக்கு சிறந்ததாகும். அயிரை மீன் கறி - உணவில் விருப்பமின்மை, பசியின்மை என்பவற்றுக்கு சிறந்தது. அத்துடன் சிறுவர்களில் நன்றாக செரிமானத்தை ஏற்படுத்தும். திருக்கைக் கறி - வாத பித்த தோசங்கள் சேர்ந்தே சீராகி நாளும் நல்ல பசி உண்டாகும். அத்துடன் உடல் நன்கு பலமடையும்.

### வாளைமீன், வாளைக் கருவாடு ஏனைய கருவாடுகள்

**"வாளைமீன் பலமாம் வாத மருவுமிக் கருவாட் டிற்கு
மீள்வலி பித்தம் வாயு விலக்கிடும் பெலனுண் டாக்கும்
கேள்மற்றுங் கருவாட் டிற்கும் கிளர்மந்தஞ் சேட குன்மம்
மாளுமே பசியுண் டாகும் வயிற்றுறு வலியும் போமே"**

*பக்.90, அமிர்தசாகரம் பதார்த்தசூடாமணி*

வாளைமீன் உடலுக்குப் பலத்தைத் தரும். இதன் கருவாட்டுக்கு வாத நோய்கள் குறைந்திடும். வலிகள், வயிற்றுக்கோளாறுகள், எரிவு, தோல் நோய்கள், உயர் இரத்த அழுத்தம் போன்ற பித்ததோச, வாயு உபத்திரவங்கள், என்பவற்றை குறைத்திடும். ஏனைய கருவாடுகளுக்கு மந்தம், ஐயகுன்மம் (ஒருவகை வயிற்றுப்புண்) தீரும். பசி உண்டாகும். வயிற்றுவலிகள் குறையும்.

### இறால், உழுவை, கெண்டை

**"இறான்மிக மந்த மென்ப வினிமையா மதுர மாகும்
உறாவெட்டை யுழுவை யுண்ணி லொண்மையா மனஞ்செ ரிக்கும்
அறாக்கெண்டை மீனையுண்ணி லரிப்பொடு வயிற்று நோயும்
பொறாமற்று நோயும் புண்ணும் பொருந்திடும் வாய்வுண் டாமே"**

*பக்.90, அமிர்தசாகரம் பதார்த்தசூடாமணி*

அறுசுவைகளில் இனிப்புத் தன்மையையுடைய இறால், மிக மந்தத்தை சோர்வையும் ஏற்படுத்தும். உழுவை மீன் சூடாகும் (வெப்ப வீரியம்) இதனால் நெஞ்செரிவு ஏற்படும். கெண்டை மீன் கிரந்தியாகும். இதனால் உடலில் அரிப்பு, அசீரணம் என்பவற்றுடன் ஒவ்வாமைகளும் ஏற்படும். புண் ஏற்படும். உடலில் வாயுவை உண்டாக்கும்.

### மடவை, கத்தலை, சிற்றிறால்

**"மடவைமீன் கரப்பன் வாதம் வளர்மூல மந்தத் தோடு
குடல்வாதஞ் சூலை சேர்க்குங் குறித்தகத் தலைமீ னுண்ணில்
மடியுறு பொருமல் பேதி வளர்ந்திடுங் கரப்பன் நீரும்
வடிவில்சிற் றிறால்க ரப்பன் வாதந்தீ பனமுண் டாக்கும்"**

*பக்.90, அமிர்தசாகரம் பதார்த்தசூடாமணி*

மடவை மீன் கறியானது தோல் நோய்கள், வாதம், மூலநோய், சோர்வு என்பவற்றுடன் குடலில் வலி என்பவற்றை உருவாக்கும். கத்தலை மீன் கறியானது வயிற்றில் ஏற்பட்ட பொருமல், வயிற்றோட்டம், தோல் நோய்கள் என்பவற்றை குறைத்திடும்.வடிவத்தில் சின்ன இறால் / கூனி இறால் தோல் நோய்கள், வாதம், பசி என்பனவற்றை அதிகரிக்கும்.

### கெளிறு, வரால், ஆமை

**"கெளிறுணப் பசியுண் டாகுங் கிளர்பித்தம் வாதம் போகும்
தெளிவரா லுண்ண வாதஞ் சேடமே பித்தம் வாயு
எளிதினின் மாறு மாமை யின்கறி கிராணி பித்தம்
ஒளிவிலா வாத சேட முண்மூல மதிசா ரம்போம்"**

*பக்.90, அமிர்தசாகரம் பதார்த்தசூடாமணி*

கெளிறு மீன் கறி உண்ண பசி அதிகரிக்கும். வாதம், பித்த தோசங்கள் தம் இயல்பு நிலைக்கு வரும். இதனால் இவை தொடர்பான நோய்கள் குறைவடையும்.
வரால் மீன் / விரால் மீன் கறியுண்ண காமாலை, பெருவயறு, வயற்றுப்புண் போன்ற வாதத்துடன் சேர்ந்த கப நோய்கள், பித்தத்தினால் ஏற்படும் நோய்கள், உடலில் ஏற்படும் வாயு என்பன குறையும்.

ஆமையின் கறியுண்ண நீண்ட கால வயிற்றுழைவு, கழிச்சல் பித்த நோய்கள், வயிற்றுப்புண், பெருவயிறு, காமாலை போன்ற வாதகப நோய்கள், உள்மூலம், வயிற்றுப்போக்கு என்பன குறைவடையும். பொதுவாக உணவுக்கால்வாயுடன் தொடர்பான நோய்கள் மேற்குறிப்பிட்ட மீன்கள், ஆமைக்கறி என்பனவற்றுக்கு சீராகின்றன.

(தொடரும்)

திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை' என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Companies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.




**கணபதிப்பிள்ளை ரூபன்**

கணபதிப்பிள்ளை கந்தரூபன் (ரூபன்) அவர்கள் யாழ் மாவட்டத்தின் புலோலியைச் சேர்ந்தவர். போர் காரணமாக ஆபிரிக்காவுக்கு இடம்பெயர்ந்து பின் அங்கிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இயந்திரவியலில் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் பல புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல கோடி டொலருக்கு விற்றுள்ளார். மேலும் இவர் "Accidental Entrepeneur by Ruban என்ற தலைப்பில் நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளை தன்னுடைய அனுபவங்களை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.




# தொழில்களில் வெற்றிபெறத் தேவையான பழக்கவழக்கங்கள்

**"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்"**

**- திருக்குறள் (664)**

மு. வரதராசனார் விளக்கம் : இச் செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம், சொல்லிய படி செய்து முடித்தல் அரியனவாம்.

இன்றைய உலக - உள்ளூர் சமூகங்களை அவதானித்தால் எமது கண்ணில் தெரிவது வெற்றிபெற்றவர்களின் கடைசி முடிவுகளே. இது ஐந்தாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வாக இருக்கலாம். அல்லது அதன் பின்னான பல்கலைக்கழகப் படிப்பாகவோ, தொழில் முயற்சியாகவோ இருக்கலாம். அங்கெல்லாம் எமது கண்களுக்குத் தெரிவது அவர்களது பெறுபேறுகளும் பட்டங்களுமே. அவற்றை அடைவதற்கு அவர்கள் அடைந்த கஷ்டங்கள், தியாகங்கள், முயல்வுகள், தோல்விகள், அவமானங்கள், வலிகள் என்பனவெல்லாம் எவருக்குமே தெரியாது.

ஆங்கிலத்தில் ஒரு கூற்றொன்று இருக்கிறது : " *The Harder you Work , the Luckier You Get* " (நீங்கள் எவ்வளவு கடினமாக உழைக்கிறீர்களோ, அவ்வளவு அதிர்ஷ்டம் கிடைக்கும்.)

இப்படியான கடின முறைகளை மனதில் கொண்டு இறுதி முடிவைக் குறிவைத்து

வேலைகள் செய்வதன் மூலம் நினைத்ததை அடையலாம். அதற்கான சில முறைகள் உள்ளன.

**நேர்மறை அணியினர் (Positive Teammates):** வாழ்க்கையில் எந்தச் செயலையும் செய்யும் போது அதற்குப் பல இடர்கள் வரும். அப்படியான நேரங்களில் இலகுவான வழி அந்த வேலையை செய்வதைவிட்டு, நாம் விலகி இருப்பது தான். அத்தகைய தருணங்களில் குழுக்களில் இருக்கும் மற்றையவர்களின் உதவி தேவைப்படும். எல்லோருமே எதிர்மறையான எண்ணங்களைக் கொண்டிருந்தால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. எந்த இடர் வந்தாலும், அவற்றைச் சமாளித்து வெற்றி பெறலாம் என்ற தன்னம்பிக்கை தரக்கூடிய ஒருவராவது நம்முடன் இருப்பது அவசியம்.

இதற்கு என் வாழ்வில் நடந்த விடயமொன்றை உதாரணமாகச் சொல்லலாம். எனது முதலாவது நிறுவனத்தைத் தொடங்கும்போது எனக்கு 28 வயது. நான் அப்போது எமது நிறுவனத்தின் பொறியியல் குழுவுக்கு தலைமை தாங்குபவனாக இருந்தேன். எமது நிறுவனம் மற்றவர்களிடமிருந்து பெற்ற முதலீட்டில், அரைவாசிக்கு மேலான நிதி (ஏறக்குறைய ஐந்து மில்லியன் டொலர்; அதாவது நூறு கோடி ரூபா) எனது பிரிவினால் பொருட்களை உற்பத்தி செய்ய செலவழிக்கப்படும். அது மிக அழுத்தத்தைக் கொடுத்தது. அந்த நேரம் எனக்கு உதவி செய்தவர்கள் எனது அணியில் இருந்த ஆலோசனைக் குழுவினரே. அவர்கள் நான் எடுக்கும் முக்கியமான முடிவுகளுக்கு ஊக்கம் கொடுத்தும், அதைவிட மற்ற விடயங்களில் ஏற்படும் தடைகளைத் தாண்டிப் போவதற்கு நேர்மறை ஆலோசனைகளைக் கூறி வெற்றிபெற வைத்தார்கள். இப்படியான நேர்மறையானவர்களை அணியில் சேர்ப்பது மிக முக்கியம்.

**பிரச்சனை தீர்ப்போர் (Problem Solvers):** ஆரம்ப நிறுவங்களை தொடங்குவது வாழ்க்கையைச் சுலபமாக வாழ நினைப்பவர்களுக்கு பொருத்தமான செயலல்ல. அதைத் தொடங்கி, அரசாங்கத்தில் பதிவு செய்து ஒரு சட்ட நிறுவனமாக்குதல் தொடக்கம், முதலீடு



Image Source: guardian.ng

சேர்ப்பது, பொருள் சந்தை உடன்பாடு காணுவது, வாடிக்கையாளரைப் பிடிப்பது வரை என்று ஏகப்பட்ட வேலைகள் இருக்கும். இதற்கு ஒவ்வொரு துறையிலும் திறைமையான அணியினரை எமது பார்வை நோக்கத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தி இணைக்க வேண்டும். நான் மேலே கூறியபடி நேர்மறையான மனப்பாங்குடன் இருப்பவர்கள் தேவை. அதன்பின், அவர்க ளுக்கு சிக்கலான பிரச்சினைகளை பகுதி களாகப் பிரித்து, அதற்குத் தீர்வு காணுபவர்களை குழுவில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இப்படியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுபவர்களைக் தேர்ந்தெடுக்க இப்போதைய பெருநிறுவனங்கள் பல திறன் சோதனைகளை மேற்கொள்கிறார்கள். அது எவ்வளவு வீதம் உதவி செய்கிறது என்பது எனக்குத் தெரியாது. நான் எனது அணியினரை தேர்வு செய்யும் போது இரண்டு விதமாகப் பரிசோதிப்பேன். முதலாவது, ஒரு உண்மையான பிரச்சினையைக் கொடுத்து, அவர்கள் அதை எப்படி அணுகுவார்கள் என்று பார்ப்பேன். அவர்களுக்கு சரியான விடை தெரியாமல் இருந்தாலும், சரியான அணுகுமுறை மூலம் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிப்பதே எனக்கு முக்கியம். இரண்டாவது, அவர்கள் இதற்கு முதல் செய்த வேலையிடத்தில் சந்தித்த ஒரு கடினமான பிரச்சினையை எப்படி அணுகித் தீர்த்தார்களென்று பார்ப்பேன். இதன் மூலம் சரியான அணியினரைச் சேர்த்தேன்.

**அனுபவத்தால் அடிபட்டவர்கள் (Been there, Done that) :** ஒரு புதிய நிறுவனத்தைத் தொடங்கும்போது சாதாரணமாக இளைய பருவத்தினரையும் அனுபவம் குறைந்தவர்களையும் நிறுவனத்தில் சேர வைப்பது சுலபம் என்பதோடு செலவும்

குறைவு. ஆனால் புத்தகப்படிப்பை விட அனுபவத்தால் கற்பது நிறுவனங்களின் வெற்றிக்கு முக்கியம். அதற்கு சில அனுபவமுள்ள ஆட்களை வேலைக்குச் சேர்ப்பது அவசியம். அவர்களது அனுபவம் இரண்டு விதமாகவும் இருக்கலாம். ஒரு பக்கம் வெற்றிகரமான திட்டங்களில் வேலை செய்தவர்கள். மற்றையது, சில திட்டங்கள் வெற்றியின்றி தோல்வியாக முடிந்த அனுபவம் உள்ளவர்கள்.
இதன் மூலம் எப்படியான பிழைகள் விடக்கூடாதென்று கற்றுக்கொள்ளலாம். எனது இரண்டு நிறுவனங்களிலும் எனக்கு நெருங்கிய தொழிலாளிகள், நண்பர்கள், ஆலோசகர்கள் 20 - 30 வருட அனுபவம் கொண்டவர்கள். அவர்களிடம் கலந்துரையாடுவதன் மூலம் பல தவறுகளை நிகழாமல் தவிர்த்துக்கொண்டேன். அப்படி அவர்களிடம் ஆலோசனை கேட்டாலும் அவற்றைக் கண்மூடித்தனமாகக் கேட்பதில்லை. அவர்களது ஆலோசனை தற்போதைய நிலைமைக்கு பொருந்துமாவென்று ஆராய்ந்து செயற்படுவேன்.

**புதிய / வித்தியாசமான அணுகுமுறையை ஊக்குவித்தல் :** பல கால நிறுவங்களுக்கும் புதிய நிறுவங்களுக்குமான ஒரு பெரிய வித்தியாசம், ஒரு வேலையைச் செய்வதற்கு அணுகும் முறையே. பழைய நிறுவனங்கள் பல கட்டுப்பாடு காரணமாகவும் வேலை செய்பவர்களின் அனுபவத்தாலும் எல்லோருக்கும் தெரிந்த பழைய முறையிலேயே செய்வார்கள். அதனால் அவர்களால் அந்த வேலையின் மதிப்பில் அதிகரிப்பு ஏற்படாது. ஆனால் புதிய நிறுவனங்கள் மரபார்ந்த முறைமைகளைக் கைவிட்டு, தேவைக்கேற்ப பயனுள்ள புதிய முறைமைகளைக் கைக்கொள்ளலாம். இதன் மூலம் பல மடங்கு மதிப்பு அதிகரிக்கும் விதமாக வேலைத்திட்டங்களைச் செய்துமுடிக்கலாம்.
நுணுக்கமான அணுகுமுறை (Nuances) : நான் மேலே கூறியவையெல்லாம் பெரிய விடயங்கள். அவற்றை மிகவும் புரிந்து செயற்படுவதால் பெரிய பிரச்சினைகள் வராமல் தவிர்க்கலாம். இவற்றுக்கும் மேற்பட்ட விடயமே நுணுக்க அணுகுமுறை. ஏதாவது வேலை செய்யும்போது பல முடிவுகள் எடுக்க வேண்டியிருக்கும். அப்போது சில விடயங்கள் முக்கியமானதாகத் தெரியாது. ஆனால் அது தொடர்பில் நாம் எடுக்கும் முடிவுகள் வாழ்வில், தொழிலில் பெரு மாற்றத்தை ஏற்படுத்தும். அதைப் பொருட்படுத்திச் செய்வதுதான் நுணுக்கமான அணுகுமுறை.
சிலிக்கன் வலியைப் பார்த்தீர்களானால், அனைத்து ஆரம்ப தொழில்நுட்ப நிறுவனங்களும் பிரம்மாண்டமான யோசனைகளுடன் தான் தொடங்கும். அதில் பலரும் கடைசியில் அவர்களது இலக்கை அடையாமல் நிறுவனங்களை மூடிச்செல்வார்கள். எனது அவதானத்தின்படி அவர்கள் இப்படியான நுணுக்கமான கருத்துக்களை பொருட்படுத்தாது, முக்கியமாக வாடிக்கையாளர்களின் கருத்துக்களைக் கேட்காமல் உதாசீனப்படுத்தி தமது சொந்தப் பாதையில் போவார்கள். இருக்கிற பணத்தையெல்லாம் செலவழித்த பின்புதான் அவர்களுக்கு ஞானம் பிறக்கும். ஆனால் அது காலங்கடந்த ஞானமென்பதால், எல்லாமே கைமீறிப் போயிருக்கும்.

**சிறிய வெற்றிகளில் மாடி கட்டிடுங்கள் (Build on Small Wins) :** புதிய நிறுவனங்கள் வெற்றி பெறுவதற்கு அவர்கள் ஒரு பெரிய பிரச்சினைக்கு தீர்வுகண்டு, அந்தத் தீர்வால் கண்டுபிடித்த பொருட்களை அளவுக்கு மேல் செய்து, விற்றுப் பணம் சம்பாதிப்பார்கள். அதைப் பெரிய பொருளாக மட்டும் வைத்திருந்தால் செய்து முடிப்பது கடினமாக இருக்கும். முதல்படியாக பெரிய பிரச்சனைகளை சிறிய விடயங்களாக, பகுதி பகுதியாக உடைப்பது அவசியம். அந்தப் பகுதிகளைப் பலரிடம் பிரித்துக்கொடுத்து, நன்றாக அவதானித்து, ஒவ்வொருபடியாக முடிப்பதன் மூலம் வேலையால் உண்டாகும் மனஅழுத்தம் குறையும். அத்தோடு ஒவ்வொரு சின்ன வெற்றிகளையும் அடையும் போது அதைக் குழுவுடன் சேர்ந்து கொண்டாடுவதன் மூலம் நேர்மறைச் சமூகத்தை உருவாக்க முடியும்.

எனது அனுபவத்தின்படி, அணிக்குள் இருக்கும் வேதியல் (Team Chemistry), அணியின் மனத்துவம் (Team attitude) மற்றும் அணி எவ்வாறு ஒற்றுமையாக இருப்பது (Team Togetherness) என்பன மிக முக்கியமான நுணுக்கங்கள். அவற்றை அறிந்து அவதானித்து செயல்கள் புரிவதன் மூலம் வெற்றிகரமான நிறுவனங்களாக மாற்றமுடியும். என் அனுபவத்தின்படி வெற்றி மனப்பான்மையுடன் மேல்கூறிய ஆறு விடயங்களையும் கொண்ட அணியை அல்லது குழுவினரைச் சேர்ப்பதன்மூலம் எப்படியான சிக்கலையும் எதிர்கொண்டு வெற்றி கொள்ளலாம். அதிலும், அணியில் உள்ளோர் இவற்றை உணர்ந்து அதன்பின் குழுவாகச் சேர்ந்து முடிவெடுத்து, மேலுள்ள திருக்குறள் கூறியதுபோல் செய்து முடித்தால் வாழ்வில் வெற்றியடைவது நிச்சயம். (தொடரும்)


ஆதிரை
வெளியீடு
ஆதிரை வெளியீடுகள்
சயந்தன்
ஆதிரை
சயந்தன்
ஆறாவடு
பீடி
என்ட
அல்லாஹ்
காந்தப் புலம்
சமாதானத்தின்
கதை
சயந்தன்
அஷேரா
கனடாவில் கிடைக்கின்றன.
தொடர்புகளுக்கு
+1 647 972 3619

SpotOn Money



SEND MONEY to
SRI LANKA
FIRST TRANSFER FEE FREE*
Immediate Payment to Any Account

*Partnership* with
CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount*
on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales,
and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

RE/MAX
COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE



# RE/MAX COMMUNITY THE MOST TRUSTED REAL ESTATE AGENTS IN CANADA

- We are building a family of elite agent, become a part of the family
- We are voted as most trusted realtor by consumers
- Our Services

Real Estate Networking

Real Estate Investment

Real Estate Buying and Selling

remaxcommunity.ca
/remaxcommunityinc
/remax_community
/remaxcommunity
/UCD-3WoKApsSL2P4SqlnHVIA

வணக்கம் London

www.vanakkamlondon.com




யாதும் ஊரே யாவரும் கேளிர்

தமிழால் இணையும்
தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்

vanakkamlondon.com /vanakkam.london /vanakkamlondon

/Vanakkam_London /TheVanakkamLondon


HIGHWAY
FLEET SERVICES
OPEN 24 HOURS
(416) 876-3349
TRUCK & TRAILER
REPAIR IN GTA
TRUCK REPAIR EXPERT IN TORONTO,
25 NANABERRY ST, SCARBOROUGH, ON M1X 1Y5
MAP OF HIGHWAY FLEET SERVICES - PROFESSIONAL MOBILE
TRUCK & TRAILER REPAIR IN GTA
highwayfleetservices.com
எழுநா


Protection For You
& Your Family
Our services
Life Insurance «
Critical Illness Protection «
Mortgage Protection «
Travel/Super Visa Insurance «
Dental & Medical Benefits «
Disability Benefits «
Long Term Care «
Employee Benefits «
RESP, RRSP & TFSA «
Are You Getting Million Dollar Advice?
Life100
INSURANCE & INVESTMENTS INC.
416-918-9771 | 416-321-2500
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6
Sritharan Thurairajah CLU, CHS
Simple Solution in a Critical Situation


SULLIVAN
AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
AUGUST
SAT 26 12PM - 11PM
SUN 27 11AM - 9PM
POWERED BY
iConnect Mortgages
POWERED BY DOMINION LENDING CENTRES
MARKHAM ROAD
BETWEEN
MCNICOLL & PASSMORE
FREE ADMISSION
தமிழர் தெருவிழா
Tamil Fest
ஆசியாவுக்கு வெளியே அதிக மக்கள் பங்கேற்கும் மாபெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival outside of Asia
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
BRIMELL TOYOTA
Formula Honda
MORNINGSIDE NISSAN
POWERED BY SPONSOR
iConnect Mortgages
PROUDLY HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
SILVER SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Future Realty Inc.
NAVA WILSON
PRADON SILKS
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING HOUSE
MAESTRO YUVAN LIVE IN TORONTO
MARKETING PARTNER
PRINT FAST.ca
SUPPORTED BY
Canada
TORONTO
MEDIA SPONSORS
ATN ASIAN TELEVISION NETWORK
east FM 102.7 தமிழ்
metroland
tamilfest.ca @TamilFest info@canadiantamilcongress.ca 416.240.0078